# இலங்கை முஸ்லிம்களை புரிந்துகொள்ளல்



அ.வா. முஹ்சீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களைப் புரிந்து கொள்ளல்

அ.வா. முஹ்சீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்களைப் புரிந்து கொள்ளல்
© அ.வா. முஹ்சீன்

பக்கங்கள்: 146
முதல் பதிப்பு: ஜனவரி 2023

அட்டை : ASM.நஸீம்
அட்டைப்பட ஓவியம். ரக்ஷானா ஷரிபுத்தீன் கோபிஹரன்
நூல் வடிவமைப்பு: சந்தோஷ் கொளஞ்சி

Ilangai Muslimkalai Purinthukollal
© A.W.Muhseen

Pages: 146
First Edition: January 2023

Cover: ASM.Nazeem
Cover design by: Rakshana Sharifuddeen Gopiharan
Book Designed by: Santhosh Kolanji

ISBN : 9786245816217

இந்திய விற்பனை உரிமை
Common folk
No: 9/2, Second floor, Sembudoss Street
Mannadi, Broadway, Chennai - 600001
TamilNadu, India.
whatsapp: +91 7550174762

கஸல் பதிப்பகம்
219, ஏ.கே.எம்.வீதி ஏறாவூர்
இலங்கை
+ 94 770807787
mail@ghazal.press

Ghazal Publications
219, A.K.M Road, Eravur
Srilanka
+ 94 770807787
mail@ghazal.press

website : www.ghazal.press

விலை: இலங்கை ரூ. 900 ◇ இந்தியா ரூ. 200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

'அரகலய' எனும் மக்கள் எழுச்சியில்
கட்சி அடையாளமின்றி பங்கேற்ற அனைவருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலாசிரியரின் முன்னைய நூல்கள்**

1. சோனக தேசம்
2. இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம்
3. இங்ஙினயும் ஒரு மஹ்சர்
4. ஜனநாயகம் – வெள்ளை–கிறிஸ்தவ சமூகங்களின் அரசியல் முறைமை
5. பாடசாலை உளவியல்
6. அசன்பேயுடைய கதை – ஓர் மீள்வாசிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் கொள்கிறோம்

**கண்ணியத்துக்குரிய மாதுலுவாவே சோபித தேரர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நமது நாட்டில், சமூகங்களுக்கிடையிலான உறவுகள் ஆரோக்கியமற்ற நிலையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. நம்மத்தியில் நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் உருவாக்குவதற்காக நீண்டகாலமாக பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவை இன்னமும் முழுமையான பலனை அளிக்கவில்லை.

தப்பெண்ணம் என்பது, வெறுப்புக்கும் பகைமைக்கும் ஒற்றுமைப்பட முடியாமைக்குமான ஒரு பிரதான காரணியாக இருந்து வருகிறது. ஒவ்வொருவரிடமும் பிறரைப் பற்றியும் பிற சமூகங்கள் பற்றியும் தவறான எண்ணங்கள் நிறைந்து கிடக்கின்றன. இவை அகற்றப்படுவதும் பிறரையும் பிற சமூகங்களையும் சமத்துவமாக ஏற்றுக் கொள்வதும் ஐக்கியத்திற்கும் சமாதானத்திற்குமான அடிப்படைகளாக இருக்கின்றன.

ஒவ்வொருவரும் தாம் தவறு செய்யாதவர்கள் என்றும் பிறர்தான் தவறு செய்கிறார்கள் என்றும் கருதுகின்ற மனஉணர்வினால் பீடிக்கப்பட்டிருக்கிறோம். இந்த உணர்வு சகவாழ்விற்கான பெரும் தடையாக அமைந்து வந்திருக்கிறது. இந்தப் பண்பு எம்மிடம் இருக்கும்வரை, உண்மையான ஐக்கியம் என்பது சாத்தியமற்றே இருக்கும்.

இத்தகைய கருத்தியல் பின்புலத்தில்தான் இந்நூலை எழுதியிருக்கிறேன். 2015 ஜனாதிபதித் தேர்தல் முடிவு பெரும் நம்பிக்கையூட்டுவதாக இருந்தது. நாடு தழுவிய ரீதியில் மக்களின் மனமாற்றத்தைக் குறிப்புணர்த்துவதாக அது இருந்தது. இத்தகைய ஒரு நூலை எழுதுவதற்கான தூண்டுதலை அது வழங்கியது. எனினும் ஒரு மூன்று வருட காலத்தற்குள் சமூக, அரசியல் நிலைமைகள் தலைகீழாகின. இந்நூலை தொடர்ந்து எழுதுவதற்கான மனநிலையும் அற்றுப் போனது. 2020க்குப் பின்னர், அரசியல் நிலைமைகளில் மாற்றத்தை உணர்ந்து, இந்நூலை தொடர்ந்தும் எழுதினேன். இதை எழுதி முடித்தபோது நமது மக்களின் மகத்தான எழுச்சி ஆரம்பமாகியது.

நமது நாட்டின் அரசியல் வரலாற்றில் "அரகலய" என்னும் மக்கள் எழுச்சி தனித்துவமானது. அனைத்து சமூகங்களையும் தழுவியதான இத்தகைய ஒரு வெகுசன எழுச்சி, புதிய இலங்கைக்கான உதயத்தைக் கட்டியம் கூறுவதாக இருந்தது. புதிய சிந்தனை, புதிய உணர்வுகள், புதிய பண்புகள் என்பவற்றின் திரட்சியாக இவ்வெழுச்சி அமைந்திருந்தது. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் புதியவகை போராட்ட முறையாக அமைந்திருக்கின்ற இந்த மக்கள் எழுச்சி, கட்சி அடையாளமின்றி, இறுக்கமான தலைமைகளின்றி, மக்கள் மத்தியிலிருந்து தன்னியல்பாக எழுச்சியுறுகிறது. இன, வர்க்க, மத, வயது, பால் என எந்த வேறுபாடுகளுமின்றி, ஆளும் குழுமத்திற்கு எதிரான வெகுசன எழுச்சியாக இது அமைகிறது. 2010இல், அமெரிக்காவில் "வோல் ஸ்ட்ரீட்டை ஆக்கிரமித்தல்" (ழூஉஉரில றுயடட ளுவசநநவ) என்ற கோஷத்துடன் உருவான வெகுசன எழுச்சி, இந்த புதியவகை போராட்டத்தின் தொடக்கமாக அமைந்தது. அதன் பின்னர் டியூனீசியா, எகிப்து, பின் மத்திய கிழக்கு நாடுகள் என இப்போராட்டம் வியாபித்தது.

வாய்ப்புக்கேடாக, இந்த மக்கள் எழுச்சியின் உண்மையான பண்புகள் இன்றுவரை ஆய்வுக்குட்படவில்லை. நமது மக்களின் எழுச்சி, படிப்படியே அரசியல் கட்சிகளின் பிடிக்குள் கொண்டு வரப்பட்டு, அதன் வெகுசன பண்பு அகற்றப்பட்டு விட்டது. அதுவே இந்த எழுச்சி கைவிடப்படுவதற்கான காரணமாகவும் அமைந்திருக்கிறது. இப்பொழுது இடம்பெறுபவை மக்கள் எழுச்சியின் தொடர்ச்சி அல்ல, இவை வழக்கமான அரச எதிர்ப்புப் போராட்டங்கள். இவை தெளிவான கட்சி சார்பு கொண்டவை.

நமது மக்களின் எழுச்சி அதன் நோக்கங்களில் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்துள்ளது. இந்த எழச்சி முற்றுப் பெறவில்லை. இது மீண்டும் கிளர்ந்தெழும். அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புகள் போன்றவை மக்கள் எழுச்சியின் பன்முகச் சாரத்தையும் கட்சி அடையாளமற்ற தன்மையும் புரிந்தேற்றுக் கொள்ளும்போது, நமது மக்களின் எழுச்சி மீண்டும் மீண்டும் கிளர்ந்தெழும். நமது நாட்டை புதிதாய் வார்ப்பதற்கான பாதை, இந்த மக்கள் எழுச்சியினூடாகத்தான் உருவாகும்.

இந்நூலை மக்கள் எழுச்சியில், கட்சி அடையாளமின்றி பங்கேற்ற அனைவருக்கும் சமர்ப்பணம் செய்திருக்கிறேன். அதேநேரத்தில், 2015 ஜனாதிபதித் தேர்தலின்போது மிகக் காத்திரமான பங்கு வகித்த, கண்ணியத்திற்குரிய மாதுலுவாவே சோபித தேரர் அவர்களை இந்நூலில் நினைவு கூர்கிறேன். அவர் புதிய இலங்கையின் அடையாளமாக, கலங்கரை விளக்காக என்றும் திகழ்வார்.

இந்நூல், இலங்கை முஸ்லிம்கள் பற்றி, ஏனைய சமூகங்கள் மத்தியில் நிலவுகின்ற தப்பெண்ணங்கள் பற்றிய உரையாடலாக அமைகிறது. அதேநேரத்தில், இலங்கை முஸ்லிம்களிடம் நிலவுகின்ற தப்பெண்ணங்களை அடையாளம் காட்டுவதாகவும் இது அமைகிறது. இது ஒரு தொடக்கம் மட்டுமே. ஐக்கியமும் சமாதானமும் நிலவுகின்ற ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்கான அக்கறையைக் கொண்டிருக்கின்ற ஒவ்வொருவரும், சமூக ஐக்கியம் என்ற விடயத்தில் நேர்மையான அக்கறையை வெளிப்படுத்துவது அவசியமாகிறது. அத்தகைய அக்கறையை இந்நூல் ஏற்படுத்துமாயின் அதுதான் இந்நூலின் வெற்றியாக அமையும்.

இலங்கை முஸ்லிம்கள் என்ற பதம் பல இனக் குழுக்களின் தொகுப்பாக அமைகிறது. இலங்கைச் சோனகர், மலேயர், மேமன்கள், போராக்கள், கோஜாக்கள்... என பல்லினத்தவர், இலங்கை முஸ்லிம்கள் என அமைகிறார்கள். எனினும் இந்நூல் இவர்களின் பண்பாட்டு தனித்துவங்களை தனியாக பரிசீலிக்கின்ற முயற்சியைக் கொண்டிருக்கவில்லை. பதிலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் அனைவரையும் “இலங்கை முஸ்லிம்கள்” என்ற வகைப்படுத்தலுக்குள் வைத்தே, இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

இந்நூலின் அச்சுப் பிரதியை வாசித்து தம்முடைய கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய, “திக்குவெல்ல” கமால் (ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,) “நேயம்” எம்.எஸ்.எம். நியாஸ் (கிண்ணியா, ஓய்வு நிலை நீதிமன்றப் பதிவாளர்) சகோதரர் எம். ஷாகிர் (சம்மாந்துறை, மருத்துவகூட தொழில்நுட்பவியலாளர்) ஆகியோருக்கு நன்றிகள்!

மேலும், இந்நூலிற்கான புள்ளி விபரங்களையும் தகவல்களையும் பெறுவதற்கு எனக்கு உதவிய தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் ஜனாப். ரபாவுத்தீன், உதவி நூலகர்கள் ஜனாப் எம்.சீ.எம். அஸ்வர், ஜனாப் எஸ்.எல்.எம் சஜீர் ஆகியோரையும் சிறப்பாக நினைவுகூர்கிறேன்.

இந்நூலை வெளியிடுவதற்கு முன்வந்த “கஸல்” பதிப்பக உரிமையாளர் சகோதரர் எம். சப்ரிக்கு மனமார்ந்த நன்றிகள்!

**அ.வா. முஹ்சீன்**
836, பாலையூற்று
திருகோணமலை.
தொ.பே: 077 8089827, 075 2342062
வட்ஸ் அப்: 077 8089827
ஈ மெயில்: sonaham60@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- ஒரு வரலாற்றுப் பதிவு....13
- சுய-வாக்குமூலம்....14
- இலங்கை முஸ்லிம்களைப் புரிந்து கொள்ளல்....20

பொருளாதாரம்

விவசாயம்....23

மீன்பிடி....25

வர்த்தகம்....26

வர்த்தகத்தில் இலங்கை முஸ்லிம்கள் ஒரு வரலாற்றுப் பார்வை....26

பொட்டணி வியாபாரம்....28

நடைபாதை வியாபாரிகள்....29

நிதிசார் நிறுவனங்கள்....30

சிறிய நடுத்தர முஸ்லிம் வியாபாரிகள்....32

மதுபான வியாபாரமும் போதைப் பொருள் விற்பனையும்....36

இரத்தினக்கல் வர்த்தகம்....38

ஆடை வர்த்தகம்....39

மத்திய கிழக்கு வேலை வாய்ப்பு....40

தொழில்துறைகள்....43

மதம்: இஸ்லாம்....48

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய இயக்கங்கள்....51

“உயிர்த்த ஞாயிறு: குண்டுத் தாக்குதல்களும் இலங்கை முஸ்லிம்களின் எதிர்வினைகளும்....55

இலங்கை முஸ்லிம்களும் மதமாற்றச் செயற்பாடுகளும்....58

இலங்கை முஸ்லிம்களின் பிறப்பு விகிதம்....59


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஹ்ஹாபிசமும் இலங்கை முஸ்லிம்களும்....63
"ஷரீஆ" - இஸ்லாமிய சட்டமுறைகள்....64
(அ) நீதிமன்றங்களும் இலங்கை முஸ்லிம்களும்....66
(ஆ) முஸ்லிம் விவாகச் சட்டம்: ஒரு பன்முகப் பார்வை....67
திருமணத்தில் பெண்களின் சம்மதம்....68
காதி நீதமன்றங்களில் பெண்களின் பங்கேற்பு....68
பெண்களின் திருமண வயது....69
திருமண வயதும் தேர்வுக்கான சுதந்திரமும்....71
பள்ளிவாசல்களும் இஸ்லாமிய மார்க்கக் கல்வி நிலையங்களும் (மத்ரசாக்கள்)....72
(அ) பள்ளிவாசல்கள்....72
தொழுகைக்காக அழைத்தல் (பாங்கு சொல்லுதல்)....75
ஒலி மாசடைதல்....76
வெள்ளிக்கிழமை கூட்டுத் தொழுகை (ஜூம்ஆ தொழுகை)....78
(ஆ) இஸ்லாமிய மார்க்கக் கல்வி நிலையங்கள் (மத்ரசாக்கள்)....80

பண்பாட்டு அம்சங்கள்....83
(அ) இலங்கை முஸ்லிம்களின் உணவு முறை – "ஹலால்" உணவு....85
இலங்கையில் "ஹலால்" சான்றிதழ்: ஒரு பரிசீலனை....87
(ஆ) முஸ்லிம் பெண்களின் ஆடைகள்....90
(இ) முஸ்லிம்களின் குடியிருப்புகள்....97
(ஈ) கல்வியும் இலங்கை முஸ்லிம்களும்....102
மாணவர் இடைவிலகல்கள்....104
அரச தொழில்களில் முஸ்லிம்கள்....106
(உ) கலைகளும் இலங்கை முஸ்லிம்களும்....109
முஸ்லிம்களின் கலைப் பிரக்ஞையின்மை: ஒரு பரிசீலனை....112
(ஊ) தொடர்பூடகங்களும் இலங்கை முஸ்லிம்களும்....113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தைப் பாங்குகள்........117
(அ) பிற சமூகங்களுடன் இணங்கி வாழ்தல்........117
(ஆ) இலங்கை முஸ்லிம்களின் நாட்டுப் பற்று........120
கிரிக்கட்டும் இலங்கை முஸ்லிம்களும்........121
பொது இடங்களைக் கையாளும் முறை........123
மதரீதியான கருத்துகள்........125
இலங்கை முஸ்லிம்களின் அரபிய பூர்வீகம்........126
தொல்லியல் ஆய்வுகள்........126

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் போக்குகள்........130
(அ) பேரம் பேசும் அரசியலின் விளைவுகள்........132
(ஆ) நடுநிலை அரசியலின் தேவை........135
(இ) இனப் பெயர் கொண்ட அரசியல் கட்சிகள்........136

முடிவாக........138

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வரலாற்றுப் பதிவு

**ச**மூகங்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பும் நல்லிணக்கமும் பங்கீடும் ஓங்கியிருந்த ஒரு பெருமைக்குரிய, செழுமையான மரபு இலங்கை மக்களாகிய நமது முதுசமாக இருக்கிறது. சிறப்புமிக்க **'மகாவம்சத்தில்'** பத்தாம் அத்தியாயமான **பாண்டு அபய பட்டாபிஷேகம்** என்ற பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள கீழ்வரும் அற்புதமான பகுதிகளை இங்கு தருகிறேன்:

***90.*** **யோனர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம், மகாயக்ஞசாலை ஆகிய இவைகளை அவன் மேற்கு வாயிலுக்கருகில் அமைத்தான்.**

***91.*** **நகரின் தெருக்களை சுத்தம் செய்வதற்கு ஐநூறு சண்டாளர்களை நியமித்தான். சாக்கடைகளைச் சுத்தம் செய்ய இருநூறு சண்டாளர்கள் நியமிக்கப்பட்டனர்.**

***92.*** **இறந்தவர்களைத் தூக்கிச் செல்ல நூற்றி ஐம்பது சண்டாளர்களை நியமித்தான். கல்லறைகளை கண்காணிக்கவும் அவ்வளவுபேர் நியமிக்கப்பட்டனர்.**

***93.*** **இதற்காக அவன் கல்லறைக்கு வடமேற்கே ஒரு கிராமத்தை ஏற்படுத்தினான். அவர்கள் முறைப்படி தங்கள் கடமைகளைச் செய்து வந்தனர்.**

***94.*** **சண்டாள கிராமத்திற்கு வடகிழக்கில் சண்டாளர்களுக்காகத் தனியே தாழ்ந்தவர்களுக்கான ஒரு கல்லறையை ஏற்படுத்தினான்.**

***95.*** **இதற்கு வடக்கே, இதற்கும் பாசான மலைக்குமிடையே வேடுவர்களுக்கான குடிசைகள் வரிசையாகக் கட்டப்பட்டன.**

***96.*** **அதற்கும் வடக்கே, காமனிவாபி வரை பல துறவிகளுக்கான ஒரு மடம் அமைக்கப்பட்டது.**

***97.*** **அதற்குக் கிழக்கே அரசன் நிகந்த ஜோதியர்களுக்காக ஒரு வீட்டைக் கட்டினான்.**

***98.*** **அப்பிரதேசத்திலேயே கிரி என்னும் பெயருடைய நிகந்தரும், பல்வேறு மதப்பிரிவுகளைச் சேர்ந்த துறவிகளும் இருந்தனர்.**

***99.*** **அங்கு அரசன் நிகந்த கும்பந்தருக்காக ஒரு பிரார்த்தனை மண்டபத்தைக் கட்டினான். அது அவரின் பெயரால் அழைக்கப்பட்டது.**

***100.*** **அங்கிருந்த மேற்கேயும், வேடுவர்கள் வசித்த பகுதிக்குக் கிழக்கேயும் மாறுபட்ட கொள்கையுடைய ஐநூறு குடும்பங்கள் வசித்தன.**

***101.*** **ஜோதியருடைய வீட்டுக்கப்பால், காமனிவாபியின் இக்கரையில் வீடு வீடாகச் சென்று இரந்துண்ணும் துறவிகளுக்காக ஒரு மடத்தைக் கட்டுவித்தான்.**

***102.*** **ஆஜிவர்களுக்குத் தங்குமிடமும், பிராமணர்களுக்கான ஒரு தங்குமிடத்தையும் அமைத்தான். இந்த இடத்தில் நோயுற்றவர்கள் தங்கி சுகம் பெற ஒரு மனையையும் மண்டபத்தையும் கட்டினான்.**

***103.*** **பட்டாபிஷேகம் செய்து கொண்ட பத்து வருடங்களுக்குப் பிறகு, இலங்கையை யாண்ட பாண்டு அபயன் அத்தீவு முழுவதும் கிராம எல்லைகளை உறுதிப்படுத்தினான்.**

இவ்வாறு அன்றைய மக்கள் வாழ்ந்தார்கள். குறுநில மன்னர்களுக்கிடையே இடம்பெற்ற பகைமைகளையும் யுத்தங்களையும் தவிர, வரலாறு நெடுகிலும் இலங்கை மக்களிடையே நல்லுறவு நிலவி வந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய – வாக்குமூலம்

**எ**ன் இளமைப் பராயம், பெரிதும் முஸ்லிம்கள் மட்டுமே நிறைந்திருந்த சூழலில் கழிந்தது. அவ்வப்போது பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களை எதிர்கொள்கின்ற நிலை இருந்தபோதும், அவர்கள் என்னுடைய வாழ்க்கை வட்டத்திற்குள் அடங்கவில்லை. ஆரம்பப் பிரிவு வகுப்புகள் வரை இந்நிலை நீடித்தது. எங்கேயாவது அரச மரம் வளர்ந்தால், அங்கு விகாரைகள் கட்டப்படும் என்ற அச்ச உணர்வு எனக்குள் அப்போது இருந்தது. இந்த உணர்வு எவ்வாறு ஏற்பட்டது என்று தெரியவில்லை. இந்த உணர்வினால் நான் மட்டும் பீடிக்கப்பட்டு இருக்கவில்லை. என் வயதொத்த ஏனையோரும் இத்தகைய உணர்வைக் கொண்டிருந்தார்கள். இதனால் நாங்கள் மதில் இடுக்குகளிலும், கிணறுகளிலும் வளர்ந்த அரச மரங்களையும் அவற்றுடன் சேர்த்து ஆலமரங்களையும் உடனுக்குடன் வெட்டியெறிந்தோம். எனினும் எங்கள் ஊரின் மத்தியில் கட்டப்பட்ட ஒரேயொரு விகாரையைத் தவிர, வேறு விகாரைகள் எதுவும் கட்டப்படவில்லை.

பின்னர் ஆறாம் வகுப்பிற்கு சித்தியடைந்தபோது, ஒரு புதிய கருத்தியல் சவாலை எதிர்கொண்டேன். எங்கள் வகுப்பில் புதிதாக சேர்ந்த ஒரு கிறிஸ்தவ மாணவன் ஒரு முறை, ‘அல்லாவை விட யேசுதான் பெரியவர்’ என்று கூறினான். அதைக் கேட்டு, நான் திகைத்து நின்றேன். மிக இயல்பாக அவன் இதைக் கூறியபோது, அவனைத் தவிர அந்த வகுப்பில் இருந்த அத்தனை முஸ்லிம் மாணவர்களும் நம்ப முடியாதவர்களாய் அதிர்ந்து நின்றோம். அன்றும் அதன் பின்னரான சில நாட்களிலும் அவன் எங்களுடைய உடல்ரீதியானதும் வார்த்தை மூலமானதுமான தாக்குதல்களுக்கு ஆளானபோதிலும், அவனுடைய மென்மையான பண்புகள் விரைவிலேயே அவனை எங்களின் நண்பனாக மாற்றி விட்டன. குறிப்பாக, பாடசாலை இல்ல விளையாட்டு நிகழ்ச்சியில், விநோத உடைப் போட்டிக்காக அவன் கத்தரிக்காய் வேடத்தில் வந்து நின்றபோது, நாங்கள் வயிறு குலுங்கச் சிரித்து, அவன் பின்னால் கைகளைத் தட்டிக்கொண்டு நின்றோம்.

அன்றைய காலத்தில் எங்கள் ஊரில் சிறிய எண்ணிக்கையில் இருந்த சிங்கள மாணவர்களுக்காக தனியான பாடசாலை எதுவும் இருக்கவில்லை. இதனால், அவர்களுக்கென எங்கள் பாடசாலையில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. குறைந்த எண்ணிக்கையினராக இருந்தபோதிலும், அவர்களின் ஒழுங்கும், ஆசிரியர்களுடன் அவர்கள் நடந்து கொண்ட விதமும் எனக்குப் புதுமையானவையாக இருந்தன. அதே மாணவர்களும் அவர்களின் உறவினர்களும் பௌர்ணமி தினங்களில் வெள்ளை ஆடைகளில், “சாது, சாது, சாது” எனக் கோஷமிட்டவாறு, வீதிகளில் ஊர்வலமாகச் சென்றபோது அதைப் பார்ப்பதற்காக ஆர்வத்துடன் வீதியில் நின்று, பின் சிறிது தூரம் அவர்களின் பின்னால் சென்றிருக்கிறேன்.

இதன் பின்னரான காலத்தில், திரைப்படங்கள் பார்ப்பதில் அதீத ஆர்வம் ஏற்பட்டு, அதன் விளைவாக எங்கள் ஊரில் திரையிடப்பட்ட அத்தனை திரைப்படங்களையும் பார்க்கின்றவனாக நான் ஆனேன். சிங்களத்தில் ஒரு வார்த்தை கூட தெரியாதபோதிலும் சிங்கள திரைப்படங்களையும் சிங்கள பாடல்களையும் பார்ப்பவனாகவும் கேட்பவனாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறினேன். புத்தர் பற்றி முஹைடீன் பேக் பாடிய காலத்தால் அழியாத அந்த பாடலைக் கேட்டு, மெய்மறந்து போனேன். வெகுஜன தன்மையான ஜோதிபாலவின் பாடல்களில் தொடங்கி சிக்கலான இசைக்கோர்ப்புகளைக் கொண்ட பண்டித அமரதேவவின் பாடல்கள்வரை என்னால் ரசிக்க முடிந்தது. 'தரங்கா'வில் தொடங்கி, 'பூஜா', 'துன்வெனி யாம' 'கடபதக ஷாயா', 'சிறிமெதுர' 'மீஹரகா' என வெவ்வேறு வகையான சிங்கள திரைப்படங்களை, மொழி புரியாமலேயே ரசித்துப் பார்ப்பவனாக மாறினேன். வார்த்தைகளின்றி காட்சிப்படுத்தப்பட்ட 'பூஜா' திரைப்படத்தின் இறுதிப் பகுதியைப் பார்த்து, உணர்ச்சிவசப்பட்டு, கண்கலங்கி, தொண்டை இறுகி திரையரங்கை விட்டு வெளியே வந்தது இப்போதும் நினைவில் இருக்கின்றது.

1980களின் ஆரம்பத்தில் இந்நாட்டில் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டு, அதில் சிங்கள நாடகங்கள் ஒளிபரப்பப்பட்டபோது அந்த நாடகங்களின் தீவிர ரசிகனாக மாறினேன். அன்றைய 'தூ தருவோ', 'அசல் வெசியோ' 'கடுல்ல' தொடக்கம் தற்போதைய 'கூம்பியோ'. 'சகோதரயோ' 'எளந்தாரி ஹெந்தயோ' வரை அவற்றை ரசிப்பவனாக இருந்து வருகிறேன். அதேபோன்று சிங்கள மங்கைகளினால் மட்டுமன்றி சிங்கள ஆடவர்களினாலும் உணர்வுபூர்வமாகவும் மிகுந்த பிரயாசையுடனும் நிகழ்த்தப்படுகின்ற நடன வடிவங்களைப் பார்த்து, ரசித்து, பரவசப்பட்டு வருகிறேன். **இந்த உலகில் ஒரேயொரு சமூகமாக தனித்திருந்தும், மகத்தான பண்பாட்டு அம்சங்களின் உடமையாளர்களாக சிங்கள மக்கள் திகழ்வதை** எண்ணி வியப்படைந்திருக்கிறேன்.

நான் உயர்தர வகுப்பில் கல்வி கற்க ஆரம்பித்தபோது, பிற ஊர்களில் இருந்து எங்கள் வகுப்பில் கற்பதற்காக சில இந்து மாணவர்கள் வந்திருந்தார்கள். அவர்களுடன் எனக்கும் எனது ஏனைய முஸ்லிம் நண்பர்களுக்கும் இறுக்கமான நட்பு ஏற்பட்டது. அவர்களின் பண்டிகைகளின்போது, அவர்களின் வீடுகளுக்குச் சென்று சாப்பிட்டோம்; அவர்களின் கோயில் திருவிழாக்களுக்குச் சென்று, அங்கு வீடியோவில் காட்டப்படுகின்ற திரைப்படங்களை விடியும்வரை இருந்து பார்த்தோம். இதே காலத்தில் எனது முன்னைய கிறிஸ்தவ 'கத்தரிக்காய்' நண்பனுடனும் புதிதாக இணைந்த வேறு சில கிறிஸ்தவ நண்பர்களுடனும் சேர்ந்து, அவர்களின் கிறிஸ்மஸ் நிகழ்வுகளிலும் புதுவருட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டோம்; அவர்களின் இசை நிகழ்ச்சிகளை ரசித்தோம்; விதம் விதமான ஆடைகளுடன் மகிழ்ச்சியின் உச்சத்தில் மிதந்து செல்கின்ற அவர்களின் இளம் பெண்களைப் பார்த்து மகிழ்ந்தோம். பின்னர், உயர் கல்வியின் இறுதிப் பகுதியில் நகர்புறத்தில் இருந்த ஒரு இந்து பாடசாலையில் கற்கின்ற சூழல் உருவாகியது. முஸ்லிம்கள் தொடர்பாக இதுவரைக்கும் நான் அறிந்திராத கேலிப் பேச்சுகளையும், இழிவுபடுத்தல்களையும் எதிர்கொள்கின்ற நிலை அங்கு உருவானது. எனினும், படிப்படியே சக மாணவர்கள் சிலருடனும், வேறு வகுப்பு மாணவர்களுடனும் ஏற்பட்ட நெருக்கமான நட்பு, இன்றுவரை நீடிக்கின்ற அளவுக்கு ஆழமாகியிருந்தது.

1980களின் ஆரம்பத்தில் இந்நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழ் இளைஞர்களினால் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டபோது, அதன் தாக்கங்கள் எங்கள் ஊரிலும் வெளிப்பட ஆரம்பித்தன. ஆரம்பத்தில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு, அவர்கள் அகதிகளாக வெளியேற நேர்ந்தபோது, அவர்களுக்காக எங்கள் மக்கள் மத்தியில் உணவும், உடைகளும் சேகரித்து வழங்கினோம். அத்தோடு, அவர்களின் எளிமையான உடமைகளாக இருந்த கால்நடைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையல் இயந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், நெல் மூடைகள் போன்றவற்றை எங்கள் மக்கள் பாதுகாத்து கொடுப்பதற்கு உதவினோம். எனினும் இத்தகைய ஆரோக்கியமான சூழல் விரைவிலேயே முற்றாக மாற்றமடைந்தது. 1985களின் ஆரம்பத்தில் இருந்து தமிழ் ஆயுத இயக்கங்களினால், குறிப்பாக கிழக்கு முஸ்லிம்கள் மீது வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படத் தொடங்கின. அவற்றினால் ஏற்பட்ட அழிவுகளும் இழப்புகளும் கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் மத்தியில், தமிழ் மக்கள் மீது பகைமை உணர்வை உருவாக்கின. எங்கள் ஊரிலும் இதே நிலை உருவாகி, ஆழமடைந்தது. ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் எங்கள் ஊர் தாக்கப்பட்டது. ஆங்காங்கே பரஸ்பர ஆட்கடத்தல்களும், மரணங்களும் நிகழத் தொடங்கின. ஏறக்குறைய தமிழ் - முஸ்லிம் உறவு முற்றாகத் துண்டிக்கப்படுகின்ற நிலை தோன்றியது. இத்தகைய ஒரு சூழலுக்குள் இணங்கி வாழ முடியாதவனாக, பத்து வருடங்களுக்கும் மேலாக நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்கின்ற நிலைக்கு நான் ஆளாகினேன்.

நாட்டின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்தபோது, இனி அமைதியான சூழல் உருவாகி விட்டது என்ற நிம்மதி உணர்வு எல்லோரையும் போன்று எனக்குள்ளும் உருவாகியது. ஆனால், யுத்தத்தின் முடிவுடன், குறிப்பிட்ட சில பௌத்த - சிங்கள பிரிவினரால் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக வெறுப்பும் பகைமையும் கொண்ட பிரச்சாரங்களும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் 2014இல் அளுத்கம பகுதிகளில் முஸ்லிம்கள் மீது வன்முறை நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றினால் ஏனைய முஸ்லிம்களைப் போன்று நானும் கலக்கமடைந்தேன். இருந்தபோதிலும் 2015இன் தேர்தல் முடிவுகள் இத்தகைய நிலைமைகள் அதிக காலத்திற்கு நீடிக்காது என்ற உணர்வை ஏற்படுத்தின. "உங்கள் காலத்தவர்களைப் போன்று நாங்கள் இருக்க மாட்டோம்" என்று எனது மூத்த மகன் கூறியபோது, நம்பிக்கை நிறைந்த ஒரு புதிய தலைமுறையின் உருவகம் என் முன்னே தெரிந்தது.

எனினும், இது ஒரு நம்பிக்கையாக மட்டுமே ஆகிவிட்டது. சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக, இந்நாட்டில் இனங்கள், சமூகங்கள் என்பவற்றுக்கிடையிலான நல்லிணக்கம், ஒற்றுமை என்பவை பலவீனமானவையாகவும் மிகக் குறுகிய ஆயுளுக்குரியவையாகவுமே இருந்து வந்திருக்கின்றன. அதேநேரத்தில், முரண்பாடுகளும் பகைமைகளும் மேலும் மேலும் ஆழப்பட்டு வருவதே தொடர்ச்சியான எதார்த்தமாக அமைந்துள்ளது. பெரும்பாலும் இளைய தலைமுறையினரே அதிகம் பயன்படுத்துகின்ற இணையம், சமூக வலைத்தளங்கள் போன்றவற்றில் ஒவ்வொரு சமூகம் தொடர்பாகவும் 'ஆங்கில மொழியில்' முன்வைக்கப்படுகின்ற கருத்துகள் பதிவுகள் என்பவை சமூக வெறுப்பையும், பகைமையையும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

பொதுவாக, நான் இணையத்தில் தமிழ் மொழியிலான ஊடகங்களையும் சமூக வலைத்தளங்களையும் அதிகம் பார்ப்பதில்லை. செய்திகளையும், தகவல்களையும் அறிந்து கொள்வதற்காக அவ்வப்போது வாசிக்கின்ற ஆங்கில மொழியிலான இணையவழி ஊடகங்களில் பயன்படுத்தப்படுகின்ற சொற்களிலும் கருத்துகளிலும் நம்ப முடியாத அளவுக்கு சமூக வெறுப்பும் இழிவுபடுத்தல்களும் நிறைந்துள்ளன. இவை, இந்நாட்டில் இன நல்லுறவுகளுக்கான சாத்தியப்பாடு தொலைதூரத்திற்குரியதாக இருப்பதைக் குறித்து நிற்கின்றன. இங்கு நான் 'ஆங்கில மொழியிலான' இணையவழி ஊடகங்கள் என குறிப்பிடுவதற்கு விசேட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தம் இருக்கிறது. ஆங்கில மொழி ஒரு 'நாகரீக' மொழி என்றும், ஆங்கில மொழியில் உரையாடுபவர்கள், நாகரீகத்துடனும், கண்ணியமான முறையிலும் தமது கருத்துக்களைப் பரிமாறுபவர்கள் என்ற நம்பிக்கையும் பொதுவாக நிலவுகின்றன. இவ்வாறு கருதப்படுகின்ற ஆங்கில மொழியிலான பதிவுகளே இந்த அளவுக்கு இனவெறுப்பையும், பகைமையையும், இழிவுபடுத்தல்களையும் கொண்டிருக்கின்றபோது, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் வெளிப்படுத்தப்படுகின்ற கருத்துகளும், பதிவுகளும் எவ்வளவு கடுமையானதாக இருக்கும் என்பதை ஒருவர் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

*(தற்போது நான் தமிழ்மொழியில் முகநூலைப் பயன்படுத்துகிறேன். தமிழ் மொழிசார்ந்த முகநூல் பதிவுகளில் பயன்படுத்தப்படுகின்ற சொற்களின் வன்மம், பகைமை என்பன குழப்பத்தையும் அதிர்ச்சிகளையும் ஏற்படுத்துவனவாக உள்ளன. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் தொடர்பான முகநூல் பதிவுகளில், உணர்ச்சி கொப்பளிக்கும் சொற்களும் வன்மமும் பகைமையும் மிகச் சாதாரணமாக பயன்படுத்தப்படுகின்றன. சமூக உணர்வை வெளிப்படுத்துவது என்றால், பிற சமூகங்கள் மீது இயன்றளவுக்கு கடுமையான விமர்சனங்களை முன்வைப்பது என மிகப் பெரும்பாலானோர் அர்த்தம் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. தமது சொந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களால் நிகழ்த்தப்படுகின்ற தவறுகளை அடையாளம் கண்டு, அவற்றை பதிவிடுபவர்கள் மிகச் சொற்ப அளவிலேயே தென்படுகின்றனர். **சமூக உணர்வு என்பது, தனது சொந்த சமூகத்தின் தவறுகளையும் பலவீனங்களையும் புரிந்து கொள்வதில் இருந்து தொடங்குகின்றது** என்ற உண்மை இன்னமும் நமது நாட்டில் சமூகத்தன்மை பெறவில்லை.)*

21.04.2019இல் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் நட்சத்திர ஹோட்டல்களின் மீதும் சில முஸ்லிம்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், நமது நாட்டில் எங்கும் படர்ந்துள்ள இத்தகைய இனப் பகைமையின் ஒரு உச்ச வெளிப்பாடாக அமைந்திருக்கின்றன. 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்' என இலங்கை வரலாற்றில் அழியாத வடுவுடன் பதிந்துள்ள இந்தத் தாக்குதல்கள், தமக்கிடையே பெருமளவில் முரண்பட்டிராத முஸ்லிம் - கிறிஸ்தவ சமூகங்களிடையே ஆழ்ந்த பிளவை ஏற்படுத்தி, இந்நாட்டின் இன முரண்பாட்டில் இன்னுமொரு திசைவழியைத் திறந்துள்ளன.

நமது நாட்டில், இனங்களுக்கிடையேயும் சமூகங்களுக்கிடையேயும் நிலவி வருகின்ற முரண்பாடுகளையும் மோதல்களையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வழிமுறைகளைக் கண்டு கொள்வதில் நாம் தவறி வருகிறோமா?

முரண்பாடுகளின் விளைவுகளாக இடம்பெறுகின்ற வன்முறைத் தாக்குதல்களை, ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள ஒரு **சிறு தொகையினரின் செயற்பாடுகளாக மட்டும்** கொள்ளப் போகிறோமா? அல்லது பிற சமூகங்கள் தொடர்பாக ஒவ்வொரு சமூகத்திற்குள்ளும் ஆழப் புதைந்திருக்கின்ற, பகைமை நிறைந்த கருத்தியலின் வெளிப்பாடுகளாக இவற்றை அடையாளம் காணப் போகிறோமா?

**இணக்கமும் அமைதியும் நிறைந்த சூழலில் வாழக் கூடிய மனநிலையை நாம் இழந்து விட்டோமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளும் பகைமையும் நிறைந்த சூழலில் வாழ்வதைத்தான் நாம் விரும்புகிறோமா?

இவை நம்முன் நிற்கின்ற கேள்விகள்.

வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஒரு சிறு தொகையினராக இருக்கலாம். ஆனால் அதற்கான கருத்தியல் தளம் **வெகுஜனத் தன்மை கொண்டதாக** இருக்கிறது. பிற சமூகங்கள் தொடர்பாக ஒவ்வொரு சமூகத்திலும், தவறானதும் பகைமை நிறைந்ததுமான கருத்துகள் நிலவுகின்றன. ஒரு சமூகத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள், இத்தகைய கருத்துகளை உள்வாங்கக் கூடியவகையிலான நிலைமைகள் எங்கும் நிறைந்துள்ளன. குடும்பங்களில் தொடங்கி, கல்வி நிறுவனங்கள், தொழிலகங்கள், மதநிறுவனங்கள், தெருக்கள், தேனீர்க்கடைகள் மற்றும் ஏனைய சமூக நிறுவனங்கள் வரை இக்கருத்துகள் பரவி, பரப்பப்படுகின்றபோது, ஒரு சமூகத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் அவற்றை ஏற்றுக் கொள்கின்ற மனநிலையை 'இயல்பாகவே' பெற்று விடுகிறார்கள்.

இத்தகைய ஒரு சூழலில், நமது பகைமைக்கும், வெறுப்புக்கும் உரியதாக மாறியிருக்கின்ற ஒரு சமூகத்தின் மீது, நமது சமூகத்தைச் சேர்ந்த நபர்களினாலோ அல்லது பிறிதொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களினாலோ வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும்போது, அத்தாக்குதல்களினால் **மகிழ்ச்சியடைபவர்களாக, அத்தாக்குதல்களை நியாயப்படுத்துபவர்களாக அல்லது அவற்றை மௌனமாக அங்கீகரிப்பவர்களாக** நாம் மாறுகிறோம்.

வன்முறைத் தாக்குதல்கள் எப்போதுமே உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இறுதியில் வாழ்வியல் ரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. எனினும், வெறுப்பும் பகைமையும் நிறைந்த சூழலில், பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட சமூகப் பிரிவினர் எதிர்கொள்கின்ற இழப்புகளையும் துயரங்களையும் பற்றி அக்கறை கொள்ளாத மனநிலை நம்மத்தியில் உருவாகிறது. இத்தகைய மனநிலையில் இருந்து விடுபட்டு, பிற சமூகங்களை அவற்றின் **பலம் மற்றும் பலவீனங்களுடன்** பரஸ்பரம் புரிந்து, ஏற்காதவரை இந்நாட்டில் சமூக நல்லிணக்கமும் அமைதியும் ஏற்படுவது ஒரு சாத்தியமற்ற எதிர்பார்ப்பாகவே அமைந்திருக்கும்.

சமூகங்களுக்கிடையிலான பிரிவினைகளும் முரண்பாடுகளும் காலனிய ஆட்சியின் விளைவுகள் என, கோட்பாடுகளின் பின்புலத்தில் விளக்கப்படுகின்றன. இவ்வாறு விளக்கப்படுவதால் மட்டும் சாதகமான விளைவுகள் ஏற்படப் போதில்லை. ஒரு நோய்க்கான காரணி அடையாளம் காணப்பட்டால், அந்தக் காரணியை அகற்றப்பட வேண்டும். இதுதான் நோயைக் குணப்படுத்துவதற்கான அடிப்படையாக இருக்கின்றது. இதற்குப் பதிலாக, அக்காரணியைப் பற்றி திரும்பத் திரும்பப் பேசுவதால் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை. காலனிய ஆட்சியின் பிரித்தாளும் உபாயம்தான், சமூக முரண்பாடுகளை ஏற்படுத்தியது என்பது உண்மையாயின், அந்த உபாயத்திலிருந்து நாம் விலகிக் கொள்வதும், அவ்வாறு விலகுவதற்கான சமூக உளவியல் தளத்தை உருவாக்குவதும் அவசியமாகின்றன. காலனி ஆட்சி அகன்று 75 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும், அது ஏற்படுத்திய சமூகப் பிரிவினை என்ற கொடுநோயால் நாம் இன்னமும் பீடிக்கப்பட்டிருப்பது பெரும் துயர்தரு எதார்த்தமாக அமைந்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற சமூகங்கள் தொடர்பாக நாம் அக்கறையற்றிருக்கிறோம்; உதாசீனம் கொண்டவர்களாக இருக்கிறோம்; அவர்கள் அனுபவிக்கின்ற துயரங்களை, காணாதவர்கள் போன்று கடந்து செல்கிறோம். காலம் காலமாக நாம் அனைவரும் ஒரே நாட்டில், ஒரே பிரதேசத்தில் அருகருகே வாழ்ந்து வந்திருக்கின்றபோதிலும், பெரும் பகைவர்களைப் போன்று பிரிந்தே இருக்கிறோம். நாம் போதுமான அளவுக்கு தாமதித்து விட்டோம். நமது சந்ததிகளுக்கு, முரண்பாடுகளும் பகைமையும் நிறைந்த ஒரு நாட்டை கையளிப்பதற்கே நமது தாமதம் வழிவகுக்கும்.

இத்தகைய பின்னணியில், இலங்கை முஸ்லிம்கள் பற்றிய இந்நூல், அவர்கள் குறித்து, பிற சமூகங்கள் மத்தியில் நிலவுகின்ற தப்பெண்ணங்களை அகற்ற வேண்டும், சரியான புரிதலை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கங்களோடு எழுதப்பட்டுள்ளது; அத்துடன், இலங்கை முஸ்லிம்களும் தம்மைப் பற்றிய சரியான புரிதலைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடும் இது எழுதப்பட்டுள்ளது. இவ்வகையில் **இந்நூல், இலங்கை முஸ்லிம் சமூகம் சார்ந்த சுய-வெளிப்பாடாகவும் சுய-மதிப்பீடாகவும் அமைகிறது**. இந்நூலிலுள்ள கருத்துகளுக்கான முழுப் பொறுப்பையும் இந்நூலினை எழுதிய நானே ஏற்றுக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களைப் புரிந்து கொள்ளல்:

ஒரு சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கு பல அம்சங்கள் அடிப்படைகளாகக் கொள்ளப்படுகின்றன.

- பொருளாதாரம்
- மதம்
- பண்பாடு மற்றும் மரபுகள்
- நடத்தைப் பாங்குகள்
- வரலாறு
- அரசியல் போக்குகள்...

என்பனவும் இன்னும் இவை போன்ற வேறு அம்சங்களும் இவற்றுள் அடங்குகின்றன. இவற்றில், சமூகங்களிடையிலான முரண்பாட்டிற்கு அதிகளவில் வழிவகுப்பனவாக அமைந்திருக்கின்ற அம்சங்கள்தான் இந்நூலில் பெரிதும் பரிசீலிக்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரம்

ஒரு பல்லினச் சூழலில், சமூகங்களிடையே பகைமை நிலை உருவாவதில் பொருளாதாரம் சார்ந்த விடயங்கள் முக்கிய காரணிகளாக அமைகின்றன. ஒரு நாட்டில், வறுமையும் பற்றாக்குறையும் தொடர்ச்சியாக நிலவும்போது, அங்கு சமூக பகைமைக்கான சாத்தியம் அதிகரிக்கிறது. இத்தகைய ஒரு சூழலில், ஒரு சமூகம் செல்வ நிலையில் இருப்பது அல்லது அவ்வாறு இருப்பதாகக் கருதப்படுவது, ஏனைய சமூகங்களின் மத்தியில் வெறுப்பும் பகைமையும் தூண்டப்படுவதற்கான காரணமாக அமைகிறது. விருத்தி குன்றிய எந்தவொரு நாட்டிலும், பெரும்பான்மையாக இருக்கின்ற சமூகத்தினரிடையே ஏழ்மையில் வாழ்வோர் எண்ணிக்கை ரீதியாக அதிகமாகவே இருப்பார்கள். இந்நிலையில் ஒரு சிறிய சமூகம் செல்வந்த சமூகமாக இருக்கிறது என்ற பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகின்றபோது, அதை அங்குள்ள பிற சமூகங்கள் நம்புகின்ற நிலை எளிதில் உருவாகிறது. இதனால் குறிப்பிட்ட 'செல்வந்த' சமூகத்தின் மீது, பிற சமூகங்கள் முதலில் வெறுப்பும் பின் படிப்படியே பகைமையும் கொள்கின்ற நிலை உருவாகிறது.

இத்தகைய ஒரு கருத்தியல் நிலை, இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக, பிற சமூகங்கள் மத்தியில் உருவாகி, வலுப்பட்டு வந்திருக்கிறது. அதாவது 'இலங்கை முஸ்லிம்கள் செல்வந்த சமூகம்' என்ற கருத்து, இந்நாட்டிலுள்ள பிற சமூகங்களிடையே நிலைபெற்றிருக்கிறது. ஆனால், இந்தக் கருத்து முற்றிலும் தவறானது; இதற்கு மாறாக, **முஸ்லிம்களில்தான் ஏழைகளும் நாளாந்தம் தர்மத்திற்காக வீதிகளில் அலைபவர்களும் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள்** என்பதே உண்மை நிலை.

இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக பிற சமூகங்களினால் மட்டுமின்றி, இலங்கை முஸ்லிம்களினாலும் மிகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ள விடயமாக அவர்களின் பொருளாதார அடிப்படை அமைந்திருக்கிறது. இலங்கை முஸ்லிம்களின் பொருளாதாரம் பிரதானமாக வியாபாரம் என்றும் அவர்களில் பெரும்பாலானோர் செல்வந்தர்களாக இருக்கிறார்கள் என்றும் இன்றுவரை பலமாக கருதப்பட்டும் கூறப்பட்டும் வந்திருக்கின்றன. இக்கூற்றை இலங்கை முஸ்லிம்களும் ஒருவித பெருமித உணர்வுடன் ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் உண்மை நிலை இதற்கு முற்றிலும் மாறானது. **இலங்கை முஸ்லிம்களில் மிகப் பெரும்பாலானோர் விவசாயிகளாகவும், விவசாயத்தை சார்ந்தவர்களாகவும், மீன்பிடி மற்றும் கடற்றொழிலில் ஈடுபடுபவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றார்கள், அதேநேரத்தில் பெரும்பாலானோர் வறுமைநிலையில் இருந்து வந்திருக்கிறார்கள்.** இதுதான் எதார்த்த நிலையாக இருக்கிறது.

இவ்வாறிருந்தும், இலங்கை முஸ்லிம்கள் வியாபார சமூகம் என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறார்கள், இப்போதும் அழைக்கப்படுகிறார்கள். இந்தத் தவறான புரிதலுக்குகு பின்வரும் நிலைமைகள் காரணங்களாக அமைந்திருக்கின்றன.

1. விவசாயமும் மீன்பிடியும் வெகுஜன தொடர்பாடல் மிகுந்த தொழில்துறைகள் அல்ல. விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் பிறருடன் ஏற்படுகின்ற தொடர்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைக்குட்பட்டவை. மேலும் அவை பெரிதும் ஒரே சமூகத்திற்குள் இடம்பெறுபவை. இவர்கள் தமது விளைபொருட்களை, தமது பிரதேச எல்லைக்குள்ளும் ஒரு சிறு எண்ணிக்கையானோருக்கும் விற்று முடித்து விடுகிறார்கள். இந்த விற்பனை குறுகிய நேர செயற்பாடாக அமைகிறது. இதனால் இயல்பான நிலையில், **விவசாயிகளினதும் மீனவர்களினதும் சமூக அடையாளம் மற்றவர்களினால் அக்கறைக்கு உட்படுத்தப்படுவதில்லை.**

ஆனால் இதற்கு மாறாக வியாபாரம் என்பது, பிறருடன் எப்போதும் சுறுசுறுப்பானதும் உயிர்ப்புமிக்கதுமான தொடர்பாடல்களை அவசியமாக்குகிறது. ஒரு வியாபாரியின் தொடர்பாடல் என்பது அவரது சமூக எல்லையையும் கடந்து, பல்வேறு சமூகங்களை ஊடறுப்பதாக இருக்கிறது. இதனால் ஒரு வியாபாரி, பிற சமூகங்கள் மத்தியில் அவரது சமூக அடையாளத்துடன் பேசுபொருளாகின்ற நிலைமை இயல்பாகவே உருவாகி விடுகின்றது. இலங்கை எங்கும், நகரங்களிலும் கிராமங்களிலும் நடைபாதைகளிலும் பிற சமூகங்களுடன் மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணுகின்றவர்களாக முஸ்லிம் வியாபாரிகள் இருந்து வந்திருக்கிறார்கள். இதனால், **பிற சமூகத்தினரின் பார்வையில் இந்த வியாபாரிகளின் தொகுப்பாகவே முஸ்லிம் சமூகம் அடையாளப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.** நிலத்துடனும், கடல் மற்றும் ஆறுகளுடனும் பிணைந்திருக்கின்ற பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் விவசாயிகளும், மீனவர்களும் இவர்களின் கண்களுக்குத் தென்படுவதில்லை.

2. சுதந்திரத்தின் முன்பிருந்தே இலங்கையின் சமூக, அரசியல் தளங்களில் செயற்பட்ட முஸ்லிம்களில் பெரும்பாலானோர் வர்த்தகக் குழாமின் பிரதிநிதிகளாக இருந்தார்கள். இவர்களின் செல்வாக்கும் நீண்டகாலம் நீடித்த இவர்களின் சந்ததித் தொடர்ச்சியும் பிற சமூகங்கள், இலங்கை முஸ்லிம்களை வர்த்தக சமூகமாகக் கருதுகின்ற நிலைக்குக் காரணமாகியிருக்கின்றன.

3. ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின்போது, இலங்கை பற்றி எழுதிய மேற்கத்தைய வரலாற்றாசிரியர்கள், நகர்ப்புறங்களில் சுறுசுறுப்பாகவும் அதிக எண்ணிக்கையிலும் செயற்பட்ட முஸ்லிம் வர்த்தகர்களைப் பற்றி கணிசமான அளவு குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைய காலகட்டத்தில், இந்தியாவில் இருந்து வந்து, இங்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட முஸ்லிம்களையும் கவனத்தில் கொள்கையில், பெருநகர்ப் பகுதிகளில் முஸ்லிம் வர்த்தகர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாக இருந்துள்ளது. மேலும் இவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்தில் செல்வாக்குமிக்கவர்களாக விளங்கினார்கள். இதனால், இந்த வரலாற்றாசிரியர்கள், இலங்கை முஸ்லிம்கள் வர்த்தக சமூகத்தினர் என அர்த்தம் கொள்ளும் வகையில் தமது குறிப்புகளைப் பதிந்துள்ளார்கள்.

இவற்றின் விளைவாக இலங்கை முஸ்லிம் சமூகம் வியாபார சமூகம் என்ற கருத்து, கேள்வியும் பரிசீலிப்புமின்றி நிலைபெற்று விட்டது. சாதாரண உரையாடல்களில் இருந்து, புலமை மட்ட உரையாடல்கள் வரை இலங்கை முஸ்லிம்கள் வியாபார சமூகமாகவே பேசப்பட்டு வந்திருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயம்

இலங்கை எங்கும் வாழ்கின்ற முஸ்லிம்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். கிழக்கு, வடக்கு முஸ்லிம்களில் பெரும்பாலானோர் நெல் உற்பத்தியிலும் பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். அதேநேரத்தில், தென்னிலங்கை முஸ்லிம்களில் கணிசமான பகுதியினர் நெல்லுற்பத்தியிலும், வாசனைத் திரவியங்கள், தென்னை, பாக்கு, மிளகு போன்ற பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.

"கண்டிய முஸ்லிம்களின் முக்கிய தொழிலாக விவசாயம் விளங்கியது. தொழில் அடிப்படையில் பார்க்கையில், இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர், கண்டிய முஸ்லிம்களில் விவசாயிகளும் நெல் வயல் சொந்தக்காரர்களுமே அதிகமாக இருந்தனர். அவர்களால் எழுதப்பட்ட சீட்டுகள், உறுதிகளில் அதிகமானவை வயல்நிலங்கள் சம்பந்தப்பட்டவையாகவே உள்ளன. விகாரகம், தேவாலயகம் நிலங்களிலும் முஸ்லிம்கள் பரணியாகப் பெற்ற நிலங்களில் அதிகமானவை, வயல் நிலங்களாகவே காணப்படுகின்றன." *("கண்டிய இராச்சிய முஸ்லிம்களின் சிங்கள வம்சாவளிப் பெயர்கள்" - ஏ.எம். நஜிமுதீன். பக்: 55)*

எனினும் 1970களின் இறுதிப் பகுதியின் பின்னர் இந்நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டன: இந்நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது; பின்னர் மத்திய கிழக்கிற்கான தொழில் வாய்ப்புகள் உருவாகி, குறுகிய காலத்தில் அது வேகமாக அதிகரித்தது. இவற்றின் விளைவாக, இலங்கை முஸ்லிம்களின் பொருளாதார அடிப்படையிலும் மாற்றங்கள் இடம்பெற்றன. அதுவரைகாலமும், இந்நாட்டில் வாழ்ந்த பிற சமூகங்களைப் போன்று விவசாயத்திலும் மீன்பிடியிலும் பெருமளவில் தங்கியிருந்த இலங்கை முஸ்லிம்களில் ஒரு பகுதியினர், அவற்றிலிருந்து விலகத் தொடங்கினார்கள்.

ஒரு நாட்டின் பொருளாதாரம், விவசாயத்துறையில் இருந்து விடுபட்டு, தொழில்துறைக்கும் ஏனைய துறைகளுக்கும் மாறுகின்றபோது, விவசாயத்தில் நேரடியாகப் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை குறைவடையத் தொடங்குகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில், 1980களிலிருந்து விவசாயத்துறை வீழ்ச்சியடையத் தொடங்கியது. இதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட நிலைமைகள் காரணங்களாக அமைந்திருந்தன:

1. **திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு, அபரிமிதமாக பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமை.** இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் விவசாய உற்பத்திப் பொருட்களும் அடங்கியிருந்தன. இதனால் உள்நாட்டு விவசாய உற்பத்தி பொருட்களின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டு, பின் விவசாயம் வீழ்ச்சியடைந்தது.

2. **ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் தொழில் வாய்ப்பு பெற்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றமை.** இவர்களில் பெரும்பாலான ஆண்களும் பெண்களும் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இவ்வாறு வெளிநாடு சென்ற ஆண்கள் விவசாயத்தில் இருந்து விடுபட்டதால், இவர்களுடைய குடும்பங்களின் விவசாய முயற்சிகளில் பாதிப்புகள் ஏற்பட்டன. விவசாயத்தில் சந்ததித் தொடர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனமடையத் தொடங்கியது. மறுபுறத்தில், மத்திய கிழக்கிற்கு தொழில் பெற்றுச் சென்ற பெண்கள் ஒப்பீட்டளவில் பெருந்தொகையான பணத்தை அனுப்பினார்கள். இதனால், அப்பெண்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களில் ஒரு தொகையானோர் விவசாய முயற்சிகளில் முனைப்புடன் ஈடுபடாத நிலை உருவாகியது.

3. **வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம்.** முப்பது வருடங்கள் நீடித்த உள்நாட்டு யுத்தத்தினால் அம்மாகாணங்களின் விவசாயச் செயற்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. யுத்த நிலையினாலும் அச்சம் நிறைந்த சூழலினாலும் பல பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகள் முற்றாகக் கைவிடப்பட்டன.

இவற்றின் விளைவாக இலங்கையின் ஒட்டுமொத்த விவசாயத்துறையும் பாதிக்கப்பட்டது. இதனால் விவசாயத்தில் இருந்து வெளியேறுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. 1970களின் தொடக்கத்தில் நமது நாட்டில் 70 வீதத்திற்கும் அதிகமாக இருந்த விவசாயிகளின் எண்ணிக்கை இப்போது 30 வீதத்திற்கும் குறைவாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. இதற்கேற்ப முஸ்லிம் விவசாயிகளின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

எனினும் 'இலங்கையின் நெற்களஞ்சியம்' என அழைக்கப்படுகின்ற கிழக்கு மாகாணத்தில், பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் இப்போதும் விவசாயத்துடன் தொடர்புபட்டிருக்கிறார்கள். இவர்களோடு அரசாங்க ஊழியர்கள், தனியார் துறைகளில் தொழில்புரிபவர்கள், வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் போன்றோரில் கணிசமானோர் விவசாயம் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் இம்மாகாண முஸ்லிம்களின் விவசாயப் பங்களிப்பு மிக உயர்ந்த நிலையில் காணப்பட்டு வருகிறது. கிழக்கிலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லின் அளவை கீழ்வரும் புள்ளி விபரங்கள் குறிக்கின்றன.

| ஆண்டு | மொத்தம் (மெட்ரிக் தொன்) | கிழக்கு மாகாணம் | வீதம் |
|---|---|---|---|
| 2016 | 4420.1 | 1112.6 | 25.17 |
| 2017 | 2383.2 | 759.9 | 31.9 |
| 2018 | 3929.8 | 1035.5 | 26.35 |
| 2019 | 4592.1 | 1155.4 | 25.16 |
| 2020 | 5120.9 | 1225.3 | 24.0 |

(இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளி விபரங்கள். - மத்திய வங்கி. 2021)

ஒவ்வொரு வருடமும் நாட்டின் ஒட்டுமொத்த நெல்லுற்பத்தியில் கிழக்கு மாகாண விவசாயிகள் **கால் பங்குக்கும் (25%) அதிகமான** நெல்லை உற்பத்தி செய்கிறார்கள். இந்த விவசாயிகளில் அரைவாசிக்கும் (50%) அதிகமானோர் முஸ்லிம் விவசாயிகளாக இருக்கிறார்கள். இவ்வகையில், **தேசிய நெல்லுற்பத்தியில், கிழக்கு மாகாண முஸ்லிம் விவசாயிகள் மட்டும் அண்ணளவாக 15% மான நெல்லை உற்பத்தி செய்கிறார்கள்.** கிழக்கு மாகாண முஸ்லிம் விவசாயிகளினால் வழங்கப்படுகின்ற இந்தப் பங்களிப்பானது, இலங்கையின் மொத்த சனத்தொகை வீதத்துடனும் நாட்டின் மொத்த நெல்லுற்பத்தியுடனும் ஒப்பிடுகையில் மிக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த அளவாக அமைந்திருக்கின்றது. அதாவது நாட்டின் மொத்த சனத்தொகையில் அண்ணளவாக **ஒரு வீதமாக (1%) மட்டுமே** உள்ள கிழக்கு மாகாண முஸ்லிம் விவசாயிகள், இந்நாட்டின் மொத்த நெல்லுற்பத்தியில் 15 வீதமான நெல்லை உற்பத்தி செய்கிறார்கள். இது ஒரு பாரிய பங்களிப்பு. இவ்வாறு, இலங்கை முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் விவசாயிகளாக மட்டுமன்றி, **நாட்டின் உணவுத் தேவைக்கு மிகப் பெருமளவில் பங்களிப்புச் செய்கிறவர்களாகவும்** இருந்து வருகிறார்கள்.

நெல்லுற்பத்திக்கு அதிக நாட்கள் தேவைப்படுகின்றன, மேலும் இதற்கு அதிக உழைப்பும் தொடர்ச்சியான கண்காணிப்பும் அவசியமாகின்றன. இதற்கு இரவு-பகல் பாராத கடினமான உழைப்பு செலுத்தப்பட வேண்டும். அதேநேரத்தில் அது வரட்சி, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களையும் பீடைகளினால் ஏற்படக்கூடிய பாரிய அழிவுகளையும் யானைகள், பன்றிகள் போன்ற வனவிலங்குகளின் தாக்கங்களையும் எதிர்கொள்கிறது. இவை அனைத்தையும் முகம் கொடுத்து, சமாளித்து, இவற்றினால் ஏற்படுகின்ற நட்டங்களையும் தாங்கியவர்களாக தமது ஜீவனோபாயத்திற்காக மட்டுமன்றி, முழு நாட்டின் உணவு தேவைகளையும் ஈடுசெய்பவர்களாக இந்த முஸ்லிம் விவசாயிகள் இருந்து வருகிறார்கள்.

## மீன்பிடி

இலங்கை முஸ்லிம்களில் கணிசமானோர் மீன்பிடியுடனும் நீர்நிலைகள் சார்ந்த பிற தொழில்களுடனும் தொடர்புபட்டிருக்கிறார்கள். குறிப்பாக கிழக்குக் கரையோரங்களிலும், மன்னார், முல்லைத்தீவு மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும், பேருவளையின் ஒரு பகுதியிலும் அம்பாந்தோட்டையிலுள்ள கிரிந்த போன்ற இடங்களிலும் வாழ்கின்ற முஸ்லிம்களில் ஒரு குறிப்பிடத்தக்க பிரிவினர் இத்தகைய தொழில்கள் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். முன்னைய காலத்தில் முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் முத்துக் குளித்தல் தொழிலில் தேர்ச்சிமிக்கவர்களாக இருந்திருக்கிறார்கள். தற்போது மீன்பிடி, கடலட்டைகள் பிடித்தல், இறால்கள் பிடித்தல், சிப்பிகள், கடற்பாசி போன்றவை சேகரித்தல், மட்டி எடுத்தல், கருவாடு தயாரித்தல், மற்றும் உப்பு விளைவித்தல் போன்ற கடல் மற்றும் நீர்நிலைகள் சார்ந்த பல்வேறுபட்ட தொழில்களில் இவர்கள் ஈடுபடுகிறார்கள

இவை உள்நாட்டு தேவைகளில் கணிசமான பகுதியை பூர்த்தி செய்வதோடு, மீன்கள், கடலட்டைகள், இறால்கள் மற்றும் கடற்பாசி போன்றவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன. ஆறுகளிலும் குளங்களிலும், ஆழ்கடலிலும், கரைவலைகள் மூலமாகவும் மீன்பிடிக்கின்ற பெரும்பாலானோர், தமது அன்றாட வாழ்க்கைக்கான வருமானத்தை தேடுவதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். பெருங்காற்று, கடல் கொந்தளிப்பு, திசை மாறிச் செல்லல் போன்ற வெவ்வேறு ஆபத்துகளை எதிர்கொண்டவாறு கடற்றொழிலில் ஈடுபடுகின்ற இந்த முஸ்லிம் பிரிவினர், தமது உழைப்பின் மூலமாக உள்நாட்டு தேவைகளுக்கு உதவுவதோடு, நாட்டின் அந்நியச் செலாவணியிலும் கணிசமான அளவில் பங்களிப்பு செய்து வருகிறார்கள்.

இவற்றோடு நுரைச்சோலைப் பகுதியில் வாழ்கின்ற முஸ்லிம்கள், **வெளிநாட்டு ஏற்றுமதிக்காக மட்டுமே வெள்ளரிக்காய் போன்ற பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.** இவர்களை விட நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்கின்ற முஸ்லிம்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிசமான பிரிவினர், தமது சுய-நுகர்விற்காகவும், உள்ளூர் தேவைகளுக்காகவும் கிழங்குகள், மரக்கறிகள், பழவகைகள் போன்ற பயிர்ச்செய்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். சுருக்கிக் கூறும்போது, இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களைப் போன்று இலங்கை முஸ்லிம்களும் பாரம்பரியமாக விவசாய சமூகமாகவும் மீன்பிடி சமூகமாகவும் இருந்து வந்திருப்பதோடு, அந்த மரபை **இன்னமும் தொடர்பவர்களாகவும்** இருந்து வருகிறார்கள். இந்த உண்மைகள், 'இலங்கை முஸ்லிம்கள் வியாபார சமூகம்' என்று சொல்லப்பட்டு வந்திருக்கின்ற கருத்தினை தெளிவாக மறுக்கின்றன.

## வர்த்தகம்

இலங்கை முஸ்லிம்களில் கணிசமான பகுதியினர் வர்த்தகத்திலும் அதனுடன் தொடர்புபட்ட தொழில்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள். இறக்குமதி வர்த்தகத்தில் இருந்து, நடைபாதை வியாபாரம் வரை இலங்கை முஸ்லிம்களின் வர்த்தக செயற்பாடுகள் பன்முகத்தன்மை கொண்டவையாக இருக்கின்றன. இந்நாட்டின் **கணிசமான நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் முஸ்லிம்களின் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய வியாபார நிலையங்கள் அமைந்திருக்கின்றன. இவ்வாறு முஸ்லிம்களின் வியாபாரத் தளங்கள் நாடெங்கும் காணப்படுவதால், பிற சமூகங்கள் மத்தியில்** முஸ்லிம்கள் பற்றிய எதிர்நிலைக் கருத்துகள் உருவாகி பரவுவதற்கு இது ஒரு காரணமாகியுள்ளது. அத்துடன் இந்த முஸ்லிம் வியாபாரிகளில் ஒரு சிறிய பிரிவினர் வர்த்தகத்தில் பெற்றிருக்கின்ற உறுதியான நிலையின் காரணமாக பிற சமூகங்கள், ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் செல்வந்த சமூகமாகவும், வியாபார சமூகமாகவும் கருதுகின்ற நிலையும் ஏற்பட்டு வந்திருக்கிறது.

இத்தகைய ஒரு பின்னணியில், இலங்கை முஸ்லிம்கள் வர்த்தகத்தில் கொண்டிருக்கின்ற வகிபாகத்தைப் பற்றி, ஒரு வரலாற்று ரீதியிலான பரிசீலனையை முன்வைப்பது அவசியமாகிறது.

## வர்த்தகத்தில் இலங்கை முஸ்லிம்கள்: ஒரு வரலாற்றுப் பரிசீலனை

வர்த்தக நடவடிக்கைகளில் முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் மும்முரமாக ஈடுபட்டு வந்திருப்பதற்கு வரலாற்று ரீதியான காரணிகள் பங்களிப்புச் செய்திருக்கின்றன. பண்டைய காலத்தில், கப்பல்கள் மூலமாக இந்நாட்டின் கரையோரங்களை வந்தடைந்த பிறநாட்டு வியாபாரிகளை, நாட்டின் உட்புறம்வரை கூட்டிச் செல்கின்ற பணியைச் செய்பவர்களாக இலங்கை முஸ்லிம்களின் முன்னோர்கள் செயற்பட்டு வந்திருக்கிறார்கள். இங்கு வாழ்ந்த பிற சமூகங்கள் குறிப்பிட்ட பிரதேசங்களுக்குள் வாழ்ந்து வந்த நிலையில், **இலங்கை முஸ்லிம்களின் முன்னோர்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.** முஸ்லிம் முன்னோர்களின் இந்த குறிப்பான குடிப்பரம்பலின் காரணமாக, அவர்கள் இங்கு வாழ்ந்த சகல பிரிவினர்களுடனும் சிறப்பான தொடர்புகளை பேணி வந்திருக்கிறார்கள். அவர்கள் கொண்டிருந்த இத்தகைய தொடர்பாடல் வாய்ப்பின் காரணமாக, இந்நாட்டுக்கு வந்த பிறநாட்டு வியாபாரிகள் - குறிப்பாக அரபு வர்த்தகர்கள் - தமது வியாபார நடவடிக்கைகளை இந்நாட்டில் சிறப்பாக மேற்கொள்வதற்காக இலங்கை முஸ்லிம் முன்னோர்களின் உதவியையும் பங்கேற்பையும் பெருமளவில் வேண்டி நின்றார்கள். நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் பிறநாட்டு வியாபாரிகளை அழைத்துச் சென்றதோடு, அவர்களுடைய சரக்குகளை கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்காக தாவளம் போன்ற தரைவழிப் போக்குவரத்து முறைகளையும், மடிகே போன்ற நீர்வழிப் போக்குவரத்து முறைகளையும் இலங்கை முஸ்லிம்கள் உருவாக்கினார்கள். இவற்றோடு, வெளிநாட்டு வர்த்தகர்கள் உள்நாட்டு மக்களுடன் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவுபவர்களாகவும் அவர்கள் செயற்பட்டார்கள். இந்த அனுபவமானது காலப்போக்கில், அவர்களில் ஒரு பிரிவினர் வர்த்தக அனுபவமும், நுணுக்கங்களும் தெரிந்தவர்களாக மாறுவதற்கு உதவியது.

பிறநாட்டு வர்த்தகர்கள் இந்நாட்டில் தங்கியிருந்த காலப்பகுதியில் தமது பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக இந்நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் களஞ்சியசாலைகளை உருவாக்கியிருந்தார்கள். இவை 'கிட்டங்கிகள்' என்று அழைக்கப்பட்டன. இத்தகைய களஞ்சியசாலைகளை, துறைமுகங்களுக்கு அண்டிய இடங்களில் மட்டுமன்றி, தாம் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்ட பகுதிகளிலும் உருவாக்க வேண்டிய தேவை அன்றைய பிற நாட்டு வர்த்தகர்களுக்கு இருந்தது. பொதுவாக, போக்குவரத்து மார்க்கங்களிலும் பிரதேசங்களின் மையப்பகுதிகளாகவும் அமைந்த இடங்கள்தான் களஞ்சியங்கள் அமைக்கப்படுவதற்குப் பொருத்தமான இடங்களாக தெரிவு செய்யப்பட்டன. ஏற்கனவே இத்தகைய போக்குவரத்து மார்க்கங்களில் தமது வாழ்விடங்களைக் கொண்டவர்களாகவும், பிறநாட்டு வியாபாரிகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உதவியாளர்களாகவும் விளங்கிய **முஸ்லிம்களின் குடியிருப்புகளை அண்டியதாக இக்களஞ்சியங்களை அமைப்பது அன்று பொருத்தமான தேர்வாக இருந்தது.** தமது வர்த்தக நடவடிக்கைகள் முடிவடைந்து, அவர்கள் தமது நாடுகளுக்கு திரும்பி, பின் மீண்டும் வருவதற்கான காலப் பகுதியில் இந்தக் களஞ்சியங்கள் அப்பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன.

16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்நாட்டை ஐரோப்பியர் ஆக்கிரமித்ததோடு, அரபு வர்த்தகர்களின் வருகை முற்றாக தடைப்பட்டது. அதன் பின்னர், அரபியர்கள் பயன்படுத்திய பல களஞ்சியங்கள், அவற்றின் பொறுப்பாளர்களாக இருந்த **முஸ்லிம்களின் உடமைகளாக மாறின.** 18ஆம் நூற்றாண்டின் கடைசியில் ஆங்கிலேயர் இந்நாட்டை ஆக்கிரமித்ததன் பின்னர், இங்கு முதலாளித்துவ முறையிலான தொழில் முயற்சிகளும், வர்த்தக நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டன. இதன் விளைவாக, முன்னர் வியாபார நிலையங்களாக விளங்கிய பகுதிகளும் எஞ்சியிருந்த களஞ்சியசாலைகளும் புதிய வர்த்தக மையங்களாக மாறின. இதனால் ஏற்கனவே வர்த்தகப் பாரம்பரியத்தைப் பெற்றிருந்த முஸ்லிம்களும் அவர்கள் வாழ்ந்த பிரதேசங்களும் **இயல்பாகவே** வர்த்தக நடவடிக்கைகளில் முனைப்பாக இணைக்கப்பட்டன. வர்த்தகத்தின் செழிப்போடு இணைந்து, இப்பகுதிகள் நகரங்களாக விருத்தியடைந்தபோது, அங்கு கணிசமான எண்ணிக்கையில் வாழ்பவர்களாகவும், வியாபார நிலையங்களை அதிகம் கொண்டவர்களாகவும் முஸ்லிம்கள் உருவாகியிருந்தார்கள்.

எனவே, இலங்கையின் பெரும்பாலான நகரங்களில் முஸ்லிம்கள் கணிசமான எண்ணிக்கையிலும், அதிக வியாபார நிலையங்களைக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்று வெறுப்போடும், பகைமையோடும் முன்வைக்கப்பட்டு வருகின்ற பிரச்சாரத்திற்கு இலங்கை முஸ்லிம்கள் எவ்வகையிலும் பொறுப்பாளிகள் அல்ல. இந்நாட்டில் வாழ்ந்த பிற சமூகங்களின் நிலங்களையோ, அல்லது அவர்களின் தொழில் நிலையங்களையோ இலங்கை முஸ்லிம்கள் **சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்தியிருந்தார்கள் என்பதற்கான எந்தக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பும் இலங்கை வரலாற்றில் பதியப்படவில்லை.** இலங்கை முஸ்லிம்களின் வாழ்விடங்கள் சார்ந்து இடம்பெற்ற அபிவிருத்தி நிகழ்வுகளின் இயல்பான விளைவுகளாக அவர்களின் பொருளாதாரம் - குறிப்பாக வர்த்தக முயற்சிகள் - விருத்தியடைந்து வந்திருக்கின்றனவே தவிர, தவறான முன்னெடுப்புகளோ அல்லது பிற செல்வாக்குகளோ இதற்கான காரணங்களாக அமைந்திருக்கவில்லை.

## பொட்டணி வியாபாரம்

18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இத்தகைய நிலையான வியாபார நிலையங்களின் விருத்தியோடு, 'பொட்டணி வியாபாரம்' என்ற வியாபார முறையும் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் உருவாகியது. முஸ்லிம்களில் ஒரு பகுதியினர், நாட்டின் உட்புறங்களில் வாழ்ந்து வந்த மக்களுக்குத் தேவையான பொருட்களை அவர்களின் வீடுகளுக்கே கொண்டு சென்று விற்பனை செய்பவர்களாக மாறினார்கள். தமது முதுகுகளிலும், தோள்களிலும், தலைகளிலும் பொதிகளை (பொட்டணிகளை) சுமந்தவாறு இவர்கள் பல மைல்கள் தூரம் கால்நடையாகப் பயணம் செய்தார்கள். கடினமான பாதைகள் ஊடாகவும் கொடிய விலங்குகள், வழிப்பறிக் கொள்ளையர்களின் தாக்குதல்கள், மழை, வெயில் போன்ற இயற்கை நிகழ்வுகள் போன்றவற்றை தாங்கிக் கடந்தும் இவர்கள் குக்கிராமங்கள் வரை பண்டங்களைக் கொண்டு சென்றார்கள். ஆடைகள், அணிகலன்கள், மங்கள நிகழ்வுகளுக்குத் தேவையான பொருட்கள், உணவுப் பொருட்கள் போன்ற பலவகையான பொருட்களை இவர்கள் கொண்டு சென்றார்கள்.

அன்றைய நாட்களில், இந்நாட்டின் கிராமிய வாழ்க்கையில் 'பொட்டணி' வியாபாரிகள் வகித்த பாத்திரம் அளப்பரியது. அவர்கள் வெறுமனே பொருட்களை விற்பனை செய்பவர்களாக மட்டும் செயற்படவில்லை. கூடவே, **கிராமங்களில் வாழ்ந்த மக்களின் மத, பண்பாட்டு தேவைகளை நிறைவு செய்கிறவர்களாகவும், அம்மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தவர்களாகவும்** இருந்தார்கள். பணப்புழக்கம் மிகக் குறைவாகவும் தமது தேவைகளுக்காக அறுவடைகளை நம்பியும் இருந்த அன்றைய மக்களின் அறுவடைக்கு இடைப்பட்ட காலங்களிலான தேவைகளை பூர்த்தி செய்பவர்களாக இந்த 'பொட்டணி' வியாபாரிகள் செயற்பட்டார்கள். கிராம மக்களுடன் தங்கியிருந்து, அவர்களின் வாழ்வுடன் தம்மைப் பிணைத்திருந்த 'பொட்டணி' வியாபாரிகள், அம்மக்களுக்கு பொருட்களை கடனடிப்படையில் வழங்கினார்கள். அதுமட்டுமன்றி, சில சந்தர்ப்பங்களில் அவற்றை இலவசமாகவும் வழங்கக் கூடிய பண்புகளை அவர்கள் கொண்டிருந்தார்கள். பண்டிகைகள், திருவிழாக்கள், திருமணம், மற்றும் ஏனைய சடங்குகள் போன்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் தேவையான பொருட்களை வழங்கி, அந்த மக்களின் மத, பண்பாட்டு தேவைகளை நிறைவு செய்பவர்களாக இவர்கள் விளங்கினார்கள்.

கணிசமான சந்தர்ப்பங்களில் 'பொட்டணி' வியாபாரிகளின் வியாபாரமானது, பண்டமாற்றாகவே இடம்பெற்றது. தாம் வழங்கிய பொருட்களுக்குப் பகரமாக, கிராமங்களில் விளைந்த நெல், பாக்கு, ஏலம், கறுவா, மிளகு, கராம்பு மற்றும் கிழங்கு வகைகள் போன்றவற்றை இவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இதன் மூலமாக கிராம மக்கள் தமது உற்பத்திப் பொருட்களை எளிதாக விற்பனை செய்ய முடிந்தது. தமது இத்தகைய வியாபார நடவடிக்கைகளின் மூலமாக இந்த 'பொட்டணி' வியாபாரிகள் பெரும் செல்வந்தர்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிடவில்லை. ஆனால், தொடர்ச்சியாக பொதிகளை சுமந்ததன் காரணமாக, இவர்களில் பலர் தமது வாழ்வின் பின்னாட்களில் கழுத்துகள் மற்றும் முள்ளந்தண்டுகள் வளைந்தவர்களாகவும் வேறு பல உடல் உபாதைகளுக்கு உள்ளானவர்களாகவும் வாழ்கின்ற நிலைக்கு ஆளாகினார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், இத்தகைய நபர்களை ஆங்காங்கே காணக் கூடியதாக இருந்தது.

## நடைபாதை வியாபாரிகள்

இப்போது இந்த 'பொட்டணி' வியாபாரிகள் அகன்று விட்டார்கள். அவர்களின் இடத்தில் புதிய பிரிவினரைக் காண்கிறோம். இவர்கள் நகரங்களிலும், நகரை அண்டிய பகுதிகளிலும், மதத்தலங்களில் இடம்பெறுகின்ற விசேட நிகழ்வுகளின்போதும் சுறுசுறுப்பாக இயங்கி, கூவி விற்கின்ற 'நடைபாதை வியாபாரிகள்' *(Pavement sellers)* என அழைக்கப்படுகின்ற பிரிவினராவர். 1970களின் கடைசிப் பகுதியில் இந்நாடு திறந்த பொருளாதார முறைமைக்குள் நுழைந்ததன் பின்னர் இவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து விட்டது. இன்று இவர்கள் நாடெங்கும் கணிசமான எண்ணிக்கையில் காணப்படுகிறார்கள். இந்த நடைபாதையோர வியாபாரிகளில் சகல சமூகத்தைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்குகின்றபோதிலும், **முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த நடைபாதை வியாபாரிகளின் எண்ணிக்கையானது, அவர்களின் தேசிய விகிதாசாரத்திலும் பார்க்க அதிகமாகக் காணப்படுகிறது.**

அன்று 'பொட்டணி' வியாபாரிகள் ஆற்றிய பாத்திரத்தை ஒத்ததான வகிபாகத்தை இன்று நடைபாதை வியாபாரிகள் ஆற்றுகிறார்கள். இப்போது நகரங்கள் மட்டுமன்றி, கிராமங்களும் விருத்தியடைந்துள்ளதோடு, போக்குவரத்து வசதிகளும் பாரியளவில் வியாபித்திருக்கின்றன. இவ்வகையில், நாட்டின் சகல பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டனவாக இருக்கின்றன. எனவே இன்று கிராமங்களுக்குள் செல்வது என்பது, முன்னைய காலம் போன்று வீடு வீடாகச் செல்வது அல்ல, பதிலாக பிரதான போக்குவரத்து மார்க்கங்கள், மதத்தலங்கள் என்பவற்றை அண்மித்த பகுதிகளை மையப்படுத்துவதாக இது மாறியுள்ளது. நாளாந்தம் நூற்றுக்கணக்கில் (மற்றும் ஆயிரக்கணக்கிலும்), மக்கள் தமது பிரதேசங்களில் இருந்து வெளியேறி, வெவ்வேறு தேவைகளுக்காக பிற இடங்களுக்கு சென்று வருகிறார்கள். இந்நிலையில், போக்குவரத்து நிலையங்களையும் மதத்தலங்ளையும் அண்மித்து பொருட்களை விற்பனை செய்கின்ற இந்த நடைபாதை வியாபாரிகள், உண்மையில் மக்களின் காலடியில் பொருட்களைக் கொண்டு சென்று விற்பவர்களாகவே செயற்படுகிறார்கள்.

இந்நாட்டின் வெகுஜன நுகர்வில் இந்த நடைபாதை வியாபாரிகள் ஆற்றுகின்ற பங்கு மிகுந்த முக்கியத்துவத்திற்குரியதாக இன்று மாறியிருக்கிறது. தினம் தினம் வந்து குவிகின்ற பண்டங்கள், நுகர்வின் மீதான ஆசை, ஆர்வத்தைத் தூண்டுகின்ற விளம்பரங்கள், தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற விலை அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக, பெரும்பாலான மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். எல்லைப்பட்ட வருமானத்தையும், அதனால் எப்போதும் பற்றாக்குறையை எதிர்கொள்பவர்களாகவும் வாழ்ந்து வருகின்ற வறிய மற்றும் நடுத்தர மக்களுக்கான **பொருளாதார ஒத்தடமாக** இந்த நடைபாதை வியாபாரிகள் அமைந்திருக்கிறார்கள். உடைகளில் தொடங்கி, ஊசிக்கோர்வை வரை சகலவிதமான பொருட்களையும் குறைந்த விலைகளில் விற்பவர்களாக இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்கள். பாதையோரங்கள், வெகுஜன போக்குவரத்துச் சாதனங்கள், மக்கள் கூடுகின்ற இடங்கள், உல்லாசப் பயணங்களுக்கான இடங்கள், மதத்தலங்கள்... என வெவ்வேறு இடங்களில், இவர்கள் மக்களின் காலடிகளுக்கு பொருட்களைக் கொண்டு சென்று விற்கிறார்கள்.

மறுபுறத்தில் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களினதும் அவர்களைச் சார்ந்துள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களினதும் வாழ்வாதாரத்திற்கு உதவுபவர்களாக இந்த நடைபாதை வியாபாரிகள் விளங்குகிறார்கள். இந்த வியாபாரிகளை இலக்காகக் கொண்டு வெவ்வேறு வகையான பொருட்களை உற்பத்தி செய்கின்ற சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை இன்று வெகுவாக உயர்ந்துள்ளது. நேரடியாகவும் மறைமுகமாகவும் நடைபாதை வியாபாரிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இந்த பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தமது வருமானத்திற்காக முற்றிலும் இவர்களிலேயே தங்கியிருக்கின்றன. இந்தக் குடும்பங்களில் மிகப் பெரும்பாலானவை சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவைகளாக இருக்கின்றன. உதாரணமாக ஆடைத்துறையை கவனத்தில் கொள்ளுவோமாயின், நடைபாதை வியாபாரிகளை இலக்காகக் கொண்ட **ஆடை உற்பத்தியில் ஈடுபடுபவர்களில் தொன்னூறு வீதத்திற்கும் (90%) அதிகமானவர்கள் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதைக் காண்கிறோம். ஆனால், இவற்றை விற்பனை செய்கின்ற நடைபாதை வியாபாரிகளில் பெரும் எண்ணிக்கையானோர் முஸ்லிம்களாக இருப்பதைக்** காண்கிறோம். எனவே இங்கு இன, சமூக வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படாமல், ஒட்டு மொத்த மக்களினதும் பன்முகத் தேவைகள் இந்த நடைபாதை வியாபாரிகள் மூலமாக நிறைவுறுவதைக் காண்கிறோம்.

'பொட்டணி' வியாபாரிகளைப் போன்று, நடைபாதை வியாபாரிகளும் செல்வச் செழிப்புடன் வாழவில்லை. இவர்களுக்கான பொருட்களை உற்பத்தி செய்கின்ற சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் அதிகரித்த இலாபத்தைச் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆனால் நடைபாதை வியாபாரிகளைப் பொறுத்தவரை, அவர்களில் மிகப் பெரும்பாலானோர் தமது அன்றாடத் தேவைகளுக்குப் போதுமான வருமானத்தையாவது தேடிக் கொள்வதையே இலக்காகக் கொண்டுள்ளார்கள். ஊசிக் கோர்வையை விற்கின்ற ஒருவர் எவ்வாறு செல்வத்தைச் சேகரிக்க முடியும்?! கொளுத்தும் வெய்யிலிலும், கொட்டும் மழையிலும் நின்றவாறு தமது பொருட்களை விற்பதற்காக முண்டியடிக்கின்ற இவர்களின் துயர அனுபவங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இவர்களின் வருமானம் என்பது, இவர்களின் பொறுமையினதும், இவர்கள் அனுபவிக்கின்ற கடின நிலைமைகளினதும் பெறுதியாகவே அமைகிறது.

## நிதிசார் நிறுவனங்கள்

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில், வங்கிகள், நிதிநிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், 'லீசிங்' கம்பெனிகள், அடகு நிறுவனங்கள் போன்ற நிதிசார் நிறுவனங்கள் முக்கியத்துவம் பெறுபவையாகவும், பெரும் தாக்கங்களை நிகழ்த்துபவையாகவும் விளங்குகின்றன. இவற்றில் ஒரு பகுதி அரசாங்கத்தினாலும் இன்னொரு பெரும் பகுதி தனியார்களினாலும் நடத்தப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை, தனியார்களினால் செயற்படுத்தப்படுகின்ற இத்தகைய நிதிசார் நிறுவனம் எதனையும் முஸ்லிம்களில் யாரும் உடமையாகக் கொண்டிருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநபர்களின் தொழில் முயற்சிகள், அவர்களின் வாழ்க்கை நிலைமைகள் போன்றவற்றை விருத்தி செய்வதில், தனியார்களுக்குச் சொந்தமான இத்தகைய நிதிசார்நிறுவனங்கள் கணிசமான பங்களிப்புகளைச் செய்கின்றன. எனினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவற்றில் கடன் பெற்ற பலர், மீளமுடியாத கடன்காரர்களாக மாறி, தமது சொத்துக்களை இழக்கின்ற நிலைக்கு ஆளாகிறார்கள். இந்த நிறுவனங்கள் ஈட்டுகின்ற இலாபங்கள் கோடிக்கணக்கில் கணக்கில் அமைகின்றன. பாரிய கட்டிடங்கள், குளிரூட்டப்பட்ட அறைகள், ஆயிரக்கணக்கான ஊழியர்கள், கொழுத்த சம்பளம், வாகனங்கள் என ஒவ்வொரு மாதமும் பல லட்சக்கணக்கில் கணக்கில் செலவழிக்கின்றபோதிலும்கூட, இந்த நிதிசார் நிறுவனங்கள் இவ்வாறான பெரும் இலாபத்தை அடைந்து கொள்கின்றன. இவை வெளியிடுகின்ற இலாபம் தொடர்பான அறிக்கைகளைக் கவனத்தில் கொள்ளும்போது, இவை எவ்வளவு தூரம் மக்களிடமிருந்து மேலதிகமாகப் பணத்தை அறவிடுகின்றன என்ற உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். ஆயிரக்கணக்கான சிறுவியாபாரிகள், சிறுதொழில் முயற்சியாளர்கள், வீட்டுக் கைத்தொழில் செய்பவர்கள் மற்றும் வாகனங்களை 'லீசிங்' மூலமாக கொள்வனவு செய்பவர்கள் போன்றோரும் அவசரத் தேவைகளைக் கொண்டிருக்கின்ற பொதுமக்களும் இந்த நிதிநிறுவனங்களின் பிடிக்குள் அகப்பட்டுத் திணறுகின்ற நிலையைக் காண முடிகிறது. குறிப்பாக நகைகளை அடகு வைப்பதன் மூலமாக பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் வங்கிகளினாலும், தனியார் நகை அடகு நிறுவனங்களினாலும் அதிகம் சுரண்டப்படுகிறார்கள்.

இவ்வாறு இந்த நிதிசார் நிறுவனங்கள் பெரும் இலாபத்தை ஈட்டுகின்றபோதிலும், முஸ்லிம்கள் யாரும் இந்த நிதிநிறுவனங்களின் உரிமையாளர்களாக இல்லை. இவை தொடர்பாக இலங்கை முஸ்லிம்கள் ஒரு முரண்பட்ட நடைமுறையைப் பின்பற்றி வருகிறார்கள். இந்த நிறுவனங்களின் வருமானம் என்பது முற்றிலும் இவை அறவிடுகின்ற **வட்டியிலேயே** தங்கியிருக்கிறது. ஆனால் முஸ்லிம்களுக்கு வட்டி மதரீதியாக தடைசெய்யப்பட்டிருக்கிறது, இதனால், இத்தகைய நிறுவனங்களை உருவாக்குவதில் இருந்து அவர்கள் முற்றாகவே விலகியிருக்கிறார்கள். ஆனால் மறுபுறத்தில் இத்தகைய **நிதிசார் நிறுவனங்களின் வாடிக்கையாளர்களாக பெரும் எண்ணிக்கையிலாலான முஸ்லிம்கள் மாறியிருக்கின்றார்கள்.** நகைகளை அடகு வைப்பதில் இருந்து, வாகனங்களை 'லீசிங்' முறையில் கொள்வனவு செய்வதுவரை இந்த நிதி நிறுவனங்களை நாளாந்தம் பயன்படுத்துபவர்களாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள். குறிப்பாக காசோலை பரிமாற்றத்தை அதிகளவில் மேற்கொள்பவர்களாகவும், Over Draft (OD) மேலதிகப் பற்றின் மூலமாக அதிகளவில் பணத்தைப் பெறுபவர்களாகவும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அதேநேரத்தில், காசோலைகளுக்கு உரிய நேரத்தில் பணம் கட்டாததால் தண்டப்பணம் செலுத்துபவர்களிலும், 'லீசிங்' கட்டாததால் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுபவர்களிலும் முஸ்லிம்களே அதிகளவில் இருக்கிறார்கள்.

மேலும் முஸ்லிம்கள் வட்டியுடன் சம்மந்தப்படுவதை தவிர்க்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, நடைமுறையிலுள்ள சில வங்கிகள், 'இஸ்லாமிய வங்கி' என்ற பிரிவை உருவாக்கியிருக்கின்றன. இந்த வங்கிகள் 'இஸ்லாமிய அடிப்படையிலான வங்கிகள்' எனக் கருதி ஏராளமான முஸ்லிம்கள் இவற்றின் வாடிக்கையாளர்களாக மாறியிருக்கிறார்கள். முஸ்லிமல்லாத பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களினால், முஸ்லிம்களைக் கவர்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த வங்கிப் பிரிவுகள், ஏனைய வங்கிகளினால் பின்பற்றப்படுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டண அறவீடுகளிலும் பார்க்க கூடுதலான கட்டணங்களை அறவிடுபவையாகவும் தாமதமான செயற்பாடுகளைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. இந்த வகையில் இந்த வங்கிகள், முஸ்லிம்கள் மீது மேலதிக பொருளாதார சுமையை ஏற்படுத்துவனவாகவும் அவர்களை அதிகளவில் சுரண்டுவனவாகவும் இருக்கின்றன.

(ஒரு சில பிரதேசங்களில், முஸ்லிம் தனிநபர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து, சிறிய அளவிலான நிதிநிறுவனங்களைத் தொடங்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது. எனினும் இவை முற்றிலும் உள்ளூர் அளவினதாகவும், மிகக் குறைந்த செயற்பாடுகளைக் கொண்டனவாகவும் இருக்கின்றன.)

## சிறிய, நடுத்தர முஸ்லிம் வியாபாரிகள்

பிற சமூகங்கள், இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக தவறான கருத்துக்களைப் பெறுவதற்கான ஒரு பிரதான காரணியாக, சிறிய, நடுத்தர முஸ்லிம் வியாபாரிகள் அமைந்திருக்கிறார்கள். தமது சனத்தொகை விகிதாசாரத்திலும் பார்க்க ஒப்பீட்டளவில் அதிகளவில் இத்தகைய வியாபார முயற்சிகளில் ஈடுபடுபவர்களாகவும், வாகனங்களை அதிகம் கொள்வனவு செய்பவர்களாகவும் இந்தவகை முஸ்லிம் வியாபாரிகள் இருக்கிறார்கள். இந்த நிலைமையானது, பிற சமூகங்களின் பார்வையில் இலங்கை முஸ்லிம்கள் 'செல்வந்த சமூகம்' என்று கருதுகின்ற நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது.

ஆனால் உண்மை நிலையோ முற்றிலும் வேறானதாக இருக்கிறது. இந்த முஸ்லிம்களின் வியாபார முயற்சிகளில் கணிசமானவை விரைவிலேயே நொடித்து விடுகின்றன. முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் அதிகளவில் இழுத்து மூடப்படுகின்றன. மூடப்பட்டுக் கிடக்கின்ற வியாபார நிலையங்களும் அடிக்கடி பெயர் மாற்றப்படுகின்ற வியாபார நிலையங்களும் இந்த நிலையை தெளிவாக சுட்டிக் காட்டுகின்றன. இந்நாட்டின் விவசாயத்துறை நாளுக்கு நாள் உறுதியற்ற நிலையை அடைந்து கொண்டிருப்பதாலும் அரசதுறைகளில் தமது சனத்தொகை விகிதாசாரத்திலும் பார்க்க மிகக் குறைந்த அளவிலான வேலை வாய்ப்புகளைப் பெறுபவர்களாக இருப்பதாலும் கூடுதலான முஸ்லிம்கள் தமது வாழ்க்கையை கொண்டு செல்வதற்காக, வியாபார முயற்சிகளில் அதிகம் ஈடுபட வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். வெளிநாடுகளில், குறிப்பாக மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளில் தொழில்வாய்ப்புகள் பெற்று, அங்கு தொழில்புரிகின்ற பல முஸ்லிம்கள், குறிப்பிட்ட காலத்தின் பின்னர் இங்கு வியாபாரத்தில் ஈடுபட முயற்சிக்கிறார்கள். அங்கு பல வருடங்கள் உழைத்த பணத்தில் சேமிப்பாக மீதமிருப்பதைக் கொண்டு, சொந்த நாட்டில் தொழில் முயற்சியில் ஈடுபட இவர்கள் நினைக்கிறார்கள். எனினும் இவர்கள் குறுகிய காலத்திற்குள்ளேயே தமது தொழில்களில் நொடிந்து மீண்டும் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியவர்களாக மாறுகிறார்கள். வியாபாரத்தில் அனுபவமின்மை, அதிகரித்த போட்டிநிலை, இனரீதியான வெறுப்புநிலை போன்றவற்றோடு, ஆடம்பரமாக வாழ நினைக்கின்ற முனைப்பும் இந்நிலைக்குக் காரணமாகின்றன. தொழிலில் ஸ்திரநிலையை அடைவதற்கு முன்பே, வாகனங்கள் வாங்கவும் வீடுகள் கட்டவும் முயற்சிக்கின்ற இவர்களின் செயற்பாடுகள் ஈற்றில் இவர்களை கடனாளிகளாவும் தொழில்களைக் கைவிடுபவர்களாகவும் சொத்துகளை இழப்பவர்களாகவும் ஆக்கி விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறத்தில், பாரம்பரியமாக வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற முஸ்லிம்கள் தமது வியாபார நிலையங்களைத் தக்க வைத்துக் கொள்வதில் பெரும் நெருக்கடிகளை முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதிகரித்த போட்டிநிலை, வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லுதல், வெகுஜன நுகர்வில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, தினந்தோறும் அதிகரிக்கும் நடைபாதை வியாபாரிகள், இனரீதியான வெறுப்புநிலை என்பவற்றோடு, ஒவ்வொரு நகரத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் செயற்படுகின்ற பாரியளவிலான 'சுப்பர் மார்க்கட்டுகளினாலும்' இந்த பாரம்பரிய முஸ்லிம் வியாபாரிகள் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். இவர்களில் பலர், இப்போது தமது வியாபார நிலையங்களில் இருந்து **செல்வத்தை திரட்டுவதற்குப் பதிலாக, தமது நாளாந்த வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான பிரயத்தனத்தையே அவற்றின் ஊடாக மேற்கொண்டு வருகிறார்கள்.** இந்நாட்டிலுள்ள பாரிய 'சுப்பர் மார்க்கட்டுகள்' எவற்றினதும் உரிமையாளர்களாக முஸ்லிம்கள் எவரும் இல்லை. தமது ஒவ்வொரு கிளைகளிலும் நாளாந்தம் பல மில்லியன் ரூபாக்களை விற்பனை மூலம் திரட்டி வருகின்ற இந்த 'சுப்பர் மார்க்கட்டுகள்' குறித்து யாரும் பெருமளவில் அக்கறை கொள்வதில்லை. மாறாக ஒரு நாளைக்கு சில ஆயிரம் ரூபாய்கள் என்ற அளவிலான விற்பனையை மேற்கொள்கின்ற முஸ்லிம்களின் ஒரு பெட்டிக்கடை, சிறிய தேனீர்க்கடை அல்லது சிறிய துணிக்கடை போன்றவையே வன்மமும், பகைமையும் நிறைந்த பிரச்சாரத்திற்கும், அவ்வப்போது தாக்கி, அழிக்கப்படுவதற்கும் இலக்காகின்றன.

கடைகள் என்பவை சுரண்டலை மேற்கொள்கின்ற இடங்கள் அல்ல. தொழிற்சாலைகள் போன்று தொழிலாளர்களின் உழைப்பையோ அல்லது நிதிசார்நிறுவனங்கள் போன்று தம்மிடம் கடன் பெற்றவர்களிடமிருந்து மேலதிக பணத்தையோ கடைகள் சுரண்டுவதில்லை. மிகப் பெரும்பாலான சில்லறைக் கடைகளில் ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களே பணிபுரிபவர்களாக இருக்கிறார்கள். இவை உண்மையில் மக்களுக்கு சேவையாற்றுபவைகளாக செயற்படுகின்றன. தாம் வாங்குகின்ற பணத்திற்கு **சம பெறுமதியான** பொருட்களை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்பவைகளாக கடைகள் செயற்படுகின்றன. மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்பட்ட விலைகளில் பொருட்களை விற்று, அதன் மூலம் கிடைக்கின்ற இலாபத்தையே கடைக்காரர்கள் வருமானமாக பெறுகிறார்கள். இவர்களின் வருமானத்தின் அளவானது, விற்பனையின் அளவினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அதிகாலையில் இருந்து, இரவு நெடுநேரம் வரை கடைகளைத் திறந்திருந்து, வாடிக்கையாளர்களுக்குத் தேவையான பொருட்களை விற்பனை செய்கின்ற இத்தகைய சிறிய கடைக்காரர்களை, இனவெறுப்பினதும் பகைமையினதும் இலக்காகக் கொள்வது மானிடப் பெறுமானங்களுக்கு முரணானதாக அமைகின்றது. இத்தகைய **சிறு வியாபார நிலையங்களை உருவாக்கி நிலைப்படுத்துவதற்கு, ஒரு நபரின் அல்லது ஒரு குடும்பத்தின் வருடக்கணக்கிலான முயற்சியும், உழைப்பும், பொறுமையும் அவசியமாகின்றன. இவ்வாறு சிறுகச்சிறுக உருப்பெற்ற ஒரு கடையை அழிப்பதற்கு ஒரு தீக்குச்சிக்கு ஐந்து நிமிட நேரம் போதும்.** இத்தகைய துயர நிகழ்வுகளை இந்த நாடு மீண்டும் மீண்டும் அனுபவித்து வருகிறது.

ஒரு நாட்டின் பண்டப் பரிவர்த்தனையின் முதுகெலும்பாக சிறு வியாபாரிகள் விளங்குகிறார்கள். உள்நாட்டு உற்பத்திப் பொருட்களையும் வெளிநாடுகளில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களையும் மக்களுக்கு விநியோகிக்கின்ற பாரிய செயற்பாட்டை இவர்கள் மேற்கொள்கிறார்கள். இத்தகைய சிறு வியாபாரிகள் இல்லாவிட்டால், அல்லது அவர்களின் செயற்பாடுகளில் தடைகள் ஏற்பட்டால் பொருட்களின் விநியோகம் சீர்குலைகின்ற நிலை உருவாகின்றது. இது ஒருபுறம், மக்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்வதிலும் மறுபுறம் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் தமது பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் பாரிய நெருக்கடிகளைத் தோற்றுவிக்கிறது. குறிப்பாக உள்நாட்டின் விவசாயிகளும் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களும் பெரும் நட்டங்களையும் இழப்புகளையும் முகம்கொடுக்கின்ற நிலை உருவாகின்றது. அதிகளவில் உருவாக்கப்படுகின்ற 'சுப்பர் மார்க்கட்டுகளும்' பல்கூட்டு சந்தைத் தொகுதிகளும் சிறிய வியாபாரிகளின் இருப்பை கடுமையாக பாதித்து வருகின்றபோதிலும், இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில், சிறிய வியாபாரிகளின் தேவைப்பாடு தொடர்ந்தும் வலுவானதாகவே இருக்கிறது. இவ்வகையில், இந்நாட்டிலுள்ள இத்தகைய சிறுவியாபாரிகளில், ஒப்பீட்டளவில் தமது தேசிய சனத்தொகையிலும் பார்க்க அதிகமாக இருக்கின்ற முஸ்லிம் சிறுவியாபாரிகள், இந்நாட்டின் ஒட்டுமொத்த விவசாயிகளுக்கும், சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களுக்கும் பெரும் பங்காற்றுபவர்களாக இருந்து வருகின்றார்கள்.

எனவே, இந்நாட்டிலுள்ள முஸ்லிம் சிறு வியாபாரிகளோடு, சகல சமூகங்களையும் சேர்ந்த சிறு வியாபாரிகளும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால் இதற்கு மாறாக, இன வெறுப்பினதும், பகைமையினதும் வெளிப்பாடாக, இந்த முஸ்லிம் சிறு வியாபாரிகளின் விற்பனை நிலையங்களே அதிகளவில் வன்முறைக்கு இலக்காகின்றன. ஒரு நாளைக்கு சில ஆயிரம் ரூபாய்களை இலாபமாகப் பெறுவதற்காக கடினமாக முயற்சிக்கின்ற சிறிய முஸ்லிம் வியாபாரிகளை இலக்காக்குவதன் மூலமாக அவர்களின் வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுவதோடு, நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரச் செயற்பாடுகளும் சீர்குலைவுக்குள்ளாகின்றன. இந்த உண்மை தெளிவாகப் புரிந்து கொள்ளப்படும்போது, **இன, மத பேதமற்ற முறையில் சகல சிறிய வியாபாரிகளையும் பாதுகாக்க வேண்டியது ஒரு தேசிய கடமை என உணரப்படுகின்ற ஆரோக்கியமான சூழல் உருவாகும்.**

எனினும் இங்கு ஒரு விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது. முஸ்லிம் வியாபாரிகளில் ஒரு பிரிவினர், தமது பிரதேச எல்லைகளைக் கடந்து பிற ஊர்களில் வியாபார நிலையங்களைத் திறந்து, தொழில் செய்பவர்களாக இருக்கிறார்கள். குறிப்பாக, நகை வியாபாரம், பிடவை வியாபாரம், மரவியாபாரம், உணவகங்கள் என்பவை பிரதேச எல்லை கடந்த பிரதான வியாபாரங்களாக இருக்கின்றன. ஒப்பீட்டளவில், இந்தவகை வியாபாரங்கள் நட்டத்தை ஏற்படுத்தாதவையாகவும், கணிசமான அளவில் இலாபத்தை ஈட்டித் தருபவைகளாகவும் அமைந்திருக்கின்றன. இவ்வாறு பிரதேச எல்லை கடந்து, முஸ்லிம் அல்லாத சமூகங்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் இத்தகைய தொழில்களை முஸ்லிம்கள் மேற்கொள்ளும்போது, அப்பிரதேசத்தில் வாழக்கூடிய இன உணர்வுமிக்கவர்களின் பார்வையில் இவர்கள் கண்டனத்திற்குரியவர்களாக மாறுகின்ற சூழல் உருவாகிறது. இந்த முஸ்லிம் வியாபாரிகள் கணிசமான காலத்தின் பின்னர், தமது வியாபாரத்தில் ஸ்திரத்தன்மையை அடைந்து, தமது வாழ்க்கை நிலையை மேம்படுத்துபவர்களாக ஆகிறார்கள். குறிப்பாக இவர்கள் வாகனங்கள் வாங்குபவர்களாகவும், தமது வியாபார நிலையங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்தரிப்பவர்களாகவும், தமது சொந்த ஊர்களில் வீடுகள் கட்டுபவர்களாகவும் கட்டிடங்கள் மற்றும் காணிகள் போன்றவற்றை வாங்குபவர்களாகவும் மாறுகிறார்கள். இவ்வாறு இந்த முஸ்லிம் வியாபாரிகளின் வாழ்க்கை நிலை மேலோங்குவதானது, அவர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற குறித்த பிரதேச மக்களின் மத்தியில் இருவகையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

ஒன்று, தம்மிடம் வியாபாரம் செய்ததன் மூலமாகத்தான் இத்தகைய செல்வத்தை இவர்கள் திரட்டியிருக்கின்றார்கள் என்ற எண்ணம் அந்த மக்கள் மத்தியில் உருவாகிறது. இத்தகைய எண்ணம், இன உணர்வுமிக்கவர்களின் பிரச்சாரத்துடன் இணைக்கப்படும்போது, அது எளிதாகவே இனவெறுப்பினதும், பகைமையினதும் ஊற்று மூலமாக மாறிவிடுகின்றது.

இரண்டாவது, குறித்த பிரதேச மக்களுடனான வியாபாரத்தின் மூலமாக இந்த முஸ்லிம் வியாபாரிகள் ஈட்டுகின்ற வருமானம், அந்தப் பிரதேசத்திற்குள் மீண்டும் பயன்படுத்தப்படாமல், அங்கிருந்து அகன்று விடுகின்றது. அதாவது அந்தப் பணம், அந்தப் பிரதேசத்தில் சுற்றோட்டத்திற்கு விடப்படுவதில்லை. இதை ஒரு உதாரணத்தின் மூலம் விளங்க முடியும். குறித்த ஒரு பிரதேசத்தில் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் வியாபாரம் செய்வதாகக் கொள்வோம். அவரது வியாபார நிலையத்தில் பணியாற்றுபவர்கள் பெரும்பாலும் ***அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக*** இருப்பார்கள். அதேநேரத்தில், அந்த வியாபார நிலையத்தின் உரிமையாளர் தான் ஈட்டுகின்ற வருமானத்தின் மூலமாக தனது வியாபாரத்தை விஸ்தரிக்கும்போது, ***அதே பிரதேசத்தைச் சேர்ந்த*** மேலும் ஒரு தொகை நபர்கள் தொழில் வாய்ப்பைப் பெறுகிறார்கள். அந்த உரிமையாளர் வீடுகளோ அல்லது ஏனைய கட்டிடங்களோ கட்டும்போது, அதில் ***அந்த ஊரைச் சேர்ந்தவர்கள்*** தொழில் செய்கின்ற வாய்ப்பை பெறுகின்றார்கள். மேலும், அவர் இந்த வருமானத்தை விவசாயத்திலோ அல்லது வேறு தொழிலிலோ பயன்படுத்தும்போதும், ***அந்த ஊரைச் சேர்ந்தவர்கள்*** தொழில் பெறுகின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு அந்த உரிமையாளர் ஈட்டிய வருமானத்தில் கணிசமான பகுதி ஊதியமாகவும் கூலியாகவும் கொள்முதலுக்காகவும் மீண்டும் அதே பிரதேசத்திற்குள் சுற்றோட்டத்திற்குட்படுகின்றது. இது அந்த ஊரினதும், அங்குள்ள ஒரு பிரிவினரதும் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைகிறது.

ஆனால் குறித்த ஊரில், பிற ஊர்களைச் சேர்ந்தவர்கள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றபோது, அவர்களுக்கு ஏற்படக் கூடிய தொழில் விருத்தியின் மூலம் அந்த ஊரானது இத்தகைய வாய்ப்புகளைப் பெறுகின்ற சாத்தியத்தை பெருமளவிற்கு இழக்கிறது. இந்த வியாபாரிகள் தமது வியாபார நிலையங்களில் பெரும்பாலும் **தமது** உறவினர்களையோ, அல்லது **தமது** ஊர்களைச் சேர்ந்தவர்களையோதான் வேலைக்கு அமர்த்துகிறார்கள். பெரும்பாலான வியாபாரிகள் தாம் தொழில் செய்கின்ற பிற ஊர்களில் காணிகள் வாங்குவதையோ, வீடுகள் கட்டுவதையோ, அல்லது விவசாயம் சார்ந்த தொழில்களில் முதலீடுகள் செய்வதையோ விரும்புவதில்லை. இதனால் பொதுவாக, ***பிற ஊர்களில் இவர்கள் ஈட்டுகின்ற வருமானமானது, அந்த ஊர்களின் விருத்திக்கு பங்களிப்புச் செய்வதில்லை.***

இத்தகைய நிலைமைகள் அனைத்தும் பிரதேசவாசிகளின் உணர்வுகளில் எதிர்நிலைத் தாக்கங்களை உருவாக்குகின்றன. பெரும்பாலும் இந்நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்வாய்ப்பின்மையும், வருமானக் குறைவும், பற்றாக்குறையும், வறுமையும் பொதுவான நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன. இந்நிலையில் பிற பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம் வியாபாரிகள், தங்களுடைய பிரதேசங்களில் வியாபாரம் செய்து வசதியான நிலைமையை அடைகிறார்கள் என்பதை ஏனைய சமூகத்தினர் காணும்போது, அந்த முஸ்லிம் பிரிவினர் மீது மட்டுமன்றி, அவர்கள் சார்ந்த **முழு முஸ்லிம் சமூகத்தின் மீதும்** அவர்கள் வெறுப்பும், பகைமையும் கொள்கின்ற நிலை உருவாகிறது. இவ்வாறு உருக்கொள்கின்ற வெறுப்பும் பகைமையும் எளிதாகவே பிற பிரதேசங்களுக்கும் பரவி விடுகின்றன. இதன் பின்னர் எங்கோ இடம்பெறுகின்ற ஒரு சிறு சம்பவம், அல்லது இனவெறுப்பைத் தூண்டுகின்ற பிரச்சாரங்கள், பிரதேச எல்லைகள் கடந்து இன்னொரு இடத்தில் இனவன்முறைகளாக வெடிக்கின்ற நிலை உருவாகிறது.

எனவே, பிற பிரதேசங்களில் வியாபார நிலையங்களைக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் பிரிவினர்கள், இத்தகையை நிலைமைகளை மாற்றுவதற்கான முறைமையை கண்டறிய வேண்டும். **இந்த முஸ்லிம் பிரிவினர் தாம் வியாபாரம் புரிகின்ற பிரதேச மக்களுடனும் அங்குள்ள சமூக, மத நிறுவனங்களுடனும் சிறந்த தொடர்புகளைப் பேணுவதும், தமது வருமானத்தின் ஒரு பகுதியை அந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தக் கூடிய வழிமுறைகளை உருவாக்குவதும்** இந்த விடயத்தில் அவசியமாகின்றது.

(உண்மையில் பிற சமூகங்கள் மட்டுமன்றி, **முஸ்லிம்களும்கூட**, பிற பிரதேசங்களில் இருந்து வந்து தமது பிரதேசங்களில் தொழில் புரிகின்ற முஸ்லிம் வியாபாரிகள், தங்களுடைய பிரதேசத்தின் சமூக, மத செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்வதில்லை என்ற உணர்வுகளைக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கவனத்தில் கொள்கையில், பிற சமூகத்தினரின் உணர்வுகள் எவ்வளவு தீவிரமானவையாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.)

முஸ்லிம் வியாபாரிகளில் சிலர் பொருட்களில் கலப்படம் செய்கிறார்கள், தரமற்ற பொருட்களை ஏமாற்றி விற்கிறார்கள், அளவை, நிறுவைகளில் நேர்மையீனமாக நடந்து கொள்கிறார்கள், கூடுதல் விலைக்கு பொருட்களை விற்கிறார்கள் என்பன போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்தக் குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யென மறுக்க முடியாது. இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்ற சில முஸ்லிம் வியாபாரிகள் இருப்பது உண்மையே. எனினும் இது முஸ்லிம் வியாபாரிகளுக்கு மட்டும் எல்லைப்படுத்தப்படக் கூடிய விடயமல்ல. இதே செயல்களைச் செய்கின்ற வியாபாரிகள் பிற சமூகங்களிலும் இருக்கிறார்கள். வியாபாரத்திற்குரிய நெறிமுறைகளை மீறி, குறுகிய காலத்தில் அதிக இலாபத்தைச் சம்பாதித்து விடும் தவறான முனைப்பின் வெளிப்பாடு இது. இத்தகைய வியாபாரிகள் அதிக காலம் தமது தொழிலில் நீடிப்பதில்லை. தனியான ஒரு சமூகத்தைச் சேர்ந்த இத்தகைய வியாபாரிகளுக்கு எதிராக மட்டுமன்றி, இவ்வாறு செயற்படுகின்ற அனைத்து வியாபாரிகளுக்கு எதிராகவும் இன, மத வேறுபாடுகள் இன்றி கண்டனங்கள் முன்வைக்கப்பட வேண்டும், மேலும் அவர்கள் அனைவரும் நிராகரிக்கப்பட வேண்டும், அத்துடன் அவர்கள் சட்டத்தினால் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும்.

## மதுபான வியாபாரமும் போதைப்பொருள் விற்பனையும்

வியாபாரத்தைப் பொறுத்தவரையில், வாடிக்கையாளர்களுக்குக் கெடுதல் ஏற்படுத்துகின்ற வியாபாரமாக மதுபான வியாபாரம் அமைந்திருக்கின்றது. மதுபானப் பாவனையானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தனிநபரின் ஆரோக்கியத்திற்கு மட்டுமன்றி, அவருடைய குடும்ப வாழ்க்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் மதுபான பாவைனை, தனிநபர்களினதும் குடும்பங்களினதும் சீர்குலைவிற்கும் இட்டுச் செல்கிறது. அனைத்து சமூகங்களைச் சேர்ந்தவர்களிலும் மதுபானத்தைப் பாவிப்பவர்கள் இருக்கின்றபோதிலும், ஒப்பீட்டளவில் முஸ்லிம்கள் மத்தியில் மதுபான பாவனை குறைவாகக் காணப்படுகிறது. அதேநேரத்தில் அதிக விற்பனையையும், அதிக இலாபத்தையும் தருகின்ற வியாபாரமாக மதுபான வியாபாரம் அமைந்திருக்கிறது. எனினும், **மது உற்பத்தியிலோ அல்லது மதுபான விற்பனையிலோ முஸ்லிம்கள் யாரும் ஈடுபடுவதில்லை.** மதரீதியாக மதுபாவன பாவனை முஸ்லிம்களுக்குத் தடைசெய்யப்பட்டிருப்பதால், அதிக வருமானத்தைப் பெறக் கூடிய வாய்ப்பிருந்தும், மதுபான உற்பத்தியிலோ அல்லது மதுபான விற்பனையிலோ ஈடுபடுவதில் இருந்து முஸ்லிம்கள் முற்றாக விலகியிருக்கிறார்கள். இதன் மூலம், **அனைத்து சமூகங்களுக்கும் கெடுதல் ஏற்படுத்துவதில் இருந்து அவர்கள் தம்மை தவிர்த்திருக்கின்றார்கள்.** இது ஒரு சிறந்த அம்சம். முஸ்லிம்கள் பின்பற்றுகின்ற இந்த சிறப்பம்சம் பிற சமூகங்களினால் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. அதேநேரத்தில் மது விற்பனையின் மூலமாக பெரும் இலாபத்தைச் சம்பாதிப்பதோடு, சமூகக் கெடுதல்களுக்கும் ஒருவகையில் காரணமாக அமைகின்ற மதுபான விற்பனையாளர்கள் ஒருபோதும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்படுவதுமில்லை.

நமது நாட்டில் மதுபானத்தைத் தவிர, போதை பொருள் விற்பனையும் பாவனையும் மிக அதிகளவில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளாக மாறிவிட்டன. இந்த விற்பனையின் மூலமாக அபரிமிதமான இலாபம் ஈட்டப்படுகிறது. அதேநேரத்தில் இவற்றின் பாவனையினால் தனிநபருக்கும் சமூகத்திற்கும் மிகக் கடுமையான பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஒரு முரண்நகையாக, குறைந்த எண்ணிக்கையில் மதுபாவன பாவனையை மேற்கொள்பவர்களாகவும், மதுபான விற்பனையில் இருந்து முற்றாக விலகியவர்களாகவும் இருக்கின்ற முஸ்லிம்களில் ஒரு கணிசமானோர் போதைப் பொருட்கள் பாவிப்பவர்களாகவும், போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களாகவும், அவற்றை விற்பவர்களாகவும் இருக்கிறார்கள். இந்தவகையில், நாடு அழிவு நிலைக்குச் செல்வதற்கும், சமூக ஒழுங்கு சீர்குலைக்கப்படுவதற்கும் துணைபோகின்றவர்களாக இந்த முஸ்லிம் பிரிவினர்களும் இருக்கிறார்கள்.

"2013இல், அபாய ஔடதங்கள் சபையின் புள்ளி விபரங்களின்படி, 55. 8 வீதமான சிங்களவர்களும், 20 வீதம் முஸ்லிம்களும்; 20 வீதம் தமிழர்களும் போதை வஸ்துக்கு அடிமையாகியிருந்தார்கள்." ('இலங்கை முஸ்லிம்களால் எதிர்கொள்ளப்படும் சவால்கள்' - எம்.ரீ. முகம்மது நௌபல் பக்.16-17) ஆனால் பிந்தைய வருடங்களில் போதைப் பொருளுக்கு அடிமையாகின்ற **சிங்களவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைவடைந்து வந்திருக்கின்ற அதேவேளையில் முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் எண்ணிக்கை வெகுவாக உயர்ந்து வந்திருக்கிறது.**

சரியாக மதிப்பிட்டால், போதைப் பொருள் கடத்தலும், விற்பனையும் வியாபாரத்துடன் தொடர்புபட்டவை அல்ல. இவை **சமூக விரோதச் செயல்கள்**, மேலும் இவை தண்டனைக்கு உரிய குற்றச் செயல்கள். இந்நாட்டில் உள்ள அனைத்து பிரதான சமூகங்களைச் சேர்ந்த பிரிவினர்களும் ஈடுபடுகின்ற குற்றச் செயல் என்றவகையில், எந்த ஒரு தனிச் சமூகத்தையும் தனிப்பட்ட முறையில் இதற்காக குற்றம் சுமத்த முடியாதுள்ளது. எனினும் ஒரு முன்னோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையாக, **போதைப்பொருள் கடத்தலிலும், விற்பனையிலும், பாவனையிலும் ஈடுபடுவது மதவிரோதமானது என்றும் மனித குலத்திற்குத் தீங்கானது என்றும் பகிரங்க அறிக்கையை வெளியிட்டு அத்தகையோரை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைப்பதாக** இந்நாட்டின் முஸ்லிம் மதத்தலைவர்கள் தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

## இரத்தினக்கல் வர்த்தகம்

இரத்தினக் கற்கள், வைரங்கள், மாணிக்கக் கற்கள் போன்ற விலையுயர்ந்த கற்களின் அகழ்விலும் வர்த்தகத்திலும் இலங்கை முஸ்லிம்களில் ஒரு பிரிவினர், உறுதியான வகிபாகத்தைக் கொண்டவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இந்த துறையில் முஸ்லிம் பிரிவினர்கள் பெற்றிருக்கின்ற சிறப்பு நிலை, நீண்டகாலமாக இனரீதியான கண்டனங்களுக்குள்ளாகி வந்திருக்கிறது. விலையுயர்ந்த கற்களின் வர்த்தகத்தில் முஸ்லிம்களின் பங்கேற்பு ஒப்பீட்டளவில் உயர்வாக இருந்து வந்திருக்கிறது. இந்நிலைமை உருவானமைக்கு தனிப்பட்ட ரீதியில் முஸ்லிம்கள் எவ்விதத்திலும் காரணமாக அமைந்திருக்கவில்லை. இத்தொழிலில் பிற சமூகங்கள் நுழைவதையும் அவர்களின் வாய்ப்புகளையும் முஸ்லிம்கள் தடுத்திருந்தார்கள் என்பதை ஒருபோதும் காரணமாக முன்வைக்க முடியாது. மாறாக, பண்டைய காலத்தில் இருந்து இத்தகைய வியாபாரத்திலும், கற்களை அகழ்ந்தெடுத்து, அடையாளம் கண்டு, பட்டை தீட்டுவதிலும் முஸ்லிம்கள் பெற்றிருந்த பரிச்சயமே இந்நிலைமைக்கான பிரதான காரணமாக அமைந்திருந்தது.

"மேலும், **இலங்கை முஸ்லிம்கள் இரத்தினக்கல் துறையில் ஒரு முக்கியமான பங்கை கொண்டிருந்தார்கள்.** வர்த்தக ரீதியாக இணைக்கப்பட்ட முதலாவது முஸ்லிம் நிறுவனம் 1870இல் இலங்கை, கொழும்பில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. இது கெய்ரோவிலும், ஜெரூசலமிலும் கிளைகளை தாபிக்கும் வகையில் முன்னேறியது." *(S.E.N. நிகொலஸ். 'வர்த்தக இலங்கை.')....* "தவிர ஏராளமான முஸ்லிம்கள், கற்களை அகழ்ந்தெடுத்து பட்டை தீட்டும் தொழில்களில் இருந்து, இரத்தினக்கல் வியாபாரத்திற்குள் படிப்படியே நுழைந்தார்கள். **பட்டை தீட்டும் தொழிலானது, ஐநூறு வருடங்களுக்கும் மேலாக, இலங்கை முஸ்லிம்களின் சேவைத் திறனாக அமைந்திருந்தது.**" *(M.M.M மஹ்ரூப். 'இலங்கை இரத்தினங்களின் உலகம்' – பக். 827)*

இவ்வாறு நீண்ட அனுபவமும், கற்கள் தொடர்பான ஆழ்ந்த அறிவும், பட்டை தீட்டுவதில் கொண்டிருந்த நேர்த்தியும்தான் பாரம்பரியமாக இத்தொழிலில் முஸ்லிம்கள் உயர்நிலையை அடைவதற்குக் காரணமாக அமைந்திருந்தன. இந்த வர்த்தகம், உள்நாட்டு சந்தையிலும் பார்க்க வெளிநாட்டு சந்தைகளை முதன்மையாகக் கொண்டு இயங்கி வந்திருக்கிறது. இவ்வர்த்தகத்தின் மூலமாக பண்டைய காலத்தில் இருந்து இலங்கை வெளிநாடுகளில் பிரபல்யம் பெற்று வந்திருக்கிறது. அத்துடன் கணிசமான வெளிநாட்டு செலாவணியை பெற்றுக் கொள்வதிலும் இவ்வர்த்தகம் பங்கு வகித்து வந்திருக்கிறது.

"அண்மைக் காலங்களில் இலங்கையின் இரத்தினக்கல் தொழில்துறையானது, அது பெற்றிருந்த செல்வாக்கை இழந்து விட்டதுபோல் தெரிகிறது. **1994இல் இரத்தினக்கல் ஏற்றுமதி 2.2 பில்லியனாக இருந்தது, 1999இல் அது 1.9 பில்லியனாக குறைந்தது.**" *(M.M.M மஹ்ரூப். 'இலங்கை இரத்தினங்களின் உலகம்' – பக். 837)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, உயர்தர கற்கள் சார்ந்து சர்வதேச அளவில் இலங்கை புகழ் பெற்றிருந்ததோடு, கணிசமான அந்நியச் செலாவணியையும் ஈட்டி வந்துள்ளது. இதற்கு, பாரம்பரியமாக இத்தொழிலில் முனைப்புடன் ஈடுபட்டு வந்திருக்கின்ற முஸ்லிம் பிரிவினர் பெருமளவிற்குக் காரணமாக இருந்து வந்திருக்கிறார்கள். 1990களில் 2 பில்லியன் என்பது, ஒப்பீட்டளவில் கணிசமான வருமானம். எனினும் இந்தத் துறை, இப்போது பெருமளவில் வீழ்ச்சியடைந்திருக்கிறது. வேறு நாடுகள் இத்துறையில் நுழைந்திருப்பதும், கெவுடா போன்ற புதிய கற்களின் கண்டுபிடிப்பும் இந்த வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன. அதேநேரத்தில், இத்துறையில் முஸ்லிம்களின் பங்கேற்பு குறைகின்ற சூழல் உருவாகியதும்கூட, இந்த வீழ்ச்சிக்கான ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. இனரீதியான ஒதுக்கல்களின் காரணமாக நமது நாட்டின் ஒரு முக்கிய தொழில்துறை எவ்வாறு வீழ்ச்சியடைந்தது என்பதற்கும் வெளிநாட்டுச் செலாவணி எவ்வாறு வீழ்ச்சிடைந்தது என்பதற்கும் இது ஒரு தெளிவான உதாரணமாக இருக்கிறது.

இலங்கை முஸ்லிம்களின் மத்தியில் இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் ஒப்பீட்டளவில், செல்வந்த நிலையில் வாழ்பவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். எனினும் முழு முஸ்லிம்களுடனும் ஒப்பிடுகையில் இவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமாக இருக்கிறது. மேலும் இவர்களின் வாழிடங்களும், தொழில் பரப்பும் சில பிரதேசங்களுக்குள் எல்லைப்பட்டனவாக இருக்கின்றன. ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர, இலங்கை முஸ்லிம்களின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு தளங்களில் இவர்களின் பங்களிப்பு மிகக் குறைந்த அளவிலேயே இருந்து வந்திருக்கிறது. இத்தகைய பின்புலத்தில், இந்த முஸ்லிம் பிரிவினரை காரணமாகக் கொண்டு, முழு இலங்கை முஸ்லிம்களையும் செல்வந்த சமூகமாக கருதுவதானது, உண்மையில் தர்க்கப் பொருத்தமானதாகவோ, அல்லது எதார்த்தத்தைப் பிரதிபலிப்பதாகவோ அமைந்திருக்கவில்லை.

## ஆடை வர்த்தகம்

ஆடை வர்த்தகத்தில் இலங்கை முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் சிறப்பான நிலையை அடைந்திருக்கிறார்கள். இந்த சிறப்புநிலையும் இனரீதியான கண்டனங்களைப் பெற்று வந்திருக்கிறது. ஆடைகள் விற்பனையைப் பொறுத்தவரையில், முஸ்லிம்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் ஆடைகளை இறக்குமதி செய்வதிலும், மேலும் ஒரு கணிசமான பிரிவினர் சில்லறை விற்பனையிலும் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.

முஸ்லிம்களின் சில ஆடை விற்பனை நிலையங்கள், கடந்த பல வருடங்களாக இனரீதியான பிரச்சாரங்களுக்கு உள்ளாகி வருகின்றன. இத்தகைய ஆடை விற்பனை நிலையங்கள் கொழும்பிலும் சில பிரதான பெருநகரங்களிலும் கிளைகளைக் கொண்டிருக்கின்றன. இவை, தரமானதும் நவீனமானதுமான ஆடைவகைகளை விற்பனை செய்வதன் காரணமாகவும் விளம்பரங்கள் மூலமாகவும் அவ்வப்போது வழங்குகின்ற விலைத்தள்ளுபடிகள் மூலமாகவும் **தேசிய அளவில் இன, மத பேதங்கள் கடந்த ஒரு வாடிக்கையாளர் கூட்டத்தைப்** பெற்றிருக்கின்றன. இவ்வாறு ஒரு பரந்த வாடிக்கையாளர்களைப் பெற்றிருப்பது, ஒரு விற்பனை நிலையத்தின் வெற்றிக்கும் நிலைத்தலுக்கும் அவசியமாகிறது. இன்றைய விற்பனை உலகில் வாடிக்கையாளர்களைக் கவர்தல் என்பது ஒரு பிரதானமான வியாபார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்காக இருக்கிறது. இதற்காக ஒவ்வொரு விற்பனை நிறுவனமும் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகிறது. இவற்றிற்காக தமது வருமானத்தில் ஒரு கணிசமான தொகையை இவை செலவிட்டும் வருகின்றன.

எனினும், வெறும் உத்திகளைக் கொண்டு மட்டும் வாடிக்கையாளர்களைக் கவர்ந்திட முடியாது. **வாடிக்கையாளர்களின் தேர்வு என்பது சுதந்திரமானது.** பல நூற்றுக்கணக்கான விற்பனை நிலையங்களுக்கிடையே ஒருவர் தனக்குப் பொருத்தமான ஒரு நிலையத்தை தெரிவு செய்வதில் பல அம்சங்கள் பங்கு வகிக்கின்றன. பொருட்களின் தரம், அவற்றின் விலை, எளிதான முறையில் பொருட்களுக்குள் நுழைவதற்கும் தேர்வதற்குமான சாத்தியங்கள், வாடிக்கையாளர்களுடனான தொடர்பாடல் முறை என பல விடயங்கள் ஒருவரின் தேர்வில் தாக்கங்களைச் செலுத்துகின்றன. இன்று இனரீதியான பிரச்சாரங்களுக்குள்ளாகியிருக்கின்ற முஸ்லிம்களின் ஆடை விற்பனை நிலையங்களிலும் பார்க்க பாரியதும், அதிக எண்ணிக்கையிலுமான ஆடை விற்பனை நிலையங்கள் பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு சொந்தமானவையாக இருக்கின்றன. ஒரு தனிநபருக்கு அல்லது ஒரு குடும்பத்தினருக்கு சொந்தமான இத்தகைய ஆடை நிலையங்கள் ஒரே பெயரில் பல்வேறு இடங்களில் திறக்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஆடை நிலையங்களுக்கும் மக்கள் அதிகளவில் செல்கிறார்கள்.

இவ்வாறிருந்தும், முஸ்லிம்களுக்குச் சொந்தமான சில ஆடை விற்பனை நிலையங்கள் தொடர்ந்தும் இனவாத பிரச்சாரங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றன. இது அடிப்படையில் **மக்களின் தேர்வுச் சுதந்திரத்தை மறுப்பதாக அமைகிறது.** தமது வாங்கும் சக்திக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் பொருட்களையும், விற்பனை நிலையங்களையும் தெரிவு செய்வதற்கு மக்களுக்குள்ள உரிமையை மறுப்பதானது, பொருளாதார ரீதியாக அவர்களை மேலும் அழுத்தத்திற்குள்ளாக்குவதாகவே அமையும். அதேநேரத்தில் இந்த முஸ்லிம்களின் வியாபார நிலையங்களில் தொழில் புரிபவர்களில் பலர் முஸ்லிமல்லாதவர்களாக இருக்கிறார்கள். இந்த தொழில் நிலையங்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பு, அங்கு தொழில் புரிபவர்களையும் அவர்களின குடும்பங்களையும் நேரடியாக பாதிப்பதாக அமையக் கூடியது.

## மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு

இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கிய கூறாக அமைந்து, வெளிநாட்டு செலாவணியை அதிகம் ஈட்டித் தருகின்ற துறையாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைந்திருக்கிறது. தொழில்வாய்ப்பு பெற்று மிகப் பெருமளவில் மத்திய கிழக்கிற்கும், வேறு சில நாடுகளுக்கும் சென்றுள்ளவர்கள் அனுப்புகின்ற பணமானது, இந்நாட்டின் வருமானத்தில் கணிசமான பங்கை வகிக்கிறது. 2021ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் காணப்படுகின்ற கீழுள்ள தகவல்கள் இவ்வாறுள்ளன:

இரண்டாம் நிலை வருமானம்:

| | 2019 | 2020 |
|---|---|---|
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 5,757 (மில்.டொலர்) | 6,194(மில். டொலர்) |
| | (1,029,122) (மில். ரூ.) | (1,148,418) (மில். ரூ.) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானம்: (மில்லியன் ரூபா)

| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| மத்திய கிழக்கு | 560260 | 565642 | 582719 | 618394 | 680892 |

மேலுள்ள தரவுகளின்படி மத்திய கிழக்கிற்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ள இலங்கையர்களினால் அனுப்பப்படுகின்ற பணத்தின் அளவானது தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றிருப்பதை அறிய முடிகின்றது. அதேநேரத்தில், பல்வேறு நாடுகளில் தொழில்புரிகின்ற இலங்கையர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பண அனுப்பல்களில் சுமார் 60 சதவீதமானவை மத்திய கிழக்கில் தொழில்புரிகின்றவர்களினால் அனுப்பப்படுகின்றன என்ற தகவலையும் பெற முடிகின்றது.

மேலும் மத்திய வங்கியின் அறிக்கையில், 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கான திரட்டப்பட்ட வரவு-செலவு திட்டங்களுக்கான நிதி விபரங்கள் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன:

| | 2019 | 2020 |
|---|---|---|
| மொத்த வருமானம் (மில்லியன் ரூபா) | 2,034,352 | 1,425,553 |

இதன்படி 2019ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானத்தில் 30.4 வீத வருமானமும் 2020ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானத்தில் 47.8 வீதமும் மத்திய கிழக்கில் தொழில்புரிகின்ற இலங்கையர்களினால் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

ஒரு நாட்டின் பொருளாதார செயற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளும்போது இந்த வீதங்கள் அதிகமானவை. 2020இல் இலங்கையையும் தாக்கிய கொவிட்19 பாதிப்பினால் இந்நாட்டின் வருமானம் முன்னைய வருடத்திலும் பார்க்க 608,799 மில்லியன் ரூபாக்களினால் குறைவடைந்திருந்த நிலையில் மத்திய கிழக்கில் தொழில்புரிகின்ற இலங்கையர்கள், முன்னைய வருடத்திலும் பார்க்க 62,498 மில்லியன் ரூபாக்களை அதிகமாக உழைத்து, மொத்தமாக 680,892 மில்லியன் ரூபா பணத்தை இலங்கைக்கு அனுப்பியிருக்கிறார்கள். இது, 2020ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்த 608,799 மில்லியன் ரூபாக்களையும் விட அதிகமானது.

மத்திய கிழக்கிற்கு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றுள்ள மொத்த தொழிலாளர்களில் குறைந்தது 60 வீதமானவர்கள் முஸ்லிம் ஆண், பெண்கள் எனக் கொள்ள முடியும். (பிற சமூகங்களைச் சேர்ந்த பெண்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் போலியான முஸ்லிம் பெயர்களிலும் சென்றிருக்கிறார்கள் என்பதையும் கவனத்திற் கொண்டே இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.) இவ்வகையில் மத்திய கிழக்கு சென்றுள்ள முஸ்லிம்களினால் அனுப்பப்படுகின்ற பண வீதம் அவர்களின் **தேசிய சனத்தொகை வீதத்திலும் பார்க்க ஆறு (06) மடங்கு அதிகமானது** என்பதையும், 2019ஆம் ஆண்டிற்கான இலங்கையின் **மொத்த வருமானத்தில்** இது 18.24 வீதமாகவும், 2020ஆம் ஆண்டில் 28.68 வீதமாகவும் அமைந்திருந்தது என்பதையும் அறிய முடிகின்றது. இந்த வீதங்கள் அவர்களின் **தேசிய சனத்தொகை வீதத்திலும் பார்க்க சுமார் இரு மடங்கும் மும்மடங்கும் அதிகமானவை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்கில் தொழில் புரிவது என்பது, மகிழ்ச்சி நிறைந்த அனுபவத்தைக் கொண்டதல்ல. ஆண்களைப் பொறுத்தவரையில், கொளுத்தும் வெய்யிலிலும், ஆரோக்கியமற்ற சூழலிலும், அதிக நேரத்திற்கும், குறைந்த சம்பளத்திற்கும் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள்ளானவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் பெறுகின்ற வருமானமானது, அவர்களுடைய வியர்வையினதும், அவர்கள் அனுபவிக்கின்ற துயரத்தினதும் விளைவாக அமைகின்றது. அந்நாடுகளில் தண்ணீரிலும் பார்க்க கொகோகோலா போன்ற பானங்களின் விலை குறைவாக இருப்பதால், அவற்றை அதிகளவில் அருந்திய பல ஆண்கள் பிற்காலத்தில் சிறுநீரக பாதிப்பிற்குள்ளாகி துயருறுகின்ற அவலநிலைக்கு ஆளாகிறார்கள்.

மறுபுறத்தில், வீட்டுப் பணியாளர்களாகச் செல்கின்ற பெண்கள் அதிகாலையில் இருந்து, இரவு நெடுநேரம்வரை தொடர்ச்சியாக வேலை செய்ய வேண்டியவர்களாக உள்ளார்கள். சில சந்தர்ப்பங்களில் தாம் பணிபுரிகின்ற வீடுகளில் உள்ள ஆண்களினாலும், அந்நாடுகளில் தொழில் புரிகின்ற பிற நாடுகளைச் சேர்ந்த ஆண்களினாலும் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்யப்படுபவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள். இத்தகைய கடின நிலைமைகளின் ஊடாகப் பெற்ற பணம்தான், நமது நாட்டின் அந்நிய செலாவணியை ஈட்டித் தருகின்ற பிரதான மூலமாக அமைந்திருக்கிறது. தமது குடும்பத்தின் நிலைமையையும், தமது சொந்த வாழ்வையும் உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் மத்திய கிழக்கிற்குச் செல்கின்ற பலருடைய எண்ணம் பெருமளவில் நிறைவேறுவதில்லை. பலர் ஆண்டுக்கணக்கில் அங்கேயே தொழில்புரிகின்ற நிலைக்கு ஆளாகிறார்கள். கணிசமானோர் தீராத நோய்களுக்கு ஆளாகின்றார்கள். **எனினும் அவர்கள் அனுப்புகின்ற பணம் மட்டும் இந்த நாட்டின் பொருளாதாரத்தை தாங்கி நிற்கின்றது.**

இத்தகைய பின்னணியில் மத்திய கிழக்கிற்குத் தொழில் பெற்றுச் செல்பவர்களின் முக்கியத்துவம் முறையாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். தமது குடும்பங்களையும், தமது சந்தோசங்களையும் வாழ்வையும் இழந்து, கடினமான சூழலை முகம்கொடுத்தவாறு அவர்கள் அனுப்புகின்ற பணம்தான், பொருளாதாரச் சீர்குலைவிற்குள்ளாகி, மீளமுடியாத கடன்சுமைக்கு ஆளாகியிருக்கின்ற நமது நாட்டின் பொருளாதாரத்தை தாங்கி நிற்கின்ற தூண்களில் ஒன்றாக இருக்கிறது. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளும்போதுதான் இந்த உழைப்பாளர்களும், இவர்களில் அறுபது (60) வீதத்திற்கும் கூடுதலாக அமைந்திருக்கின்ற முஸ்லிம் ஆண், பெண்களும் நமது நாட்டின் பொருளாதாரத்தை எவ்வளவு தூரம் தாங்கிப் பிடித்திருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். **இவர்கள், இலங்கையில் தமக்கு எதிராக வெளிக்கிளம்புகின்ற இனவெறுப்பும் பகைமையும் நிறைந்த ஆபத்தான சூழலில் வாழப் பயந்தும் இங்கு தொழில் செய்ய முடியாத நிலை உருவாகி வருவதையும் உணர்ந்து, இத்தகைய இக்கட்டான நிலையில் இருந்து தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் மத்திய கிழக்குக்குச் செல்கிறார்கள். இவ்வாறு நாட்டில் இருந்து வெளியேறுகின்ற இந்த முஸ்லிம்கள்தான், இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பைச் செய்பவர்களாகவும் அதைத் தாங்கிப் பிடிப்பவர்களாகவும் விளங்குகிறார்கள் என்ற உண்மை இன்னமும் நமது நாட்டில் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்துறைகள்

இந்நாட்டின் தொழில்துறையைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களின் பங்கேற்பு குறைவானதாக இருந்து வருகிறது. எனினும் துவிச்சக்கர வண்டிகளின் பாகங்களை இறக்குமதி செய்து அவற்றை மீள துவிச்சக்கர வண்டிகளாக வடிவமைக்கின்ற தொழில், தீப்பெட்டித் தொழில், ஆடை உற்பத்தி, அலுமினியம் மற்றும் உருக்கிலாலான பாத்திரங்கள், சமையலறை உபகரணங்கள், பிற வீட்டு உபகரணங்கள், பிஸ்கட் மற்றும் சிலவகை உணவுப் பொருட்கள், குடைகள், தரையோடுகள் (Floor tiles) போன்றவற்றைத் தயாரிக்கின்ற சில தொழில்துறைகளில் கணிசமான பங்களிப்பை முஸ்லிம்கள் செய்து வருகின்றார்கள். முஸ்லிம்களுக்குச் சொந்தமாக உள்ள இத்தகைய தொழில்துறைகளில் தொழில்புரிபவர்களில் பெரும்பாலானோர் பிற சமூகங்களை, குறிப்பாக சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய தொழில்துறைகளில் பெருமளவில் சிங்கள, தமிழ் சமூகங்களைச் சேர்ந்த யுவதிகள் தொழில் செய்கின்றபோதிலும் முஸ்லிம் யுவதிகளின் எண்ணிக்கை இங்கு மிகக் குறைவாகவே இருக்கின்றது. பெண்கள் தொழில் செய்வது அல்லது தொழிலுக்காக வெளியே செல்வது மதரீதியில் விரும்பத்தக்கது அல்ல என்று முஸ்லிம்களின் மத்தியில் நிலவுகின்ற கருத்தியல், முஸ்லிம் பெண்கள் இத்தகைய தொழில்துறைகளில் பங்கேற்பதில் தாக்கங்களைச் செலுத்தி வந்திருக்கிறது.

(இது ஒரு குழப்பகரமான கருத்தியல். தமது நாட்டில், தமது ஊரில் அல்லது தமக்கருகில் உள்ள ஒரு தொழில் நிலையத்தில் பெண்கள் தொழில் புரிவது மத ரீதியில் விரும்பத்தக்கது அல்ல என்று கருதுகின்ற முஸ்லிம்களில் மிகப் பெரும்பாலானோர், முஸ்லிம் பெண்கள் **தொழிலுக்காக சொந்த நாட்டை விட்டு பிற நாடுகளுக்குச் செல்வதை** அங்கீகரிப்பவர்களாகவோ அல்லது அது பற்றிய தமது கருத்துகளை முன்வைக்காதவர்களாகவோ இருக்கிறார்கள். அதேநேரத்தில், இந்த நாட்டில் தொழில் புரிவதில் உளச்சங்கடங்களை உணர்கின்ற முஸ்லிம் பெண்கள், மத்திய கிழக்கிற்கு தொழில் புரியச் செல்வதற்கு உடன்பாடும் தயார்நிலையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களுக்கு மாறாக, பல்லாயிரக்கணக்கான சிங்கள, தமிழ் யுவதிகள் சொந்த நாட்டில் தொழில் புரிந்து, கிடைக்கின்ற வருமானத்தில் தமது வாழ்க்கையை ஒழுங்கமைக்க முயற்சிக்கிறார்கள். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளும்போது, உள்நாட்டு தொழில் வாய்ப்புகள், சுய-தொழில் முயற்சிகள் போன்றவற்றில் ஈடுபடுவது பற்றி இலங்கை முஸ்லிம் பெண்களும், இலங்கை முஸ்லிம் சமூகமும் கூடுதல் அக்கறை கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் குடும்பங்களில் முரண்பாடுகள், சீர்குலைவுகள் என்பன தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன; மேலும் இங்குள்ள முஸ்லிம் இளந்தலைமுறையினர் மத்தியில் போதைப் பொருள் பாவனை, பண்பாட்டு சீரழிவுகள் என்பன அதிகளவில் அவதானிக்கப்படுகின்றன. இவற்றின் பின்னணியில், இங்குள்ள முஸ்லிம் பெண்களின் மத்திய கிழக்கு தொழில் வாய்ப்பு கொண்டிருக்கின்ற வகிபாகம் ஆழமான சமூக ஆய்விற்குட்பட வேண்டியுள்ளது.)

***குடைகள், தரையோடுகள், தீப்பெட்டிகள்... போன்ற உற்பத்திகளில் நமது நாடு தன்னிறைவு அடைந்திருக்கின்றது.*** இவ்வாறு தன்னிறைவு அடைந்திருப்பதற்கு இத்தொழில்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டுள்ள முஸ்லிம்களின் பங்களிப்பும் முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது. இத்தகைய தொழில் நிறுவனங்கள், வன்முறைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றபோது, இத்தொழில்துறைகளின் உற்பத்திகள் பாதிப்புக்குள்ளாகி, இறுதியில் இப்பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு நமது நாடு தள்ளப்படுகின்ற நிலை உருவாகும். இது நமது நாட்டின் பொருளாதாரத்திற்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்துவதாக அமையும்.

இத்தகைய எதார்த்த நிலையின் அடிப்படையில், மேலே பரிசீலித்தவற்றை சாரப்படுத்துவோமாயின்:

1. இலங்கை முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாகவும், விவசாயத்தைச் சார்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். அத்துடன் கணிசமானோர் மீன்பிடியுடனும் நீர்சார் தொழில்களுடனும் தொடர்புபட்டவர்களாக இருக்கிறார்கள். அதேநேரத்தில் **இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகளாகவும், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவும் இருக்கிறார்கள்.** வீடுகளுக்கும் கடைகளுக்கும் சென்று தர்மம் பெறுகின்றவர்களில், பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களை விட **முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமானதாக இருக்கிறது.** இலங்கை முஸ்லிம்களில் சமூர்த்தி உதவிபெறுபவர்களும் அரசாங்கத்திடமிருந்து தர்ம நிதி பெறுபவர்களும் கணிசமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

2. கிழக்கு மாகாண முஸ்லிம் விவசாயிகளின் எண்ணிக்கை, மொத்த தேசிய சனத்தொகையில் சுமார் ஒரு வீதமாக (1%) இருக்கின்றபோதிலும், அவர்கள் நாட்டின் பிரதான உணவு உற்பத்திப் பயிரான நெல் உற்பத்தியில், **நாட்டின் மொத்த தேவையில் 15 வீதமானவற்றை உற்பத்தி செய்பவர்களாக இருக்கிறார்கள்.**

3. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற கடலட்டைகள் பிடித்தல், வெள்ளரிக்காய் போன்ற பயிர்களை உற்பத்தி செய்தல் என்பவற்றில் முஸ்லிம்களின் பங்களிப்பு உயர்வானதாக இருந்து வருகிறது. இதன் மூலமாக நாட்டின் அந்நியச் செலாவணிக்கு இவர்கள் பங்களிப்புச் செய்து வருகிறார்கள்.

4. வியாபாரத்துடன் தொடர்புபட்ட முஸ்லிம்கள், 'பொட்டணி' வியாபாரம், சிறிய பெரிய அளவிலான கடைகள், உணவகங்கள், நடைபாதை வியாபாரம், இறக்குமதி என வெவ்வேறு வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். பண்டைய காலத்தில் இந்நாட்டுக்கு வந்த வெளிநாட்டு வியாபாரிகளுடன் கொண்டிருந்த நெருக்கமான தொடர்புகளின் காரணமாக வியாபாரத்தில் பரிச்சயமும் அனுபவமும் பெறுவதற்கும், கிராமங்கள், நகரங்கள் சார்ந்த மையப் பகுதிகளில் இயல்பான முறையில் கடைகள் மற்றும் விற்பனை நிலையங்களைக் கொண்டிருப்பதற்குமான வாய்ப்புகளை இலங்கை முஸ்லிம்கள் பெற்றிருந்திருந்தார்கள். முன்னைய காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் பொட்டணி வியாபாரம் என்பது மக்களின் அன்றாடத் தேவைகளையும், அவர்களின் மதம், பண்பாடு மற்றும் சடங்கு சார்ந்த தேவைகளையும் பூர்த்தி செய்வதாக இருந்து வந்திருக்கிறது. பின்னர், மக்களுக்கு குறைந்த விலைகளிலும் அவர்கள் இலகுவாக வாங்கக் கூடியவகையிலும் அமைந்த சிறிய கடைகள், நடைபாதை வியாபாரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வியாபார முறைகளில் முஸ்லிம்களில் கணிசமான பிரிவினர் ஈடுபட்டு வருகிறார்கள். இதன் மூலமாக நுகர்வோருக்கு மட்டுமன்றி, சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களுக்கும் உதவுபவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். இவ்வகையில், ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரங்களுக்கு உதவுபவர்களாகவும் நாட்டின் அடித்தள பொருளாதாரத்திற்கு உறுதியான பங்களிப்புச் செய்பவர்களாகவும் இவர்கள் விளங்குகிறார்கள்.

5. வட்டியின் மூலமாகவும், மேலதிகமாக பணத்தை அறவிடுவதன் மூலமாகவும் கோடிக்கணக்கில் வருமானத்தைப் பெறுகின்ற வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், 'லிசிங்' நிறுவனங்கள், அடகுநிறுவனங்கள் போன்ற நிதிசார் நிறுவனங்களை நடத்துவதில் இருந்து இலங்கை முஸ்லிம்கள் முற்றாக விலகியிருக்கிறார்கள். அதேநேரத்தில் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் இந்த நிதிசார் நிறுவனங்களினதும், இவற்றில் சிலவற்றால் உருவாக்கப்பட்டுள்ள 'இஸ்லாமிய வங்கிகளினதும்' வாடிக்கையாளர்களாக மாறியிருக்கிறார்கள். முறையான திட்டமிடல் இன்மையாலும், ஆடம்பர வாழ்க்கை முறையினாலும் இத்தகைய நிதிசார் நிறுவனங்களினால் அதிகளவில் பணம் வசூலிக்கப்படுபவர்களாக இந்த முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

6. தனிநபர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்ற மதுபான விற்பனையில் இருந்து முஸ்லிம்கள் முற்றாக விலகியிருக்கிறார்கள். நாளாந்தம் பல்லாயிரக்கணக்கில் இலாபத்தை ஈட்டித் தருகின்ற மதுபான விற்பனையில் இருந்து முற்றாக விலகியிருப்பதன் மூலமாக, இந்நாட்டின் ஒழுக்க விழுமியங்களுக்கு சிறந்த பங்களிப்புச் செய்பவர்களாக முஸ்லிம்கள் இருந்து வருகிறார்கள்.

7. மாணிக்கக் கற்கள், வைரங்கள் போன்ற பெறுமதிமிக்க கற்களை அகழ்ந்தெடுப்பதிலும், அவற்றை பட்டை தீட்டுவதிலும், சந்தைப்படுத்துவதிலும் கணிசமான பங்களிப்பைச் செய்து வருகின்ற முஸ்லிம்கள், சர்வதேச சந்தையில் இலங்கைக்கு சிறந்த பெயரையும், இவற்றின் விற்பனையின் மூலமாக வெளிநாட்டுச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் பெரும் பங்காற்றி வந்திருக்கிறார்கள்.

8. மத்திய கிழக்கு தொழில்வாய்ப்பு மூலமாக நாட்டின் மொத்த வெளிநாட்டுச் செலாவணியில் கணிசமான அளவை பெற்றுத் தருபவர்களாக இலங்கை முஸ்லிம்கள் இருக்கிறார்கள். கடன் சுமையினால் பெரும் அழுத்தத்திற்குள்ளாகியுள்ள நமது நாட்டின் பொருளாதாரத்தை தாங்கிப் பிடிக்கின்ற தூண்களில் ஒன்றாக மத்திய கிழக்கில் தொழில் வாய்ப்பு பெற்றுள்ள முஸ்லிம்கள் அமைந்திருக்கிறார்கள்.

இவ்வாறு இலங்கை முஸ்லிம்கள், பன்னெடுங் காலமாக இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றி வந்திருக்கிறார்கள். பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும், தமது தேசிய சனத்தொகை விகிதத்திலும் பார்க்க, கூடுதல் அளவில் பங்களிப்புச் செய்பவர்களாக இவர்கள் விளங்கி வந்திருக்கிறார்கள். இதன் மூலமாக, **இன, மத. சமூக வேறுபாடுகளற்ற முறையில் அனைத்து மக்களினதும் நுகர்வுக்கும் உற்பத்திக்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் உதவுபவர்களாக முஸ்லிம்கள் செயற்பட்டு வந்திருக்கிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகையில் ஐந்து வீதத்திற்கும் குறைவானவர்களாக உள்ள** செல்வந்த முஸ்லிம் பிரிவினரின் ஆடம்பர வாழ்க்கையையும், தொழில் விருத்திகளையும் குறிகாட்டிகளாகக் கொண்டு, முழு முஸ்லிம்களும் இத்தகைய செழிப்பான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்ற கருத்து உருவாவதும், பரப்பப்படுவதும் தவறான புரிதலின் விளைவாக இருக்கின்றன. முஸ்லிம் சமூகத்தைப் போன்று பிற சமூகங்களிலும் இத்தகைய உயர்தர வாழ்க்கையை வாழ்கின்ற பிரிவினர்கள் இருக்கிறார்கள். இந்நிலை நாட்டின் அரசியல், பொருளாதார முறைமையின் விளைவாக உருவாகிறது. இன, மத, சமூக வேறுபாடுகளற்ற முறையில் உயர் பிரிவினர் மத்தியில் சலுகைகளும், வாய்ப்புகளும் பகிரப்படுவதும், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற வரிவிலக்குகள் போன்றவையும், ஊழல் மற்றும் மோசடிகளும் இத்தகையோர் அபரிமிதமாக சொத்துக்களைக் குவிப்பதற்கும், ஆடம்பரத்தில் திளைப்பதற்கும் காரணமாகின்றன. எதார்த்தத்தில், இந்நாட்டின் பிற சமூகங்களைவிட அதிக வீதத்தில் ஏழைகளையும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றவர்களையும் கொண்ட சமூகமாக இலங்கை முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

இந்த உண்மைகள் சரியாகப் புரிந்து கொள்ளப்படாததன் காரணமாக, முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகள், பிரதானமாக அவர்களின் வியாபார நிலையங்களையும், வீடுகளையும் இலக்குகளாக்குகின்றன. பின்வரும் இரண்டு உதாரணங்கள் இந்த பண்பை எடுத்துக் காட்டப் போதுமானவை.

1. *"2019 ஈஸ்டர் தாக்குதலின் பின்னர், நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில், 96 கடைகளும் 86 வீடுகளும் 14 பள்ளிவாசல்களும் சேதமாக்கப்பட்டன." ('இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையின் ஒரு சுருக்க வரலாறு' - ஷமார வெற்றிமுனி. சண்டே ஒப்சேவர். 14.07.2019)*

2. *"2014 ஜூலையில், பேருவளை, அளுத்கம.. போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில், 429 வர்த்தக நிலையங்களும் 147 வீடுகளும் சேதமாக்கப்பட்டன, இவற்றை விட 53 வாகனங்களும் எரியூட்டப்பட்டும், சேதமாக்கப்பட்டும் இருந்தன. மொத்த சேதங்களின் பெறுமதி 250 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டது..." ('இலங்கை முஸ்லிம்களால் எதிர்கொள்ளப்படும் சவால்கள்' – எம்.ரீ. முகம்மது நௌபல் பக்.16-17)*

உண்மையில், **வன்முறைகளின்போது சேதமாக்கப்படுகின்ற கடைகள், வீடுகள், வாகனங்கள் போன்றவை குறித்த நபர்களுக்கும் சமூகத்திற்கும் மட்டும் உரியவை அல்ல. அவை முழு நாட்டிற்கும் உரியவை.** பல ஆண்டுகால உழைப்பின் பெறுமதியாக உருப்பெற்ற இவை, கணப் பொழுதுள் அழிக்கப்படும்போது, அந்த அழிவு இறுதியில் முழுநாட்டின் மீதும் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. ஒரு நாடு என்பது அங்கு வாழ்கின்ற அனைத்து மக்களினதும் அனைத்து வளங்களினதும் தொகுப்பாக அமைகிறது. இந்நிலையில் ஒரு நபருக்கு ஏற்டுகின்ற இழப்பு என்பது, முழுநாட்டிற்குமான இழப்பாகவே அமைகிறது. வீடிழப்பு, தொழிலிழப்பு, குடும்ப உறுப்பினரிழப்பு, அங்கவிழப்பு, உளச்சிதைவு, ஆதரவின்மை, வறுமை... என வன்முறைகளின் விளைவுகள், ஒரு விஷச்சுழல் போன்று மீண்டும் மீண்டும் ஒரு நாட்டை வெவ்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைகளில் தாக்குகின்றன. நாட்டின் பொருளாதார சுழற்சி குழப்பத்திற்குள்ளாகிறது. உற்பத்தி-நுகர்வு, இறக்குமதி-சந்தைப்படுத்தல்... போன்ற பொருளாதார சுழற்சிகளின் பிரதான கண்ணிகளாக அமைகின்ற சிறிய, நடுத்தர வியாபாரிகளுக்கு ஏற்படுகின்ற அழிவுகளும் இழப்புகளும் முறைப்படுத்தப்பட்ட பொருளாதார இயக்கத்தை தடைப்படுத்துகின்றன. இறுதியில் அந்த நாடு, சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சிதைவுக்குள்ளாகிறது.

நாம் நூற்றாண்டுகள் கடந்த வன்முறை அனுபவங்களைக் கொண்டிருக்கிறோம். முப்பது ஆண்டுகளுக்கு மேலான உள்நாட்டு யுத்த அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். இத்தகைய நீடித்ததும் துயர் நிறைந்ததுமான அனுபவங்களின் பின்னரும்கூட, இணக்கமும் புரிந்துணர்வும் நிறைந்த சமூக ஐக்கியத்தை ஏற்படுத்தத் தவறியிருக்கிறோம். வன்முறைச் சூழலில் வாழ்ந்த மனநிலை இன்னமும் எம்மிடமிருந்து அகலவில்லை. ஒரு உள்நாட்டு யுத்த சூழலில் இருந்து விடுபட்ட அடுத்த கணமே, பிறிதொரு இன முரண்பாட்டிற்குள் நுழைந்து விட்டோம். இது இன்னும் பல சமூக முரண்பாடுகளை நோக்கி முன்னகர்ந்துள்ளது.

முரண்பாடுகளற்ற, இணக்கமும் சமாதானமும் நிறைந்த சூழலில் வாழக் கூடிய பண்பை நாம் இழந்து விட்டோமா? அல்லது அத்தகைய சூழலில் எவ்வாறு வாழ்வது என்பதை அறியாதவர்களாக இருக்கிறோமா?; ஒரு சிறுநிகழ்வுகூட, எவ்வளவு பிரமாண்டமாகப் பெருப்பிக்கப்பட்டு, வெறுப்பும் பகைமையும் வன்மமும் நிறைந்ததாக மாற்றப்படுகிறது?! உள்நாட்டு யுத்தங்களினாலும் மிக மோசமான இன மோதல்களினாலும் சீர்குலைந்திருந்த சமூகங்கள், தமக்கிடையே ஐக்கியத்திற்கும் சமாதானத்திற்குமான பாதைகளைக் கண்டறிந்துள்ளன. தென் ஆபிரிக்கா, கொங்கோ, உகண்டா போன்ற நாடுகளில் வெவ்வேறு இனக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கிடையே மிக மோசமான மோதல்களும் இன அழிப்புகளும் இடம்பெற்றிருந்தன. அரசபடைகள், போராட்ட இயக்கங்கள் என்பவை சார்ந்த வன்முறைகளைக் கடந்து, வெகுஜனங்களுக்கிடையிலேயே மோதல்களும் அழிவுகளும் நிகழ்ந்திருந்தன. இவ்வாறான சிக்கலான நிலைமைகளை அனுபவித்திருந்தும், அவர்கள் இன்று தமக்கிடையே சமாதான வாழ்வை சாத்தியமாக்கியுள்ளார்கள். இத்தகைய சாத்தியத்தை நாம் தொடர்ந்தும் இழக்கப் போகிறோமா?

உலகிலுள்ள பிற சமூகங்களை விட நாம் நாகரிக வளர்ச்சியில் பின்தங்கியவர்கள் அல்ல. பண்பாட்டு அம்சங்களில் தாழ்ந்தவர்கள் அல்ல. நாம் பிற நாடுகளுக்கு முன்மாதிரியாக இருந்திருக்கிறோம், பிற நாடுகளினால் புகழப்பட்டிருக்கிறோம், நாம் பொருளாதார ரீதியாக தன்னிறைவை அடைந்திருந்தோம், நமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்திருந்தோம். எனவே, எம்மால் எமக்கான பாதையை அடையாளம் காணவும் அதில் உறுதியாக முன்செல்லவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதம் – இஸ்லாம்

**சோ**னகர்கள், மலேயர்கள், மேமன்கள், போராக்கள், கோஜாக்கள்... என வெவ்வேறு இனக்குழுமங்களின் தொகுப்பாக இலங்கை முஸ்லிம்கள் விளங்குகிறார்கள். இவர்களின் மதமாக இஸ்லாம் அமைந்திருக்கிறது. இங்கு வாழ்கின்ற ஏனைய சமூகங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மதங்களைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கின்ற நிலையில், இலங்கை முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக இஸ்லாமிய மதத்தை மட்டும் பின்பற்றுபவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள்.

மதங்கள் அனைத்தும் மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தவைகளாக இருக்கின்றன. அவை தம்மை பின்பற்றுகின்ற சமூகங்கள் வாழ்வதற்கான முறைமைகளைப் பற்றி போதிக்கின்றன. இந்த முறைமைகளை சரியாகப் பின்பற்றும்போது, குழப்பமும் முரண்பாடுகளும் நீங்கி, அமைதியான தனிமனித, குடும்ப, சமூக வாழ்க்கை என்பன சாத்தியமாகும் என மதங்கள் கூறுகின்றன. இவ்வாறு, ஒவ்வொரு மதமும் போதிக்கின்ற வாழ்க்கைக்கான நெறிமுறைகளில் அடிப்படை ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அதேநேரத்தில், ஒவ்வொரு மதத்திலும் வேறுபட்ட ஒழுங்குகளும், சடங்குகளும், வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன. ஒரு சமூகம் பின்பற்றுகின்ற மதத்தில் காணப்படுகின்ற இத்தகைய ஒழுங்குகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள் என்பவை பிற சமூகங்களினால் புரிந்து கொள்ளப்பட வேண்டும், மேலும் அவை **அந்த சமூகத்திற்குரிய உரிமைகள்** என ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

எனினும், இந்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள் பின்பற்றுகின்ற இஸ்லாம் மதத்தை மட்டுமன்றி, ஏனைய சமூகங்கள் பின்பற்றுகின்ற பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் என்பவற்றோடு, வேடுவ சமூகம் போன்ற பழங்குடி சமூகங்களின் மத, வழிபாட்டு முறைகள் போன்றவற்றையும் பரஸ்பரம் முறையாகப் புரிந்து கொள்ளாத நிலையே இங்கு காணப்பட்டு வந்திருக்கிறது. இந்த விடயத்தில் அரசாங்கங்கள், கொள்கை வகுப்பாளர்கள், மதத்தலைவர்கள் போன்ற சமூக செல்வாக்குமிக்க பிரிவினர்கள் உணர்வுபூர்வமாக இதுவரை செயற்பட்டிருக்கவில்லை. பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றின் பாடவிதானங்களில் இந்நாட்டிலுள்ள சமூகங்களில் பன்மைத்தன்மைகள் உள்ளடக்கப்பட்டு, **ஒவ்வொரு சமூகத்தினதும் தனித்துவங்கள் அவற்றின் உரிமைகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்** என்ற கருத்து வலுவாக வலியுறுத்தப்படவில்லை. ஆரம்ப வகுப்புகளுக்கான பாடநூல்களில் சிறு அளவில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும், அவற்றைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தம்மளவில் பிற சமூகங்களின் தனித்துவங்கள் பற்றிய புரிதலைக் கொண்டிராததால், அவர்களால் இவற்றை முறையாகக் கற்பிக்க முடிவதில்லை. இதனால் இந்த பாடப் பரப்புகள், அந்த இளம்பராய மாணவர்களின் மனநிலையில் எதிர்பார்க்கப்படுகின்ற சாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கவில்லை. இந்நாட்டிலுள்ள சமூகங்கள் அருகருகே நெருக்கமாக வாழ்ந்து வந்திருக்கின்ற போதிலும், பிற சமூகங்களின் மத, பண்பாட்டு அம்சங்கள் குறித்து தெளிவான புரிதலற்ற நிலையிலேயே ஒவ்வொரு சமூகமும் இருந்து வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிதலின்மையானது முரண்பாட்டிற்கான அடிப்படையாக மாற முடியும். தனிநபர்களிடையிலான உறவிலும், குடும்ப உறவிலும் புரிதலின்மையானது, முரண்பாட்டையும் பகைமையையும் ஏற்படுத்துகின்ற சந்தர்ப்பங்கள் பல இருக்கின்றன. அதேபோன்று, சமூகங்களுக்கிடையிலான உறவுகளிலும் ஒரு சமூகத்தின் மதம், பண்பாடு, வாழ்க்கை முறைகள், அரசியல் அபிலாஷைகள் போன்றவை தொடர்பாக பிற சமூகங்களுக்கு ஏற்படக் கூடிய தெளிவின்மையும், புரிதலின்மையும் அந்த சமூகத்துடனான முரண்பாட்டிற்கும் பகைமைக்கும் காரணமாகின்றன. நமது நாடு இத்தகைய அனுபவத்தை சந்தித்து வந்திருக்கின்ற துரதிஷ்ட உதாரணமாக அமைந்திருக்கிறது. சிங்கள - முஸ்லிம் முரண்பாடு, சிங்கள – தமிழ் முரண்பாடு, தமிழ் - முஸ்லிம் முரண்பாடு, பௌத்த கிறிஸ்தவ முரண்பாடு, இந்து – கிறிஸ்தவ முரண்பாடு, இஸ்லாமிய – கிறிஸ்தவ முரண்பாடு என பன்முக முரண்பாடுகளை மிக நீண்டகாலமாக சந்தித்து வந்திருக்கின்ற நாடாக நமது நாடு இருக்கிறது. இந்நிலையில் சமூகங்களின் தனித்துவப் பண்புகள் குறித்து கலந்துரையாடி, அவற்றை வெகுஜனமயப்படுத்த வேண்டிய தேவையை எமது நாடு மிக அதிகளவில் கொண்டிருக்கிறது. இந்த நாட்டின் நலன் குறித்த உண்மையான அக்கறையுடன், முழுமையான ஈடுபாடு கொண்டு செயற்பட வேண்டிய தளமாக இது இருக்கிறது.

மதங்கள் என்பவை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. ஒரு மதத்தின் கொள்கைகள் குறித்தோ, அதன் வழிபாட்டு முறைகள், சடங்குகள் போன்றவை குறித்தோ வினாக்கள் எழுப்புவதும், விமர்சனங்களை முன்வைப்பதும் அம்மதத்தைப் பின்பற்றுகின்ற சமூகத்தின் மத்தியில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவை. இந்த உண்மை தமக்கென தனியான மதங்களைக் கொண்டுள்ள அனைத்து சமூகங்களுக்கும் பொருந்தக் கூடியது. சமூக ஒற்றுமையையும், சக வாழ்வையும் பேண வேண்டும் என்பதில் அக்கறை கொள்ளும்போது, மதம், வழிபாடுகள், சடங்குகள் போன்றவை குறித்து வினா எழுப்புவதையும், விமர்சிப்பதையும் தவிர்ப்பது அவசியமாகிறது.

பிற சமூகங்கள் மத்தியில் முஸ்லிம்களின் மதநம்பிக்கை, இஸ்லாமிய சட்டங்கள் ('ஷரீஆ'), அவர்களின் வழிபாட்டு முறைகள் போன்றவை பற்றிய தெளிவின்மை நிறையவே இருக்கிறது. இந்தத் தெளிவின்மையை ஒரு நூலின் மூலமாகவோ அல்லது சில கலந்துரையாடல்கள் மூலமாகவோ தீர்க்க முடியாது. ஆயினும், இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

1. இறைவன் ஒருவன்; அவனை மட்டுமே மனிதர்கள் வணங்க வேண்டும்; இறைவனுக்கு சமமாக வேறு நபர்களையும் சிலைகளையும் வணங்கக் கூடாது.

2. அதிகாலையில் இருந்து, இரவு வரையில் ஐந்து வெவ்வேறு நேரங்களில் இறைவனை வணங்க வேண்டும். இதற்காக ஒரு முஸ்லிம் தனது உடலையும், உடைகளையும் மட்டுமன்றி, தனது உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இதன் மூலமாக மனித மனங்களில் எப்போதும் நல்ல எண்ணங்களும், அமைதியும் நிலவக் கூடிய நிலை உருவாகிறது.

3. தனது உழைப்பின் மூலமாகவோ அல்லது பரம்பரை வழியிலோ தனக்கு மேலதிகமாக திரளக் கூடிய சொத்தில் இருந்து, ஒவ்வொரு வருடமும் ஏழைகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவை வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அதேபோன்று வருடத்தில் ஒரு முறை ஒரு குறிப்பிட்ட மாதத்தில், பொதுவாக முப்பது நாட்கள் நோன்பு நோற்க வேண்டும்.

5. உடல் ஆரோக்கியமும், பொருளாதார வசதியும் கொண்டவர்கள் தமது வாழ்நாளில் ஒரு முறையாவது மக்காவிற்கு புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டும்.

இவற்றோடு நாளாந்த வாழ்க்கையில் செய்யக் கூடியவற்றையும், தவிர்க்க வேண்டியவற்றையும் பற்றி இஸ்லாம் குறிப்பிடுகிறது. மேலும் குற்றங்கள் விடயத்தில், ஒரு இஸ்லாமிய நாட்டில் பின்பற்றப்பட வேண்டிய தண்டனைகள் பற்றியும் குறிப்பிடுகிறது. இவ்வாறு வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய விடயங்கள், குற்றங்கள் மற்றும் தண்டனைகள் என்பவை பற்றிய சட்ட விதிகள் 'ஷரீஆ' என அழைக்கப்படுகின்றன 'ஷரீஆ' என்ற அரபுப் பதத்தின் தமிழ் அர்த்தம் சட்டம் என்பதாகும். அதேநேரத்தில் இஸ்லாமிய நாடல்லாத சூழல்களில் வாழ்கின்ற முஸ்லிம்கள் எவ்வாறு இந்த 'ஷரிஆ' விதிகளை பின்பற்ற வேண்டும் என்பது குறித்த விளக்கங்களும் மத அறிஞர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒருவரது மதநம்பிக்கையும், அவர் மத அடிப்படையில் தன்னுடைய வாழ்க்கையை வாழ்வதும் ஒரே மாதிரி அமைவதில்லை. இவை வேறுபடக் கூடியவை. நவீன சூழலில் மத போதனைகளில் இருந்து விலகியதான வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வது அனைத்து சமூகங்களிலும் பரவலாகக் காணப்படுகிறது. எனினும் தாம் பின்பற்றுகின்ற மதங்களின் அடிப்படையில் வாழ முயற்சிக்கின்ற மக்கள் ஒவ்வொரு சமூகத்திலும் பெரும் எண்ணிக்கையில் காணப்படுகிறார்கள். இங்கு ஒரு விடயம் சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டியுள்ளது. மத நம்பிக்கையும், மதங்கள் கூறுகின்ற முறையில் வாழ்வதும் எப்போதும் இறுக்கமான முறையில் பிணைந்துள்ளன எனக் கூற முடியாது. மாறாக இவை இரண்டும் வெவ்வேறான விடயங்கள். தனது மதத்தை முழுமையாக நம்புகின்ற ஒருவர், தனது சொந்த வாழ்க்கையில் அந்த மதத்தில் கூறப்பட்டவற்றை பின்பற்றாதவராகவும், தவிர்க்கப்பட்டவற்றை மேற்கொள்பவராகவும் இருக்க முடியும். அதேநேரத்தில், **மத நம்பிக்கை இல்லாத ஒருவர், ஒவ்வொரு மதத்திலும் கூறப்பட்டுள்ள சிறந்த பண்புகளை தன் வாழ்க்கையில் கொண்டவராக விளங்க முடியும்.** ஒவ்வொரு சமூகத்திலும் இத்தகைய பிரிவினர்கள் இருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் மத்தியிலும் இத்தகைய பிரிவினர்களைக் காண முடியும். ஒப்பீட்டளவில், முஸ்லிம்கள் மத்தியில் மத நம்பிக்கை அற்றவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். இருப்பினும், மதத்தை நம்புகின்ற முஸ்லிம்கள் அனைவரும் இஸ்லாம் கூறுகின்ற முறைப்படி முழுமையாக வாழ்கிறார்கள் எனக் கொள்ள முடியாது. இஸ்லாமிய மதத்தில் தடை செய்யப்பட்டுள்ள சில விடயங்களை தமது தனிப்பட்ட வாழ்க்கையில் மேற்கொள்பவர்களாகவும், அவசியம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ள சில விடயங்களை மேற்கொள்ளாதவர்களாகவும் இருக்கின்ற ஏராளமானோர் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இருக்கிறார்கள்.

உதாரணமாக, போதை வஸ்துகள் பாவிப்பது தடுக்கப்பட்டுள்ளபோதிலும், கணிசமான முஸ்லிம்கள் போதைப் பொருட்களைப் பாவிக்கிறார்கள். மேலும், செல்வந்த நிலையிலுள்ளவர்கள், ஒவ்வொரு வருடமும் தம்மிடமுள்ள மேலதிக சொத்துக்களுக்கேற்ப குறிப்பிட்ட பங்கை ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்பது கடமையாக இருக்கின்றது. எனினும் கணிசமான முஸ்லிம் செல்வந்தர்கள், தமது செல்வத்தை முறையாகக் கணக்கிட்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கேற்ப ஏழைகளுக்கு வழங்குவதில்லை. மதம் தொடர்பாக தமக்கிடையே முரண்பட வேண்டாம் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. ஆனால் பிற மதத்தினரை விட, **தமது மதம் சார்ந்து அதிகம் பிளவுபட்டவர்களாகவும், வெவ்வேறு பிரிவுகளாக பிரிந்திருப்பவர்களாகவும், மதம் சார்ந்த கருத்தியல் ரீதியாக தமக்குள் முரண்படுபவர்களாகவும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.** இந்த முரண்பாடு, கருத்தியல் விவாதங்களுடன் முடிந்து விடாமல், பல சந்தர்ப்பங்களில் பகைமையையும் வன்முறை மோதல்களையும் தோற்றுவிப்பனவாகவும் அமைந்திருக்கின்றன.

பொதுவாக சகல மதங்களிலும் கருத்தியல் ரீதியாக வேறுபட்ட பிரிவுகளும், போக்குகளும் உருவாகி, இவற்றிற்கிடையே முரண்பாடுகளும் மோதல்களும் நிலவி வந்திருக்கின்றன. மதங்களின் வரலாறுகள் இவற்றை வெளிப்படுத்துகின்றன. ஆயினும் நவீன சூழலில், பெரும்பாலான மதங்களில் நிலவுகின்ற இத்தகைய அகரீதியான முரண்பாடுகள் வன்முறை மோதல்களாக வெளிப்படுகின்ற நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவினரும் மற்ற பிரிவினர்களுக்கு இடையூறுகளின்றி தாம் கொண்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு மாறாக, **முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் மத ரீதியான கருத்தியல் முரண்பாடுகள் தீவிர பகைமையாகவும், மோதல்களாகவும் வெடிக்கின்ற போக்கு அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.** ஒவ்வொரு பிரிவினரும் இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை தமக்குரிய விதத்தில் அர்த்தப்படுத்துகிறார்கள்; தமது அர்த்தப்படுத்தலே சரியென ஒவ்வொரு பிரிவினரும் தீவிரமாக வாதிடுகிறார்கள். இதன் விளைவாக உருவாகின்ற முரண்பாடுகள், இணக்கம் காணப்பட முடியாத அளவுக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஆழப்பட்டிருகின்றன.

## இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய இயக்கங்கள்

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் மதரீதியான பிரச்சாரங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்ற விதத்தில் பல தனிநபர்களும் இஸ்லாமிய அமைப்புகளும் இயங்கி வந்திருக்கின்றன. இந்நாட்டில் இஸ்லாமிய இயக்கங்களின் தோற்றத்தை பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்து அடையாளம் காண முடியும். மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அவ்வப்போது இங்கு வருகை தந்த மத அறிஞர்கள், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாம் தொடர்பாக போதித்திருக்கிறார்கள். இவர்களை விட, இந்தியாவில் இருந்து – குறிப்பாக தமிழ்நாட்டில் இருந்து – பல முஸ்லிம் மத அறிஞர்கள் இங்கு வந்து மத ரீதியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். சுதந்திரத்திற்கு முன்னரான காலகட்டத்தில் இங்கு நிலைகொண்டு, தமது வாணிப நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொண்டு வந்த தமிழ்நாட்டு முஸ்லிம் வர்த்தகர்களின் ஆதரவுடன் இந்த முஸ்லிம் மார்க்க அறிஞர்கள் இங்கு வருகை தந்தார்கள். இந்த மார்க்க அறிஞர்கள் பின்பற்றிய கொள்கைகளுக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட இஸ்லாமிய இயக்கங்கள் இங்கு உருவாகின. இவற்றோடு இங்கிருந்து தமிழ்நாட்டுக்கு சென்று அங்குள்ள பிரசித்தி பெற்ற அரபு மத்ரசாக்களில் (கல்வி நிலையங்களில்) பயின்று, பின் இந்நாட்டிற்குத் திரும்பியவர்களும் தாம் பின்பற்றிய கொள்கைகளுக்கேற்ப மதரீதியான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். எனினும் இவர்களின் செயற்பாடுகள் ஒப்பீட்டளவில் சிறியனவாகவும் பெரிதும் தனிநபர் சார்ந்தவையாகவும் அமைந்திருந்தன. இவை சமூக அளவில் பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்தியவையாக அமைந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970களின் பின்னர், வெகுஜனத் தன்மை பெற்ற இஸ்லாமிய இயக்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாக இந்நாட்டில் உருவாகின. முதலில் உருவான இயக்கங்கள், இங்குள்ள முஸ்லிம்களின் மத்தியில் ஆன்மீக ரீதியான உணர்வுகளையும் செயற்பாடுகளையும் வலுப்படுத்தும் நோக்கத்தினை மட்டுமே கொண்டிருந்தன. எனினும் பின்னர் உருவான இஸ்லாமிய இயக்கங்கள் ஆன்மீகத்தோடு வாழ்வியல் அம்சங்களையும் தமது செயற்பாடுகளில் உள்ளடக்கின. இத்தகைய அமைப்புகள் மிகப் பெருமளவில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றன. இவ்வாறு அங்கத்துவத் தன்மையிலும் கொள்கை அடிப்படையிலும் இடம்பெற்ற மாற்றத்தின் நீட்சியாக, இந்த அமைப்புகள் மத்தியில் படிப்படியாக அரசியல் சார்ந்த கருத்துப் போக்குகள் உருவாகி, ஆழமடைந்தன. இத்தகைய கருத்துப் போக்குகள் ஒரு நிலையில், இந்த அமைப்பினர்களுக்குள் முரண்பாடுகள் உருவாவதற்கும் முரண்பட்டவர்கள் அமைப்புகளில் இருந்து வெளியேறி புதிய இஸ்லாமிய இயக்கங்களை உருவாக்குவதற்கும் இட்டுச் சென்றன.

இவ்வாறு இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் உருவாகி பல்வேறு பெயர்களில் செயற்படுகின்ற இஸ்லாமிய இயக்கங்கள் ஒவ்வொன்றும் தம்மைத் தனித்துவப்படுத்தி, தமது கருத்துக்களைப் பின்பற்றக் கூடிய பிரிவினரை உருவாக்க கடுமையாக முயற்சித்து வந்திருக்கின்றன. இவ்வாறான இயக்கங்களின் உருவாக்கம் தொடர்ச்சியாக இடம்பெறுவதால், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் எத்தனை இஸ்லாமிய இயக்கங்கள் செயற்படுகின்றன என்பதையும், முஸ்லிம்கள் மதரீதியாக எத்தனை பிரிவுகளாக பிரிந்திருக்கிறார்கள் என்பதையும் சரியாகக் கணக்கிட முடியாதுள்ளது. பெரும்பாலும் ஒவ்வொரு முஸ்லிம் பிரதேசமும் இத்தகைய பிரிவினைக்கு உட்பட்டதாகவே இப்போது இருக்கிறது.

இஸ்லாமிய இயக்கங்களின் செயற்பாடுகள் முஸ்லிம்கள் மத்தியில் பிரிவினைகளையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தியிருக்கின்ற அதேநேரத்தில், பிற சமூகங்கள் சார்ந்த முஸ்லிம்களின் உறவுகளிலும் இவை தாக்கங்களை ஏற்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன. புதிதாக உருவாகின்ற இஸ்லாமிய இயக்கங்கள் ஒவ்வொன்றும் முன்னையவற்றை விட தமது கருத்துகளில் தீவிரமானவையாக இருக்கின்றன. இஸ்லாம் குறித்து தாம் அர்த்தப்படுத்துகின்ற முறைதான் சரி என வாதிடுகின்ற இவ்வியக்கங்கள், பிற மதங்கள் பற்றி எதிர்நிலைக் கருத்துகளைக் கொண்டனவாகவும் இருக்கின்றன. அதேநேரத்தில் பிற மதங்களைப் பின்பற்றுகின்ற சமூகங்களுடன் முஸ்லிம்கள் கொண்டிருக்க வேண்டிய உறவுகள் விடயத்திலும் இவை எதிர்நிலைக் கருத்துகளைக் கொண்டிருக்கின்றன. அந்த சமூகங்கள் மத்தியில் வெளிப்படுகின்ற சிறந்த அம்சங்கள் பற்றி கவனத்தில் கொள்ளாது, **மத நம்பிக்கை ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு** சமூக உறவுகளை துருவநிலைப்படுத்துகின்ற போக்குகளை இவை கொண்டிருக்கின்றன. தாம் வாழ்கின்ற பிரதேசங்களிலும், இந்த நாட்டிலும் நிலவுகின்ற பல்லின சூழலில், பிற சமூகங்களுடன் நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் எவ்வாறு பேணிக் கொள்வது என்பதற்கான வழிமுறைகளைக் கண்டுகொள்வது பற்றி இந்த இஸ்லாமிய இயக்கங்கள் எவற்றிடமும் தெளிவான கருத்துக்கள் காணப்படவில்லை. பெரும்பாலான இயக்கங்கள் இந்த விடயத்தில் அறவே அக்கறை செலுத்தாதவைகளாக இருந்து வந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் போக்கானது, இலங்கை முஸ்லிம்களை தனிமைப்படுத்துகின்ற நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. சுதந்திரத்திற்கு முன்னரும் சுதந்திரத்திற்குப் பின்னரான சுமார் கால் நூற்றாண்டு காலத்திலும் 'நம்பிக்கைக்குரிய சமூகம்' என ஏனைய சமூகங்களினால் மதிக்கப்பட்ட இலங்கை முஸ்லிம் சமூகம், கடந்த அரைநூற்றாண்டுகளாக ஒரு 'மூடுண்ட சமூகம்' என்று அடையாளப்படுத்தப்படுகின்ற நிலைக்கு ஆளாகியுள்ளது.

உண்மையில், **தனிமைப்பட்டிருப்பதும் 'மூடுண்டு' இருப்பதும் இஸ்லாமிய நடைமுறைக்கு முற்றிலும் மாறானவை.** இஸ்லாத்தைப் பின்பற்றுகின்ற சமூகங்கள், பிற சமூகங்களுக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் விளங்க வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. தனிமைப்படுவதன் மூலமாகவும் மூடிய சமூகமாக இருப்பதாலும் ஒருபோதும் பிற சமூகங்களுக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் இருக்க முடியாது. இதற்கு மாறாக, பிற சமூகங்களுடன் சிறந்த தொடர்புகளைப் பேணுவதன் ஊடாகவும் சாத்தியமான 'பொதுவெளிகள்' அனைத்திலும் தமது செயற்பாடுகளை வெளிப்படுத்துவதன் மூலமாகவுமே பிற சமூகங்களுக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டிகளாகவும் முஸ்லிம்களால் திகழ முடியும். இந்த எளிமையான உண்மையை இன்றுவரை மிகப் பெரும்பாலான முஸ்லிம் இயக்கங்களும் முஸ்லிம் மக்களும் புரிந்து கொள்ளாதவர்களாக இருந்து வருகின்றனர்.

இந்த விடயத்தில் முஸ்லிம் மதத்தலைவர்களின் வகிபாகம் பலவீனமானதாக இருந்து வந்திருக்கிறது. தாம் ஒரு பல்லினச் சூழலில் வாழ்வதையும் தமது சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையிலான உறவுகள் முரண்பாடுகளும் சிக்கல்களும் கொண்டதாக மாறி வருவதையும் இவர்கள் சரியாக புரிந்து கொண்டிருக்க வேண்டும்; இலங்கை முஸ்லிம்கள் தமக்கு மத்தியிலும் பிற சமூகங்களுடனான தமது உறவுகளிலும் சிறந்த நிலைமைகளை ஏற்படுத்தக் கூடிய பொருத்தமான வழிமுறைகளைக் கண்டு கொள்வதற்கான முயற்சிகளை இவர்கள் ஆழமாக முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் இவ்வாறு செயற்படவில்லை; பதிலாக, செல்வாக்குமிக்க சிங்கள அரசியல் தலைவர்களுடன் இணக்கமான உறவுகளை பேணுவதை அவர்கள் முதன்மை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வந்திருக்கிறார்கள். இத்தகைய அரசியல் தலைவர்களுடன் ஏற்படுகின்ற நெருங்கிய உறவு, சமூக அளவில் ஏற்படுகின்ற முரண்பாடுகள், பகைமை என்பவற்றை தவிர்க்கவும் கட்டுப்படுத்தவும் வழி வகுக்கும் என இவர்கள் கருதி வந்திருக்கிறார்கள்.

புதிதாக உருவாகி வந்த இஸ்லாமிய இயக்கங்கள் பலவற்றின் உறுப்பினர்கள் மட்டுமன்றி, அதன் தலைமை அங்கத்தவர்களில் கணிசமானவர்களும், **முறையாக மதக்கல்வி பயின்ற அறிஞர்கள் அல்ல.** இந்த உண்மையைக் கருத்தில் கொள்ளும்போது, **மதத்தலைவர்களின் வழிகாட்டலில் இருந்து இலங்கை முஸ்லிம்கள் படிப்படியே விடுபட்டு வந்திருக்கிறார்கள்** என்ற உண்மை தெளிவாக புலப்படுகிறது. புதிதாக உருவாக்கப்படுகின்ற இஸ்லாமிய இயக்கங்களின் உறுப்பினர்களாகவும் ஆதரவாளர்களாகவும் பெரும்பாலும் இளைஞர்களும் புதிய தலைமுறையினருமே அமைந்திருக்கின்றார்கள். இயக்கங்களின் உருவாக்கம் தொடர்பாக உலக வரலாறு வெளிப்படுத்தி வந்திருக்கின்ற உண்மையும் இதுதான்.

ஒவ்வொரு சமூகத்திலும் ஏற்கனவே செயற்பட்டு வருகின்ற சமூக, மத, அரசியல் இயக்கங்கள் காலம் கடந்தவை, அவை புதிய நிலைமைகளை எதிர்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலை கொண்டிருக்கவில்லை என புதிய தலைமுறையினராலும் இளைஞர்களாலும் உணரப்படும்போது, அவற்றுக்குப் பதிலாக புதிய இயக்கங்கள் உருவாகின்றன. இவற்றை உருவாக்குவதில் இளைய தலைமுறையினர் முதன்மைப் பாத்திரம் வகிக்கிறார்கள். இந்த உண்மையைக் கவனத்தில் கொள்ளும்போதுதான், சமூக அக்கறை கொண்டவர்கள் - அவர்கள் அரசியல் தலைவர்களாக இருந்தாலும் அல்லது மதத்தலைவர்களாக இருந்தாலும் - புதிய நிலைமைக்கேற்ப தம்மை தகவமைத்துக் கொண்டு தமது மக்களை வழிநடத்துபவர்களாக மாறுகிறார்கள். **தலைமை தீர்மானிக்கப்படுவது வயதினால் அல்ல.** மாறாக, மக்களின் உணர்வுகளுடன் தம்மை இணைத்துக் கொள்பவர்களும், மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்களுமே தலைவர்களாக உயர்கிறார்கள்.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் செயற்படுகின்ற இஸ்லாமிய இயக்கங்களிடையே காணப்படுகின்ற கருத்து வேறுபாடுகளில் பெரும்பாலானவை சாதாரண விடயங்கள் சார்ந்தவை. பெரும்பாலும் இவை வழிபாட்டு ரீதியான நடைமுறைகளுடன் தொடர்புபட்டவை. எனினும், இவை மிகத் தீவிரமான பிரச்சினைகளாக பெருப்பிக்கப்பட்டு, இயக்கங்களின் அங்கத்தினர்களிடையே தீராத முரண்பாடுகளையும், பகைமையையும் தோற்றுவிப்பனவாக மாற்றப்படுகின்றன. இத்தகைய கருத்து வேறுபாடுகளும், முரண்பாடுகளும் இலங்கை முஸ்லிம்களுக்கு மட்டும் உரிய தனித்துவமான பிரச்சினைகள் அல்ல. இவை உலகிலுள்ள வெவ்வேறு முஸ்லிம் சமூகங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே உருவாகி, இன்றுவரை தொடர்கின்ற விடயங்கள். ஒரு முஸ்லிம் தனது இயக்க சார்பினை கைவிட்டு, இந்தப் பிரச்சினைகளில் உள்ளடங்கியுள்ள அடிப்படை விடயங்களைப் புரிந்து கொள்ள முயற்சிப்பாராயின், **இவை முரண்பாட்டிற்கும் பகைமைக்கும் உரியவை அல்ல என்பதையும், மாறாக தனிமனித புரிதல் மற்றும் விருப்பம் சார்ந்தவை என்பதையும்** விளங்கிக் கொள்வார்.

இவற்றை விட அரசியல் ரீதியான கருத்துகளிலும் இந்த இஸ்லாமிய இயக்கங்களிடையே முரண்பாடுகள் நிலவி வந்திருக்கின்றன. இந்த இயக்கங்களில் கணிசமானவை, இந்த நாடு ஒரு இஸ்லாமிய நாடாக மாற வேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டவையாக இருந்து வந்திருக்கின்றன. இந்த விருப்பமானது, அதிகாரத்தின் மீதான ஆர்வத்தின் விளைவாகவோ, அல்லது தமக்கென சொந்த நாடு வேண்டும் என்ற இலக்கின் அடிப்படையிலோ உருவானது அல்ல. மாறாக, ஒரு இஸ்லாமிய அரசின் கீழ் தமது வாழ்க்கையை முறையாகக் கொண்டு செல்ல முடியும் என்ற எண்ணத்தினால் உருவாகின்ற விருப்பமாக இது இருக்கிறது. இந்த நாடு படிப்படியே ஒரு இஸ்லாமிய நாடாக மாற்றமடையும் என்ற நம்பிக்கையை இந்த இஸ்லாமிய இயக்கங்கள் கொண்டிருக்கின்றன. இதற்கென எந்த செயற்திட்டங்களையும், போராட்டங்களையும் முன்னெடுக்கின்ற எண்ணத்தை இந்த இயக்கங்கள் கொண்டிருக்கவில்லை. எனினும் சில தனிநபர்கள் இந்நாடு இஸ்லாமிய நாடாக மாறும் என்ற விருப்பத்தை செயல் வடிவில் முன்னெடுக்கும் எண்ணத்தைக் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். குறிப்பாக, முஸ்லிம் நாடுகளிலும், சமூகங்களிலும் அரசியல் எழுச்சிகள் கிளர்கின்ற சந்தர்ப்பங்களில், இத்தகைய எண்ணத்தினால் கிளர்த்தப்படுகின்ற நபர்கள் இலங்கையிலும் இருந்து வந்திருக்கிறார்கள். ஆயினும் இவர்களின் செயற்பாடுகள், குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளான உரையாடல் என்ற மட்டத்திலேயே எல்லைப்பட்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘உயிர்த்த ஞாயிறு’ குண்டுத் தாக்குதல்களும் இலங்கை முஸ்லிம்களின் எதிர்வினைகளும்

*21.04.2019*இல் இடம்பெற்ற ‘உயிர்த்த ஞாயிறு’ குண்டுத் தாக்குதல்களுக்கு பலவிதமான காரணங்களும், பின்புலங்களும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ‘இந்த நாடு இஸ்லாமிய நாடாக மாறவேண்டும் என்ற எண்ணத்தை செயல்படுத்த விளைந்த முயற்சியின் ஒரு வெளிப்பாடாக இத்தாக்குதல்களை கொள்ள முடியும்’ என்பதும் இத்தகைய காரணங்களில் ஒன்றாக அமைந்திருக்கிறது. சமீப வருடங்களில் சர்வதேச அரங்கில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்திய “ஐசிஸ் (ISIS)” அமைப்பின் செயற்பாடுகளினால் தூண்டப்பட்ட ஒரு பிரிவினர்களாக இவர்கள் இருக்க முடியும். எனினும் இவர்கள் மிகமிகச் சொற்ப எண்ணிக்கையிலான நபர்கள் என்பதையும், **இவர்களின் செயற்பாடுகள் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் வெகுஜன அளவில் எந்தவித ஆதரவுகளையும் பெற்றிருக்கவில்லை** என்பதையும், இந்தாக்குதல்களின் பின்னர் உடனடியாக இலங்கை முஸ்லிம்கள் செயற்பட்ட விதத்தில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.

இலங்கை முஸ்லிம்கள் இந்தத் தாக்குதல்களைக் கண்டித்து உடனடியாகவே அறிக்கைகளை வெளியிட்டார்கள்; ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்; தமது உயிர்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துகளையும் பொருட்படுத்தாமல், இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்ட முஸ்லிம் ஆயுததாரிகளையும் அவர்கள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களையும் அவர்கள் மறைந்திருந்த இடங்களையும் பற்றிய தகவல்களை பாதுகாப்புப் படையினருக்கு உடனடியாகத் தெரிவித்தார்கள். இதன் மூலம் பின்னர் நடக்கவிருந்த கூடுதல் தாக்குதல்கள் இடம்பெறாமல் தடுத்ததில் அவர்கள் பெரும் பங்காற்றியிருந்தார்கள். அத்துடன், தமது பிரதேசங்கள், மதத் தலங்கள் போன்றவற்றில் புதியவர்களாகவும் சந்தேகத்திற்கிடமான முறையிலும் காணப்பட்ட முஸ்லிம் நபர்களை கண்காணித்து, விசாரிப்பதில் **தாமே முன்னின்று செயற்பட்டிருந்தார்கள்.** இந்நாட்டின் வரலாற்றில் இத்தகைய செயற்பாடுகள் வேறு எந்த சமூகத்தினராலும் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இந்த நாடு இரண்டு தடவைகள் சிங்கள தரப்பினரின் ஆயுதக் கிளர்ச்சிக்கும் கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் தமிழ் ஆயுத இயக்கங்களின் போராட்டத்திற்கும் முகம் கொடுத்திருந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மக்களோ அல்லது தமிழ் மக்களோ, ஆயுதக் கிளர்ச்சியிலும் ஆயுதப் போராட்டத்திலும் சம்பந்தப்பட்ட நபர்களைப் பற்றிய தகவல்களை பாதுகாப்புப் படையினருக்கு தெரியப்படுத்தியதில்லை, அல்லது தாமாக முன்னின்று கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை. பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்பட்ட சிலரும், அந்தந்த காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசியல் கட்சிகளின் தீவிர ஆதரவாளர்கள் சிலரும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டிருந்திருக்கலாமே தவிர, **வெகுஜன அளவில்** சிங்கள, தமிழ் மக்கள் இத்தகைய செயல்களில் ஈடுடவில்லை.

இவர்களுக்கு மாறாக இந்நாட்டு முஸ்லிம்கள், தாக்குதல்களில் ஈடுபட்ட நபர்களையும் அவர்களின் ஆயுதங்களையும் எஞ்சியிருந்த நபர்களையும் பற்றிய தகவல்களை பொலிசாருக்குத் தெரியப்படுத்தினார்கள்; பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் அத்தகையோரை அடையாளம் காண்பதற்கும் கைது செய்வதற்கும் உதவினார்கள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாக்குதல்களுக்கும் அமைப்புக்கும் எதிராக வெகுஜன கண்டனங்களையும் சுய கண்காணிப்புகளையும் முன்னெடுத்தார்கள். முஸ்லிம்கள் வெளிப்படுத்திய இத்தகைய செயல்கள் **இந்த தாக்குதல்களில் ஈடுபட்ட நபர்களையும், அவர்களின் கொள்கைகளையும் அவர்கள் முற்றாகவே நிராகரித்திருக்கிறார்கள்** என்ற உண்மையை வெளிப்படுத்துவனவாக இருந்தன. அத்துடன் மரணமடைந்த அந்த நபர்களின் உடல்களை தாம் பொறுப்பேற்கவோ அல்லது அவற்றை தமது மயானங்களில் அடக்கம் செய்யவோ முஸ்லிம்கள் தயாராக இருக்கவில்லை. இதன் மூலமாக அந்த நபர்களை தாம் **முஸ்லிம்களாகவே கருதவில்லை** என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள். ஒரு குறித்த சமூகத்திற்கும் மற்றும் முழு நாட்டிற்கும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய செயல்களை தவிர்ப்பதற்கும் அத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றவர்களை உடனடியாக அடையாளம் காண்பதற்கும் **சமூக ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கான** மிகச் சிறந்த உதாரணமாக இலங்கை முஸ்லிம்கள் முன்னெடுத்த இத்தகைய நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

எனினும் துரதிஷ்டவசமாக, இலங்கை முஸ்லிம்களால் முன்னெடுக்கப்பட்ட இத்தகைய சிறந்த, முன்னோடித்தன்மை கொண்ட செயற்பாடுகள், இந்நாட்டிலுள்ள பிற சமூகங்களினால் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. மாறாக, மிகச் சிலரினால் மேற்கொள்ளப்பட்ட இந்த கொடுஞ் செயலுக்கு, **முழு இலங்கை முஸ்லிம் சமூகமும் பொறுப்பாக்கப்பட்டது.** இலங்கை முஸ்லிம்கள் மீதான கண்டனங்களையும், இழிவுபடுத்தல்களையும் தாண்டி, அவர்கள் மீது பல இடங்களில் வன்முறைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. 'உயிர்த்த ஞாயிறு' குண்டுத் தாக்குதல்களின் அளவு மீறிய பரிமாணமும், அவை ஏற்படுத்திய அழிவுகளும் வெகுஜன உணர்வுகளை தூண்டக் கூடியன என்பது உண்மையே. எனினும் பெருமைப்படும் விதத்தில், பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பொறுமையையும் அமைதியையும் பேணிய நிலையில், பாதிப்பிற்குள்ளாகாத சமூகத்தைச் சேர்ந்த சில பிரிவினர்களினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் செயற்பாடுகள், இந்நாட்டில் வாழ்கின்ற சமூகங்களுக்கிடையிலான உறவுகளில் நிலவுகின்ற பகைமையையும் வன்மத்தையும் தெளிவாக வெளிப்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

'உயிர்த்த ஞாயிறு' குண்டுத் தாக்குதல்களின் பின்னர், இலங்கை முஸ்லிம்கள் வெகுஜன ரீதியாக முன்னெடுத்த செயற்பாடுகளில் உள்ளடங்கியிருந்த சிறந்த அம்சங்களை ஏனைய சமூகங்கள் அடையாளம் காணவில்லை. வெகுஜன ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் மட்டுமன்றி, பெரும்பாலான அரசியல் தலைவர்களும் அவற்றை வெளிப்படுத்தத் தவறியிருந்தார்கள். தீவிர உணர்வுகொண்ட நபர்களினால் மேற்கொள்ளப்படக் கூடிய தாக்குதல்கள் எதிர்காலத்தில் இடம்பெறாது என்பதற்கு எந்த உத்தரவாதங்களும் வழங்க முடியாது. இந்நாட்டிலுள்ள எந்தவொரு சமூகத்தில் இருந்தும் இத்தகைய நபர்கள் உருவாகி, செயற்பட முடியும். ஆயினும், இத்தகைய சந்தர்ப்பங்களில் தமது **சமூக உணர்வுகளைக் கடந்து முழு நாட்டின் நலனுக்காக வெகுஜன அளவில் செயற்பட முடியும் என்பதற்கான ஒரு நடைமுறை உதாரணமாக, 'உயிர்த்த ஞாயிறு' தாக்குதல்களுக்குப் பின்னர் இலங்கை முஸ்லிம்கள் முன்னெடுத்த இத்தகைய செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.**

இங்கு இன்னொரு விடயமும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். 'உயிர்த்த ஞாயிறு' தாக்குதலானது, 'ஐசிஸ்' (ISIS) அமைப்பின் பாதிப்பினால் இடம்பெற்றதாக அடையாளம் காணப்படக் கூடிய அதேநேரத்தில், கடந்த காலங்களில் இலங்கை முஸ்லிம்கள் மீது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற வன்முறைத் தாக்குதல்களும் இதற்கான தூண்டுதலாக அமைந்திருக்கக் கூடிய சாத்தியப்பாட்டையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இலகுவாக பேசித் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்த சிறிய காரணங்களுக்காக அல்லது பொய்யான காரணங்களையும், வதந்திகளையும் கொண்டு, அண்மைக் காலங்களில் முஸ்லிம்கள் மீது பல இடங்களில் வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. இவை இலங்கை முஸ்லிம்களுக்கு உயிரிழப்புகளையும் பெரும் சொத்திழப்புகளையும் ஏற்படுத்தியதோடு, அவர்களின் மனங்களில் ஆழ்ந்த தாக்கங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன. பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் மனங்களில் மட்டுமன்றி, இந்நாட்டிலுள்ள அனைத்து முஸ்லிம்களின் மனங்களிலும் இந்த இனரீதியான வன்முறைத் தாக்குதல்கள் அச்சத்தையும், பாதுகாப்பற்ற உணர்வையும், நிச்சயமற்ற நிலையையும் உருவாக்கியிருக்கின்றன. இவ்வாறான உளவியல் பதகளிப்புமிக்க நிலையானது, சிலரிடம் பழிவாங்கும் எண்ணங்களைத் தூண்ட முடியும். அவ்வாறு பழிவாங்கும் உணர்வுகளுக்குள்ளானவர்களின் பழிவாங்கும் செயற்பாடுகளும் இலக்குகளும் சூழ்நிலைமைக்கேற்ப தீர்மானிக்கப்படுகின்றன. இதுவரை **இலங்கை முஸ்லிம்களுடன் முரண்பாடுகளைக் கொண்டிராத கிறிஸ்தவ மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை** இந்தப் பின்னணியில் புரிந்து கொள்ள முடியும். தாக்குதல்களின் பின்னர் பாதிப்பிற்குள்ளான கிறிஸ்தவ மக்கள் ஒப்பீட்டளவில் மிகக் குறைந்தளவிலான எதிர்வினைகளை வெளிப்படுத்திய அதேநேரத்தில், இந்தத் தாக்குதல்களினால் **எந்தவகையிலும் பாதிக்கப்படாத** பௌத்த பிரிவினர் முஸ்லிம்கள் மீது வன்முறைத் தாக்குதல்களை முன்னெடுத்தமையையும் இந்த உளவியல் பின்னணியில் புரிந்து கொள்ள முடியும்.

இந்நாடு ஒரு இஸ்லாமிய நாடாக மாற வேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் பிரிவினர்கள், இந்த விருப்பமானது அரசியல் ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் எவ்வளவு தூரம் சிறுபிள்ளைத்தனமானது; மேலும் இது எத்தகைய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பன பற்றி சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பின்வரும் அனுபவங்கள் இவர்களுக்கு படிப்பினைகளாக அமையக் கூடியன:

1. வடக்கு, கிழக்கில் தமக்கென ஒரு தனியான அரசை அமைக்க வேண்டும் என முப்பது வருடங்களாக ஆயுதப் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்த தமிழ் ஆயுத அமைப்புகள் அந்த நோக்கத்தை அறவே எட்ட முடியவில்லை. பல்லாயிரக்கானோரின் உயிரிழப்புகளையும், அங்க இழப்புகளையும், வெளியேற்றங்களையும், பல பில்லியன் கணக்கிலான சொத்திழப்புகளையும் விளைவாக்கிய இந்தப் போராட்டத்தின் மூலம் பிற சமூகங்கள் பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இந்நாட்டின் **குறிப்பிட்ட பிரதேசங்களை மட்டும் உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்பட்ட தனி அரசுக்கான** போராட்டமே இத்தகைய பாரிய இழப்புகளை ஏற்படுத்தி தோல்வியில் முடிந்திருக்கின்ற நிலையில், **முழு நாட்டிலும் இஸ்லாமிய அரசை அமைப்பதற்கான** எத்தனிப்பு எத்தகைய அழிவுகளையும் இழப்புகளையும் ஏற்படுத்தும் என்பதை மிக எளிதாகவே ஒருவர் உணர முடியும்.

2. இந்நாடு இஸ்லாமிய நாடாக மாற வேண்டும் என்ற விருப்பமானது, அதன் தீவிர நிலையில் எத்தகைய அழிவு நிலைக்குக் காரணமாகியுள்ளது என்பதை 'உயிர்த்த ஞாயிறு' தாக்குதல்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இந்த நாடு இஸ்லாமிய நாடாக மாற வேண்டும் என்ற விருப்பம் முற்றிலும் கற்பனைத் தன்மை கொண்டதாக இருக்கின்றது. இது ஒரு பலவீன நிலையின் வெளிப்பாடு. முஸ்லிம்கள் மீது அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற வன்முறைத் தாக்குதல்களிலிருந்தும், அச்சமிக்க சூழலிலிருந்தும் விடுபடுவதற்காக கற்பனையாக உருவகிக்கப்பட்ட ஒரு எதிர்பார்க்கையே இது. இன்று நடைமுறையிலுள்ள **முஸ்லிம் நாடுகள் அனைத்துமே** அக முரண்பாடுகளினாலும், உள்நாட்டு யுத்தங்களினாலும் சீர்குலைந்து போயுள்ளன. பிற நாடுகளுக்கு அல்லது சமூகங்களுக்கு முன்மாதிரியாகக் கொள்ள கூடிய நாடாக எந்தவொரு முஸ்லிம் நாடும் இன்று உலகில் இல்லை. **முஸ்லிம் நாடுகளில் வாழ்கின்ற வேறுபட்ட சமூகக் குழுக்களும், இனங்களும் அங்கு பாதுகாப்பற்ற நிலையிலேயே வாழ்கின்றன.** எனவே இலங்கை முஸ்லிம்கள் தமது பாதுகாப்பை முழுமையாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, கற்பனையான எண்ணங்களில் இருந்து விடுபட்டு, இந்நாட்டின் பல்லினக் கட்டமைப்பிற்குள் பிற சமூகங்களுடன் இணைந்து பொருத்தமான முறைமைகளை உருவாக்குவது பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது.

இந்த நாடு இஸ்லாமிய நாடாக மாற வேண்டும் என்ற கற்பனையான விருப்பத்திற்குப் பதிலாக, இந்நாட்டில் தாம் **உண்மையான இஸ்லாமியர்களாக வாழ்வதற்கான ஒரு சூழலை உருவாக்குவது** பற்றி இலங்கை முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழலை உருவாக்குவதற்கான அடிப்படையாக, பிற சமூகங்களுடன் திறந்ததும், இணக்கமானதும், வலுவானதுமான உறவுகளைப் பேணுவது அவசியமாகின்றது. பிற சமூகங்களிலுள்ள தீவிரத்தன்மையுள்ள பிரிவினரின் செயற்பாடுகளின் காரணமாக இத்தகைய சமூக ஐக்கியம் சாத்தியமாகாது என்ற வாதம் முஸ்லிம்களினால் முன்வைக்கப்படுமாயின், இதே வாதம் பிற சமூகங்களினால் இங்குள்ள முஸ்லிம்கள் மீதும் முன்வைக்கப்பட முடியும். முஸ்லிம்கள் மத்தியில் உள்ள தீவிரவாதப் பிரிவினர், பிற சமூகத்தினரை குண்டுத் தாக்குதல்கள் மூலம் அழிப்பதற்கு தயாராக இருக்கின்ற நிலையில், முஸ்லிம்களுடனான ஐக்கியம் அறவே சாத்தியமற்றது என இவர்கள் எளிதாக வாதிட முடியும். இத்தகைய எதிர்நிலை மனோபாவத்தைக் களைந்து, கடந்து சாதகமான நிலைமைக்காக செயற்பட வேண்டிய பொறுப்பை அனைத்து சமூகங்களும் கொண்டிருக்கின்றன. நாட்டின் மொத்த சனத்தொகையில் மிகக் குறைந்த அளவிலுள்ள தீவிரப் போக்குடைய நபர்களினால் முழு நாட்டின் தலைவிதியும் தீர்மானிக்கப்படுகின்ற சூழல் உருவாவது தவிர்க்கப்பட வேண்டும். இது இன, மத, சமூக பேதமற்ற முறையில் இந்நாட்டில் வாழ்கின்ற அனைவருக்குமான கடமையாக இருக்கின்றது.

எனவே நடைமுறைச் சாத்தியமற்ற இத்தகைய விருப்பத்தில் இருந்தும் எதிர்பார்ப்பில் இருந்தும் இந்த முஸ்லிம் பிரிவினர்கள் தம்மை முற்றாக விடுவித்துக் கொள்வது அவசியமாகின்றது. இத்தகைய எதிர்பார்ப்பை ஏற்கனவே கொண்டிருந்த சில இஸ்லாமிய இயக்கங்கள், பின்னர் இந்த எண்ணத்தை முழுமையாகக் கைவிட்டுள்ளன என்ற உண்மையை ஏனைய பிரிவினர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## இலங்கை முஸ்லிம்களும் மத மாற்றச் செயற்பாடுகளும்

இலங்கை முஸ்லிம்கள் திட்டமிட்ட ரீதியில் பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களை இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், உண்மையில் இது ஒரு ஆதாரமற்ற குற்றச்சாட்டு. நேர்மையான முறையில் மேற்கொள்ளப்படக் கூடிய ஆய்வுகள் இந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்பதைத் தெளிவாகவே வெளிப்படுத்தும். திட்டமிட்ட ரீதியிலோ, நிறுவன அடிப்படையிலோ பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களை இஸ்லாத்திற்கு மதம் மாற்றுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற எந்தவொரு அமைப்பும் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் காணப்படவில்லை. பிற சமூகங்களைச் சேர்ந்தவர்கள் - பெரிதும் தனிநபர்களாக - இஸ்லாத்திற்கு மதம் மாறுவதுதான் அவ்வப்போது இடம்பெறுகின்ற நிகழ்வாக இருக்கிறது. இவற்றில் மிகப் பெரும்பாலானவை திருமணத்துடன் தொடர்புபட்டவை.

ஒரே இறைவனை வணங்குபவர்களையும், சிலைகள் எதனையும் வணங்காதவர்களையும்தான் முஸ்லிம்கள் திருமணம் முடிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஒரு முஸ்லிம் ஆண் அல்லது பெண், தாம் திருமணம் செய்ய விரும்புகின்ற அல்லது தம்மை திருமணம் செய்ய விரும்புகின்ற பிற சமூகங்களைச் சேர்ந்த நபர்களை இஸ்லாத்திற்கு அழைக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களும் இதை ஏற்றுக் கொள்கின்றபோது, அவர்கள் தாம் இதுவரை பின்பற்றிய மதங்களில் இருந்து இஸ்லாத்திற்கு மாறுகின்ற நிலை உருவாகிறது. இவ்வாறு தமது குடும்பங்களையும், சமூகங்களையும் விட்டு இஸ்லாத்திற்கு மதம் மாறுகின்ற நபர்கள், ஆண்களாகவும், ஏழைகளாகவும் இருந்தால், அவர்களின் வாழ்வாதாரத்திற்காக குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் சில உதவிகளை அந்தக் குடும்பத்திற்கு வழங்குகிறார்கள். இத்தகைய **உதவிகளைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக பிற மதங்களைச் சேர்ந்த யாரும் இஸ்லாத்திற்கு மதம் மாறுவதில்லை. மாறாக அவர்கள் இஸ்லாத்திற்கு மாறியதன் பின்னர்தான் இந்த உதவிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.**

இவர்களை விட, இஸ்லாமிய வாழ்க்கை முறைகளினால் கவரப்பட்டோ, இஸ்லாமிய மூலாதாரங்களைக் கற்றறிந்ததன் பின்னரோ அல்லது இஸ்லாம் தொடர்பாக மேற்கொண்ட உரையாடல்களின் விளைவாகவோ தமது சுயவிருப்பின்பேரில் இஸ்லாம் மதத்திற்கு மாறுகின்றவர்களும் இருக்கிறார்கள். இத்தகையோர் தமது மத மாற்றத்திற்கான பிரதி விளைவாக எவ்வித நலன்களையும் எதிர்பார்க்காதவர்களாக இருக்கிறார்கள். இலங்கையைப் பொறுத்தவரையில் இவ்வாறு இஸ்லாத்திற்கு மாறுபவர்களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணும் அளவுக்கு மிகமிகக் குறைவாக இருக்கிறது.

மதமாற்றத்தின் காரணமாக இலங்கையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது என்ற பிரச்சாரம் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. இது முற்றிலும் தவறான பிரச்சாரம். மேலே குறிப்பிட்ட வகைகளில் இஸ்லாம் மதத்திற்கு மாறுகின்ற நபர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமானது. இந்தத் தொகை **இலங்கை முஸ்லிம்களின் மொத்த சனத்தொகை விகிதாசாரத்தில் எந்த அதிகரிப்பையும் ஏற்படுத்தக் கூடியதல்ல.**

## இலங்கை முஸ்லிம்களின் பிறப்பு விகிதம்

இலங்கை முஸ்லிம் பெண்கள் அதிக குழந்தைகளைப் பெறுகிறார்கள் என்றும் இது இந்நாட்டில் முஸ்லிம்களின் சனத்தொகையை அதிகரித்து, இந்நாட்டை முஸ்லிம் நாடாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற திட்டம் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துகள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இக்கருத்துகள் முஸ்லிமல்லாத சமூகங்களின் உணர்வுகளில் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியன. ஏனெனில் இக்கருத்துகளின் பின்புலத்தில் நடைமுறைசார்ந்ததும் கருத்தியல் சார்ந்ததுமான சான்றுகள் முன்வைக்கப்படக் கூடியனவாக இருக்கின்றன.

கணிசமான முஸ்லிம் குடும்பங்களில், சராசரியாக நான்கு பிள்ளைகள் இருப்பதைக் காண முடியும். 'குடும்பத்திற்கு இரண்டு பிள்ளைகள்' என்ற தொனிப்பொருளில் "நாமிருவர் நமக்கிருவர்" என்று சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டில் முன்னெடுக்கப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டு முறையின் காரணமாக பல குடும்பங்கள் - குறிப்பாக நகர்ப்புற, மத்திய தர குடும்பங்கள் - இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுடன் தமது குடும்பங்களை எல்லைப்படுத்திக் கொண்டன. கிராமப் புறங்களில் இந்த முன்னெடுப்புகள் சிறு அளவில்தான் வெற்றி பெற்றிருக்கின்றன. இப்பகுதிகளில் முஸ்லிம் குடும்பங்களில் மட்டுமன்றி, ஏனைய சமூகங்களைச் சேர்ந்த குடும்பங்களிலும் நான்கு அல்லது ஐந்து பிள்ளைகள் இருப்பதை இப்போதும் காண முடியும். எனினும் முஸ்லிம்கள் விடயத்தில், கிராமங்களைக் கடந்து நகர்ப்புறங்களிலும் அதிக பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களை கணிசமான அளவில் காணக் கூடியதாக இருக்கிறது.

'குழந்தைகள் இறைவனின் அருட்கொடை; அவர்களின் வாழ்வு இறைவனின் பொறுப்பிலுள்ளது' - இவை முஸ்லிம்கள் மத்தியில் நிலவுகின்ற மதரீதியிலான கருத்துகள். இதன் காரணமாக, குழந்தைகள் பெறுவதில் கட்டுப்பாடுகள் ஏற்படுத்துவதை கணிசமான முஸ்லிம்கள் விரும்பாதிருக்கிறார்கள். இந்தக் கருத்தியல் ஏற்பைத் தவிர, தாம் அதிக எண்ணிக்கையில் குழந்தைகளைப் பெற்று இந்நாட்டில் பெரும்பான்மையாக மாறி, இந்நாட்டை இஸ்லாமிய நாடாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம், இலங்கை முஸ்லிம்களிடம் அறவே காணப்பட்டிருக்கவில்லை.

'முஸ்லிம் ஆண்கள் நான்கு திருமணங்கள் முடிப்பதால் அவர்களின் சனத்தொகை இந்நாட்டில் விரைவாகப் பெருகுகிறது' என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டு வந்திருக்கிறது. 'ஆண்கள் நான்கு திருமணங்கள் வரை முடிக்கலாம்' என்பது மதரீதியான ஒரு அங்கீகாரமாக இருக்கின்றபோதிலும், அதற்கான நிபந்தனைகளும் கூறப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை முடிக்கின்ற முஸ்லிம் ஆண்களின் எண்ணிக்கை, விகிதாசாரத்திற்குள் கொண்டுவர முடியாத அளவுக்கு மிகச் சொற்பமாக இருக்கிறது. தனது மனைவி இறந்த பின்னர் அல்லது விவாகரத்தின் பின்னர் இன்னொரு திருமணம் முடிக்கின்ற போக்கு இலங்கை முஸ்லிம் ஆண்களிடம் காணப்படுகின்ற போதிலும், மனைவி இருக்கின்றபோது இன்னொரு திருமணம் முடிப்பது என்பது மிகப் பெரும்பாலான ஆண்களிடம் ஒரு எண்ணமாகக் கூட நிலவவில்லை. தனது மனைவிக்குக் குழந்தைகள் பிறக்காத நிலையிலும் கூட - ஒரு சில ஆண்களைத் தவிர - பொதுவாக அனைத்து ஆண்களும் ஒரே மனைவியுடன் வாழ்பவர்களாகவே இருக்கின்றனர். இந்த உண்மை, அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் பெற்று தாம் இந்நாட்டில் பெரும்பான்மையாக மாற வேண்டும் என்ற எண்ணத்தில் இலங்கை முஸ்லிம்கள் செயற்படுகிறார்கள் என்ற கருத்திலுள்ள தவறைச் சுட்டிக் காட்டுகின்ற நடைமுறை ஆதாரமாக அமைந்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழுள்ள அட்டவணைகள், 1911ஆம் ஆண்டில் இருந்து 2011ஆம் ஆண்டுவரையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்புகளின் விவரங்களைத் தருகின்றன.

| இனம் | 1911 | வீதம் | 1921 | வீதம் | 1931 | வீதம் | 1946 | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 4,106,400 | 100 | 4,498,600 | | 5,306,000 | | 6,657,300 | |
| சிங்களவர் | 2,715,500 | 66.2 | 3,016,200 | 67.05 | 3,473,000 | 65.5 | 4,620,500 | 69.4 |
| முஸ்லிம்கள் (மலேயர் உட்பட) | 279,600 | 6.8 | 298,300 | 6.6 | 341,900 | 6.4 | 431,700 | 6.5 |
| இல.தமிழர் | 528,000 | 12.85 | 517,300 | 11.5 | 598,900 | 11.3 | 733,700 | 11.02 |
| மலை.தமிழர் | 531,000 | 12.9 | 602,700 | 13.4 | 818,500 | 15.4 | 780,600 | 11.73 |

| இனம் | 1953 | வீதம் | 1963 | வீதம் | 1971 | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 8,097,900 | | 10,582,000 | | 12,689,900 | |
| சிங்களவர் | 5,616,700 | 69.4 | 7,512,900 | 71.0 | 9,131,300 | 72.0 |
| முஸ்லிம்கள் (மலேயர் உட்பட) | 536,900 | 6.6 | 715,600 | 6.8 | 899,200 | 7.08 |
| இல.தமிழர் | 884,700 | 10.93 | 1,164,700 | 11.0 | 1,424,000 | 11.2 |
| மலை.தமிழர் | 974,100 | 12.03 | 1,123,000 | 10.6 | 1,174,900 | 9.3 |

| இனம் | 1981 | வீதம் | 2011 | வீதம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 14,846,800 | 100 | 4,498,600 | 100 |
| சிங்களவர் | 10,974,400 | 73.9 | 15,250,100 | 74.9 |
| முஸ்லிம்கள் (மலேயர் உட்பட) | 1,093,900 | 7.3 | 1,936,700 | 9.5 |
| இல.தமிழர் | 1,886,900 | 12.7 | 2,269,100 | 11.15 |
| மலை.தமிழர் | 818,700 | 5.5 | 839,500 | 4.12 |

*Source: Department of Census and Statistics*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1911ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டுவரையிலான நூறு வருட காலத்தில் சிங்கள மக்களின் சனத்தொகையானது ஒரு கோடி இருபத்தைந்து இலட்சத்து முப்பத்து நாலாயிரத்து அறுநூறு (12,534,600) என்ற எண்ணிக்கையினால் அதிகரித்திருக்கிறது. இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகை பதினாறு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து நூறு (1657100) என்ற எணணிக்கையால் அதிகரித்துள்ளது. இவற்றை நூற்று வீத அதிகரிப்பாகக் கணிக்கும்போது, இந்த நூறு வருடங்களில் சிங்கள மக்களின் சனத்தொகை அதிகரிப்பு 8.7 வீதமாகவும் (74.9% - 66.2% = 8.7%) முஸ்லிம் மக்களின் சனத்தொகை அதிகரிப்பு 2.7 வீதமாகவும் (9.5% - 6.8ம% = 2.7%) அமைந்திருக்கின்றன. இந்த அதிகரிப்புகளுக்கு பின்வரும் நிகழ்வுகளைக் காரணங்களாகக் கொள்ள முடியும்.

- இயற்கையாகவே பிறப்பு வீதங்களில் ஏற்பட்டிருக்கின்ற அதிகரிப்பு
- மரண வீதங்களில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்திருக்கின்ற வீழ்ச்சி
- இந்திய வம்சாவளி மக்கள் பெரும் எண்ணிக்கையில் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டமை
- முப்பது வருடகால உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக, தமிழ் மக்கள் லட்சக்கணக்கில் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தமை. குறிப்பாக 1981இலிருந்து 2011 வரையிலான முப்பது வருடகாலத்தில் இலங்கைத் தமிழர்களின் மக்கள் தொகை சுமார் 1.5 வீதத்தினாலும், மலையகத் தமிழர்களின் மக்கள் தொகை சுமார் 1.4 வீதத்தினாலும் குறைவடைந்திருக்கின்றன. இதற்கேற்ப சிங்கள மக்களின் எண்ணிக்கை 1 வீதத்தினாலும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 2.2 வீதத்தினாலும் உயர்ந்திருக்கின்றன.

எனினும் சராசரி மக்கள் தொகை வளர்ச்சி வீதமானது இந்நாட்டிலுள்ள சகல சமூகங்களுக்கும் ஏறக்குறைய ஒரே அளவாகவே அமைந்திருக்கிறது. கீழேயுள்ள அட்டவணையானது, 1911ஆம் ஆண்டில் இருந்து 2011 வரையிலான நூறு வருடங்களில் ஒவ்வொரு பத்து வருடங்களிலும் காணப்பட்ட இலங்கை மக்களின் சராசரி சனத்தொகை வளர்ச்சி வீதத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. இதன்படி, இந்நாட்டின் பிரதான இனங்களான சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகியோரின் சராசரி வளர்ச்சி வீதமானது, வெவ்வேறு காலகட்டங்களில் ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருந்தபோதிலும் பொதுவாக நாட்டின் ஒட்டுமொத்த சராசரி வளர்ச்சி வீதத்துடன் ஓரளவு நெருங்கிச் சென்றிருப்பதை அவதானிக்க முடியும்.

சராசரி மக்கள் தொகை வளர்ச்சி வீதம்:

| இனம் | 1911-21 | 1921-31 | 1931-46 | 1946 -53 | 1953-63 | 1963-71 | 1971-81 | 1981-2011 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 0.9% | 1.7% | 1.5% | 2. 8% | 2.7% | 2.3% | 1.6% | 1.1% |
| சிங்களவர் | 1.1% | 1.4% | 1.9% | 2. 8% | 3.0% | 2.5% | 1.9% | 1.1% |
| இல. தமிழர் | -0.2% | 1.5% | 1.4% | 2.7% | 2. 8% | 2.5% | 2.9% | 0.6% |
| முஸ்லிம்கள் (மலேயர் உட்பட) | 0.4% | 1.4% | 1.6% | 3.2% | 2.9% | 2.9% | 2.0% | 2.9% |

Source: Department of Census and Statistics


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் இந்நாட்டின் சராசரி சனத்தொகை வளர்ச்சி வீதமானது, இங்குள்ள சகல சமூகங்களுக்கும் பொதுவானதாகவே இருந்து வந்திருக்கிறது. தனிநபர்களோ அல்லது குறித்த ஒரு சமூகமோ திட்டமிட்ட ரீதியில் தனது சனத்தொகை வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கவோ அல்லது பிறிதொரு சமூகத்தின் வளர்ச்சி வீதத்தை குறைக்கவோ முடியாது. உணவுகளில் இரசாயனப் பதார்த்தங்களைக் கலப்பதன் மூலமாகவோ அல்லது ஒரு வைத்தியசாலையில் மகப்பேற்றின்போது மேற்கொள்ளக் கூடிய சில செயற்பாடுகளின் மூலமாகவோ ஒரு சமூகத்தின், அதிலும் எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையாக இருக்கின்ற சமூகத்தின் பிறப்பு வீதத்தைக் குறைக்க முடியும் என்ற கருத்திலுள்ள சாத்தியமற்ற தன்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதாக சில பிரிவினர் பிரச்சாரம் செய்வதற்கும் அதை தமது சமூகங்கள் மத்தியில் நம்பச் செய்வதற்குமான காரணிகளில் ஒன்றாக, இந்த நாடு இஸ்லாமிய நாடாக மாற வேண்டும் என்று சில முஸ்லிம் பிரிவினர்கள் மத்தியில் நிலவுகின்ற கருத்தும் ஒன்றாக அமைந்திருக்கிறது. இத்தகைய கருத்தைக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் சமூகம், அதை அடைந்து கொள்வதற்காக இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றது என்ற பிரச்சாரம் முன்வைக்கப்படும்போது, அதை பரிசீலிப்பின்றி நம்பக் கூடிய மனநிலையை மற்ற சமூகங்கள் பெறுகின்றன. எனவே இந்த விடயத்தில் இலங்கை முஸ்லிம் பிரிவினர்கள் தமது மனப்பாங்குகளை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

*( நான் ஒரு ஆசிரியனாகக் கடமையாற்றியவன். திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் பல வருடங்கள் கற்பித்திருக்கிறேன். 1990களின் பிற்பகுதியிலும் 2000இன் ஆரம்பப் பகுதியிலும் அங்குள்ள முஸ்லிம் பாடசாலைகளில் முதலாம் ஆண்டில் சேர்க்கப்பட்ட புதிய முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை ஐந்திற்கும் குறைவாக இருந்த சந்தர்ப்பங்கள் இருந்தன. ஏனெனில், அப்பகுதிகளில் வசித்த முஸ்லிம் பெண்கள் அதிகளவில் மத்திய கிழக்கில் தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்றிருந்ததால் குழந்தை பிறப்பு வீதம் மிகக் குறைந்திருந்தது. )*

## வஹ்ஹாபிஸமும் இலங்கை முஸ்லிம்களும்

'உயிர்த்த ஞாயிறு' தாக்குதல்களுக்கு பின்னர், 'வஹ்ஹாபிகள்', 'வஹ்ஹாபிசம்', 'சலபிசம்' போன்ற பதங்கள் இலங்கை வெகுஜன ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் அதிகமதிகம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இந்த பதங்களைப் பாவித்தவர்களில் மிகப் பெரும்பாலானோர் முஸ்லிமல்லாதவர்களாக இருக்கிறார்கள். இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படுமாயின், **இலங்கை முஸ்லிம்களில் 99 வீதத்திற்கும் அதிகமானவர்களுக்கு இந்தப் பதங்கள் குறித்தும், இவை குறிப்பிடுகின்ற நபர்கள் மற்றும் கொள்கைகள் குறித்தும் எதுவுமே தெரியாது என்ற உண்மையும் இவை குறித்து அவர்கள் இதுவரை எதையும் அறிந்திருக்கவில்லை என்பதும்** தெளிவாக வெளிப்படும்.

*(சுய-ஒப்புதல் என்றவகையில், இந்நூலை எழுதிய நானும் வஹ்ஹாபி பற்றியோ, வஹ்ஹாபிசம் அல்லது சலபிசம் பற்றியோ தெளிவானதும் ஆழமானதுமான புரிதலை இன்றுவரை பெற்றிருக்கவில்லை; பெற விரும்பவுமில்லை.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் செயற்படுகின்ற இஸ்லாமிய இயக்கங்களின் முதனிலை உறுப்பினர்கள் இவை பற்றி அறிந்திருக்கலாம். ஆனால் வெகுஜன அளவில் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இவை ஒருபோதும் பேசுபொருள்களாக அமைந்திருக்கவில்லை. இலங்கை முஸ்லிம்கள், தமக்கு முன்னே சொல்லப்படுகின்ற கருத்துக்கள், தமது மதமான இஸ்லாத்தை இன்னும் சரியாக தாம் பின்பற்றுவதற்கு உதவும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் அக்கருத்துகளை புரிந்து கொண்டார்கள். இதைத் தவிர, இந்தக் கருத்துகள் பிற சமூகங்களுடனான தமது உறவுகளில் முரண்பாடுகளையும், பெரும் குழப்ப நிலைகளையும் தோற்றுவிக்கும் என்று அவர்கள் எண்ணியிருக்கவில்லை. தம்மீது பிற சமூகங்கள் கொண்டிருக்கின்ற வெறுப்பும், பகைமையும் மேலும் மேலும் அதிகரித்துச் செல்வதை உணர்ந்து, அதனால் அச்சமுற்று, இஸ்லாத்தை ஆழமாகப் பின்பற்றுவதன் மூலமாக, இத்தகைய ஆபத்துகளில் இருந்து இறைவன் தம்மை பாதுகாப்பான் என்ற நம்பிக்கையிலேயே பெரும்பாலான முஸ்லிம்கள் இந்த இஸ்லாமிய இயக்கங்களின் கருத்துக்களை கேட்பவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள்.

இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள், தம்மீது பிற சமூகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களை எதிர்த்து, பதில் தாக்குதல்களை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தையோ அல்லது அவற்றுக்கு எதிராக வெவ்வேறு போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தையோ கொண்டிருக்கவில்லை. பதிலாக, **தமது மத நம்பிக்கை தம்மை பாதுகாக்கும்** என்ற ஆழமான நம்பிக்கையே அவர்களுக்குள் உறுதியாகப் பதிந்திருக்கிறது. எனவே வெவ்வேறு இஸ்லாமிய இயக்கங்கள் மீது இலங்கை முஸ்லிம்கள் வெளிப்படுத்தி வந்திருக்கின்ற அக்கறையும், ஆதரவும் அந்த இயக்கங்கள் பின்பற்றுகின்ற கொள்கைகளை ஏற்றுக் கொண்டதன் விளைவாக உருவானவை அல்ல. இந்த உண்மை தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இந்தக் கொள்கைகளில் எதுவும், ஒருபோதும் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் சமூகமயப்படுத்தப்படவில்லை. இஸ்லாமிய இயக்கங்களின் தீவிர உறுப்பினர்கள், கொள்கைகளினாலும், 'இசங்களினாலும்' பீடிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இலங்கை முஸ்லிம்கள் அவற்றினால் பீடிக்கப்படவுமில்லை; அவை பற்றி அறிந்திருக்கவுமில்லை.

## 'ஷரீஆ' - இஸ்லாமிய சட்ட முறைமை

'உயிர்த்த ஞாயிறு' தாக்குதல்களுக்குப் பின்னர் பிற சமூகங்கள் மத்தியில் மிக பரவலாகவும் கொந்தளிப்புடனும் முன்வைக்கப்பட்ட ஒரு பதமாக 'ஷரீஆ' என்பது அமைந்திருக்கின்றது. 'ஷரீஆ' என்பது மத்திய காலத்திற்குரிய சட்டமுறைமை என்றும், அது கொடூரமான தண்டனைகளைக் கொண்ட சட்டம் என்றும், இலங்கை முஸ்லிம்களை – குறிப்பாக முஸ்லிம் பெண்களை – அச்சட்டம் கடுமையாக அடக்கி வைத்திருக்கிறது என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இத்தகைய கருத்துகளுக்கு மாறாக, 'ஷரீஆ' என்பது முற்றிலும் வேறானது, அது சமூக வாழ்வை ஒழுங்கமைப்பதை நோக்காகக் கொண்ட, உள்ளிணக்கம் நிறைந்த சட்டங்களின் தொகுப்பு.

1. 'ஷரீஆ' என்பது வெறுமனே குற்றங்களையும், அவற்றிற்கான தண்டனைகளையும் மட்டும் கொண்ட சட்டத் தொகுப்பு அல்ல. அது மனிதர்களுக்கிடையிலான தனிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள், இரத்த உறவுகள், ஆண்-பெண் உறவுகள், பொருளாதாரச் செயற்பாடுகள், சொத்துக்கள், வழிபாட்டு முறைகள், திருமணம், உணவுமுறைகள், ஆடைகள், கடமைகள், குற்றங்கள், அவற்றிற்கான பரிகாரங்கள் மற்றும் தண்டனைகள் போன்ற சமூக வாழ்வின் அனைத்து அம்சங்களையும் கொண்டதான வாழ்வியல் முறைமையாக இருக்கிறது.

2. 'ஷரீஆவின்' அடிப்படை அம்சமானது, மனித வாழ்வை முறைப்படுத்துவதையும், ஒவ்வொருவரும் தமது கடமைகளைப் புரிந்து நிறைவேற்றுவதையும், தவறுகளிலும், குற்றங்களிலும் இருந்து தம்மை தவிர்த்துக் கொள்வதையும் இலக்காகக் கொண்டிருக்கிறது.

3. 'ஷரீஆ' தொகுப்பு மன்னிப்பையும், நேர்மையையும், பிறருக்கு உதவுவதையும் அடிநாதமாகக் கொண்டிருக்கிறது. ***தண்டனைகளுக்கு மேலானதாக அது மன்னிப்பை உயர்த்துகிறது.*** ஒரு கொலையாளியின் விடயத்திலும் அது மன்னிப்பை முதன்மையாக்குகிறது. ஒருவர் கொலை செய்துள்ளார் என்பது சட்டரீதியாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்ட நிலையில், கொலை செய்யப்பட்டவரின் இரத்த உறவினர்கள் அவரை மன்னிப்பார்களாயின், அவர் அதற்கான தண்டனையில் இருந்து விலக்களிக்கப்படுகிறார். இதைவிட, தனது குடும்பத்தை பராமரிப்பவராக இருக்கின்ற ஒரு ஆண் ஒரு பெண்ணை கொலை செய்ததாக நிரூபிக்கப்பட்டு, அவர் மரண தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டுமாயின், கொலை செய்யப்பட்ட பெண்ணின் இரத்த உறவினர்கள், 'இரத்த பணம்' (Blood Money)என அழைக்கப்படுகின்ற இழப்பீட்டுத் தொகையில் அரைப்பகுதியை அந்த ஆணின் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டும்.

4. 'ஷரீஆ' முறைமை மனித உரிமைகளையும், மனிதர்களுக்கிடையிலான உறவுகளின் கண்ணியத்தையும் பேணுகின்றது. திருடியவனின் கை வெட்டப்பட வேண்டும் என்ற சட்டமானது, எல்லாத் திருட்டுக்கும் உரியதல்ல. தனது பசியைப் போக்குவதற்காக இன்னொருவரின் பொருளைத் திருடுவதற்கும், குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாகத் திருடுவதற்கும் இத்தண்டனை விதிக்கப்படவில்லை. மாறாக ***பிறருடைய பொருளை தனதாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவரின் உடமைகளை திருடுபவர்களுக்கே*** இத்தண்டனை விதிக்கப்படுகின்றது. இங்கு தனது உடமைகள் மீது, ஒருவருக்குள்ள உரிமையை 'ஷரீஆ' சட்டம் பூரணமாக பாதுகாக்கிறது.

அதேபோன்று திருமணம் முடித்தவர்கள், தமது மண உறவுக்கு புறம்பாக பிற நபர்களுடன் பாலியல் உறவுகளை மேற்கொள்கின்றபோது, அத்தகையோருக்கு வெவ்வேறு தண்டனைகளை 'ஷரீஆ' விதிக்கிறது. இது, திருமண பந்தத்தில் இணைந்திருக்கின்ற ஆண், பெண் இருபாலாரின் உரிமையையும் கண்ணியத்தையும் பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. தனது துணையுடனான குடும்ப வாழ்க்கை திருப்தியானதாக இல்லை என ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ கருதும்போது, அத்திருமண பந்தத்தில் இருந்து கௌரவமான முறையில் அவர்கள் விலகிக் கொள்வதற்கும், வேறு நபர்களுடன் புதிதாக திருமண பந்தத்தில் இணைவதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான அங்கீகாரத்தை 'ஷரீஆ' வழங்குகின்றது. ஆண், பெண் இருவருக்கும் இத்தகைய உரிமை வழங்கப்பட்டிருக்கின்ற நிலையில், ஒருவருடன் திருமண பந்தத்தில் இணைந்திருக்கின்ற நிலையில், வேறு ஒரு நபருடன் பாலியல் உறவில் ஈடுபடுவது என்பது, திருமண பந்தத்தில் இணைந்துள்ள மற்ற நபரின் உரிமையை மீறுவதாக அமைகிறது. அத்தோடு அவருக்கு அவமானத்தையும் இழிநிலையையும் அவர்களின் குடும்ப வாழ்வில் ஒழுங்கு குலைவையும் ஏற்படுத்துவதாகவும் அமைகிறது. இத்தகைய செயற்பாடுகள் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கம் இங்கு முதன்மையானதாக இருக்கின்றது.

இத்தகைய 'ஷரீஆ' விதிகளில் பெரும்பாலானவை – குறிப்பாக குற்றங்களுக்கான தண்டனை சார்ந்தவை - இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் நடைமுறையில் பின்பற்றப்படுவதில்லை. திருட்டுக் குற்றங்களுக்கு கைகள் வெட்டப்படுவதோ அல்லது 'சோரம் போதலுக்கு' கடுமையான தண்டனைகளோ இங்கு ஒருபோதும் இடம்பெறவில்லை. ஒரு சிறிய சமூகமாகவும், நாட்டின் பொதுவான சட்ட முறைமைக்குக் கீழ் வாழ்வதாலும், **இலங்கை முஸ்லிம்கள் இலங்கையின் சட்டமுறைகளையே பெரிதும் பின்பற்றுபவர்களாக இருந்து வந்திருக்கின்றார்கள்.** இஸ்லாமிய அரசு அல்லாத ஒரு சூழலில் வாழ்கின்ற முஸ்லிம்கள், அங்கு வழக்கிலுள்ள சட்ட முறைமைக்கு அமைவாகவும், இயன்றளவில் 'ஷரீஆ' விதிகளுக்கு மாற்றமில்லாமலும் வாழக் கூடிய முறைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய நாடுகளில் சொத்து ரீதியாகவும், கணவன் - மனைவிக்கு இடையிலும், சிறிய பிணக்குகள் சார்ந்தும் எழக் கூடிய பிரச்சினைகளே 'ஷரீஆவின்' பிரகாரம் தீர்த்து வைக்கப்படுகின்றன. இந்த விடயங்களிலும் கூட, முஸ்லிம்கள் தாம் விரும்புகின்ற பட்சத்தில், பொதுவான நீதிமன்றங்களை நாடி தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் வழிசெய்யப்பட்டிருக்கிறது.

## (அ) நீதிமன்றங்களும் இலங்கை முஸ்லிம்களும்

இந்நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் தமது பிரச்சினைகளுக்காக தினந்தோறும் சென்று வருகின்ற முஸ்லிம்களின் எண்ணிக்கையானது, இந்நாட்டில் 'ஷரீஆ' முறைமை மிகக் குறைவாகவே பின்பற்றப்படுகிறது என்ற உண்மையை தெளிவாக எடுத்துக் காட்டும். உண்மையில் பிற சமூகங்களுடன் ஒப்பிடுகையில், அரசாங்க நீதிமன்றங்களை நாடிச் செல்கின்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிக வீதாசாரத்தைக் கொண்டிருக்கிறது என்பதை பின்வரும் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

*2015 – 2019 ஆண்டுகளுக்கிடையே குற்றம் நிரூபிக்கப்பட்டு சிறை சென்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை பின்வருமாறு:*

| ஆண்டு | எண்ணிக்கை (முஸ்லிம்கள்) | வீதம் |
|---|---|---|
| 2015 | 2713 | 11.3 |
| 2016 | 4808 | 20.0 |
| 2017 | 3008 | 13.2 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *2018* | *3093* | *12.4* |
| *2019* | *3972* | *13.6* |

*(சிறைச்சாலைகள் திணைக்களம் - 2020)*

மேற்குறித்த ஐந்து வருடங்களிலும் நீதிமன்ற விசாரணைகளில் **குற்றம் நிரூபிக்கப்பட்டு சிறைக்குச் சென்ற மொத்த நபர்களில் முஸ்லிம்களின் வீதாசாரமானது, அவர்களின் தேசிய சனத்தொகை வீதத்திலும் பார்க்க அதிகமாக இருக்கின்றது** என்பதை அறிய முடிகிறது. இதன்படி ஏனைய சமூகங்களைப் போன்று, இலங்கை முஸ்லிம்களும் தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நாடி நீதிமன்றங்களுக்கே மிக அதிகளவில் செல்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

## (ஆ) முஸ்லிம் விவாகச் சட்டம்: ஒரு பன்முகப் பார்வை

சமீப காலங்களில் 'ஷரீஆ'; என்ற பதம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இன்னொரு தளமாக, இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் நடைமுறையிலுள்ள 'முஸ்லிம் விவாகச் சட்டம்' தொடர்பான விடயங்கள் அமைந்திருக்கின்றன. முஸ்லிம் பெண்களின் திருமண வயது, திருமணத்தின்போது முஸ்லிம் பெண்களின் சம்மதத்தை உறுதிப்படுத்துவதற்காக மணப்பெண்ணின் கையொப்பம் பெறப்படல், கணவன் - மனைவிக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முஸ்லிம்கள் மத்தியில் நடைமுறையிலுள்ள 'காதி' நீதிமன்றங்களின் நீதவான்களாக பெண்களையும் உள்ளடக்கும் விதத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டமைப்பு மாற்றங்கள் போன்ற விடயங்கள் விவாதப் பொருட்களாக வெளிக் கிளம்பியுள்ளன. 'முஸ்லிம் விவாகச் சட்டத்தில்' புதிய விதிமுறைகளை உருவாக்குவது தொடர்பான விவாதங்களில் 'ஷரீஆ' என்ற பதம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்த விடயத்தில் முஸ்லிம் தரப்பினர் மட்டுமன்றி, பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களும் இந்த சட்டம் தொடர்பான தமது கருத்துக்களையும், கண்டனங்களையும் முன்வைத்து வந்திருப்பதைக் காண முடிகிறது.

இத்தகைய நிலைமை உருவாகியமைக்காக, முதலில் **இலங்கை முஸ்லிம்கள் இதை ஒரு சமூக அவமானமாகக் கொள்ள வேண்டும்.** முழு மனித சமூகங்களுக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டிய முஸ்லிம்களும் அவர்களின் வாழ்க்கை முறைகளும் சொந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களால் மட்டுமன்றி, பிற சமூகத்தினர்களினாலும் விமர்சிக்கப்படுகின்ற நிலை ஏன் உருவானது என்பதற்கான காரணங்களை, திறந்த மனத்துடன் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

**'ஷரீஆவில்' உள்ளடங்கியுள்ள அம்சங்கள், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளை விட சிறப்பானவையாகவும், பொருத்தமானவையாகவும் இருக்கின்றன** என்ற உண்மையை முஸ்லிம் உலகம் நிரூபிக்கத் தவறியிருக்கிறது. இது, 'ஷரீஆவைப்' புரிந்து கொள்வதிலும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் அதை விளக்குவதிலும் முஸ்லிம் அறிஞர்களிடையே பற்றாக்குறை நிகழ்ந்திருக்கிறது என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. இந்த உண்மை உலகெங்குமுள்ள முஸ்லிம் அறிஞர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் உள்ள வெறுப்பினாலும் (Islamophobia), காழ்ப்பினாலும் 'ஷரீஆவிற்கு' எதிரான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இத்தகையோரின் விமர்சனங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று வாதிடுவதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

## திருமணத்தில் பெண்களின் சம்மதம்

**திருமணத்தின்போது, பெண்களின் சம்மதம் பெறப்படுவது மிக அவசியமானது** என இஸ்லாம் வலியுறுத்துகிறது. இந்த சம்மதமானது, மௌனத்தின் மூலம் உணர்த்தப்படுதல், சைகை மூலம் வெளிப்படுத்தப்படல், அல்லது வார்த்தைகள் மூலம் மொழியப்படுதல் என்ற நிலைகளைக் கடந்து இப்போது சட்டபூர்வமான ஆவணங்களில் பெண் தனது கையொப்பத்தை இடல் என்ற நிலையை அடைந்துள்ளது. பிற சமூகங்கள் மத்தியில் சாதாரணமான நிகழ்வாகி விட்ட பெண்ணின் கையொப்பமிடல் என்ற விடயம், முஸ்லிம்கள் மீது பாரிய விமர்சனத்தை ஏற்படுத்துகின்ற நிலையை உருவாக்கியிருப்பது துரதிஷ்டவசமானது.

'ஷரீஆ' தொடர்பான விதிமுறைகளும், அர்த்தப்படுத்தல்களும் ஏற்கனவே முற்றுப் பெற்றவை அல்ல. பதிலாக, அவை கால, சூழல் பரிமாணங்களுக்கு ஏற்ப புதிய அர்த்தப்படுத்தல்களையும் ஒழுங்குகளையும் பெற்று வந்திருப்பவை, அத்துடன் எதிர்காலத்தில் உருவாகக் கூடிய சூழ்நிலைமைகளுக்கேற்ப புதிய அர்த்தப்படுத்தல்களையும், ஒழுங்குகளையும் பெறவிருப்பவை. எனவே நவீன சூழலில், பெண்ணின் சம்மதத்தைக் குறிப்பதற்கு, **பெண்ணின் கையொப்பத்துடன், அதையும் தாண்டிய இன்னும் உறுதியான வழிமுறைகளையும் கண்டறிந்து, அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற சமூகமாக முஸ்லிம் சமூகம் இருக்க வேண்டும்.** வேறு எந்த சமூகத்திலும் இல்லாத விதத்தில், ஒரு ஆண் தான் திருமணம் முடிக்கின்ற பெண்ணுக்கு குறிப்பிட்ட தொகையை அன்பளிப்பாக ('மஹர்') வழங்க வேண்டும் என்பதை விதியாக்கி, பெண்ணின் கௌரவத்தையும், கண்ணியத்தையும் இஸ்லாம் உயர்த்தியிருக்கின்றபோது, திருமணம் சார்ந்த ஏனைய விடயங்களிலும், பெண்ணின் அந்தஸ்த்து முறையாக உறுதிப்படுத்தப்படுவது அவசியமாகிறது.

## காதி நீதிமன்றங்களில் பெண்களின் பங்கேற்பு

இன்று பிற சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் மட்டுமன்றி, முஸ்லிம் பெண்களும் வெவ்வேறு துறைகளில் உயர் பதவிகளையும், தலைமைப் பொறுப்புகளையும் ஏற்றுச் செயற்படுகிறார்கள். இது இன்று ஒரு சாதாரண நிகழ்வாகி விட்டது. அரசியல், நிர்வாகம் சார்ந்த துறைகளில் மட்டுமன்றி, நீதித்துறையிலும் முஸ்லிம் பெண்கள் உயர் பதவிகளை வகிக்கின்ற நிலை சாத்தியமாகி உள்ளது. இலங்கையிலும் இத்தகைய நிலை பரவலாக இடம்பெற்று வருகிறது.

இவ்வாறு சகல துறைகளிலும் அதிகாரிகளாகவும், தலைமைப் பொறுப்புகளிலும் உள்ள முஸ்லிம் பெண்களின் வகிபாகத்தை இலங்கை முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ளும்போது, மிகப்பெரும்பாலும் பெண்களின் பிரச்சினைகளே பேசுபொருளாக அமைகின்ற 'காதி' நீதிமன்றில், பொறுப்பான பதவிகளில் பெண்களையும் உள்ளடக்குவதே பொருத்தமான முறையாக நடைமுறையில் இருந்திருக்க வேண்டும். இதுவரைக்கும் இத்தகைய நிலை ஏற்படுத்தப்படாததை விமர்சனபூர்வமாக ஏற்று, 'காதி' நீதிமன்றங்களின் கட்டமைப்புகளில் முறையான மாற்றங்களை ஏற்படுத்தி, அவற்றில் தகுதி வாய்ந்த பெண்களை இணைப்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து திறந்த மனத்துடன் செயற்படுவதற்கு இலங்கை முஸ்லிம்கள் முன்வர வேண்டும்.

'காதி' நீதிமன்றங்களில் பெரும்பாலும் ஆண்களுக்கு சாதகமாக தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுகின்றன. நீதித்துறை மீது இத்தகைய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவது பாரதூரமானது. அது நீதித்துறையின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது. இங்கு மதத்தின் அடிப்படையிலான ஒரு நீதிமன்றம் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றபோது, அது பற்றி தீவிர கரிசனை அவசியமாகிறது. தனி நீதிபதிக்குப் பதிலாக, பொருத்தமான **ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கிய நீதிபதி குழுவை நியமிப்பது பற்றியும், ஒரு தீர்ப்பிற்கு முன்னால், இக்குழுவிலுள்ளவர்கள் அது பற்றி முறையாகக் கலந்துரையாடி முடிவெடுப்பது பற்றியும் முஸ்லிம் சமூகம் சிந்திக்க முடியும்.**

## பெண்களின் திருமண வயது

பெண்களின் திருமண வயது குறித்த கருத்தாடல்கள் பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே வெவ்வேறு சமூகங்களில் இடம்பெற்று, அதற்கான முடிவுகளையும் அவை அடைந்திருக்கின்றன. பொதுவாக பெரும்பாலான சமூகங்கள், பெண்களின் திருமண வயது பதினெட்டாக இருக்க வேண்டும் என்பதை சட்டபூர்வமானதாக ஆக்கியிருக்கின்றன. இலங்கையிலும் அரசாங்க சட்டத்தின் பிரகாரம், பெண்களின் திருமண வயது பதினெட்டு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் நடைமுறையில், பல சமூகங்களில் இந்த குறைந்த வயதெல்லை பின்பற்றப்படுவதில்லை.

பழங்குடி சமூகங்களில் மட்டுமன்றி, கிராமங்களிலும், நகர்ப்பகுதிகளிலும்கூட பதினெட்டு வயதிலும் குறைந்த வயதுள்ள பெண்களின் திருமணங்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. பெண்கள் பருவமடையும் காலம், வறுமை, குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, அரசாங்க உதவிகளைப் பெறக் கூடிய வாய்ப்பு, இடப்பெயர்வு, முகாம் வாழ்க்கை, காதல் தொடர்பு, திருமணத்திற்கு முன்னரான பாலியல் உறவு போன்ற பல நிலைமைகள் குறைந்த வயதுத் திருமணங்களுக்குக் காரணமாகின்றன.

முஸ்லிம் சமூகத்தில் மட்டுமன்றி, இந்நாட்டிலுள்ள அனைத்து சமூகங்கள் மத்தியிலும் இளவயதுத் திருமணங்கள் இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் நடைமுறையிலுள்ள முஸ்லிம் விவாகச் சட்டத்தில் பெண்களின் திருமண வயது 12 எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதிலும், முஸ்லிம்கள் மத்தியில் இந்த வயதில் இடம்பெறுகின்ற திருமணங்களின் எண்ணிக்கை இப்போது மிகக் குறைவாகவே இருக்கின்றது. மேலும் **பிற சமூகங்களில் இடம்பெறுகின்ற குறைந்த வயதுத் திருமணங்களுக்கு ஒத்த அளவிலேயே முஸ்லிம் சமூகத்திலும் இளவயதுத் திருமணங்கள் இடம்பெறுகின்றன.**

பின்வரும் அட்டவணை, வெவ்வேறு வயது பிரிவுகளில் பெண்கள் பிரசவிக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கையைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது அடிப்படையில் குழந்தை பிறப்பு (10000இற்கு)

| இனம் | எண்ணிக்கை | <15 | 15-19 | 20-24 | 25-29 | 30-34 | 35-39 | 40-44 | 45-49 | >50 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொது | 10000 | 3 | 459 | 2013 | 3075 | 2886 | 1260 | 295 | 28 | 2 |
| சிங்களவர் | 10000 | 2 | 421 | 1850 | 3081 | 2991 | 1318 | 307 | 28 | 1 |
| இல. தமிழர் | 10000 | 3 | 603 | 2258 | 3060 | 2685 | 1114 | 246 | 29 | 3 |
| மலை. தமிழர் | 10000 | 2 | 408 | 2374 | 3432 | 2605 | 942 | 186 | 19 | 4 |
| முஸ்லிம்கள் | 10000 | 3 | 548 | 2584 | 2885 | 2401 | 1179 | 310 | 28 | 2 |

Source: Registrar General's Department – 2014

மேலுள்ள தரவுகள், 15 வயதிற்குக் குறைவாக குழந்தை பெறுகின்ற பெண்களின் எண்ணிக்கை, இந்நாட்டிலுள்ள சகல சமூகங்களிலும் ஏறத்தாழ **ஒரே அளவாக இருக்கிறது** என்பதைக் காட்டுகின்றன. இந்த உண்மை, முஸ்லிம்கள் மத்தியில் இளவயதுத் திருமணங்கள் அதிகம் நிகழ்கின்றன என்பதை நிராகரிக்கிறது. அத்துடன், இத்தரவுகள் இன்னுமொரு உண்மையையும் வெளிப்படுத்துகின்றன. அதாவது, 15 தொடக்கம் 24 வயது வரையில் உள்ள முஸ்லிம் பெண்களின் குழந்தை பெறுகின்ற எண்ணிக்கை, சராசரி எண்ணிக்கையிலும் பார்க்க சிறிது கூடுதலாக இருக்கிறது என்பதையும் அதன் பின்னர் அவர்களின் பிள்ளை பெறும் எண்ணிக்கை **சராசரியிலும் பார்க்க குறைவாக இருப்பதை அல்லது சராசரியை அண்மித்து இருப்பதையும்** சுட்டிக்காட்டுகின்றன. எனவே முஸ்லிம் பெண்கள் இளவயதில் திருணம் முடிப்பது என்பது, இலங்கை முஸ்லிம்களின் மக்கள் தொகையில் பாரியளவிலான அதிகரிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கவில்லை என்ற உண்மையை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

சட்டபூர்வமான ஆவணங்களில் பெண்ணின் வயது (சில சந்தர்ப்பங்களில் ஆணின் வயதும்கூட) உண்மையான வயதிலும் பார்க்க கூடுதலான வயதாகக் குறிப்பிடப்படுவதால், இந்த விடயத்தில் துல்லியமான தரவுகளைப் பெறுவது கடினமானது. எனினும் பொதுவான அவதானிப்பை மேற்கொள்ளும்போது, இந்நாட்டிலுள்ள பழங்குடி சமூகங்களில் மட்டுமன்றி, சிங்கள, தமிழ் சமூகங்களிலும் இளவயதுத் திருமணங்கள் இடம்பெற்று வருவதை காண முடியும். உண்மை நிலை இவ்வாறிருக்கையில், இலங்கை முஸ்லிம்கள் மத்தியிலேயே இளவயதுத் திருமணங்கள் இடம்பெறுவதாக கருத்துக்களை வெளிப்படுத்துவதும், விமர்சிப்பதும், வெறுப்பூட்டும் பிரச்சாரங்களை மேற்கொள்வதும் தவறானவை மட்டுமன்றி, உள்நோக்கம் கொண்டவையாகவும் அமைந்திருக்கின்றன. இலங்கை முஸ்லிம்கள் மீதான இந்தக் குற்றச்சாட்டுகள் பிற சமூகங்களினால் மிக எளிதாக நம்பப்படுவதற்கு, முஸ்லிம் விவாகச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களுக்கான குறைந்த வயதெல்லை ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. எனவே இந்த வயதெல்லையை, இலங்கையில் பெண்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ள பொதுவான வயதெல்லையாக மாற்றுவதன் மூலமாக, சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலும், மத அடிப்படையிலும் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற இழிவுபடுத்தல்களை தவிர்க்க முடியும்.

## திருமண வயதும் தேர்வுக்கான சுதந்திரமும்

பெண்களின் திருமண வயது தொடர்பான விவாதங்கள், 'தேர்வுக்கான சுதந்திரம்', 'பாலியல் சுதந்திரம்' போன்ற கொள்கைகளின் பின்புலத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், முற்றிலும் இந்தக் கொள்கைகளின், (அல்லது 'சுதந்திரங்களின்') அடிப்படையில் பரிசீலிக்கும்போது, **திருமணத்திற்கென பெண்களுக்கு வயதெல்லையைத் தீர்மானிப்பதுதான், அவர்களின் 'தேர்வுச் சுதந்திரத்தையும்', 'பாலியல் சுதந்திரத்தையும்' மீறுவதாக அமைந்திருக்கிறது.** உயிரியல் அடிப்படையிலும் உடலமைப்பியல் அடிப்படையிலும் பரிசீலிக்கும்போது, ஒரு பெண் (இங்கு ஆணுக்கும் இந்தப் பரிசீலனை பொருந்தும்) பருவமடைகின்ற அந்தக் கணமானது, அவள் பாலியல் உறவுக்கான நிலையையும் தேவையையும் அடைந்து விட்டாள் என்பதைக் குறிக்கிறது. இதன் பின்னர், தனது உடலில் ஏற்படக் கூடிய பாலியல் தூண்டல்களையும், தேவைகளையும் தனக்குரிய முறையில் பூர்த்தி செய்வதற்கான உரிமையை அவள் பெற்று விடுகிறாள். இந்த உரிமையை அவளிடமிருந்து யாரும் பறிக்க முடியாது, தடுக்கவும் முடியாது. வயதைக் காரணம் காட்டியோ, பொருளாதார நிலையை முன்வைத்தோ, இளம் வயதில் மேற்கொள்கின்ற பாலியல் உறவினால் ஏற்படக் கூடிய நோய்களைக் காரணமாக்கியோ, அல்லது வேறு காரணங்களின் அடிப்படையிலோ ஒரு பெண்ணின் பாலியல் உரிமையை தடுக்க முடியாது. இது அடிப்படையில் மனித உரிமை மீறல்களில் ஒன்றாக ஆகிவிடும்.

இத்தகைய நிலைமைக்கு மேற்கத்தைய நாடுகள் தீர்வுகளைக் கண்டுள்ளன. ஒரு பெண்ணின் வயது வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளாமல், பாலியல் உறவுகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் அந்த நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்நாடுகளில் திருமணத்திற்கான பெண்ணின் குறைந்த வயது பதினெட்டு என்றே சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. ஆனால், பெண்களின் பாலியல் உறவுகளுக்கு குறைந்த வயதெல்லை விதிக்கப்படவில்லை. அந்நாடுகளில், ஒரு பெண் பாலியல் உறவில் ஈடுபடுவதும், அவள் திருமணம் முடிப்பதும் வெவ்வேறு விடயங்களாகக் கருதப்படுகின்றன. இதன் விளைவாக, பதினெட்டு வயதிற்கு முன்னர் கர்ப்பம் தரிக்கின்ற பெண்களின் எண்ணிக்கையும், கருக்கலைப்பும் அந்நாடுகளில் உயர்ந்த அளவில் காணப்படுகின்றன. உதாரணமாக, உலக சுகாதார நிறுவனம், 2004இல் வெளியிட்ட 'கட்டிளமை கர்ப்பம்' (Adolescent Pregnancy. World ealth Organization 2004) என்ற தலைப்பிலான ஆய்வறிக்கையின்படி. ஐக்கிய இராச்சியத்தில் இளவயது கர்ப்பமானது 1000 பெண்களில் 46.9 ஆகவும், கருக்கலைப்பு 18.6ஆகவும் காணப்படுகின்றன. அமெரிக்காவில் இளவயது கர்ப்பம் 1000 பெண்களில் 83.6 ஆகவும், கருக்கலைப்பு 29.2ஆகவும், கனடாவில் இளவயது கர்ப்பம் 1000 பெண்களில் 45.4 ஆகவும், கருக்கலைப்பு 21.2ஆகவும் காணப்படுகின்றன. பாலியல் கல்வியும், இலவச ஆணுறை வழங்கப்படுகின்ற முறையும் நடைமுறைப்படுத் தப்படுகின்றபோதிலும், அந்நாடுகளில் இளவயதுப் பாலுறவின் விளைவுகள் இந்தளவு எண்ணிக்கையில் அமைந்திருக்கின்றன.

இலங்கையில் திருமணத்திற்கு முன்னர் பாலியல் உறவில் ஈடுபடுவது என்பது அனைத்து சமூகங்களினாலும் தடுக்கப்பட்டதாகவும், கண்டனத்திற்குரிய செயலாகவும் அமைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது, இந்நாட்டில் திருமணத்திற்கு முன்னர் பெண்கள் பாலியல் உறவில் ஈடுபடுவதில்லை என்பதை சுட்டிக் காட்டுகிறதா? உண்மை நிலை இங்கு முற்றிலும் வேறானதாக இருக்கிறது. திருமணத்திற்கு முன்னர் பாலியல் உறவில் ஈடுபடுகின்ற பெண்களின் எண்ணிக்கை (ஆண்களின் எண்ணிக்கையும்) இங்கு அதிகரித்த வண்ணம் இருக்கிறது. இலங்கையில் இளவயதில் கர்ப்பமடைகின்ற பெண்களின் எண்ணிக்கையானது 1000 பெண்களுக்கு 20 என்ற அளவில் இருப்பதாக மேலே குறிப்பிட்டுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேநேரத்தில், குருநாகல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வானது, பாலியல் சார்ந்த நோய்களினால் பாதிக்கப்பட்ட பெண்களில் ஏறத்தாழ 20 வீதமானவர்கள் **பாடசாலை மாணவிகள்** என்ற தகவலை வெளிப்படுத்தியிருக்கிறது.

இது கூடுதல் அக்கறைக்குட்படுத்தப்பட வேண்டிய விடயம். இத்தகைய நிலை குறித்த மாவட்டத்தில் மட்டும் காணப்படுவதாகக் கருத முடியாது. இந்த எண்ணிக்கையை விட கூடுதலான எண்ணிக்கையிலோ அல்லது குறைவான எண்ணிக்கையிலோ, திருமணத்திற்கு முன்னர் பாலியல் உறவில் ஈடுபடுகின்ற குறைந்த வயதுப் பெண்கள் இந்நாட்டின் சகல மாவட்டங்களிலும் இருக்கிறார்கள் என்ற உண்மை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். திருமணத்திற்கான பெண்களின் வயதை அதிகரிப்பது என்பது, பெண்களின் பாலியல் செயற்பாடுகளுக்கான தீர்வாக அமைய மாட்டாது என்பதை இந்த உண்மை சுட்டிக் காட்டுகிறது. இதற்கு மாறாக, **திருமண வயதெல்லை அதிகரிக்கப்படும்போது திருமணத்திற்கு முன்னரான பாலியல் உறவுகள் மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியம் இருக்கின்றது**. இந்த உண்மையை அனைத்து சமூகங்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, பாடசாலை மட்டத்திலும், சமூக அளவிலும் பாலியல் தொடர்பான முறையான விளக்கங்களை இளம் பருவத்தினருக்கு முன்வைக்கக் கூடிய பொருத்தமான வழிமுறைகளை அனைத்து சமூகங்களும் கண்டுகொள்வது அவசியம்.

## பள்ளிவாசல்களும், இஸ்லாமிய மதக் கல்வி நிலையங்களும் (மத்ரசாக்களும்)

### (அ) பள்ளிவாசல்கள்:

இனரீதியான பிரச்சாரத்திற்கும், தாக்குதல்களுக்கும் உட்பட்டிருக்கின்ற மற்றுமொரு விடயமாக முஸ்லிம்களின் பள்ளிவாசல்களும், இஸ்லாம் குறித்து கற்பிக்கின்ற கல்வி நிலையங்களும் (மத்ரசாக்கள்) அமைந்திருக்கின்றன. வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு இந்நாட்டில் அதிக எண்ணிக்கையில் பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்றன என்றும், இஸ்லாத்தைக் கற்பிக்கின்ற மார்க்கக் கல்வி நிலையங்கள் மூலமாக, முஸ்லிம் இளைஞர்கள் அடிப்படைவாதிகளாகவும், தீவிரவாதிகளாகவும் மாற்றப்படுகிறார்கள் என்றும், இவை இந்நாட்டை இஸ்லாமிய நாடாக மாற்றுவதற்கான சதித்திட்டங்கள் என்றும் பிரச்சாரங்கள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

முஸ்லிம் பிரதேசங்களில் புதிதாக பள்ளிவாசல்கள் கட்டப்படுவதற்கும், ஏற்கனவே இருக்கின்ற பள்ளிவாசல்கள் விஸ்தரிக்கப்படுவதற்கும் அவசியமான காரணங்கள் இருக்கின்றன. முஸ்லிம்கள் (பொதுவாக ஆண்கள்) தொழுகைக்காக ஒரு நாளைக்கு ஐந்து முறை பள்ளிவாசலுக்கு செல்ல வேண்டியவர்களாகவும், **ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஒரு பிரதேசத்திலுள்ள சகல ஆண்களும் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு செல்ல வேண்டியவர்களாகவும்*** இருக்கிறார்கள். சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக ஏற்கனவே இருக்கின்ற பள்ளிவாசல்களின் கொள்ளளவு போதாமலாவதோடு, ஊர்களின் குடியிருப்பு எல்லைகள் விரிவடைந்து செல்வதனால் புதிய பள்ளிவாசல்களின் தேவையும் அதிகரிக்கிறது. இந்த வகையில், இருக்கின்ற பள்ளிவாசல்கள் அடிக்கடி விஸ்தரிக்கப்படுவதும், புதிய பள்ளிவாசல்கள் கட்டப்படுவதும் இயல்பான சனப்பெருக்கத்தின் விளைவுகளாக அமைகின்றன.

எனினும் இவ்வாறு இயல்பான முறையில் எண்ணிக்கையில் அதிகரித்தும் மாற்றங்களுக்குள்ளாகியும் வருகின்ற பள்ளிவாசல்களுக்கு புறம்பாக, வேறு நோக்கங்களுக்காகவும் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய பள்ளிவாசல்கள்,

- பெரிய முஸ்லிம் பாடசாலைகளிலும்
- இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் செயற்படுகின்ற இஸ்லாமிய இயக்கங்கள் சிலவற்றின் வழிபாட்டிற்கென்று தனியாகவும்
- மத்திய கிழக்கு அரபிய செல்வந்தர்கள், இறந்து விட்ட தமது பெற்றோர் மற்றும் இரத்த உறவினர்களுக்கு நிரந்தர நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் கட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு ***பாடசாலைகளிலும், இஸ்லாமிய இயக்கங்களுக்காகவும், மரணித்தவர்களின் நினைவாகவும் நிர்மாணிக்கப்படுகின்ற பள்ளிவாசல்கள், இந்நாட்டு முஸ்லிம்களின் இயல்பான தேவையினதும், அவசியத்தினதும் விளைவாக கட்டப்பட்டவை அல்ல.*** சில இடங்களில் மிக அருகருகே ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்கள் கட்டப்பட்டிருக்கின்ற நிலை உருவாகியுள்ளது. கடந்த சில பத்தாண்டுகளாக இத்தகைய போக்கு காணப்பட்டு வந்திருக்கிறது. குறிப்பாக சுனாமியின் பின்னர், இவ்வாறான நோக்கங்களுக்காக பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்ற போக்கு சடுதியாக அதிகரித்திருந்தது. முன்னர் இந்நாட்டு முஸ்லிம்களின் தேவைக்கும், பொருளாதார நிலைமைக்கும் ஏற்ப பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வந்திருக்கின்ற நிலைமைக்கு மாறாக, பெரியளவிலும், ஆடம்பரமாகவும் பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்ற போக்கு இப்போது உருவாகியுள்ளது. மத்திய கிழக்கு அரசாங்கங்களினதும் அங்குள்ள செல்வந்த முஸ்லிம்களினதும் நிதி இத்தகைய பள்ளிவாசல்கள் கட்டப்படுவதற்கு தாராளமாக வழங்கப்பட்டமை இதற்கான ஒரு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. இலங்கை முஸ்லிம்கள் சுனாமி, முப்பது வருட உள்நாட்டு யுத்தம் என்பவற்றால் பாதிக்கப்பட்டும், இடம்பெயர்ந்தும் வாழ்கிறார்கள், அவர்கள் பெரிதும் வறுமையில் வாழ்கின்றவர்கள் போன்ற காரணங்கள், அரபிய முஸ்லிம் செல்வந்தர்களினதும் மத்திய கிழக்கு அரசாங்கங்களினதும் இத்தகைய தாராளமான பணவழங்கலை தூண்டியிருந்தன.

இவ்வாறு குடிப்பெருக்கத்தின் இயல்பான வெளிப்பாடாக அமைந்திராத இத்தகைய பள்ளிவாசல்கள், பிற சமூகங்களின் பார்வையில் இலங்கை முஸ்லிம்கள் பற்றிய தவறானதும், பகைமையுடனுமான ஒரு கண்ணோட்டம் உருவாவதற்குக் காரணமாகியுள்ளன. பெரிய பரிமாணங்களிலும், புதிய வடிவங்களிலும், ஆடம்பரத் தன்மையுடனும் விரைவாகவும் கட்டி முடிக்கப்படுகின்ற இத்தகைய பள்ளிவாசல்களுக்காக பெறப்படுகின்ற நிதிகள் குறித்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை கட்டப்படுகின்ற நோக்கங்கள் குறித்தும் பிற சமூகங்களினால் சந்தேகங்களும் கண்டனங்களும் எழுப்பப்பட்டு வந்திருக்கின்றன. உள்நாட்டு மக்களினதும் வெளிநாடுகளில் இருந்து இங்கு வருகின்றவர்களினதும் பார்வைகளில் இந்த நாட்டை ஒரு இஸ்லாமிய நாடாகக் காட்டுவதற்கான நோக்கத்தில், முஸ்லிம் நாடுகளின் நிதி உதவியுடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடாக இது பிரச்சாரப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

மதத்தலங்கள் என்பவை ஒரு பிரதேசத்தினதும், நாட்டினதும் இனத்தன்மையை புலப்படுத்தக் கூடியவவயாக இருக்கின்றன என்பது உண்மையே. எனினும், இவற்றை அதிகளவில் கட்டுவதன் மூலமாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் அல்லது நாட்டின் **இனக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி விட முடியாது**. முற்றிலும் பௌத்தர்கள் மட்டுமே வாழ்கின்ற பல பிரதேசங்களில் ஒரேயொரு விகாரையே காணப்படுகிறது. இது அந்தப் பிரதேசங்களில் குறைந்தளவிலான பௌத்தர்கள் வாழ்கின்றார்கள் என்பதையோ, அல்லது அவர்களிடையே மத உணர்வு குறைவாகக் காணப்படுகிறது என்பதையோ குறிக்கவில்லை. மாறாக, குறிப்பட்ட பிரதேசத்திலுள்ள பௌத்தர்களின் மதவழிபாட்டிற்கும், மதரீதியான செயற்பாடுகளுக்கும் ஒரு விகாரை போதும் என்பதோடு, மதரீதியாக அவர்கள் மத்தியில் நிலவுகின்ற ஐக்கியத்தையும் குறிப்பதாக இது அமைந்திருக்கின்றது. பிறநாடுகள் மத்தியில் இந்நாடு பெற்றிருக்கின்ற சிறப்பம்சங்களில் ஒன்றாக, இங்கு நிலவுகின்ற செழிப்பான பல்லின சூழலும் அமைந்திருக்கிறது. இப்பல்லினச் சூழலைப் புலப்படுத்துகின்ற அம்சமாக, இந்நாட்டில் எங்கும் காணப்படுகின்ற, வெவ்வேறு சமூகங்களின் வழிபாட்டுத் தலங்கள் அமைந்திருக்கின்றன.

எனினும், இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களின் தலைவர்கள் குறிப்பாக மதத்தலைவர்கள் இங்குள்ள பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய மதநிறுவனங்கள் தொடர்பாக முறையான கொள்கைகளை பின்பற்ற வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். கண்காணிப்பற்ற முறையில் நிதிகள் கையாளப்படுவதானது, மோசடிகளுக்கும், ஊழல்களுக்கும், முறையற்ற செயற்பாடுகளுக்கும் இட்டுச் செல்லக் கூடியது. இந்நாட்டில் பள்ளிவாசல்கள் கட்டப்படுவதிலும், அவை விஸ்தரிக்கப்படுவதிலும், நவீனப்படுத்தப்படுவதிலும் ஏராளமான நிதிகள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறு பெருமளவு நிதி பாவிக்கப்படுவதன் காரணமாக, பள்ளிவாசல் நிர்வாகங்களிலும் நம்பிக்கையாளர் சபைகளிலும் குறிப்பிட்ட சிலரின் ஆதிக்கம் தொடர்ச்சியாக நிலவி வருகிறது; நிதி தொடர்பான விவகாரங்கள் சிலரின் பொறுப்பில் ஒப்படைக்கப்படுகின்றன; பள்ளிவாசல் நிர்வாகங்களுக்கு சில குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள் தொடர்ச்சியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இலங்கையிலுள்ள பெரும்பாலான பள்ளிவாசல்களின் நிர்வாகங்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இடம்பெறுகின்ற கூட்டங்களின்போது, கடுமையான முரண்பாடுகளும், மோதல்களும் இடம்பெறுவது பொதுவான நிகழ்வுகளாக இருக்கின்றன. இறைவனை வணங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள புனிதமான மதத் தலங்களின் நிர்வாகங்களுக்கான தெரிவுகளில் இவ்வாறு பகைமை நிலை காணப்படுவதற்கு, ஆன்மீக ரீதியான அம்சங்கள் காரணங்களாக அமையவில்லை; மாறாக பொருளியல் நலன்களே இங்கு பெரும் பங்கு வகிக்கின்றன.

ஒரு பல்லின சூழலில் வாழ்கின்ற சமூகங்கள், தமது மத, பண்பாட்டு அம்சங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளும் பிற சமூகங்களின் மீது எதிர்நிலைத் தாக்கங்களை ஏற்படுத்தாதவாறு அவற்றை ஒழுங்கமைப்பது அவசியமாகிறது. எனவே, இந்நாட்டிலுள்ள பள்ளிவாசல்கள் தொடர்பான முழுமையான கட்டுப்பாடுகளையும் கண்காணிப்பையும் மேற்கொள்வதற்கான கட்டமைப்புகள், பொறிமுறைகள் என்பவற்றை உருவாக்க வேண்டியது முஸ்லிம் தலைமைகளின் பொறுப்பாக இருக்கிறது. இந்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களின் எண்ணிக்கை, முஸ்லிம்களின் குடிசனப் பெருக்கத்திற்கேற்ப அமைக்கப்பட வேண்டிய பள்ளிவாசல்களின் எண்ணிக்கை, அவை அமைக்கப்பட வேண்டிய இடங்கள் பற்றிய தகவல்கள், வெளிநாடுகளில் இருந்து கிடைக்கக் கூடிய நிதிகள் தனித்தனி நபர்கள், தனித்தனி நிறுவனங்கள் என்பவற்றுக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக, அந்நிதிகளை ஒரு மைய அமைப்பின் கீழ் கொண்டு வந்து தேவைப்படும் இடங்களுக்கு வழங்குதல், முறையான கணக்குப் பதிவு முறை, தேவைப்படுமிடத்து, அரசாங்கக் கணக்குப் பரிசீலனைக்கு உட்படுத்தல் ... போன்ற முறையானதும், வெளிப்படையானதுமான செயன்முறைகளைப் பேணுவது இந்த விடயத்தில் அவசியமாகிறது.

## தொழுகைக்காக அழைத்தல் (பாங்கு சொல்லுதல்)

தொழுகைக்காக அழைத்தல் (பாங்கு சொல்லுதல்) என்பது, முஸ்லிம்கள் மீது, பிற சமூகங்கள் கண்டனங்களையும் விமர்சனங்களையும் முன்வைத்து வந்திருப்பதற்கான இன்னுமொரு விடயமாக இருக்கிறது. பிற சமூகங்களைப் போலன்றி, ஒரு நாளைக்கு ஐந்து தடவைகள் தொழுகைக்கு அழைக்கின்ற முறைமை சகல முஸ்லிம் சமூகங்கள் மத்தியிலும் வழக்கத்தில் இருந்து வருகிறது. நமது நாட்டில், கடந்த பல வருடங்களாக, இவ்வாறு தொழுகைக்கு அழைத்தலை விமர்சனத்திற்குட்படுத்தி, இவ்வழைத்தலை தடை செய்ய வேண்டும் என்று கோருகின்ற அளவுக்கு நிலைமை கடுமையடைந்து வந்திருக்கிறது. இதற்காக சில காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

1. தொழுகைக்காக அழைத்தல் சூழலை மாசுபடுத்துகின்றது. (ஒலி மாசடைதல்)
2. குறிப்பாக இரவிலும், அதிகாலையிலும் மேற்கொள்ளப்படுகின்ற அழைப்பின் காரணமாக பொதுவாக அனைவருக்கும், குறிப்பாக நோயாளிகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.
3. பல பள்ளிவாசல்களில் மீயுயர் வலுவுள்ள ஒலிபெருக்கிகள் பாவிக்கப்படுவதால், நோயாளிகள், குழந்தைகள், பலவீனமானவர்கள் போன்றோர் உடல், உள பாதிப்பிற்குள்ளாகின்ற நிலை உருவாகிறது.

இவை தவிர வேறு காரணங்களும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஐம்பது வருடங்களுக்கு முன்னர், தொழுகைக்காக அழைத்தல் என்பது இந்நாட்டில் அறவே பிரச்சினைக்குரிய விடயமாக அமைந்திருக்கவில்லை. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இது தொடர்பாக ஆங்காங்கே சில விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், கடந்த பத்தாண்டுகளாக தொழுகைக்காக அழைத்தல் தொடர்பாக கடுமையான விமர்சனங்களும் கண்டனங்களும் பிற சமூகத்தினரால் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்நிலையில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விமர்சனங்களில் காணப்படக் கூடிய உண்மை நிலை குறித்துப் பரிசீலிப்பது அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலி மாசடைதல்

வாழ்க்கை முறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப சிந்தனைகளிலும், கருத்துகளிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. சுமார் இரு நூறு வருடங்களுக்கு முன்னர் சூழல் மாசடைதல் பற்றி யாரும் சிந்திக்கவில்லை. ஆனால் அதன் பின்னர், போக்குவரத்துச் சாதனங்கள், இயந்திரங்களின் பாவனை, பயிர்களுக்கு இரசாயன பொருட்கள் பாவித்தல், வெடிமருந்துப் பாவனை, அணுக்குண்டுப் பரிசோதனை, வானொலி, ஒலிபெருக்கிகள், நவீன ஒலி அதிர்வுச் சாதனங்கள், கைபேசி, காடழிப்பு... போன்றவற்றால் சூழல் மாசடைவதும் அதன் அபாய நிலைமைகளும் அக்கறைக்குள்ளாகியுள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக, ஒலியினாலும் இரைச்சல்களினாலும் சூழல் மென்மேலும் மாசுபடுத்தப்படுகின்ற நிலை உருவாகியுள்ளது. உயர் அதிர்வுள்ள ஒலிகளினால், மனிதர்கள் உடல், உளரீதியாக கடுமையான பாதிப்புக்குள்ளாகின்ற நிலை ஏற்படுகிறது. விமான நிலையங்கள், புகையிரத பாதைகள் போன்றவற்றுக்கு அருகில் வசிப்பவர்கள் மத்தியிலும் இயந்திரங்களில் தொழில்புரிபவர்களிலும் உயர் அதிர்வலைகளைப் பயன்படுத்தி இசை மற்றும் பாடல்களைக் கேட்பவர்களிலும் அசாதாரணமான உடல், உள நோய்களும், நடத்தைக் கோளாறுகளும் அவதானிக்கப்பட்டுள்ளன. எனவே இது குறித்து ஒவ்வொரு சமூகமும் கரிசனை கொள்வது அவசியமாகிறது.

முஸ்லிம்கள் மட்டுமன்றி, **ஒவ்வொரு சமூகமும் தமது மத, பண்பாட்டு நிகழ்வுகளின்போது வழமைக்கு மாறான முறையில் ஒலிகளை எழுப்புகின்ற நிலை மரபாக இருந்து வருகிறது.** வாய்களினால் எழுப்பப்படுகின்ற ஒலி, பாடல்கள், இசை ஒலிகள், வாத்திய ஒலிகள், பட்டாசுவெடிகள்.... என வேறுபட்ட முறைகளிலும் அளவுகளிலும் ஒலிகள் எழுப்பப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் இவை நாட்கணக்கில் நீடிப்பவையாகவும் இருக்கின்றன. சில மதப்பிரிவினர்கள் வாரத்தில் ஆறு அல்லது ஏழு நாட்களும் ஒலிபெருக்கிகளை உபயோகித்து தமது மதவழிபாடுகளை மேற்கொள்கிறார்கள். இதனால் அந்த மதத்தலங்களை சூழவுள்ள முழுப் பிரதேசமும் இத்தகைய ஒலி அதிர்வுகளினால் பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகிறது. குழந்தைகள், நோயாளிகள் மட்டுமன்றி, பரீட்சைகளுக்குத் தயாராகின்ற மாணவர்களும் இவற்றினால் பாதிப்புக்குள்ளாகிறார்கள். சில மதத்தலங்கள் பாடசாலைக்கு அருகிலும் வைத்தியசாலைகளுக்கு அருகிலும் அமைந்திருப்பதால், இத்தகைய தொடர் ஒலி, கற்பித்தல் செயற்பாடுகளைப் பாதிக்கின்றன, நோயாளிகளை அசௌகரியங்களுக்கு உள்ளாக்குகின்றன.

முஸ்லிம்களின் பள்ளிவாசல்களில் தொழுகைக்காக அழைத்தல் என்பது ஆகக் கூடினால் மூன்று நிமிடங்கள் நீடிக்கின்றன. எனவே ஒரு நாளைக்கு பதினைந்து நிமிடங்கள் மட்டுமே தொழுகைக்கான அழைப்புக்காக ஒலி எழுப்பப்படுகின்றது. இவ்வாறு தொழுகைக்காக அழைப்பதற்கு குறைந்த நேரமே எடுக்கின்றபோதிலும், நாளாந்தம் **ஐந்து முறைகள் அழைப்படுவதும், தூக்கத்துடன் தொடர்பான இரவு மற்றும் அதிகாலையில் அழைக்கப்படுவதும்** அதிகம் கவனத்தில் கொள்ளப்படுகின்ற விடயங்களாக இருக்கின்றன.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் **அனேகமான பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிகள் இருக்கவில்லை.** அப்போது தொழுகைக்கான அழைப்பு என்பது மிகவும் குறைந்த தூரத்திற்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கக் கூடியதாக இருந்தது. பின்னர் ஒலிபெருக்கி பாவனை படிப்படியே அதிகரித்த போதிலும், **பள்ளிவாசல்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததாலும், பாவிக்கப்பட்ட ஒலிபெருக்கிகளின் திறன், எல்லைக்குட்பட்டதாக இருந்ததாலும்,** தொழுகைக்காக அழைப்பது, பிற சமூகங்கள் மத்தியில் பெரியளவில் கண்டனங்களை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கவில்லை. ஆனால் கடந்த பத்தாண்டுகளாக பள்ளிவாசல்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து, மீயுயர் திறன்மிக்க ஒலிபெருக்கிகளின் பாவனையும் புழக்கத்திற்கு வந்ததன் பின்னர், தொழுகைக்கான அழைப்பு என்பது பிற சமூகத்தவர்களின் மத்தியில் மட்டுமன்றி, **முஸ்லிம்கள் மத்தியிலும்** அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக மாறியிருக்கிறது. தொழுகைக்கான அழைப்பிற்கு மூன்று நிமிடங்கள் போதுமானது என்றபோதிலும், ஒவ்வொரு பள்ளிவாசலிலும் உள்ள கடிகாரங்களின் நேர சரிப்படுத்தல்கள் வித்தியாசப்படுவதால், ஒரு பிரதேசத்தில், அல்லது ஒரு ஊரில் தொழுகைக்கான அழைப்பு முழுமையாக நிறைவுறுவதற்கு ஐந்து நிமிடங்களுக்கும் கூடுதலான நேரம் தேவைப்படுகிறது. அருகருகே அமைந்துள்ள பள்ளிவாசல்களில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக தொழுகைக்காக அழைக்கப்படுகின்றபோது, அதைக் கேட்பவர்கள் அசௌகரியங்களுக்குள்ளாகின்ற நிலை உருவாகின்றது. அத்தோடு, பெரும்பாலான பள்ளிவாசல்களில் 'பாங்கு' சொல்பவர்கள் அதை இனிமையாகச் சொல்ல முடியாதவர்களாக இருப்பதால், ஒன்றன் பின் ஒன்றாகவும் ஒன்றுடன் ஒன்று கலந்தும் ஒலிக்கின்ற இந்த அழைப்புகள் இறுதியில் இரைச்சல்களாக மாறி விடுகின்றன.

எனவே தொழுகைக்காக அழைப்பதை முறைப்படுத்துவது பற்றி முஸ்லிம் மதத் தலைவர்கள் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. **தொழுகைக்காக அழைப்பது என்பது ஒரு கட்டாய நிபந்தனை அல்ல.** இன்றைய சூழலில், அனைத்து முஸ்லிம் குடும்பங்களிலும் நேரத்தை அறிந்து கொள்வதற்கான சாதனங்களும், தொழுகை நேரங்களைக் குறிப்பிடுகின்ற நாட்காட்டிகளும் இருக்கின்றன. அத்துடன் பலரிடம், உரிய நேரத்தில் 'பாங்கு' ஒலிக்கின்ற கைபேசிகளும் இருக்கின்றன. இந்நிலையில், பிற சமூகங்களுக்கு 'எரிச்சலூட்டுவதாகவும்', முஸ்லிம்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கின்ற தொழுகைக்கான அழைப்பை, ஒரு பிரதேசத்திலுள்ள குறிப்பிட்ட பள்ளிவாசல்களில் மட்டும், இனிமையான முறையில் மேற்கொள்வதற்கான முறைகளைப் பின்பற்றுவது பற்றி சிந்திக்க முடியும்.

இந்த விடயத்திலும் இலங்கை முஸ்லிம்கள் பிற சமூகங்களுக்கு முன்மாதிரியாக விளங்க முடியும். பிற சமூகங்களின் மத நிகழ்வுகளில் நாட்கணக்கில் நீடிக்கின்ற ஒலி எழுப்புகை குறித்து அந்தந்த சமூகங்கள் உணர்ந்து, முறையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான நடைமுறை உதாரணமாக இலங்கை முஸ்லிம்கள் திகழ முடியும். மத சுதந்திரம் என்பது மக்கள் தாம் ஏற்றிருக்கின்ற மதங்களை சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கான உரிமையே தவிர, அந்த **மதங்களை தாம் விரும்பியவாறெல்லாம் பின்பற்றுவதற்கான சுதந்திரம் அல்ல** என்ற உண்மை சகல சமூகங்களினாலும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒரு பல்லின சூழலில், பிற சமூகங்களுக்கு அசௌகரியங்களும், வெறுப்பும் ஏற்படாத விதத்தில் தமது மதரீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதே தம்முடையதும், பிற சமூகங்களுடையதுமான உரிமைகளையும், சுதந்திரங்களையும் செயற்படுத்துவதற்கான சிறந்த வழிமுறை என்ற புரிதல் அனைவருக்கும் அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிக்கிழமை கூட்டுத் தொழுகை (ஜும்ஆ தொழுகை)

பொதுவாக, முஸ்லிம்களில் சிறுவர்கள் உட்பட ஆண்கள் அனைவரும் வெள்ளிக்கிழமைகளில் மதியத் தொழுகைக்காக பள்ளிவாசல்களுக்குச் செல்பவர்களாக இருக்கிறார்கள். நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1 அல்லது 1.30 மணிவரையிலான காலப் பகுதியில், இத்தொழுகையும் மார்க்கச் சொற்பொழிவும் இடம்பெறுகின்றன. இந்நேரப் பகுதியின்போது பெரிய பள்ளிவாசல்களில் மக்கள் கூட்டம் வழமைக்கு மாறாக பலமடங்கு கூடுதலாகக் காணப்படும். நகர்ப்புறங்களில் உள்ள மக்களில் கணிசமானோர் வாகனங்களில் பள்ளிவாசலுக்கு வருவதால், சுமார் இரண்டு மணித்தியாலங்கள்வரை பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள வீதிகளில் வாகனங்கள் அதிகளவில் நிறுத்தப்படுகின்றன. இதனால் அந்த வீதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்ற சூழல் காணப்பட்டு வந்திருக்கிறது. இது பிற சமூகங்கள் மத்தியில் குறிப்பிட்ட அளவுக்கு கண்டனங்களை ஏற்படுத்தியிருந்தன.

ஆரம்பத்தில் இக்கண்டனங்களை முஸ்லிம்கள் அதிகம் பொருட்படுத்தாத போதிலும், பிற சமூகங்கள் மத்தியில் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வலைகளும் செயற்பாடுகளும் அதிகரித்தபோது, பள்ளிவாசல் நிர்வாகங்கள் இது விடயத்தில் சில ஒழுங்குமுறைகளை பின்பற்றத் தொடங்கின. 'உயிர்த்த ஞாயிறு' குண்டு வெடிப்பின் பின்னர், வாகனங்களை முறையற்ற விதத்தில் வீதிகளில் நிறுத்துகின்ற விடயத்தில் பள்ளிவாசல் நிர்வாகங்கள் உறுதியான செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றன.

வெள்ளிக்கிழமைகளில் ஏற்பட்டு வந்த போக்குவரத்து சார்ந்த இத்தகைய பிரச்சினைகளோடு, அந்தத் தினங்களில் பள்ளிவாசல்களில் இடம்பெறுகின்ற மார்க்கச் சொற்பொழிவுகள் தொடர்பாகவும் பிற சமூகங்கள் மத்தியில் கண்டனங்கள் நிலவி வருகின்றன. பல பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிகள் மூலமாக இந்த சொற்பொழிவுகள் இடம்பெறுகின்றன. இதனால் பள்ளிவாசல்களுக்கு அருகில் வசிக்கின்ற பிற சமூகத்தினர் சுமார் 45 நிமிடங்கள் தொடக்கம் 1 மணித்தியாலம் வரை அரபு மொழியிலும் தமிழ் அல்லது சிங்கள மொழிகளிலும் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வுரையை கேட்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இது இந்த பிற சமூகத்தினர்களுக்கு அவசியமற்றவையாகவும், எரிச்சலூட்டுபவையாகவும் இருக்கின்றன.

உண்மையில் இந்த உரைகள் வெளியே பொருத்தப்பட்டுள்ள ஒலிபெருக்கிகள் மூலமாக ஒலிபரப்பப்படுவதற்கு எந்தக் காரணங்களும் இல்லை. பள்ளிவாசலுக்குள் அமர்ந்திருக்கின்றவர்கள் அக ஒலிபெருக்கிகள் மூலமாகவே உரைகளை கேட்க முடியும். பள்ளிவாசல்களுக்கு வராமல் வீடுகளில் இருக்கின்ற பெண்களுக்கும், நோயாளிகளுக்கும் மார்க்க உரைகள் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு ஒலிபரப்பப்படுவதாக முன்வைக்கப்படுகின்ற கருத்துகள் பெருமளவில் பொருந்தக் கூடியதல்ல. ஏனெனில்,

முதலாவதாக இந்த உரைகள் ஒலிபரப்பப்படுகின்ற நேரத்தில், பெரும்பாலான பெண்கள் சமையல் வேலைகளில் மும்முரமாக ஈடுபடுபவர்களாக இருக்கிறார்கள். இதனால் இவர்கள் இந்த உரைகளை முறையாகக் கிரகிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இரண்டாவது ஒலிபெருக்கிகள் மூலமான ஒலிபரப்புகை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தெளிவானதாக அமைவதில்லை. இதனால் உரைகளை கேட்க விரும்புபவர்களும் கூட அவற்றைத் தெளிவாகக் கேட்க முடிவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது, முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்களில் இருந்து உரைகள் ஒலிபரப்பப்படுவதால் அவை ஒன்றுடன் ஒன்று கலந்து, கேட்பவர்களுக்கு தெளிவற்ற தன்மையை உண்டாக்குகின்றன.

நான்காவது, வெள்ளிக்கிழமை ஜூம்மா நேரத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூலமாக நேரடியாகவோ அல்லது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட உரைகளையோ ஒலிபரப்புகிறார்கள். இதனால் பெண்கள் தமது வீடுகளுக்குள் இருந்தவாறு தெளிவாகவும் தமது சமையல் வேலைகளுக்கு இடைஞ்சல் இல்லாதவகையிலும் இந்த உரைகளைக் கேட்க முடிகின்றது.

வெளிப்புற ஒலிபெருக்கிகள் மூலமாக ஒலிபரப்பப்படுகின்ற இத்தகைய உரைகள், அவற்றின் ஒலி அளவினாலும் இரைச்சல் தன்மையினாலும் முஸ்லிம் பெண்களுக்கு பிரயோசனமற்றவையாக மாறுகின்றன. அதேநேரத்தில், பள்ளிவாசல்களைச் சூழவுள்ள பிற சமூகத்தினருக்கு, இந்த உரைகள் எதிர்நிலை உணர்வுகளை ஏற்படுத்துகின்றன. இந்த உரைகளை நிகழ்த்துகின்ற அனேகமானோர் எப்போதும் உணர்ச்சிவசப்பட்டவர்களாகவும், உரத்த தொனியிலும் உரை நிகழ்த்துகிறார்கள். இதனால், மொழி புரியாமலும், தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாமலும் இருக்கின்ற பிற சமூகத்தினர், இந்த உரைகள் முஸ்லிம்களை உணர்ச்சியூட்டி, அவர்களை வன்முறை உணர்வுகளுக்கு உட்படுத்துவதாகக் கருதுகின்ற நிலையும் உருவாகின்றது.

இத்தகைய நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு, வெள்ளிக்கிழமை உரைகளை, பள்ளிவாசல்களில் அமர்ந்திருக்கின்றவர்களுக்கு மட்டும் கேட்கக் கூடியதாகவும் இயன்றளவுக்கு உணர்ச்சிவசப்படாமலும் ஆவேசமின்றியும் உரை நிகழ்த்துமாறு, பள்ளிவாசல் நிர்வாகங்களும் உலமாசபையினரும் சம்பந்தப்பட்டவர்களை வழிப்படுத்துவது அவசியமாகிறது. மேலும் உரை நிகழ்த்துகின்ற உலமாக்களை மென்மையான தொனியிலும் நிகழ்கால விடயங்கள் தொடர்பாகவும் உரைநிகழ்த்தும் வகையில் பயிற்றுவிக்கின்ற முறைமைகளை உருவாக்குவது காலத்தின் அவசியமாக இருக்கின்றது. உண்மையில், வெள்ளிக்கிழமை உரைகள் மூலமாக, இஸ்லாமிய பண்பாட்டைப் பற்றியும் நடைமுறை பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய வழியில் எவ்வாறு தீர்வுகளைப் பெற முடியும் என்பது பற்றியும் பிற சமூகங்களும் புரிந்து கொள்கின்ற விதத்தில் அந்த உரைகளைத் தயார்படுத்த முடியும். இதன் மூலமாக, இஸ்லாம் குறித்து ஏனைய சமூகங்கள் தெளிவான அறிவைப் பெறுகின்ற வாய்ப்பு உருவாகும். ஆனால், இந்த உரைகள் மிகப் பெரும்பாலும் நடைமுறை விடயங்களை விட, மறு உலகம், சுவர்க்கம், நரகம், தண்டனைகள்... என பிற சமூகத்தினரை அதிகம் அக்கறை கொள்ளச் செய்யாத விடயங்களையே உள்ளடக்குவனவாக இருக்கின்றன.

இவற்றோடு, கணிசமான பள்ளிவாசல்களில் ஐந்து நேரத் தொழுகையும் வெளிப்புற ஒலிபெருக்கிகள் மூலமாக ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன. இது எதற்காக மேற்கொள்ளப்படுகிறது என்ற காரணம் யாராலும் முன்வைக்கப்படவில்லை. பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபடுபவர்களுக்கோ அல்லது வெளியில் இருப்பவர்களுக்கோ இத்தகைய ஒலிபரப்பு எவ்விதத்திலும் அவசியமற்றதாக இருக்கிறது. அதேநேரத்தில், பிற சமூகங்களுக்கு இது ஒரு தேவையற்ற, எரிச்சலூட்டுகின்ற நிகழ்வாக அமைகின்றது. அதிகாலையில் ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு முன்பாக, தொழுகைக்காக அழைக்கும் ஓசையும் பின்னர் சுமார் பத்து நிமிடங்கள் வரையில் தொழுகை நடத்தப்படும் ஓசையும் பிற சமூகங்கள் மத்தியில் விரும்பப்படாத விடயங்களாக அமைந்திருக்கின்றன என்பது பொறுப்புடன் புரிந்து கொள்ளப்பட வேண்டியுள்ளது.

## இஸ்லாமிய மார்க்கக் கல்வி நிலையங்கள் (மத்ரசாக்கள்):

முஸ்லிம்களின் மதநூலான குர்ஆனையும், மத ரீதியான போதனைகளையும் கற்பிப்பதற்காக இந்நாட்டில் இஸ்லாமிய கல்விக் கூடங்களும், பிற கல்வி அமைப்புகளும் நடைமுறையிலுள்ளன. இவை முஸ்லிம் சிறுவர்களையும், இளைஞர்களையும் ஒருபோதும் ***அடிப்படைவாதத்திற்கோ, தீவிரவாதத்திற்கோ இட்டுச் செல்லக் கூடியவகையில் அமைந்திருக்கவில்லை.*** குர்ஆனை முறையாக ஓதுவதற்கும், அதை மனனம் செய்வதற்கும், குர்ஆனில் குறிப்பிட்டப்பட்டுள்ள விடயங்களைப் புரிந்து கொள்வதற்கும், இஸ்லாம் தொடர்பான ஏனைய போதனைகளை கற்பதற்குமான முறைமைகளையே இவை மேற்கொள்கின்றன. உண்மையில், ***கடும்போக்குச் சிந்தனையும், பிற மதங்கள் தொடர்பான சகிப்பின்மையும் கொண்ட பிரிவினர், இந்நாட்டில் நடைமுறையிலுள்ள முஸ்லிம்களின் கல்வி நிறுவனங்களில் முறையாகக் கற்காதவர்களாகவும், அவற்றுடன் முரண்படுபவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களில் கணிசமானோர் வெளிநாடுகளில் கற்றவர்களாக உள்ளனர்.***

இஸ்லாம் முன்வைக்கின்ற எளிமையான வாழ்க்கை முறையை பின்பற்றக் கூடியவர்களாகவும், பிறருடன் முரணற்ற முறையிலும், இணக்கமாகவும் வாழக் கூடியவர்களாகவும் முஸ்லிம் இளையோரை உருவாக்குவதே இந்நாட்டில் செயற்படுகின்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் பிரதான நோக்கங்களாக இருக்கின்றன. இவற்றுடன், இந்நாட்டின் பொதுவான கல்வித்திட்டத்திற்குரிய பாட விதானங்களை உள்வாங்கி, அவற்றையும் இவை கற்பித்து வருகின்றன. இதன் மூலமாக இவற்றில் கற்கின்றவர்கள், பரந்துபட்ட அறிவைப் பெறுகின்ற சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

முஸ்லிம் ஆண்களுக்கு மட்டுமன்றி, முஸ்லிம் பெண்களுக்கும் கற்பிப்பதற்கென பல ‘மத்ரசாக்களும்’, இஸ்லாமிய கல்வி நிறுவனங்களும் இந்நாட்டில் செயற்பட்டு வருகின்றன. இவை அனைத்துமே, மார்க்க அறிவோடு, மொழி அறிவையும், ஏனைய பிரதான துறைகள் சார்ந்த அறிவையும் முஸ்லிம் பெண்களுக்கு வழங்குகின்றன. அத்துடன் இவை குடும்ப வாழ்விலும் ஏனைய நாளாந்த செயற்பாடுகளிலும் ஒழுங்கும் பொறுப்பும் கொண்டவர்களாக முஸ்லிம் பெண்களை வார்த்தெடுப்பதை முதன்மையான நோக்கங்களாகக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம், இலங்கை முஸ்லிம்களின் குடும்ப அமைப்பு சீராக செயற்பட்டு, இந்நாட்டிற்கு பொருத்தமான முறையில் வாழக் கூடிய பிரஜைகளாக தமது பிள்ளைகளை வளர்ப்பதற்கான வாய்ப்பை இத்தகைய நிறுவனங்களில் கற்கின்ற பெண்கள் பெறுகிறார்கள். இக்கல்வி நிறுவனங்களில் முறையாகக் கற்ற பெண்களின் குடும்பங்களை கள ஆய்விற்கு உட்படுத்தும்போது, இந்நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்கு இவற்றின் வகிபாகம் எத்துணை முக்கியத்துவம் பெற்றவையாக அமைந்திருக்கின்றன என்ற உண்மையை அறிந்து கொள்ள முடியும். எனவே இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் செயற்படுகின்ற இத்தகைய கல்வி நிறுவனங்களின் மீது கண்டனங்களை வெளிப்படுத்துவதும் அவற்றை விமர்சிப்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில், இந்நாட்டில் சமூக நல்லிணக்கத்திற்கு உதவக் கூடிய அமைப்புகள் மீதான தாக்குதலாகவே அமைகிறது.

தொகுத்துக் கூறுவோமாயின்:

1. பள்ளிவாசல்கள் என்பவை முஸ்லிம்களின் மதவழிபாட்டிற்குரிய இடங்களாகவே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

2. முஸ்லிம்கள் தினமும் ஐந்து நேரங்கள் தொழுகைக்காக பள்ளிவாசல்களுக்கு செல்ல வேண்டியிருப்பதால், ஒரு பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களின் எண்ணிக்கையும், விஸ்தீரணமும் அங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் எண்ணிக்கைக்கேற்ப தீர்மானிக்கப்படுகின்றன.

3. முஸ்லிம்களின் சனப்பெருக்கத்திற்கு ஏற்ப, பள்ளிவாசல்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு, அவை விஸ்தரிக்கப்பட வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. முன்னைய காலத்தில் இருந்து சமீப காலம்வரை, பள்ளிவாசல்களின் எண்ணிக்கையும், அவற்றின் விஸ்தீரணமும் இந்நாட்டு முஸ்லிம்களின் இயல்பான குடிசனப் பெருக்கத்திற்கு அமைவாக இருந்து வந்திருக்கின்றன.

4. எனினும், கடந்த சுமார் பதினைந்து ஆண்டு காலப்பகுதியில், மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளும், தனிநபர்களும் நிதி உதவி செய்வதன் காரணமாக, இங்கு பள்ளிவாசல்கள் புதிதாக அமைக்கப்படுவதும், விஸ்தரிக்கப்படுவதும், நவீனப்படுத்தப்படுவதும் அதிகளவில் இடம்பெற்று வந்திருக்கின்றன. அத்துடன் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் வெவ்வேறு கொள்கைகளுக்கு ஏற்ப, பல இஸ்லாமிய இயக்கங்கள் உருவாகத் தொடங்கியதாலும் பள்ளிவாசல்களின் எண்ணிக்கை அதிகரித்தது. எனவே இவற்றை கண்காணிப்பதற்கும், முறைப்படுத்துவதற்கும் ஏற்ற பொருத்தமான கட்டமைப்புகளையும் பொறிமுறைகளையும் இந்நாட்டு முஸ்லிம் மதத்தலைமைகள் உருவாக்குவது அவசியமாகிறது.

5. இந்நாட்டை ஒரு இஸ்லாமிய நாடாக வெளிக்காட்ட வேண்டும் என்ற நோக்கத்தில், இங்கு பள்ளிவாசல்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. இங்குள்ள பாரம்பரிய மதத்தலைவர்களுக்கோ, அல்லது நிதி உதவி செய்கின்ற வெளிநாட்டு பிரிவினர்களுக்கோ அவ்வாறான எண்ணம் அறவே இருக்கவில்லை.

6. பள்ளிவாசல்களில் தொழுகைக்காக அழைக்கின்ற பாங்கோசையும் தொழுகை நிகழ்வுகள் ஒலிபரப்பப்படுவதும் பிற சமூகங்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன. உயர் திறன் கொண்ட ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுவதானது, பிற சமூகங்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம்களுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது. எனவே இவற்றை முறைப்படுத்துவது அவசியமாகும்.

7. குர்ஆனையும், இஸ்லாம் தொடர்பான மத விடயங்களையும் போதிக்கின்ற 'மத்ரசாக்கள்' என அழைக்கப்படுகின்ற கல்விக் கூடங்களும் பிற அமைப்புகளும், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தீவிரவாத எண்ணங்களையோ அல்லது அத்தகைய கருத்துக்களையோ பரப்புவதில்லை. பதிலாக, இவை குர்ஆனை முறையாக ஓதுவதற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை மனனம் செய்வதற்கும் வழிகாட்டுவதோடு, எளிமையான இஸ்லாமிய வாழ்க்கையை மேற்கொள்வதற்கு இளம் பராயத்தினரை பயிற்றுவிப்பதாகவும் செயற்படுகின்றன. இத்தகைய அமைப்புகளில் முறையாகக் கற்காதவர்கள், அல்லது இத்தகைய அமைப்புகளில் இருந்து முரண்பட்டு வெளியேறுபவர்கள் மத்தியில்தான் தீவிரவாதக் கருத்துக்கள் பரப்பப்படுவதற்கான சாத்தியங்கள் இருந்து வந்திருக்கின்றன.

8. இலங்கையின் சிறப்பம்சங்களில் ஒன்றாக அதன் பல்லின தன்மை விளங்குகிறது. பெரும்பாலான நகரங்களிலும், கிராமங்களிலும் அருகருகே அமைந்திருக்கின்ற வெவ்வேறு மதத்தலங்கள், இந்நாட்டின் பன்முகத்தன்மையையும், மத சகிப்புத்தன்மையையும் வெளிப்படுத்தி நிற்கின்ற குறிகாட்டிகளாக விளங்கி வந்திருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு அம்சங்கள்

**ப**ண்பாடு என்பது விரிந்தகன்ற பரப்பைக் கொண்டது. பண்பாடு என்ற வரையறைக்குள் ஒரு சமூகத்தின் மொழி, கலைகள், இலக்கியம், உணவு முறை, உடை, குடியிருப்பு முறை, நடத்தைப் பாங்குகள், தொடர்பாடல் முறை, வாழ்க்கை முறை, உளவியல் வெளிப்பாடுகள், வழிபாட்டு முறைகள் போன்ற பல அம்சங்கள் அடங்குகின்றன. துல்லியமாகக் கருதுகையில், பண்பாடு என்பது ஒரு சமூகத்தை பிற சமூகங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற அம்சங்களைக் கொண்ட மானிட வெளிப்பாடுகளின் அல்லது நடத்தைக் கோலங்களின் தொகுப்பு எனக் கொள்ள முடியும்.

***சமூகத்திற்கு சமூகம் வேறுபட்டிருப்பதுதான், பண்பாட்டின் சிறப்பான தன்மையாக இருக்கிறது.*** ஆயிரக்கணக்கான மொழிகள், வேறுபட்டொலிக்கும் இசை மரபுகள், ஒரே வகையான உடல் அமைப்பில் இருந்து வெளிப்படுகின்ற நூற்றுக்கணக்கான நடன அசைவுகள் என பண்பாட்டு அம்சங்கள் பன்முகங் கொண்டு இயங்குகின்றன. இவ்வாறு வேறுபட்டிருக்கின்ற பண்பாட்டு அம்சங்கள் ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்துவமானவை. அவை அந்த சமூகத்தின் பன்னூற்றாண்டு கால வாழ்க்கை அனுபவத்தின் திரட்சியாக அமைந்தவை. தாம் வாழ்ந்து வந்திருக்கின்ற நிலத்தில் தம்மை நிலைப்படுத்துவதற்காக ஒரு சமூகத்தின் அங்கத்தினர்களினால் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்ற வாழ்க்கை முறைமையின் வெளிப்பாடுகளாகவும் சாரமாகவும் அந்த சமூகத்தின் பண்பாட்டு அம்சங்கள் விளங்குகின்றன. ***மனித சமூகங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு சமத்துவமானவையோ அதேபோன்று ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களும் சமத்துவமானவை.*** பண்பாட்டு அம்சங்களில் எதுவும் மற்றொன்றை விட உயர்ந்ததோ, சிறந்ததோ அல்ல. உதாரணமாக ஒரு சமூகத்தின் மொழி, பிற சமூகங்களின் மொழிகளை விட உயர்ந்தது என்றோ, அல்லது ஒரு சமூகத்தின் இசை, பிறிதொரு சமூகத்தின் இசையை விட சிறந்தது என்றோ கருதுவதும் வாதிடுவதும் சமத்துவத்தை மறுப்பதாகவும் ஆதிக்கத் தன்மை கொண்டதாகவும் மாறிவிடக் கூடியது.

இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சங்கள் குறிப்பான தன்மைகளைக் கொண்டனவாக இருக்கின்றன. இவை இங்குள்ள பிற சமூகங்களின் பண்பாட்டு அம்சங்களில் இருந்து வேறுபடுவதோடு, பிற நாடுகளில் வாழ்கின்ற முஸ்லிம் சமூகங்கள், பண்பாடு தொடர்பாக கொண்டிருக்கின்ற கண்ணோட்டங்களில் இருந்தும் வேறுபடுகின்றன. பிற சமூகங்கள் அனைத்துமே தமது பண்பாட்டு அம்சங்களை வளர்ப்பதிலும், அவை குறித்து பெருமைப்படுவதிலும் உணர்வுபூர்வமாக இருந்து வருகின்ற நிலையில், ***இலங்கை முஸ்லிம்கள் தமது பண்பாட்டு அம்சங்களை படிப்படியாகக் கைவிட்டு வருபவர்களாகவும், அவை பற்றிய பிரக்ஞை அற்றவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.*** பெரும்பாலான பண்பாட்டு அம்சங்கள் இஸ்லாத்திற்கு முரணானவை என வாதிடப்பட்டு, அவற்றை; தமது வாழ்வில் இருந்து தவிர்த்து விடும்படி இலங்கை முஸ்லிம்களிடம் கூறப்பட்டு வந்திருக்கிறது. சுருக்கமாகக் கூறினால், **மதத்திற்கு வெளியே பண்பாட்டு அம்சங்கள் எதுவும் இல்லை** என்ற கண்ணோட்டத்தால் வழிகாட்டப்படுபவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். உலகிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்கள் அனைத்திலும், இலங்கை முஸ்லிம்கள் மட்டுமே இத்தகைய கண்ணோட்டத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் எனக் கொள்ள முடியும். பண்பாடு என்பது மதம் சார்ந்த அம்சங்களோடு, மதம் சாராத அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது என்ற உண்மையை, முஸ்லிம் வெகுஜனங்கள் மட்டுமன்றி, மிகப் பெரும்பாலான இலங்கை முஸ்லிம் மத அறிஞர்களும் புத்திஜீவிகளும் கூட புரிந்து கொள்ள முடியாதவர்களாகவும் ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

உலக சமூகங்களின் (பண்டைய மற்றும் நவீன சமூகங்களின்) வரலாற்றில், பண்பாடு தொடர்பாக இலங்கை முஸ்லிம்கள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மிகவும் தனிக் குறிப்பானவை. மத வரையறைக்குள் உட்படாதவற்றை தமது பண்பாட்டு அம்சங்களாகக் கொள்கின்ற உணர்வுநிலை அவர்களிடம் காணப்படுவதில்லை. உதாரணமாக இஸ்லாத்தில் இசை தவிர்க்கப்பட்டுள்ளது என்ற கருத்து இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றப்பட்டிருக்கிறது. இதனால் தமக்கென ஒரு இசை மரபு இருந்திருக்கின்றதா என்பதை ஒரு வினாவாகக் கூட எழுப்பி, ஆய்வுக்குட்படுத்துகின்ற முனைப்பற்றவர்களாக இவர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு மாறாக, உலகெங்குமுள்ள முஸ்லிம்கள் தமக்கென தனித்துவமான இசைவடிவங்களைக் கொண்டிருந்து, அவற்றை இன்றுவரை பேணி, வளர்த்து வருகிறார்கள்.

பண்பாட்டில் உள்ளடங்குகின்ற ஏனைய அம்சங்களான உடல்மொழி சார்ந்த நடிப்பு, நாடகம், நடனம் மற்றும் இவற்றின் நீட்சியான சினிமா; இசை, ஓவியம், மொழி, கவிதை... என எந்த அம்சங்கள் பற்றியும் வெகுஜன அக்கறையுடன் கூடிய கலந்துரையாடல்களோ, கண்ணோட்டங்களோ, முன்னெடுப்புகளோ இலங்கை முஸ்லிம்களிடம் இருந்து வெளிப்படுவதில்லை. ஒரு அக்கறைக்குரிய அவதானமாக, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவர்கள் அதிகளவில் உள்ளெடுக்கப்படுகிறார்கள், அது முஸ்லிம் நிர்வாகத்தைக் கொண்டு இயங்கி வருகிறது. எனினும் அங்கு இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சங்களைக் கற்பிக்கவும் ஆய்வு செய்யவும் என ஒரு தனியான பீடம் இதுவரை அமைக்கப்படவில்லை. இது இலங்கை முஸ்லிம்களின் பண்பாடு தொடர்பாக அறிவியல் தளத்திலும் நிலவுகின்ற அக்கறையின்மையை குறிப்புணர்த்துவதாக விளங்குகின்றது. அங்கு கற்கின்ற மாணவர்கள் தமது பட்டங்களுக்காக முன்வைக்கின்ற ஆய்வு முயற்சிகளில்கூட இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சங்களை ஆய்வுப் பொருள்களாகக் கொள்வது குறைவாகவே இடம்பெறுகிறது. பதிலாக பிற சமூகங்களின் எழுத்துகளையும் பண்பாட்டு அம்சங்களையுமே இவர்கள் பெருமளவில் ஆய்வுக்குட்படுத்துபவர்களாக இருக்கிறார்கள். இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களில், மாணவர்கள் மட்டுமன்றி, புலமைத்துவப் பிரிவினர்களும்கூட தமது பண்பாட்டு அம்சங்களை வளர்ப்பதற்காக அறிவியல் தளத்திலும் வெகுஜனத் தளத்திலும் செயல்பூர்வமாகவும் உயிரோட்டமான முறையிலும் இயங்கி வருகிறார்கள். இத்தகைய சூழலில், இலங்கை முஸ்லிம்களின் அறிவியல் மட்டத்தில் நிலவுகின்ற செயல்முனைப்பற்ற போக்கு, பண்பாட்டு அம்சங்கள் தொடர்பாக அவர்கள் எவ்வளவு தூரம் இருண்ட சூழலில் வாழ்கிறார்கள் என்பதைக் குறிப்பதாக அமைந்திருக்கிறது.

ஒரு நடைமுறை சார்ந்த உதாரணமாக, கவிதை என்ற ஒரு பண்பாட்டு அம்சத்தை இங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசீலிக்க முடியும்: பொதுவாக கவிதையானது ஒரு சமூகத்தின் வாழ்வியல் அம்சங்களையும் வாழ்வதற்காக ஒரு சமூகம் எதிர்கொள்கின்ற சவால்களையும் அடைகின்ற மகிழ்ச்சியையும் பெறுகின்ற துயரங்களையும் வெவ்வேறு உணர்வெழுச்சிகளையும் வெளிப்படுத்துகின்ற திறன்மிக்க ஒரு இலக்கிய வடிவமாக அமைந்திருக்கிறது. உலகிலுள்ள அனேகமாக அனைத்து சமூகங்களும் தமக்கான கவிதை மரபை கொண்டவைகளாக இருந்து வந்திருக்கின்றன. எழுத்து வடிவங்களைக் கொண்டிராத சமூகங்கள் கூட தமக்கான வாய்மொழிக் கவிதை மரபைக் கொண்டவைகளாக இருந்து வந்திருக்கின்றன.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் இத்தகைய கவிதை மரபு நிலவி வந்திருக்கிறது 'நாட்டார் பாடல்கள்' என அடையாளப்படுத்தப்பட்டுள்ள, வாய்மொழியாகப் பாடப்பட்ட கவிதை மரபு இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் நிலவி வந்திருக்கிறது. ஆயினும் இன்று இந்த 'நாட்டார் பாடல்கள்' என்ற கவிதை மரபு, கிட்டத்தட்ட இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இருந்து மறைந்து விட்டது. பாடநூல்களிலும் சிலரது ஆய்வுகளிலும் கையாளப்படுகின்ற ஒரு கவிதை வடிவமாக மட்டுமே இது இப்போது சுருக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே ஒரு சிலர் நாட்டார் பாடல்களின் வடிவில் சில கவிதைகளை எழுதுகின்றபோதிலும், மிகப் பெரும்பாலான முஸ்லிம்கள் மத்தியில், தமக்கென ஒரு கவிதை மரபு இருந்தது என்றோ, அது தொடர்ந்தும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணமோ நிலவவில்லை.

இவ்வாறு கூறுவதானது, இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் கவிதை எழுதுபவர்கள் இல்லை என்றோ அல்லது அவர்கள் கவிதைகள் எழுதுவதில்லை என்றோ அர்த்தப்படுத்துவதாக அமையாது. இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இருந்து சிறந்த கவிஞர்களும், சிறந்த கவிதைகளும் உருவாகியிருக்கின்றன. மிக அடிக்கடியும் அதிக எண்ணிக்கையிலும் கவிதை நூல்கள் வெளியிடப்பட்டும் வருகின்றன. ஆனால் இவற்றில் எதுவும் 'நாட்டார் பாடல்கள்' என்ற கவிதை மரபின் தொடர்ச்சியாகவோ, அதன் நவீன வடிவமாகவோ பரிணமிக்கவில்லை; அல்லது அவர்கள் தமக்கென தனித்துவமான கவிதை மரபை உருவாக்கவுமில்லை. இவற்றில் ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர, மிகப் பெரும்பாலானவை பிற சமூகங்களினால் முன்னெடுக்கப்படுகின்ற கவிதை மரபின் நகல்களாக அமைந்திருக்கின்றன. தமக்கான ஒரு கவிதை மரபை உருவாக்க வேண்டும் என்ற உணர்வும், புரிதலும், முனைப்பும் அற்றவர்களாக இலங்கை முஸ்லிம் கவிஞர்கள் இருந்து வருகிறார்கள்.

## (அ) இலங்கை முஸ்லிம்களின் உணவுமுறை – 'ஹலால்' உணவு

இலங்கை முஸ்லிம்களின் உணவுமுறை தொடர்பாக சமீப காலங்களில் பெரும் சர்ச்சைகள் உருவாகியிருந்தன. இந்த சர்ச்சையானது உணவுமுறை என்ற அம்சத்தையும் கடந்து, அரசியல் சர்ச்சையாக மாற்றமடையும் வகையில் தீவிரமடைந்தது. இதன் தாக்கங்கள் இன்றுவரை தொடர்கின்றன.

உலகிலுள்ள முஸ்லிம்கள் அனைவருக்கும் சில உணவுகள் தடைசெய்யப்பட்டவையாக ('ஹராம்') இருக்கின்றன. குறிப்பாக, பன்றியிலிருந்து தயாரிக்கப்படுகின்ற உணவுகளும் பிற பொருட்களும், இஸ்லாமிய முறைப்படி அறுக்கப்படாத மாமிச உணவுகள், வேறு சில விலங்குகளின் மாமிசம், குருதி போன்றவை தடுக்கப்பட்ட உணவுகளில் முக்கியமானவை. இத்தகைய உணவுகளை நேரடியாக உண்பதையும், அல்லது இவற்றை ஒரு கூறாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகளை உண்பதையும் முஸ்லிம்கள் முற்றாகத் தவிர்த்து வந்திருக்கிறார்கள். இவை அல்லாத ஏனைய, பெரும்பாலான உணவுகள் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட ('ஹலால்') உணவுகளாக இருக்கின்றன.

'ஹலால்' என்ற அரபுப் பதத்திற்கு, 'அனுமதிக்கப்பட்டது' என்பது அர்த்தமாகும். உண்மையில் முஸ்லிம்களின் உணவு விடயத்தில் மட்டுமன்றி, அவர்களின் வாழ்வின் சகல அம்சங்களிலும் 'ஹலால்' என்ற அம்சம் - அதாவது 'அனுமதிக்கப்பட்டது' - என்ற விடயம் கவனத்தில் கொள்ளப்படுவது அவசியம். எனினும் பெரும்பாலான இலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும், பிற சமூகங்கள் மத்தியிலும் 'ஹலால்' என்ற பதம் உணவு சார்ந்த விடயங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்கள் முன்னைய காலங்களில், தமது பிரதேசங்களில் பெறப்பட்ட உணவுகளையே பெருமளவில் பயன்படுத்தினார்கள். தாவர உணவுகள் மட்டுமன்றி, விலங்குகளில் இருந்து பெறப்பட்ட உணவுகளும் உள்ளூர் உற்பத்திகளாகவே இருந்தன. ஆனால் பின்னர் படிப்படியே, பிற இடங்களில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட உணவு வகைகள் அதிகளவில் பயன்பாட்டிற்கு வந்தன. இவற்றில் தடுக்கப்பட்ட விலங்குகளில் இருந்து பெறப்பட்ட உணவுக் கூறுகள் கலக்கப்பட்டிருக்கின்ற நிலை காணப்பட்டதால், முஸ்லிம்கள் தமக்கு அனுமதிக்கப்பட்ட உணவு வகைகளை அடையாளம் கண்டு, உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் உருவானது. எனவே உலகம் முழுவதும் வாழ்கின்ற முஸ்லிம்கள், தாம் பயன்படுத்துகின்ற உணவும் ஏனைய பொருட்களும் தமக்கு அனுமதிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக, அப்பொருட்களுக்கு 'அனுமதிக்கப்பட்டது' என்பதன் அரபுப் பதமான 'ஹலால்' என்ற பதம் குறிப்பிடப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். பொருட்களின் அனுமதிக்கப்பட்ட தன்மையை ('ஹலால்' தன்மையை) உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறைகளையும் அவர்கள் பின்பற்றினார்கள். இதற்கமைய சர்வதேச அளவில், முஸ்லிம்களுக்குத் தடைசெய்யப்பட்ட பொருட்கள் கலக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக அப்பொருட்களின் மீது 'ஹலால்' என்ற பதம் பொறிக்கப்பட்டது.

இத்தகைய நடைமுறை அண்மைக்காலம் வரை இலங்கையில் பின்பற்றப்படவில்லை. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் நீண்டகாலமாக இந்நாட்டில் பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றபோதிலும், இலங்கை முஸ்லிம்கள், அப்பொருட்களின் 'அனுமதிக்கப்பட்ட தன்மை' ('ஹலால்' தன்மை) குறித்து அக்கறை கொண்டிருக்கவில்லை. ஆனால் இப்பொருட்கள் சிலவற்றில் உடல்நலத்திற்கு ஒவ்வாத பொருட்களும், பன்றியில் இருந்து பெறப்பட்ட கூறுகளும் கலக்கப்பட்டிருக்கின்றன என்ற விடயம் இந்நாட்டில் உரையாடலுக்கு உட்படத் தொடங்கியபோதுதான், இலங்கை முஸ்லிம்களும் தாம் பாவிக்கின்ற பொருட்களின் அனுமதிக்கப்பட்ட தன்மை ('ஹலால்' தன்மை) குறித்து அக்கறை கொள்ள ஆரம்பித்தார்கள். இதன் பின்னர்தான், இந்நாட்டில் விற்கப்படுகின்ற பொருட்களின் 'அனுமதிக்கப்பட்ட தன்மை' பரிசீலிக்கப்பட்டு, அவற்றிற்கு 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற முறைமை நடைமுறைக்கு வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் 'ஹலால்' சான்றிதழ்: ஒரு பரிசீலனை

இலங்கையில், பொருட்களுக்கு 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற நடைமுறை பின்பற்றப்பட்டபோது, அது இந்நாட்டில் பெரும் விவாதங்களையும், சர்ச்சைகளையும் ஏற்படுத்தியது. இந்த நடைமுறைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விளைவாக, பல நிறுவனங்கள் 'ஹலால்' சான்றிதழ் பெறுவதில் இருந்து விலகிக் கொள்கின்ற நிலை உருவானது. இது துரதிஷ்டவசமானது. இத்தகைய நிலைமை உருவானதில், இந்நடைமுறைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் ஒரு காரணமாக அமைந்திருந்தது உண்மையே. ஆனால் இந்நிலைமைக்கு, 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாட்டை முன்னெடுத்த முஸ்லிம் தரப்பினரின் செயற்பாடுகள் எவ்வகையில் காரணமாக அமைந்திருந்தன என்பது பற்றிய பரிசீலனை அவசியமாகிறது.

1. 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு **முன்னர்** சகல சமூகங்களும் புரிந்து கொள்ளும் வகையில், அது பற்றிய ஒரு முறையான விளக்கம் முன்வைக்கப்படவில்லை. பதிலாக, இது தொடர்பாக பிரச்சினைகள் உருவாகி, அவை தீவிரமடைந்த **பின்னர்தான்** இது குறித்து விளக்கமளிக்கின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

2. 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாட்டின் ஆரம்ப நிலையில், 'தமது பொருட்களுக்கு இத்தகைய சான்றிதழைப் பெற்றிராத நிறுவனங்கள் நாளாந்தம் பல லட்சக்கணக்கில் விற்பனையை இழக்க நேரிடும்' என்ற வகையில், எச்சரிக்கை விடுக்கும் தொனியிலான கருத்துக்கள் இந்த முஸ்லிம் தரப்பினரால் முன்வைக்கப்பட்டன. இந்தக் கருத்துக்கள், ஏற்கனவே இத்தகைய நடைமுறையை தமது நாடுகளில் பின்பற்றி வருகின்ற வெளிநாட்டு நிறுவனங்களை பாதிக்காத போதிலும், கணிசமான உள்நாட்டு நிறுவனங்கள் மத்தியில் எதிர்நிலை உணர்வுகளை தோற்றுவித்தன. இதனால் பிற சமூகங்களினால் நடத்தப்படுகின்ற கணிசமான உள்நாட்டு நிறுவனங்கள் தமது பொருட்களை 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாட்டிற்கு உட்படுத்த முன்வரவில்லை.

3. 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாட்டை முன்னெடுத்த முஸ்லிம் தரப்பினர், இந்த விடயத்தில் தமக்கு அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த ஆதரவில் அதீத நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இத்தகைய ஆதரவின் மூலமாக தமது செயற்பாடுகளுக்கு எதிரான முன்னெடுப்புகளை சமாளிக்க முடியும் என்று இவர்கள் நம்பியிருந்தார்கள். ஆனால் வெகுஜன அளவில் ஏற்படக் கூடிய எதிர்ப்பின் தீவிரம் குறித்து இவர்கள் அதிகம் புரிந்து கொண்டிருக்கவில்லை.

4. 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாடானது, பொருட்களை உற்பத்தி செய்பவர்களின் விற்பனையின் மீது பெரும் தாக்கங்களை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. பெரும் நிறுவனங்களை மட்டுமன்றி, உள்ள+ரில் சிறிய அளவில் உற்பத்தி செய்பவர்களையும் இது பாதிப்பதாக அமைந்தது. கடுமையான போட்டிகளுக்கு மத்தியில் தமது பொருட்களை சந்தைப்படுத்துவதிலும், விற்பதிலும் பெரும் சிரமங்களையும், சவால்களையும் முகம் கொடுத்து வருகின்ற இப்பிரிவினர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாட்டினால் மேலும் சிரமங்களை எதிர்கொள்பவர்களாக ஆனார்கள். இந்த செயற்பாட்டிற்கென **மேலதிகமாக கட்டணம் செலுத்த வேண்டியிருந்ததும், தாமதங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்ததும்** இவர்களை பொருளாதார ரீதியாக மட்டுமன்றி, உணர்வுரீதியாகவும் பாதிப்பதாக அமைந்தன. மேலும் உற்பத்திப் பொருட்களில் சேர்க்கப்படுகின்ற மூலப் பொருட்கள், அப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையங்களின் அமைவு என்பவை மட்டுமன்றி, அந்த **உற்பத்திப் பொருட்களுடன் அறவே தொடர்புபட்டிராத உற்பத்தி நிலையங்களைச் சூழவுள்ள இடங்களும்** 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாட்டின்போது கவனத்தில் கொள்ளப்பட்டன. இது உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு கடுமையான நெருக்கடிகளை ஏற்படுத்துவதாக அமைந்தது. இவர்களில் பெரும்பாலானவர்கள் **முஸ்லிம் சமூகத்தைச் சேராதவர்கள்** என்பதைக் கவனத்தில் கொள்ளும்போது, இந்த நடைமுறைக்கு எதிராக திரண்ட பிரிவினர்கள், இவர்களின் எதிர்ப்புக்கு ஆதரவளித்தவர்கள் ஆகியோரின் பன்முகத் தன்மைகளையும் தீவிரத் தன்மையையும் புரிந்து கொள்ள முடியும்.

5. ***'ஹலால்' என்பது முஸ்லிம்களுக்கு மட்டும் எல்லைப்பட்டது;*** அது அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டவற்றையே குறிக்கின்றது என்று முறையாக விளக்கமளிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, அது முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் நன்மை விளைவிக்கக் கூடியது என்றும் ஒருவகையில் அது 'தூய்மையானவற்றையும்' குறிக்கிறது என்றும் முஸ்லிம் தரப்பினரால் விளக்கமளிக்கப்பட்டபோது, அவ்விளக்கம் பிற சமூகங்கள் மத்தியில் தவறான அர்த்தப்படுத்தலுக்குக் காரணமாகியது. தமது நலன்கள் குறித்து முஸ்லிம்கள் அக்கறைப்பட வேண்டிய அவசியம் கிடையாது என்றும், தாங்கள் உண்ணுகின்ற உணவுகள் தூய்மையற்றவை என முஸ்லிம்கள் கருதுகிறார்களா என்றும் எதிர்க் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தமது செயற்பாடுகள் குறித்து பிற சமூகங்கள் மத்தியில் கண்டனங்களும், எதிர்ப்புகளும் வெளிப்பட்டபோதே, அவற்றை முறையாகப் பரிசீலித்து, கவனமான சொல்லாடல்களுக்கு ஊடாக விளக்கமளித்திருப்பதுதான் முஸ்லிம் தரப்பினர் செய்திருக்க வேண்டிய பொருத்தமான முறையாக அமைந்திருக்கும். எனினும் இத்தகைய முறையான விளக்கங்கள் இந்த முஸ்லிம் தரப்பினரால் முன்வைக்கப்படவில்லை.

6. 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாட்டிற்கு கட்டணம் அறவிடப்பட்டதானது மேலும் சிக்கலை ஏற்படுத்துவதாக அமைந்தது. பல நூற்றுக்கணக்கான பொருட்கள் சந்தையில் விற்பனைக்கென இருக்கின்ற நிலையில், அறவிடப்படுகின்ற மொத்த கட்டணம், குறிப்பிடத்தக்க அளவு அதிகமானதாகவே இருந்தது. இவ்வாறு கட்டணம் அறவிடுதல் தொடர்பாக மட்டுமன்றி, ***அறவிடப்படுகின்ற பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது*** என்பது குறித்தும் வினாக்கள் எழுப்பப்பட்டன. இந்த வினாக்கள் 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற முஸ்லிம் தரப்பினரின் நேர்மைத்தன்மையுடன் தொடர்புபட்டதாக அமைந்திருந்தன. நேரடியாக பகிரங்க உரையாடலுக்கு வந்து தமக்கு விளக்கமளிக்கும்படி கோரிக்கைகளும், சவால்களும் விடுக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஒரு அமைப்பானது, தனது செயற்பாடுகள் பற்றி அமைப்பு சாராத நபர்களினால் முன்வைக்கப்படுகின்ற அனைத்து வினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டும் என்ற அவசியத்தைக் கொண்டிருப்பதில்லை. ஆனால், தேசிய அளவில் கடும் சர்ச்சைக்குள்ளாகியிருந்த விடயம் தொடர்பாக வினாக்களும் சந்தேகங்களும் எழுப்பப்படுகின்றபோது, அதில் சம்மந்தப்பட்டவர்கள் முறையான பதில்களை, தகுந்த ஆதாரங்களுடன் முன்வைக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் இந்த விடயத்தில் 'ஹலால்' சான்றிதழ் வழங்குகின்ற செயற்பாட்டுடன் சம்மந்தப்பட்ட பிரிவினர்கள் தமது பொறுப்பை முறையாக நிறைவேற்றவில்லை. இது சில தனிநபர்களுடனோ அல்லது சில அமைப்புகளுடனோ மட்டும் சம்மந்தப்பட்ட விடயமல்ல. மாறாக இது இந்நாட்டிலுள்ள சகல முஸ்லிம்களையும் பாதிக்கக் கூடிய உணர்ச்சிமிக்க விவகாரமாக அமைந்திருந்தது. எனவே ஒரு முழுமையான சமூகப் பொறுப்பு இங்கு அவசியமாக இருந்தது.

7. 'ஹலால்' சான்றிதழ் வழங்குவதுடன் தொடர்புபட்ட அமைப்பு, அரசாங்கத்தின் ஒரு கூறாக, (அதாவது, தரநிர்ணய சபையின் கீழ் இயங்குகின்ற ஒரு அமைப்பாக) இருப்பது அவசியம். அவ்வாறு இருக்கும்போது, அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் செயற்பாடு என்ற அர்த்தப்படுத்தலுக்கு உள்ளாகின்ற நிலையை தவிர்க்க முடியும். மேலும் பெறப்படுகின்ற கட்டணங்கள், செலவீனங்கள்... போன்ற நிதி தொடர்பான சகல செயற்பாடுகளும் முறையான பதிவுகளுக்கும், பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட வேண்டும். இதன் மூலமாக நிதியைப் பயன்படுத்தல் தொடர்பாக எழக் கூடிய சந்தேகங்களைப் போக்குவது சாத்தியமாகும்.

'ஹலால்' பொருட்கள் தொடர்பான விவகாரம் என்பது முற்றிலும் முஸ்லிம்கள் சார்ந்தது. எனவே ஒரு பல்லினச் சூழலில், பிற சமூகங்களுக்குப் பாதிப்புகள் ஏற்படாதவண்ணமும் அவர்களின் உணர்வுகளைத் தூண்டாத விதத்திலும் செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகிறது. உண்மையில், கட்டணம் வசூலித்து, பொருட்களுக்கு 'ஹலால்' சான்றிதழ் வழங்குவதற்கு பதிலாக, சந்தையில் விற்பனைக்கு விடப்படுகின்ற பொருட்களில் உள்ளடங்கியுள்ள கூறுகளைப் பரிசோதித்து, அவற்றின் 'ஹலால்' தன்மையை முஸ்லிம்களுக்கு மட்டும் அறிவிக்கின்ற முறைமையை பின்பற்றும்போது (இப்போது நடைமுறையிலுள்ளது போன்று) உற்பத்தியாளர்களுக்கும் பிற சமூகங்களுக்கும் ஏற்படக் கூடிய பொருளாதார ரீதியானதும் உணர்வு ரீதியான பாதிப்புகளைத் தவிர்க்க முடியும். அத்துடன் தமது உற்பத்திப் பொருட்களில், முஸ்லிம்களுக்கு பொருத்தமில்லாத கூறுகள் அடங்கியிருக்குமாயின், அவற்றை மாற்றுவதா இல்லையா என்பதை அந்த உற்பத்தியுடன் சம்மந்தப்பட்டவர்களே முடிவெடுக்கின்ற நிலை உருவாகும். இந்நடைமுறையில், உற்பத்தியாளர்களிடமிருந்தோ, அல்லது சந்தைப்படுத்துபவர்களிடம் இருந்தோ கட்டணங்கள் அறவிட வேண்டிய அவசியம் உருவாகாது. இதற்குத் தேவையான செலவீனங்களை ஈடுசெய்வதற்கு, இலங்கை முஸ்லிம்களிடம் இருந்து நிதி அறவிடுவதற்கான ஒரு முறைமையைப் பின்பற்ற முடியும். தமக்கு அனுமதிக்கப்பட்ட பொருட்களை அடையாளம் கண்டு, வாங்குவதற்காக ஒரு சிறு தொகையை வழங்குவதற்கு அனைத்து முஸ்லிம்களும் தயாராகவே இருக்கிறார்கள். இது ஒரு சிறந்த முன்னுதாரணமாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தவிர, இலங்கை முஸ்லிம்கள் உற்பத்தித் துறையில் கூடுதலாக ஈடுபடக் கூடிய வழிவகைகள் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக உணவுப் பொருட்களின் உற்பத்தியில் அவர்கள் ஈடுபடுவது அவசியமாகும். இந்நாட்டில் சுமார் இருபது லட்சம் முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, பிரதானமாக அவர்களை மையப்படுத்திய ஒரு சந்தையை உருவாக்குவதன் மூலமாக தமது உற்பத்திகளை முறையாக விநியோகிக்கின்ற நிலையை ஏற்படுத்த முடியும். நிச்சயமற்ற சந்தை நிலைமையில், **இருபது லட்சம் மக்களைக் கொண்ட ஒரு நுகர்வாளர் தொகுதியைக் கொண்டிருப்பது,** உற்பத்தியாளர்களுக்கு சாதகமான நிலையை வழங்கக் கூடியது. அத்துடன் பிறநாடுகளில் விற்பனையிலுள்ள 'ஹலால்' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள பொருட்களை இங்கு இறக்குமதி செய்வது தொடர்பாகவும் இவர்கள் அக்கறை கொள்ள முடியும்.

இலங்கை முஸ்லிம்களின் தலைமைகளும், முஸ்லிம் வர்த்தக சமூகத்தினரும் தமது சமூகத்தின் பாதுகாப்பு குறித்தும், பிற சமூகங்களுடன் ஐக்கியமாக வாழ்வது குறித்தும் ஆழமாக சிந்திப்பது அவசியமாகிறது. அரசியல் ரீதியாகவும், மத, பண்பாட்டு ரீதியாகவும், தொழில்துறை மற்றும் வியாபார ரீதியாகவும் முஸ்லிம் தனிநபர்களினால் அல்லது முஸ்லிம் அமைப்புகளினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் முழு இலங்கை முஸ்லிம்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன. இந்நிலையில், இந்த முஸ்லிம் தனிநபர்களும் அமைப்புகளும் முழு இலங்கை முஸ்லிம்களின் நலன்களுக்காகவும் சிந்தித்து செயற்பட வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். தமக்கு வருமான ரீதியாகவோ அல்லது அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகவோ ஏற்படக் கூடிய சில இழப்புகளை கவனத்தில் கொள்ளாமல், இவர்கள் சமூக அக்கறையுடன் செயற்படுவது அவசியமானதாக இருக்கின்றது.

## (ஆ) முஸ்லிம் பெண்களின் ஆடைகள்

இலங்கை முஸ்லிம் பெண்கள் அணிகின்ற ஆடைகள், இந்நாட்டில் பெரும் சர்ச்சைகளை உருவாக்கியிருக்கின்ற இன்னுமொரு விடயமாக அமைந்திருக்கிறது. பிற சமூகங்களைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் மட்டுமன்றி, இலங்கை முஸ்லிம்களிலுள்ள கணிசமான பிரிவினர்களும் இந்த ஆடைகள் குறித்து வெவ்வேறு விமர்சனங்களை முன்வைத்து வந்திருக்கின்றார்கள். 'உயிர்த்த ஞாயிறு' தாக்குதலின் பின்னர் அமுல்படுத்தப்பட்ட அவசரகால நிலைமையின் கீழ், முஸ்லிம் பெண்கள் சிலவகையான ஆடைகளை பொது இடங்களில் அணிவது தடை செய்யப்பட்டது. அந்தளவுக்கு இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரம் கொதிநிலை கொண்டதாக மாறியிருந்தது, மாறக் கூடியதாகவும் இருக்கிறது.

பொதுவாக முஸ்லிம்களுக்கு உணவு முறையைப் போன்று, ஆடை அணிதலும் மதரீதியான வழிகாட்டலைக் கொண்டதாக இருக்கின்றது. ஆண்கள் தமது தொப்புளிலிருந்து முழங்கால்வரையிலான பகுதிகள் அவசியம் மறையக் கூடிய விதத்திலும், பெண்கள் 'சாதாரணமாக' வெளிப்படக் கூடிய பகுதிகளைத் தவிர்த்து, உடலின் ஏனைய பாகங்கள் மறையக் கூடிய விதத்திலும் ஆடைகள் அணிய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஆடை தொடர்பான வரையறைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்ற போதிலும், ***குறிப்பிட்ட வகையான ஆடையை அல்லது ஆடைகளையே அணிய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படவில்லை.*** எனினும் பெண்களின் ஆடை விடயத்தில் 'மறைத்தல்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் 'வெளிப்படுதல்' தொடர்பான அர்த்தப்படுத்தல்கள் வேறுபட்டவைகளாக இருந்து வந்திருக்கின்றன.

இலங்கை முஸ்லிம் பெண்களைப் பொறுத்தவரையில், வெவ்வேறு வகையான ஆடைகளை அவர்கள் அணிந்து வந்திருக்கிறார்கள். பண்டைய கால விவரிப்புகளில் இருந்தும், சில ஓவியங்களில் இருந்தும், அவர்கள் சேலை அணிந்திருந்தமை புலப்படுகின்றது. சேலை என்பது இலங்கை முஸ்லிம் பெண்கள் மத்தியில் மிக அண்மைக் காலம் வரை பொதுவான ஆடையாக இருந்து வந்திருக்கிறது. அதேபோன்று சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர், முஸ்லிம் கன்னிப் பெண்கள் பாவாடை - தாவணி அணிந்திருந்தார்கள். இப்போது சேலை அணிதல் என்பது குறிப்பிட்ட பிரதேசங்களுக்குள், குறிப்பிட்ட வயதைக் கடந்தவர்கள் அணிகின்ற ஆடையாக மாறியிருக்கிறது. பாவாடை – தாவணி என்பது அனேகமாக முஸ்லிம் பெண்களிடம் இருந்து இன்று முற்றாக அகன்று விட்டது. இப்போது பெரும்பாலான இலங்கை முஸ்லிம் பெண்கள் 'அபாயா', 'ஹிஜாப்', 'நிகாப்', 'சல்வார் – கமீஸ்' என வெவ்வேறு வகையான ஆடைகளை அணிபவர்களாக இருக்கிறார்கள்.

இவ்வாறு இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றபோதிலும், சகல ஆடைகளும் **'உடலை மறைத்தல்'** என்பதை பொதுவான இலக்காகக் கொண்டிருப்பதை அறிய முடியும். உலகெங்கும் உள்ள சமூகங்கள் அனைத்தும் உடலை மறைப்பதற்காகவே ஆடைகளை அணிகின்றன. எனினும் 'உடலை மறைத்தல்' என்பதில் வேறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. சமூகங்களின் வாழ்விடங்கள், அவற்றின் தட்ப, வெப்ப நிலைகள், பாரம்பரியம், மதம், பண்பாடு, வாழ்க்கைமுறை...போன்ற பல அம்சங்கள் உடல் மறைத்தலை தீர்மானித்து வந்திருக்கின்றன. இதற்கமைவாகவே ஆடைகளும் வடிவமைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்த அம்சங்களோடு, அழகியல் என்ற அம்சமும் ஆடைகளின் வடிவமைப்பில் இணைந்திருக்கிறது.

வரலாற்று ரீதியாகக் கவனிக்கும்போது, முஸ்லிம் சமூகங்களைத் தவிர, பெரும்பாலான பிற சமூகங்களில் - குறிப்பாக பெண்களின் - ஆடைவடிவமைப்பானது அவர்களின் **உடல் அங்கங்களை வெளிப்படுத்துவதையும், புலப்படுத்துவதையும்** நோக்காகக் கொண்டதாக அமைந்து வந்திருப்பதை அறிய முடியும். இன்றைய சூழலில், பெரும்பாலான சமூகங்களின் ஆடை வடிவமைப்பில் மேற்கின் தாக்கங்களை அறிய முடிகிறது. ஆடை அணிதலில் தமது பாரம்பரியத் தன்மைகளை பெரும்பாலும் கைவிட்டு, மேற்கத்தைய ஆடைகளையும் அவற்றின் வடிவமைப்புகளையும் ஏற்றுக் கொள்பவர்களாக கணிசமான பெண்கள் மாறியிருக்கிறார்கள்.

மறுபுறத்தில் உலகெங்கும் உள்ள முஸ்லிம் பெண்களும் தமது பாரம்பரிய ஆடைகளை படிப்படியே கைவிட்டு, சிலவகை ஆடைகளை அணிபவர்களாக மாறி வருகிறார்கள். குறிப்பாக, சேலை, பாவாடை–தாவணி, சல்வார்-கமீஸ் போன்ற ஆடைகளுக்குப் பதிலாக, 'ஹிஜாப்', 'அபாயா', 'நிகாப்'... போன்ற ஆடைகளை அணிபவர்களாக மாறி வருகிறார்கள். முஸ்லிம் பெண்களிடம் வெளிப்பட்டிருக்கின்ற இந்தப் போக்கு, 'அரபியமயமாதல்' என தவறாக அர்த்தப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. தலையில் இருந்து கால்வரையிலான பகுதிகளை மறைக்கும் விதத்தில் அமைந்த ஆடைவகைகள், அரபிய பெண்களினால் மட்டுமன்றி, **கிறிஸ்தவப் பெண்கள், யூதப் பெண்கள், ஈரானியப் பெண்கள்** போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபிகளல்லாத பெண்களாலும் அணியப்பட்டு வந்திருக்கின்றன. இப்போதும்கூட, தமது மதநிகழ்வுகளிலும், பாரம்பரிய நிகழ்வுகளிலும் முஸ்லிம்களல்லாத சமூகங்களைச் சேர்ந்த சில பிரிவினர்கள் இத்தகைய ஆடைகளை அணிபவர்களாக இருக்கிறார்கள்.

உலகம் முழுவதிலும் வாழ்கின்ற முஸ்லிம் பெண்களிடம், 'ஹிஜாப்', 'அபாயா' போன்ற உடைகள் அணிகின்ற போக்கு அதிகரித்திருப்பதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன:

1. முஸ்லிம் பெண்களின் இயங்குநிலையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள்: முன்னைய காலங்களில், முஸ்லிம் பெண்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளும் பொதுவாக இரவு நேரங்களிலுமான நடமாட்டங்களை கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் தமது வாழிடங்களைத் தாண்டி, நேர வேறுபாடின்றி பிற பிரதேசங்களுக்கும், பிறநாடுகளுக்கும் செல்பவர்களாகவும் அங்கு வாழவேண்டியவர்களாகவும் தொழில் புரிபவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்வாறு அவர்களின் இயங்குநிலையிலும் செயற்தளத்திலும் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள், புதிய சூழலையும் புதிய நபர்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையை அவர்களுக்கு உருவாக்கியிருக்கின்றன. அந்நியத்தன்மையையும், பாதுகாப்பற்ற உணர்வையும், அச்சத்தையும் ஏற்படுத்தக் கூடிய இத்தகைய சூழல்களில், அவர்களுக்கு பாதுகாப்பு உணர்வையும், திடநம்பிக்கையும் வழங்குவதாக இந்த புதியவகை ஆடைகள் அமைந்திருக்கின்றன.

2. உலகளாவிய அளவில், கல்வி கற்பதிலும், தொழில் புரிவதிலும் மிக வேகமாக முன்னேறி வருகின்ற பிரிவினர்களாக பெண்கள் இருக்கிறார்கள். இலங்கையிலும் இத்தகைய போக்கு நிகழ்ந்திருக்கிறது. கீழ்வரும் தரவுகள், ஒவ்வொரு பத்தாண்டு காலத்தில் இலங்கையில் பல்கலைக்கழக அனுமதி பெற்று வந்திருக்கின்ற ஆண், பெண் வீதங்களைக் குறிக்கின்றன.

| கல்வி ஆண்டு | 1942/43 | 1952/53 | 1962/63 | 1972/73 | 1982/83 | 1992/93 | 2002/03 |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | 89.9 | 78.5 | 72.4 | 57.3 | 63.2 | 54.7 | 46.9 |
| பெண் | 10.1 | 21.5 | 27.6 | 42.7 | 36.8 | 45.2 | 53.6 |

கடந்த அறுபது வருட காலத்தில், நமது நாட்டில் பெண்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்ற வீதம் படிப்படியே அதிகரித்து வந்துள்ளது. 1942/43 கல்வி ஆண்டில் 10.1 வீதமாக இருந்த பெண்களின் பல்கலைக்கழக அனுமதி 2002/03 கல்வி ஆண்டில் 53.6 வீதமாக அதிகரித்து பின் 2019/20 கல்வி ஆண்டில் 64.1 வீதமாக உயர்ந்துள்ளது. இதற்கேற்ப இலங்கை முஸ்லிம் பெண்கள் மத்தியிலும் இத்தகைய அதிகரித்த போக்கை தெளிவாக அவதானிக்க முடியும். பல்கலைக்கழக அனுமதியிலும், அரச தொழில்களிலும் முஸ்லிம் பெண்கள், முஸ்லிம் ஆண்களை விட அதிக வாய்ப்புகளைப் பெற்று வருகிறார்கள். கல்வி கற்பதற்கும், தொழில் புரிவதற்கும் வெவ்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியவர்களாகவும் தனிமையாக நடமாட வேண்டியவர்களாகவும் இருப்பதால், இந்த ஆடைகள் பெண்களுக்கு சௌகரியமானதாக அமைவதோடு, அவர்களுக்கு பாதுகாப்புணர்வையும் வழங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முஸ்லிம்கள் மத்தியில் மதநம்பிக்கையும், மதத்தின் வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுகின்ற போக்கும் அதிகரித்திருக்கின்றன. இந்தப் போக்கு, முஸ்லிம் பெண்கள் மத்தியிலும் காணப்படுகிறது. தமது உடலை இயன்றளவு முழுமையாக மூடுவது மதம் சார்ந்த கடமை என்ற உணர்வு கணிசமான பெண்களிடம் உருவாகியிருக்கிறது. இவ்வாறு உடலை இயன்றளவு முழுமையாக மூடி உடை அணிவதை ஒரு மதக்கடமையாகக் கருதுகின்ற முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

'உடலை மூடுதல்' என்ற விடயத்தில் முஸ்லிம் பெண்களிடம் வெவ்வேறு வகையான தன்மைகள் காணப்படுகின்றன. குறைந்த வீதத்தினரான முஸ்லிம் பெண்களே தமது கண்களும் அடங்கலாக உடலை முழுமையாக மறைக்கின்றவர்களாக இருக்கிறார்கள். இலங்கையைப் பொறுத்தவரையில், இவ்வாறு தமது உடலை முழுமையாக மறைக்கின்ற பெண்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகவே இருக்கிறது. 'உடலை வெளிப்படுத்துவதில்' எவ்வாறு வேறுபட்ட தன்மைகள் காணப்படுகின்றனவோ அதேபோன்று உடலை மறைப்பதிலும் வேறுபட்ட தன்மைகள் காணப்படுகின்றன. இலங்கை முஸ்லிம் பெண்கள் இப்போது பரவலாக அணிகின்ற 'அபாயா' என்ற உடையில் மட்டும் 18 வடிவங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. எனவே ஆடை விடயத்தை தனி மனித சுதந்திரத்திற்கும், தேர்விற்கும் உரியதாகக் கொள்வதே பொருத்தமான அணுகுமுறையாக இருக்கும். ஆனால் நடைமுறையில், இத்தகைய அணுகுமுறைக்கு மாறாக, 'அபாயா' போன்ற ஆடை அணிவது பகிரங்கமான விமர்சனத்திற்கும், கண்டனத்திற்கும் உரிய விடயமாக மாற்றப்பட்டுள்ளது. இது அடிப்படையில் முஸ்லிம் பெண்களின் சுதந்திரமான தேர்விற்குரிய உரிமையை மறுப்பதாகவே அர்த்தப்படுகிறது.

'அபாயா' போன்ற ஆடைகளை அணிகின்ற இந்நாட்டு முஸ்லிம் பெண்களிடம், இதன் மூலமாக தாம் அரபிய பண்பாட்டை பின்பற்றுகிறோம் என்ற எண்ணம் அறவே காணப்படவில்லை. இத்தகைய உடைகள் மத்தியகால பண்பாட்டுக்குரியவை என்றோ அல்லது மத்தியகால பண்பாட்டின் எச்சம் என்றோ வாதிடுவது முற்றிலும் தவறானது. மனித வாழ்வின் தொடக்க நிலையில் மனிதர்கள் தமது முழு உடலும் திறந்த நிலையில் அல்லது பாலுறுப்புகள் மட்டும் இலை, குலைகளினாலும் விலங்குத் தோல்களினாலும் மறைக்கப்பட்ட நிலையில் வாழ்ந்தார்கள். இதை அடிப்படையாகக் கொண்டு, **உடலை வெளிப்படுத்தும் விதத்தில் இப்போது அணிகின்ற ஆடைகளை காட்டுமிராண்டி நிலைக்குரியது அல்லது அதன் எச்சம்** என்று வாதிடுவது எப்படி தவறானதோ அதேபோன்று முஸ்லிம் பெண்களின் ஆடைகளை மத்தியகாலத்துடன் ஒப்பிடுவதும் தவறானது.

முஸ்லிம் பெண்களைப் போன்று, கணிசமான முஸ்லிம் ஆண்களினது ஆடைகளிலும், தோற்றங்களிலும் தனித்தன்மைகளைக் காண முடியும். தோளில் இருந்து கணுக்கால் வரை நீண்டுள்ள மேலாடையும், தலையில் தொப்பியும், தாடியும் கொண்டவர்களாக இவர்களில் ஒரு பகுதியினர் இருக்கிறார்கள். முஸ்லிம் ஆண்களில் ஒரு சாரார் அணிகின்ற இத்தகைய உடை, அவர்களின் மத ஈடுபாட்டுடன் தொடர்புபட்டதாக இருக்கின்றது. இஸ்லாமிய கல்வி நிறுவனங்களில் (மதரசாக்களில்) கற்று, உலமாக்களாக (மௌலவிகள்) வெளிவருகின்றவர்கள் இத்தகைய உடைகளை அணிகிறார்கள். அத்துடன், சில இஸ்லாமிய இயக்கங்களின் அங்கத்தினர்களாக இருந்து, அந்த இயக்கங்களின் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பிரிவினர்களும் இத்தகைய உடையை அணிகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை விட முஸ்லிம் ஆண்கள் மத்தியில் தாடி வைத்தல் என்பது, மதரீதியாக விரும்பப்படுகின்ற அம்சமாக இருக்கின்றது. இதனால், மதரீதியான செயற்பாடுகளில் ஈடுபடாத முஸ்லிம் ஆண்களில் பலரும் தாடி வைப்பதை ஒரு வழக்கமாகப் பின்பற்றுகிறார்கள். பிற சமூகங்களைச் சேர்ந்த ஆண்கள் மத்தியில், தாடி வளர்த்தல் என்பது, அந்தந்த காலகட்டத்தினால் தீர்மானிக்கப்படுவதாக இருக்கிறது. குறிப்பாக மேற்கத்தைய ஆண்கள் மத்தியில் தாடி தொடர்பாக பின்பற்றப்படுகின்ற முறையை, ஏனைய நாடுகளைச் சேர்ந்த ஆண்களும் பின்பற்றி வருகிறார்கள். புகழ்பெற்ற மேற்கு நாட்டு விளையாட்டு வீரர்கள், பாடகர்கள், நடிகர்கள்.... போன்றோர் வளர்ப்பது போன்று இவர்கள் தாமும் தாடியை வளர்க்கிறார்கள், அல்லது தாடியை வடிவமைக்கிறார்கள்.

இவ்வாறு தாடி விடயத்தில், மேற்கத்தையை முறையைப் பின்பற்றுகின்ற ஆண்கள், முஸ்லிம்கள் மத்தியிலும் கணிசமான அளவில் இருக்கிறார்கள். அதேநேரத்தில் தாடி வளர்க்காத முஸ்லிம் ஆண்களும் கணிசமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இவ்வகையில் முஸ்லிம் ஆண்களைப் பொறுத்தவரையில், தாடி வளர்த்தல் என்பது மத ரீதியான தாக்கத்தைக் கொண்டிருப்பதோடு, மேற்கின் தாக்கத்தையும் கொண்டதாக அமைந்திருக்கிறது. எனவே இலங்கை முஸ்லிம்களின் (ஆண்களும், பெண்களும் அடங்கலாக) ஆடைகள் மற்றும் புறத்தோற்றம் சார்ந்த அம்சங்களை 'அரபிமயமாதல்' என அடையாளப்படுத்தாமல், அவர்கள் மதரீதியான அறிவுறுத்தல்களோடு, தமக்கு விருப்பமான முறைகளையும் பின்பற்றுகிறார்கள் எனக் கொள்வதே பொருத்தமானது.

பெரும்பாலான **இலங்கை முஸ்லிம்களின் ஆடைகளுக்கும் அவர்களின் மதநம்பிக்கைக்கும் இடையே நேரடியான தொடர்புகள் காணப்படுவதில்லை.** 'அபாயா' போன்ற ஆடைகளை அணிகின்ற அத்தனை முஸ்லிம் பெண்களும், தாடி வைத்து, தொப்பி அணிந்திருக்கின்ற அத்தனை முஸ்லிம் ஆண்களும் இஸ்லாத்தை மிக ஆழமாகப் பின்பற்றுகிறார்கள் என்று அர்த்தப்படுத்த முடியாது. ஏனைய ஆண், பெண்களைப் போன்று இவர்களும் சராசரியான மனித உணர்வுகளைக் கொண்டவர்களாகவும், சரியான செயற்பாடுகளுடன் தவறானவற்றையும் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் அணிகின்ற ஆடைகளையும் இவர்களின் புறத்தோற்றங்களையும் கொண்டு இவர்களின் ஆன்மீக உணர்வுகளை மதிப்பிட முடியாது. துல்லியமாகக் கூறினால், இவை ஆடைகளும் புறத் தோற்றமும் மட்டுமே; இவை ஏனையோர் அணிகின்ற ஆடைகளையும், புறத்தோற்றங்களையும் போன்று தனிமனித விருப்புக்கும் சுதந்திரத் தேர்வுக்கும் உரியவை. அதேநேரத்தில் இவை மாற்றத்திற்குரியவை. **இன்று முஸ்லிம் ஆண்களும் பெண்களும் அணிகின்ற ஆடைகள், எதிர்காலத்தில் வேறுவகையான ஆடைகளாக மாற்றமடையக் கூடும்.**

இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடைத் தேர்வு விடயத்தில் ஆண்களினால் நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக சில கண்டனங்கள் முன்வைக்கப்படுகின்றன. மிகச் சிறு வீதமான பெண்கள் விடயத்தில் மட்டுமே இக்கண்டனங்கள் உண்மையாக இருக்கின்றன. பல்கலைக்கழக மட்டத்தில் சில முஸ்லிம் மாணவர்கள் அங்கு கற்க வருகின்ற முஸ்லிம் மாணவிகளை 'ஹிஜாப்' போன்ற ஆடைகளை அணியும்படி வற்புறுத்திய சில சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆயினும் மிகப் பெரும்பாலான முஸ்லிம் மாணவிகளும், வேலைகளுக்குச் செல்கின்ற முஸ்லிம் பெண்களும், தமது தேவைகளுக்காக வெளியே செல்கின்ற ஏனைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் பெண்களும் தமது சொந்த விருப்பப்படியே தமது உடலை மூடுகின்ற ஆடைகளை அணிகிறார்கள். இந்த ஆடை தமது இயல்பான இயக்கத்திற்கு உதவுவதாகவும் இந்த ஆடை மூலமாக தாம் பாதுகாப்புணர்வையும் சௌகரியத்தையும் பெறுவதாகவும் இவர்கள் உணர்கிறார்கள். இலங்கை முஸ்லிம் பெண்கள் மத்தியில் அவர்களின் ஆடைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படக் கூடிய ஆய்வுகள் இந்த உண்மைகளை வெளிப்படுத்தும்.

ஆடை அணிதல் என்பது தனிமனித தேர்விற்கும், சுதந்திரத்திற்கும் உரியதாக மட்டுமன்றி, மனித உரிமைகளில் ஒன்றாகவும் இப்போது அர்த்தப்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக பெண்ணிய கருத்தியலாளர்கள், பெண்கள் தமக்கு விருப்பமான ஆடைகளை அணிவதை அவர்களின் உரிமையாக வரையறுக்கிறார்கள். இந்த கருத்தியலானது, உலக அளவில் முஸ்லிம் பெண்களில் பலமான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. உடலை வெளிப்படுத்தும் விதத்திலான ஆடை ஆணிதல் தொடர்பாக பெண்ணியவாதிகள் முன்வைத்துள்ள கருத்தியலை, உடலை மறைத்து ஆடை அணிதல் விடயத்தில் முஸ்லிம் பெண்கள் தமக்குச் சாதகமாக எடுத்திருக்கிறார்கள். "ஹிஜாப் எங்கள் உரிமை" போன்ற முன்வைப்புகள் இதன் வழிவந்தவையாக இருக்கின்றன.

எனினும் உரிமை என்பது தொடர்பாக பல்பரிமாண புரிதல்கள் அவசியமாகின்றன. ஒரு பல்லின சூழலில், ஒவ்வொரு சமூகமும் தனது அனைத்து உரிமைகளையும் முழுமையாக அனுபவிப்பதில்லை. **உரிமைகளை அனுபவித்தல் என்பதை விட, பிற சமூகங்களுடன் இணக்கமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டும் என்பது முதன்மை பெறுகின்ற சந்தர்ப்பங்கள் மிக அடிக்கடி உருவாகின்றன.** அயல்வீடு என்பதில் தொடங்கி, மதத்தலங்கள், வேலைத்தளங்கள், போக்குவரத்து, அரசியல்... என தனிமனித மற்றும் பொது வெளிகள் சார்ந்து, ஒவ்வொரு தனிநபரும், சமூகமும் தமது உரிமைகளில் பல விட்டுக் கொடுப்புகளை செய்தவண்ணமே வாழ்வியக்கத்தை முன்னெடுக்கின்றனர். பல சந்தர்ப்பங்களில் மக்கள் தமது உரிமைகள் பற்றிய எண்ணமின்றியே தமது வாழ்க்கையை முன்கொண்டு செல்கிறார்கள்.

முஸ்லிம் பெண்கள் தமக்கான ஆடைகளைத் தெரிவு செய்வதும் அவற்றை அணிவதும் அவர்களின் உரிமை சார்ந்த விடயம் என்பதில், எந்தவொரு பிற சமூகத்தினர் மத்தியிலும் மாற்றுக் கருத்துகள் நிலவவில்லை. இவ்வாறிருந்தும், சமீப வருடங்களில், உலகளாவிய ரீதியில் முஸ்லிம் பெண்களின் ஆடைகள் கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கும் உள்ளாகியிருப்பதை நாம் எவ்வாறு புரிந்து கொள்ளப் போகிறோம்? இவற்றை தேர்வுச் சுதந்திரத்தின் மீதான மறுப்பு என்றும் உரிமை மீறல் என்றும், இஸ்லாமிய வெறுப்பு என்றும் கூறுவதன் மூலமாக, சர்வதேச தன்மை பெற்றுள்ள இந்த விடயத்திற்கு பொருத்தமான தீர்வு காண முடியும் எனக் கருத முடியுமா?

நடைமுறை அனுபவங்கள் இது சாத்தியமல்ல என்பதை வலியுறுத்துகின்றன. முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பான எதிர்நிலைப் போக்குகள், புதிய இடங்களிலும் முன்னைய இடங்களில் மீண்டும் எழுந்தவண்ணம் இருக்கின்றன. இந்த எதிர்நிலைப் போக்குகுளை, 'இஸ்லாமிய வெறுப்பு', 'உரிமை மீறல்', 'சுதந்திரத் தேர்விற்கான மறுப்பு', 'இன அரசியல் வெளிப்பாடு' என மட்டும் அடையாளப்படுத்தாமல், இவற்றின் பின்னே உள்ளடங்கியுள்ள சமூக உளவியல் சார்ந்த அம்சங்களும் அக்கறைக்குட்பட வேண்டியவைகளாக இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது உலகளாவிய பரிசீலிப்பை வேண்டி நிற்கிறது. இது தனியொரு பிரதேசம், தனியொரு நாடு என்ற எல்லைகளைக் கடந்து, உலகளாவிய அளவில் வெளிக்கிளம்பியிருக்கின்ற முரண்நிலை என்பதால் இதற்கான தீர்வுகளும் உலகளவில் கண்டுகொள்ளப்படுவது அவசியமாகிறது. முஸ்லிம் சமூகங்கள் மீது இடப்பட்டுள்ள 'அடிப்படைவாதம்', 'தீவிரவாதம்' போன்ற அடையாளப்படுத்தல்கள் சர்வதேச அளவில் சமூக நல்லிணக்கத்திற்கு தடைக்கற்களாக அமைந்திருப்பது போன்று, முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரமும் சமூக துருவமயப்படுத்தலுக்கு இப்போது காரணமாகியுள்ளது.

இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும். முரண்பாடுகளுக்கும், மோதல்களுக்கும் தாம் காரணமாக அமைகின்ற நிலையிலிருந்து முஸ்லிம் சமூகங்கள் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டியுள்ளது. சர்வதேச அளவிலான கலந்துரையாடலுக்குரிய பொதுவெளியை உருவாக்கி, அங்கு முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரத்தில் உள்ளடங்கியுள்ள பல்வேறு அம்சங்களும் உரையாடலுக்குட்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான உரையாடல்களில் கீழ்வரும் விடயங்களும் அக்கறைக்குட்படுத்தப்படலாம்:

- பெண்களின் உடல் மறைக்கப்பட வேண்டும் என்பதில் எந்த சமூகமும் எதிர்நிலைக் கண்ணோட்டங்களைக் கொண்டிருக்கவில்லை. அவ்வாறாயின், அது எவ்வாறு மறைக்கப்படுகிறது என்பதுதான் முரண்பாட்டிற்குரியதாக அமைந்திருக்கிறதா?
- பெரும்பாலான நாடுகளில், 'ஹிஜாப்', 'அபாயா', 'புர்க்கா' என உடலை மறைத்து அணியப்படுகின்ற ஆடை வடிவங்கள், இயல்பான வடிவ மாற்றமாக அன்றி சடுதியாக உள்நுழைந்தவைகளாக அமைந்திருக்கின்றன. இந்நிலையானது, இவற்றை அணியாதவர்கள் மத்தியில் அந்நியத் தன்மையை ஏற்படுத்துகின்றனவா?
- உடலை முழுமையாக மறைத்து அணியப்படுகின்ற இந்த ஆடைவகைகள், உடலின் பகுதிகள் வெளித்தெரியும் வண்ணம் ஆடைகளை அணிந்திருப்பவர்கள் மீது ஒரு ஆழமான 'மௌன விமர்சனமாக' அமைகின்றன. இவ்வகையில், ஒரு பொதுவெளியில் (ஒன்றுகூடல்கள், வேலைத்தளங்கள், கல்விக் கூடங்கள், போக்குவரத்து சாதனங்கள், சேவை நிலையங்கள்....) உடலை முழுமையாக மறைத்த ஆடைகள் ஏனையோருக்கு ஒரு மறைமுக குற்றச்சாட்டாக அமைவதால், அத்தகைய ஆடைகள் அணிந்தோரின் வருகையும் இருப்பும் விரும்பப்படாதனவாக உணரப்படுகின்றனவா?
- முஸ்லிம் பெண்களினால் உடல் மறைத்து அணியப்படுகின்ற ஆடைகள் பெரும்பாலும் கருப்பு நிறத்திலானவைகளாக இருக்கின்றன. பொதுவாக சமூக அர்த்தப்படுத்தலில், கருப்பு நிறம் எதிர்நிலை உணர்வுகளின் குறியீடாகக் கருதப்படுகிறது. மரணம், சோகம், கண்டனம், நம்பிக்கையீனம், கெட்டவை, அச்சம், கோபம், அதிகாரம் போன்றவற்றை கருப்புநிறம் படிமப்படுத்துவதால், கருப்புநிற ஆடைகள் ஒரு இயல்பான அல்லது மகிழ்ச்சிகரமான சூழலுக்கு ஒவ்வாத உணர்வுநிலையை ஏற்படுத்துகின்றனவா?

  பொதுவாக ஷைத்தான்கள் (சாத்தான்கள்), கெட்ட நபர்கள் போன்றவர்கள் பற்றிய சித்தரிப்பு கருப்பு நிறத்துடன் இணைந்திருக்கின்றன. இளம்பராயத்தில் இருந்து இத்தகைய சித்தரிப்பு இடம்பெறுவதால், கருநிற உடைகள் அசௌகரியத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்துவனவாக அமைகின்றனவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருநிறத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையே நேரடி இணைப்புகள் எதுவுமில்லை. அவ்வாறாயின், கருப்பு நிற ஆடைகள் ஏன் முஸ்லிம் பெண்களினால் பிரதான தேர்விற்குரியவையாக அமைகின்றன? இதன் உளவியல் பின்னணி என்னவாக இருக்க முடியும்?

உடலை மறைக்கும் ஆடைகள் கருப்பு நிறத்தில் அல்லாது, பிற நிறங்களில் அணியப்படும்போது அவை பிற சமூகத்தினர் மத்தியில் எத்தகைய உணர்வுகளை ஏற்படுத்தக் கூடும்? இது பற்றி உலகளாவிய ரீதியிலான கருத்துக் கணிப்பு அவசியமா? (வெள்ளைநிற அல்லது மென்நிற அபாயாக்களை கற்பனை செய்யுங்கள்)

உலகளவில் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையிலும் நல்லிணக்கத்திலும் முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரம் எதிர்நிலைத்தன்மையை தோற்றுவித்திருப்பதால், இதுபற்றிய கரிசனையையும், பரிசீலனையையும் மேற்கொள்ள வேண்டிய முதன்மைப் பொறுப்பு முஸ்லிம் சமூகங்களுக்கு இருக்கிறது. இவ்விடயத்தில் பின்புலமாக அமையக் கூடிய இனவாத அரசியல், இஸ்லாமிய வெறுப்பு, உரிமை மீறல் ... போன்ற அம்சங்களைக் கடந்து, இந்த ஆடைகள் பிற சமூகங்களின் உளவியலில் ஏற்படுத்தியிருக்கக் கூடிய தாக்கங்களை முறையாக அடையாளம் கண்டு, அத்தாக்கங்களைக் களைவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது, ஒரு முன்னுதாரணப் பண்பாகவும் முறையான தீர்வாகவும் அமைய முடியும்.

### (இ) முஸ்லிம்களின் குடியிருப்புகள்

முஸ்லிம் பிரதேசங்களில் காணப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கையும், அவற்றின் பரிமாணமும் இன ரீதியான பிரச்சாரங்களுக்கு உட்பட்டிருக்கின்ற இன்னொரு விடயமாக அமைந்திருக்கின்றன. ஒப்பீட்டளவில், பெரும்பாலான முஸ்லிம் குடும்பங்கள் தமக்கென சொந்த வீடுகளைக் கொண்டனவாகவும், அவற்றை விஸ்தரிப்பனவாகவும் இருக்கின்றன. புதிய வீடுகளைக் கட்டுவது என்பது, முஸ்லிம் பிரதேசங்களில் அடிக்கடி இடம்பெறுகின்றன. இதனால், இவை முஸ்லிம் சமூகத்தின் செல்வ நிலையின் வெளிப்பாடுகள் என பிற சமூகத்தினர் கருதுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம்களில் பெரும்பாலானோர் சொந்த வீடுகளைக் கொண்டிருப்பதும் அவர்களில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினர் பெரிய வீடுகளைக் கொண்டிருப்பதும் அவர்களின் செல்வ நிலையின் வெளிப்பாடு அல்ல. அதிகளவில் செல்வத்தைத் திரட்டுகின்ற ஒரு சிறு பிரிவினர், தமது செல்வ நிலையை வெளிப்படுத்துவதற்காக ஆடம்பரமான வீடுகளைக் கட்டுபவர்களாகவும், ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளை உடைத்து புதிய வடிவில் மீளக்கட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் இந்தப் பண்பு முஸ்லிம் பிரிவினர்களிடம் மட்டும் காணப்படவில்லை. இந்நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களையும் சேர்ந்த செல்வந்தர்களும் இவ்வாறு வீடுகளை நிர்மாணிப்பவர்களாக இருக்கிறார்கள்.

உண்மையில் பெரும்பாலான முஸ்லிம்கள் வாழ்க்கையின் மிக அத்தியாவசியத் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்ற பெருமுனைப்பின் வெளிப்பாடாகவே வீடுகளைக் கட்டுகிறார்கள். இலங்கை முஸ்லிம்களின் திருமண வாழ்க்கையைப் பொறுத்த வரையில், அது இரு வெவ்வேறு தன்மைகளைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. கிழக்கு, வடக்கு மற்றும் புத்தளம், பொலநறுவை, அநுராதபுரம் போன்ற பிரதேசங்களில் **பெண்ணின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் திருமணத்திற்காக அவளுக்கு ஒரு வீட்டைக் கட்டிக் கொடுப்பது அவசியமான ஒரு பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வருகிறது. அதேநேரத்தில் தென்னிலங்கைப் பகுதியில், திருமணத்திற்காக ஒரு ஆண் தனக்கென வீட்டைக் கொண்டிருப்பது அவசியமானதாக இருக்கிறது. கிழக்கு, வடக்கு மற்றும் புத்தளம், பொலநறுவை, அநுராதபுரம் போன்ற பிரதேசங்களில் பெண்களுக்கென பொதுவாக தனித்தனி வீடுகள் கட்டப்படுகின்றன, அதேவேளையில், தென்னிலங்கையில் இருக்கின்ற பெரும்பாலான வீடுகள் மேலும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு, ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆண் பிள்ளைகள் அந்த வீடுகளில் தமக்கான இடங்களை ஒதுக்கிக் கொள்கின்ற முறைமை காணப்படுகின்றது.

இவ்வாறு தமக்கான ஒரு வீட்டை அல்லது ஒரு இருப்பிடத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே கிழக்கில் பெரும் எண்ணிக்கையில் பெண்களும், தென்னிலங்கையில் ஆண்களும் மத்திய கிழக்கிற்கு தொழில்வாய்ப்பு பெற்று சென்றிருக்கிறார்கள். வருடக்கணக்கிலான உழைப்பும் இழப்பும் தமக்கான இருப்பிடங்களை அவர்கள் கட்டி முடிப்பதற்கு உதவுகின்றன. ஒப்பீட்டளவில் பிற சமூகங்களில் பரவலாக காணப்படுகின்ற மதுபாவனை, சூது போன்ற செலவீனங்கள் மிகப் பெரும்பாலான முஸ்லிம்களிடம் காணப்படுவதில்லை; ஒரு வீட்டைக் கட்டி முடிக்க வேண்டும் என்பதற்காக முழுக்குடும்பமும் தீவிர அக்கறை எடுக்கிறது; அதற்காக அவர்கள் இயன்றளவு ஒறுத்தலை மேற்கொள்கின்றார்கள். இந்தப் பண்புகள், அவர்களில் பெரும்பாலானோர் தமக்கான சொந்த வீடுகளை கட்டி முடிப்பதற்கும் அவற்றை மேலும் விஸ்தரிப்பதற்கும் உதவுகின்றன. முஸ்லிம்களினால் பின்பற்றப்படுகின்ற இந்த செயற்பாட்டை, செல்வ நிலையின் வெளிப்பாடாகக் கருதாமல், ஒரு சிறந்த பண்பாட்டு முறையாகக் கொள்வது அவசியமாகிறது. ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு, அல்லது ஸ்திரமான இருப்பிடம் என்பதில் அவர்கள் கொண்டுள்ள உறுதிப்பாடானது, உண்மையில் ஒரு கௌரவமான குடும்ப வாழ்க்கைக்கான அத்திவாரமாகக் கொள்ளப்பட வேண்டும். அதேநேரத்தில் பெரும்பாலான முஸ்லிம் குடும்பங்களில் இந்த வீடுகளுக்குள்ளே வறுமையும் பற்றாக்குறையும் நிறைந்த வாழ்க்கை நிலவுகிறது என்ற உண்மையும் புரிந்து கொள்ளப்படுவது அவசியம்.

பிற சமூகங்களின் குடியிருப்புகளின் அளவும் பரப்பும் அதிகரித்துச் செல்கின்ற அதேவேளை, இலங்கை முஸ்லிம்களின் குடியிருப்புகள் ஏறக்குறைய அதே அளவிலேயே இருந்து வருகின்றன. ஒருபுறம் காடுகள் அழிக்கப்பட்டு புதிய குடியிருப்புகள் உருவாக்கப்படுகின்றன. இன்னொரு புறம், ஏற்கனவே தோட்டங்களாகவும், விவசாய நிலங்களாகவும் ஏனைய வகைகளிலும் பயன்படுத்தப்பட்ட காணிகளும், பயன்படுத்தப்படாத காணிகளும் சிறுசிறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு புதிய குடியிருப்புகள் உருவாக்கப்படுகின்றன. மற்றொரு வகையில், பெருநகரங்களில் தொடர்மாடிகளும், வீட்டுத் தொகுதிகளும் நிர்மாணிக்கப்பட்டு புதிய குடியிருப்புகளாக உருவாகின்றன. இவ்வாறு உருவாக்கப்பட்டு வருகின்ற புதிய குடியிருப்புகளில் முஸ்லிம்களுக்குரிய வீடுகள் அல்லது மனைகள் மிகமிகக் குறைவாக இருக்கின்றன. அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற மனைகளைத் தவிர, தனியார் நிறுவனங்களினால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பல குடியிருப்புகளில் முஸ்லிம்கள் அறவே வீடுகளைக் கொண்டிராதவர்களாக இருக்கிறார்கள்.

இவ்வாறான நிலைமைக்கு, இலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை முறையும், அவர்களுக்கு எதிராக இந்நாட்டில் தொடர்ச்சியாக வெளிப்படுகின்ற பகைமை நிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய காரணிகளாக அமைந்திருக்கின்றன. முஸ்லிம்கள் ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுகையில் ஈடுபட வேண்டும். பொதுவாக, முஸ்லிம் ஆண்கள் பள்ளிவாசல்களில் கூட்டாக தொழுகையை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே தாம் வாழ்கின்ற பிரதேசங்களில் இவ்வாறு கூட்டாகத் தொழுகையை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும் என்பது அவர்களின் முதன்மையான எதிர்பார்ப்பாக இருக்கிறது. புதிதாக உருவாக்கப்படுகின்ற குடியிருப்புகளிலும், மனைத் தொகுதிகளிலும் இதற்கான வாய்ப்பு இல்லாததால் மிகப் பெரும்பாலான முஸ்லிம்கள் இத்தகைய குடியிருப்புகளில் தமக்கான மனைகளை வாங்குவதற்கும் அவற்றில் குடியிருப்பதற்கும் விரும்பாதவர்களாக இருக்கிறார்கள். அதேநேரத்தில், இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராக தொடர்ச்சியாக வெளிப்படுகின்ற பிரச்சாரங்களும், அவர்கள் மீது அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைத் தாக்குதல்களும், இத்தகைய குடியிருப்புகளில் குறைந்த எண்ணிக்கையில் வாழ்வதை பாதுகாப்பற்றதாக உணர்கின்ற நிலையை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளன.

இவற்றின் காரணமாக, இலங்கை முஸ்லிம்கள் தாம் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற பிரதேசங்களுக்கு மிக அண்மையதாக உள்ள இடங்களில் குடியேறுவதை, அல்லது தாம் வாழ்ந்து வருகின்ற வீடுகளை மேலும் விஸ்தரிப்பதை அல்லது அந்த வீடுகளைச் சூழ எஞ்சியுள்ள காணிகளில் புதிதாக வீடுகளை நிர்மாணிப்பதையே பெருமளவில் விரும்புகிறார்கள். இதனால் **முஸ்லிம்களின் குடியிருப்புகள் சனச்செறிவுமிக்கவையாகவும். அடிப்படையான சுகாதார வசதிகளை முறையாக பேண முடியாத நிலையிலும் காணப்படுகின்றன.** முறையான திட்டமிடல்களின்றி கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுவதால், மழைநாட்களில் நீர் வழிந்தோட வழியின்றி வீதிகளில் தேங்கி நிற்பதோடு, வெள்ள நிலைமைகளை அதிகம் அனுபவிக்கின்ற சமூகத்தினராகவும் இவர்கள் இருக்கிறார்கள். இவற்றின் விளைவாக, தொற்று நோய்களினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்ற மக்கள் பிரிவினர்களாக இலங்கை முஸ்லிம்கள் காணப்படுகிறார்கள். அண்மைய கொரோனா தொற்றாளர்களின் அளவிலும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையிலும் முஸ்லிம்களின் எண்ணிக்கையானது அவர்களின் சனத்தொகை விகிதாசாரத்திலும் கூடுதலாக அமைந்திருப்பது இந்த உண்மையை வெளிப்படுத்தக் கூடியது.

*17.09.2022 வரையில் கொவிட்19இனால் இறந்தோர் விபரம்:*

| இனம் | ஆண் | பெண் | மொத்தம் | வீதம் % |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 5442 | 6767 | 12209 | 73.0 |
| முஸ்லிம்கள் | 794 | 1117 | 1911 | 11.4 |
| தமிழர் | 797 | 1224 | 2021 | 12.1 |
| பறங்கியர் | 274 | 300 | 574 | 3.4 |
| ஏனையோர் | 6 | 15 | 21 | 0.1 |
| மொத்தம் | 7313 | 9423 | 16736 | 100 |

*(தொற்று நோயியல் பிரிவு, சுகாதார அமைச்சு)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுள்ளவை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்கள். அதேநேரத்தில், கொரோனாவினால் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காக ஓட்டமாவடியில் ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசத்தில், அண்ணளவாக இதே காலப்பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளவர்களின் விபரம் பின்வருமாறு உள்ளது:

இஸ்லாமியர் - 2986

பௌத்தர்கள் - 293

இந்துக்கள் - 263

கிறிஸ்தவர்கள் - 86

இதன்படி, இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கை, அரசாங்க தகவல்களிலுள்ளதை விட ஆயிரத்திற்கும் கூடுதலாக அமைந்திருக்கிறது. இவற்றோடு இந்த அடக்கஸ்த்தலம் உருவாக்கப்படுவதற்கு முன்னர், எரிக்கப்பட்ட முஸ்லிம் உடலங்களையும் கவனத்தில் கொள்ளும்போது, கொரோனாவின் இறந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை சுமார் 3500ஆக இருக்க முடியும். இது மொத்த கொரோனா மரணங்களில், முஸ்லிம்களின் மரணம் சுமார் 21 வீதமாக இருப்பதைக் காட்டுகிறது. இது அவர்களின் தேசிய சனத்தொகை வீதத்திலும் பார்க்க இரு மடங்காக இருக்கிறது.

இவற்றை விட, இலங்கை முழுவதிலும் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளின் அளவு ஒப்பீட்டளவில் மிகக் குறைவாக இருக்கிறது. முஸ்லிம்கள் செறிவாகவும், பெரும்பான்மை நிலையிலும் வாழ்கின்ற கிழக்கு மாகாணத்திலும்கூட, இத்தகைய நிலையே காணப்படுகிறது. கீழ்வரும் தரவுகள் இதை வெளிப்படுத்துகின்றன.

அம்பாறை மாவட்டம்

மொத்த நிலப்பரப்பு: 1,775 சதுர மைல்

| இனம் | எண்ணிக்கை | வீதம் | நில அளவு | வீதம் |
|---|---|---|---|---|
| முஸ்லிம்கள் | 350,194 | 45.12% | 263 சதுர மைல் | 15% |

மட்டக்களப்பு மாவட்டம்

மொத்த நிலப்பரப்பு: 2663 சதுர மைல்

| இனம் | எண்ணிக்கை | வீதம் | நில அளவு | வீதம் |
|---|---|---|---|---|
| முஸ்லிம்கள் | 164,686 | 26.48 | 20 சதுர மைல் | 01.0% |

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம்களுக்கு சொந்தமாக இருக்கின்ற காணிகளின் அளவை கவனத்தில் கொள்கையில், அங்கு வாழ்கின்ற முஸ்லிம்கள் எவ்வளவு செறிவாகவும் நெருக்கமாகவும் வாழ்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும். உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழ்கின்ற நான்கு பிரதேசங்களிலும் அவர்களுக்குரிய காணிகளின் அளவை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரதேசம் | முஸ்லிம்களின் எண்ணிக்கை | வீதம் | காணியின் அளவு |
|---|---|---|---|
| காத்தான்குடி | 48751 | 100.0% | 3.89 சதுர கி.மீ |
| ஏறாவூர் நகரம் | 40465 | 99.81% | 3.74 சதுர கி.மீ |
| கோறளைப்பற்று மத்தி | 32627 | 96.84% | 6.5 சதுர கி.மீ |
| கோறளைப்பற்று மேற்கு | 25678 | 99.95% | 6.84 சதுர கி.மீ |

மேலுள்ள தரவுகளில் காணப்படுகின்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை 2019ஆம் ஆண்டு அங்கு வாழ்ந்த முஸ்லிம்களின் எண்ணிக்கையாகும். (ஆதாரம்: கிழக்கு மாகாண சபை. இணையத்தளம்) இப்பொழுது அங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கும். ஆயினும் அங்குள்ள காணிகளின் அளவு மாறாதிருக்கும் அல்லது வீதி விரிவாக்கத்திற்காக ஒரு குறிப்பிட்ட அளவு காணிகள் சுவீகரிக்கப்பட்டு, அவற்றின் அளவு குறைந்திருக்கும். எனவே தொடர்ச்சியாக அந்தப் பகுதிகளில் மக்களின் சனச் செறிவு அதிகரித்தவண்ணமே இருக்கிறது.

இதே நிலைமை கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களான அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் காணப்படுகிறது. இதனால், தமது வீட்டுத் தேவைகளை நிவர்த்திப்பதற்காக, தங்களுடைய பாரம்பரிய விவசாய நிலங்களை குடியிருப்புகளாக மாற்றுகின்ற போக்கு இங்குள்ள முஸ்லிம்களிடையே அதிகரித்திருக்கிறது. சில இடங்களில், குறுகிய காலத்திற்குள் நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் குடியிருப்புகளாக மாற்றப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஒரு மாகாணத்தில், நில ரீதியாக முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடி இவ்வளவு தீவிரமாக இருக்குமாயின், நாட்டின் பிற இடங்களில், சிறுசிறு எண்ணிக்கைகளில் வாழ்கின்ற முஸ்லிம்கள் இதை விடவும் கடுமையான நெருக்கடிகளை அனுபவிப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

எனவே இத்தகைய நிலையை மாற்றியமைப்பதற்கான முறைமையை இலங்கை முஸ்லிம்கள் மட்டுமன்றி, அரசும், ஏனைய சமூக நிறுவனங்களும் கண்டு கொள்வது அவசியமாகிறது. இது ஒரு தனியான சமூகத்திற்கான பிரச்சினை மட்டுமல்ல. இது ஒரு **தேசிய பிரச்சினையாக கருதப்பட வேண்டும்.** இந்நிலை தொடரும்போது, அது சுகாதார ரீதியிலும் சமூக உறவுகள் சார்ந்தும் பொருளாதார ரீதியாகவும் முழு நாட்டையும் பாதிப்பதாக அமைந்து விடக் கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளது. முஸ்லிம்கள் மீதான பாதுகாப்பு அச்சுறுத்தல் முழுமையாக அகலும்போதும், அவர்களின் மத, பண்பாட்டு பின்பற்றுகைகளுக்கான சாத்தியம் நிலவும்போதும் அவர்கள் பொருத்தமான பிற இடங்களுக்குக் குடிபெயரவும், பிற சமூகங்களுடன் கலந்தும் இணைந்தும் வாழவுமான சூழல் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஈ) கல்வியும், இலங்கை முஸ்லிம்களும்

இலங்கை முஸ்லிம்களின் கல்வி அடைவானது பிற சமூகங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவினதாக இருந்து வருகிறது. கீழ்வரும் புள்ளி விபரங்களில் இருந்து இதை அறிந்து கொள்ள முடியும். 1942ஆம் ஆண்டில் இருந்து 1966ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில், முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| ஆண்டு | முஸ்லிம் மாணவர் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| *1942* | *25* | *2.7* |
| *1943* | *21* | *2.3* |
| *1944* | *29* | *2.9* |
| *1945* | *28* | *2.6* |
| *1946* | *37* | *2.8* |
| *1947* | *45* | *2.9* |
| *1948* | *40* | *2.5* |
| *1949* | *40* | *2.2* |
| *1950* | *46* | *2.3* |
| *1951* | *46* | *2.1* |
| *1952* | *39* | *1.8* |
| *1953* | *41* | *1.7* |
| *1954* | *42* | *1.7* |
| *1955* | *54* | *2.2* |
| *1956* | *57* | *2.3* |
| *1957* | *54* | *2.0* |
| *1958* | *72* | *2.5* |
| *1959* | *66* | *2.1* |
| *1960* | *67* | *1.8* |
| *1961* | *84* | *1.8* |
| *1962* | *89* | *1.7* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1963 | 89 | 1.5 |
| 1964 | 125 | 2.1 |
| 1965 | 219 | 2.0 |
| 1966 | 232 | 2.0 |

(ஆதாரம்: 'பல்கலைக்கழக கல்வி அபிவிருத்தி - 1942-1965' ''இலங்கையில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்'' – எம்.ஐ.எம். முகைதீன் 1985)

இவ்வாறு சுதந்திரத்தின் முன்பிருந்தே தமது சனத்தொகை வீதத்திலும் பார்க்க மிகக் குறைந்த அளவில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று வந்த முஸ்லிம்களின் நிலை 1983ஆம் ஆண்டிலும் 299 என்ற மொத்த எண்ணிக்கையையே கொண்டிருந்தது. இது 2.0 வீதத்திற்கும் குறைவானது. இதன் பின்னர் படிப்படியே முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி உயர்வடைந்து, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, முஸ்லிம்களின் தேசிய சனத்தொகை வீதத்தை அது நெருங்கியது. கீழ்வரும் அட்டவணை, முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் ஏற்பட்ட வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறது.

| கல்வி ஆண்டு | மொத்த மாணவர் அனுமதி | முஸ்லிம் மாணவர் அனுமதி | முஸ்லிம் மாணவர் வீதம் |
|---|---|---|---|
| 2016/17 | 28,079 | 2,410 | 8.6% |
| 2017/18 | 28,937 | 2,724 | 9.4% |
| 2018/2019 | 31,415 | 2,957 | 9.4% |
| 2019/20 | 41,128 | 3,747 | 9.1% |

(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2021 )

இவ்வாறு சுதந்திரத்திற்கு முன்னரும் அதன் பின்னர் அரைநூற்றாண்டுக்கும் கூடுதலான காலமும், இலங்கை முஸ்லிம்கள் கல்வியில் பின்தங்கியிருந்தமைக்கு தெளிவான வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன.

16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நாடு ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டதில் இருந்து, அந்த ஆக்கிரமிப்பாளர்களினால் இலங்கை முஸ்லிம்களின் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த வன்முறைத் தன்மையான அடக்குமுறைகள், அவர்களது வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பாதிப்புகளை ஏற்படுத்தின. பிரதானமாக பொருளாதார, மத, பண்பாட்டு அடிப்படையில் அமைந்த இத்தகைய வன்முறை செயற்பாடுகளின் காரணமாக, நான்கு நூற்றாண்டுகளுக்கும் மேலாக இலங்கை முஸ்லிம்கள் சுய-தனிமைப்படுத்தலுக்குட்பட்டவர்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஐரோப்பியர்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வியும் அதனுடனாக வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புகளும் மதமாற்றத்துடன் இணைந்திருந்ததனால், அக்கல்வியைக் கற்பதில் இருந்து அனேகமாக அனைத்து முஸ்லிம்களும் ஒதுங்கியிருந்தார்கள். இந்நாட்டிலுள்ள பிற சமூகங்களில் கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரிவினர்கள் உருவாகியிருக்கின்ற நிலையில், இலங்கைச் சோனகர்களிலோ அல்லது இலங்கை முஸ்லிம்களின் கூறுகளாக அமைந்துள்ள பிற இனக்குழுமங்களிலோ கிறிஸ்தவ பிரிவினர் யாருமே இல்லை** என்பது, அவர்கள் எவ்வளவு தூரம் ஐரோப்பிய கல்வியையும் தொழில் வாய்ப்புகளையும் விட்டு விலகியிருந்தார்கள் என்பதற்கான தெளிவான சான்றாக இருக்கிறது.

பின்னர், பிரித்தானிய ஆட்சியாளர்கள் கல்வியையும் மதத்தையும் நேரடியாக இணைக்கின்ற நடைமுறையை நிறுத்தியபோது, இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் நவீன கல்வியைக் கற்பதற்கான ஆர்வம் மெல்ல உருவானது. 1970களின் பின்னர், இந்நாட்டின் அரசியலிலும் பொருளாதார கட்டமைப்புகளிலும் கல்விச் சிந்தனையிலும் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் கல்வி கற்பதற்கான ஆர்வத்தை தீவிரமாக்கின. குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் கல்வி கற்பதில் மும்முரமாக ஈடுபட்டார்கள். எனினும் இவர்கள் கல்வி அடைவில் தமது தேசிய மக்கள்தொகை விகிதாசாரத்தை அடைந்து கொள்வதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.

இன்று இந்நாட்டில் கட்டாயக் கல்விமுறை நடைமுறையில் இருப்பதால், சகல சமூகங்களையும் சேர்ந்த இளம்பராயத்தினர் குறிப்பிட்ட வயது வரை அரசாங்க பாடசாலைகளுக்குச் சென்று கற்பவர்களாக இருக்கிறார்கள். எனினும் அதன் பின்னர், பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் வெளியேறுவது ஆரம்பிக்கின்றது. இவ்வாறு இடைவிலகுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு சமூகத்திலும் வேறுபடுவதாக அமைகிறது.

## மாணவர் இடைவிலகல்

ஒப்பீட்டளவில் இந்நாட்டிலுள்ள முஸ்லிம் மாணவர்களின் இடைவிலகும் வீதம் பிற சமூக மாணவர்களை விட அதிகமாக இருக்கிறது. இந்த இடைவிலகலுக்கான அடிப்படைக் காரணங்கள், கிழக்கு, வடக்கு மாகாணங்கள், புத்தளம் மாவட்டம் போன்ற பிரதேசங்களில் ஒருவகையாகவும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இன்னொரு வகையாகவும் அமைந்திருக்கின்றன. மேலும் கிழக்கு, வடக்கு மாகாணங்கள், புத்தளம் மாவட்டம் போன்ற பிரதேசங்களில் முஸ்லிம் ஆண்களை விட **முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில் அதிக ஆர்வம்** காட்டுபவர்களாக இருக்கிறார்கள். பல்கலைக்கழகங்களிலும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிலும் கல்வி கற்கின்ற முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வந்திருக்கின்ற அதேநேரத்தில், முஸ்லிம் ஆண்களின் எண்ணிக்கை படிப்படியே குறைவடைந்து வருகின்றது. இதற்கான காரணிகளும் வேறுபட்டவைகளாக இருக்கின்றன.

இவ்வாறு பாடசாலை மட்டத்தில் இடைவிலகுகின்ற முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்கும், உயர்கல்வி கற்பதில் முஸ்லிம் பெண்கள் மற்றும் ஆண்கள் மத்தியில் வேறுபாடுகள் காணப்படுவதற்கும் பின்புலமாக வலுவான சமூகக் காரணிகள் தொழிற்படுகின்றன.

1. கிழக்கு மாகாணத்தில், பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகின்ற முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அங்குள்ள பிற சமூகங்களை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக இருக்கிறது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண்கள் அதிக எண்ணிக்கையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்புப் பெற்று செல்கிறார்கள். இவ்வாறு செல்கின்றவர்களில் **தாய்மாரின் எண்ணிக்கை அதிகமானதாக** இருக்கிறது. ஆரம்ப மற்றும் இடைநிலை வகுப்பு மாணவர்களை பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்புவதிலும், முறையாகக் கற்கச் செய்வதிலும் தாயின் பங்களிப்பும் கண்காணிப்பும் மிக அவசியமாகின்றன. தாய்மார் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், தங்கள் தாய்மாரின் இத்தகைய பராமரிப்பை பெற முடியாதிருப்பதால், அவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வதிலும் முறையாகக் கற்பதிலும் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இது இறுதியில் இத்தகைய மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் நிலைக்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறு இடைவிலகுபவர்களில் ஆண் மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்

2. தென்னிலங்கையில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகின்ற முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை அங்குள்ள பிற சமூகங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருக்கின்றது. தென்னிலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை, கல்வியை தமது தொழிலுக்கும், வாழ்க்கைக்குமான ஆதாரமாகக் கொள்கின்றவர்களின் எண்ணிக்கை **குறைவானதாக** இருக்கிறது. கல்வி கற்று அரசாங்க உத்தியோகம் பெறுகின்ற எண்ணம் கொண்டவர்களை விட, சுயமாகவும், தனியார் நிறுவனங்களிலும், வெளிநாடுகளிலும் தொழில் புரிவதில் ஆர்வம் கொண்டவர்களாக அங்குள்ள பெரும்பாலான ஆண்கள் இருக்கிறார்கள். இதனால் இம்முஸ்லிம்கள் மத்தியில், குறிப்பாக ஆண்கள் மத்தியில் தொடர்ச்சியாக கல்வி கற்கின்ற ஆர்வம் குறைவாக இருப்பதால், இங்கு பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகின்ற முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

3. பல்கலைக்கழகக் கல்வி மற்றும் பிற கல்வி நிறுவனங்களிலான உயர்கல்வியைக் கற்பதில் கிழக்கு, வடக்கு மற்றும் புத்தளம் போன்ற பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் மாணவிகள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இவர்கள் முஸ்லிம் மாணவர்களுக்கு பலத்த போட்டியாளர்களாக விளங்குகிறார்கள். இப்பிரதேசங்களில் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பது மட்டுமன்றி, அவர்கள் அரசாங்க, தனியார் துறைகளில் உத்தியோகம் புரிவதும் சமூக ரீதியில் பெரிதும் விரும்பப்படுவதால், இவர்கள் உயர்கல்வி கற்பதில் பெரும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

இதற்கு மாறாக தென்னிலங்கையிலுள்ள முஸ்லிம்கள் மத்தியில், முஸ்லிம் பெண்கள் உத்தியோகம் புரிவது சமூக அளவில் பெரும்பாலும் விரும்பப்படாததாக இருக்கிறது. இதனால், உயர்கல்வி கற்கின்ற முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை இப்பிரதேசங்களில் குறைவாக இருக்கின்றது. எனினும், இங்கு வசதியான குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள், கல்வி கற்ற பெண்களை திருணம் செய்ய விரும்புபவர்களாக இருக்கிறார்கள். தொழில் பெறுகின்ற நோக்கத்திற்காக இல்லாமல், கல்வி கற்ற பெண்கள் குடும்ப வாழ்வை சீராக முன்னெடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு இதற்கான காரணமாக இருக்கிறது. இதனால், மத்தியதர குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், பெரிதும் தனியார் கல்வி நிறுவனங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு துறைகளில் கல்வி கற்பவர்களாக இருக்கிறார்கள். அதேநேரத்தில், பல்கலைக்கழக நுழைவானது மிகவும் போட்டிமிக்கதாக இருப்பதாலும், உயர்கல்வி கற்றதன் பின்னர் தொழில் பெறுவது சிரமத்திற்குரியதாக இருப்பதாலும், இத்தகைய தொழில்களில் மூலமாக கிடைக்கின்ற வருமானம் போதாததாக இருப்பதாலும், தமது குடும்ப நிலைமைகள் காரணமாகவும் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பாலான முஸ்லிம் ஆண்கள் உயர்கல்வி கற்பதில் அக்கறை குறைந்தவர்களாக இருக்கிறார்கள்.

இத்தகைய ஒட்டுமொத்த நிலைமைகளின் விளைவாக, பல்கலைக்கழகக் கல்வி பெறுவதிலும், தொழில் வாய்ப்புகள் பெறுவதிலும் இலங்கை முஸ்லிம்கள் பெற்றிருக்கின்ற விகிதாசாரமானது அவர்களின் தேசிய சனத்தொகை விகிதாசாரத்திலும் பார்க்க குறைவானதாக இருந்து வந்திருக்கின்றது. எனினும் கிழக்கு மாகாணத்திலும், புத்தளம் மாவட்டத்திலும் முஸ்லிம்கள் மத்தியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட கல்வி எழுச்சியானது, அவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

**பல்கலைக்கழக அனுமதி – 2018/19**

| மாவட்டம் | புதிய பாடவிதானம் | பழைய பாடவிதானம் | மொத்தம் |
|---|---|---|---|
| திருகோணமலை | 540 | 250 | 790 |
| மட்டக்களப்பு | 770 | 303 | 1073 |
| அம்பாறை | 855 | 507 | 1362 |
| புத்தளம் | 867 | 475 | 1342 |

*(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு – 2019)*

மேலுள்ள தரவுகள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள ஒட்டுமொத்த மாணவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. எனினும் இந்நான்கு மாவட்டங்களிலும், முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வசிப்பதோடு, கல்வியிலும் பெரும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதனால் இம்மாவட்டங்களில் இருந்து ஒப்பீட்டு அளவில் அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று வருகிறார்கள்.

## அரச தொழில்களில் முஸ்லிம்கள்.

இலங்கை முஸ்லிம்கள், சுதந்திரத்திற்குப் பின்னரான 50 ஆண்டுகளில், அரசாங்கத் தொழில்களில் குறைந்தளவிலான வாய்ப்புகளையே பெற்று வந்திருக்கிறார்கள். குறிப்பாக, பல்கலைக்கழக தகுதியை அவசியமாகக் கொண்டிருந்த உயர் அரச நிர்வாக உத்தியோகங்களில் முஸ்லிம்கள் மிகக் குறைந்த அளவிலேயே வாய்ப்புகளைப் பெற்றார்கள்.

**இன ரீதியாக சிரேஷ்ட நிர்வாக, உயர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் விபரம்:**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பதவிகள் | சிங்களவர் எண்ணிக்கை | வீதம் % | தமிழர் எண்ணிக்கை | வீதம் % | ஏனையோர் எண்ணிக்கை | வீதம் % |
|---|---|---|---|---|---|---|
| அமைச்சுகளின் செயலாளர்கள் | 39 | 95.12 | 2 | 4. 88 | - | - |
| திணைக்களத் தலைவர்கள் (பணிப்பாளர்கள், ஆணையாளர்கள் மாத்திரம்) | 224 | 79.15 | 46 | 16.25 | 13 | 4.59 |
| மேலதிகச் செயலாளர்கள் | 25 | 83.33 | 4 | 13.33 | 1 | 3.33 |
| உதவியாளர்கள் (உதவியாளர் பதவியிலுள்ள உத்தியோகத்தர் அனைவரும்) | 892 | 81.24 | 171 | 15.57 | 35 | 3.19 |
| பிற செயலாளர்கள் | 107 | 89.17 | 9 | 7.5 | 4 | 3.33 |
| கூட்டுத்தாபனத் தலைவர்கள். | 86 | 88.66 | 6 | 6.19 | 5 | 5.15 |
| பிரதி அலுவலர்கள் | 394 | 76.06 | 100 | 19.31 | 24 | 4.63 |
| ஏனைய சிரேஷ்ட அலுவலர்கள் | 2232 | 76.57 | 559 | 19.18 | 124 | 4.25 |

(இலங்கை தொலைபேசி விபரப் புத்தகம். 1982)

மேலுள்ள அட்டவணையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை தனியாகக் குறிப்பிடப்படவில்லை. அந்த எண்ணிக்கை 'ஏனையோர்' என இந்நாட்டிலுள்ள பறங்கியர் போன்ற சமூகங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தளவுக்கு இத்தகைய உயர் பதவிகளில் அவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்திருக்கின்றது. சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை இந்நிலைமை நீடித்தது. அதன் பின்னர்தான் இலங்கை முஸ்லிம்கள் இத்தகைய பதவிகளில் நியமிக்கப்படக் கூடிய கல்வித் தகைமைகளையும் வாய்ப்புகளையும் பெற்றார்கள்.

பல தசாப்தங்கள் நீடித்த இத்தகைய நிலையானது, இலங்கை முஸ்லிம்களின் கருத்தியல் தளம், அரச, தனியார் நிறுவனங்களினூடாக அவர்கள் முறையான சேவைகளைப் பெறுவது என்பவற்றில் பெரும் தாக்கங்களை நிகழ்த்தி வந்திருக்கிறது. தம்மைப் பற்றிய தப்பெண்ணங்கள் பரப்பப்படும்போதும், தாம் விமர்சனத்திற்குள்ளாகின்றபோதும் அவற்றை முறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்ளக் கூடிய **மனிதவளப் பற்றாக்குறையைக் கொண்டவர்களாக** இலங்கை முஸ்லிம்கள் இருந்து வந்திருக்கிறார்கள். இப்போதும்கூட, இலங்கை முஸ்லிம்கள் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு, முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளை முறையாக வெளிப்படுத்தி, தமது சமூகத்திலும் பிற சமூகங்கள் மத்தியிலும் புரிதல்களை ஏற்படுத்துகின்ற துறைசார்ந்த முஸ்லிம் நிபுணர்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே இருக்கிறார்கள். இந்த முஸ்லிம் தனிநபர்களின் பணிகள் இன்னமும் போதியளவுக்கு சமூகமயப்படாமல் இருக்கின்றன. அத்துடன் இத்தகைய பணிகள் கூட்டுத்தன்மை பெறாமலும் சந்ததியாக்கம் செய்யப்படாமலும் இருக்கின்றன.

அதேநேரத்தில், பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களினால் நிறைந்துள்ள அரச, தனியார் துறைகளில், தமக்குரிய சேவைகளை பெறுவதில் தாமதங்களையும் இடர்பாடுகளையும் இவர்கள் எதிர்கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக தென்னிலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் அரச ஊழியர்களாக பணிபுரிகின்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. பிரதேச மட்டங்களில், சமூகங்களின் தேவைகள் தொடர்பாக செயலாற்றுகின்ற கிராம சேவையாளர் பதவிகளில் கூட மிகச் சொற்பமான முஸ்லிம்களே அங்கு பணிபுரிகிறார்கள். **முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தின் கணிசமான பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழ்கின்ற முஸ்லிம்கள் இப்போதும் நிர்வாக ரீதியான இடர்பாடுகளை எதிர்கொள்கிறார்கள்** என்பதை கவனத்தில் கொள்ளும்போது, சிறிய பிரதேசங்களிலும் சிறிய எண்ணிக்கையிலும் வாழ்கின்ற தென்னிலங்கை முஸ்லிம்கள் தமது நிர்வாக ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதில் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

கீழ்வரும் தரவுகள், கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டம் பற்றியும் அம்மாவட்டத்தில் அமைந்துள்ள குச்சவெளி பிரதேசம் தொடர்பானதுமான நிர்வாக நிலையை வெளிப்படுத்துகிறது.

**திருகோணமலை மாவட்ட சனத்தொகை - 2012**

| இனம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| சிங்களவர் | 101,483 | 26.79 |
| தமிழர் | 117,873 | 31.1 |
| முஸ்லிம்கள் | 158,771 | 41.8 |
| ஏனையோர் | 4,414 | 0.31 |

*(சனத்தொகை மற்றும் புள்ளி விபரங்கள் திணைக்களம். - இணையம்.)*

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். எனினும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ள பதினொரு (11) பிரதேச செயலகங்களில், முஸ்லிம்களை மையப்படுத்தியவைகளாக மூதூர், கிண்ணியா, குச்சவெளி ஆகிய **மூன்று பிரதேச செயலகங்களே இருக்கின்றன.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் குச்சவெளிப் பிரதேச செயலகப் பிரிவில், முஸ்லிம்கள் 65 வீதமாக வாழ்கிறார்கள். இப்பிரதேச செயலகத்திற்குட்பட்டதாக 24 கிராம சேவகர் பிரிவுகள் இருக்கின்றன. இவற்றில் 07 கிராம சேவகர் பிரிவுகள் மட்டுமே முஸ்லிம் கிராம சேவகர் பிரிவுகளாக இருக்கின்றன. அதாவது **65 வீதமாக வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு, 30 வீதமான கிராம சேவகர் பிரிவுகளே ஒதுக்கப்பட்டுள்ளன.** அதேநேரத்தில், குச்சவெளிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராக பெரும்பாலும் முஸ்லிமல்லாதவர்களே நியமிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

உண்மையில், பிரதேசங்களினதும் அங்கு வாழ்கின்ற மக்களினதும் பன்முக அபிவிருத்திக்கு, பிரதேச செயலகங்களும், கிராம சேவகர் பிரிவுகளுமே பெரும் பங்காற்றுபவைகளாக இருக்கின்றன. அகக் கட்டமைப்புகளில் தொடங்கி பண்பாட்டு அம்சங்கள் வரையிலான வளர்ச்சிகள் இந்த நிர்வாக அமைப்புகளின் மூலமாகவே உத்தியோகபூர்வமாக முன்னெடுக்கப்படுகின்றன. இவை குறிப்பிட்ட சமூகம் அல்லது சமூகப் பிரிவுகள் விடயத்தில் செயல்தன்மை குறைந்தவையாகவும் பற்றாக்குறையானவையாகவும் அமையும்போது, அது அந்த மக்களின் பன்முக விருத்தியில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய நிலைமைகளை இலங்கை முழுவதிலுமுள்ள முஸ்லிம்கள் எதிர்கொண்டு வருகிறார்கள்.

குறிப்பாக, தமக்கான பிரதேச செயலகங்கள், கிராம சேவையாளர் பிரிவுகள் என்பவை மிகக் குறைவாக இருப்பதால் தென்னிலங்கை முஸ்லிம்கள், தமது நாளாந்த செயற்பாடுகளையும் ஒரு சமூகத்திற்கு அவசியமான பொருளாதார, பண்பாட்டு அம்சங்களையும் முறையாக முன்கொண்டு செல்வதில் அதிக இடர்பாடுகளை எதிர்கொள்பவர்களாக இருந்து வருகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் தமக்குரிய வாய்ப்புகளை உரிய நேரத்திலும் முறையாகவும் பெற முடியாதவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். இத்தகைய நிலைமைகளின் காரணமாக, தென்னிலங்கை முஸ்லிம்களின் மத்தியில் சமூக, பண்பாட்டு அம்சங்கள் உறுதியான முறையிலும் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியடைகின்ற தன்மைகள் அருகிக் காணப்படுகின்றன.

## (உ) கலைகளும் இலங்கை முஸ்லிம்களும்

கலைகள் தொடர்பாக இலங்கை முஸ்லிம்கள் ஏறக்குறைய அறவே அக்கறையற்றவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். கலைகள் பற்றிய பிரக்ஞையும் புரிதலும் அவர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றன. நாகூர் ஈ.எம். ஹனீபாவின் இஸ்லாமிய கீதங்களில் மனம் லயிப்புற்று வந்திருக்கின்ற இவர்கள், **தமக்கென தனியானதும், தனித்துவமானதுமான இசை மரபு, நடன மரபு, நாடக மரபுகள் என்பன வழக்கில் இருந்தனவா** என்ற வினாக்களை எழுப்பி, அவற்றுக்கு உணர்வுபூர்வமாக விடை தேடுகின்ற எந்த முயற்சியிலும் ஈடுபடாதவர்களாகவே இருக்கிறார்கள். இத்தகைய தேடல்களில் மிகச் சில தனிநபர்கள் சுயமாக ஈடுபட்டு வந்திருக்கின்றபோதிலும், அவர்களின் முயற்சிகள் சமூக அக்கறைக்குட்படுவதும் சமூகமயப்படுவதும் மிக அரிதான நிகழ்வுகளாக இருக்கின்றன.

இலங்கை முஸ்லிம்களிடத்தில் சில கலை வடிவங்கள் இன்னமும் நிலைத்திருக்கின்றன. ஆண்களினால் நிகழ்த்தப்படுகின்ற 'கம்படி' அல்லது 'கழிகம்பு' என்றழைக்கப்படுகின்ற கலை மரபு, கிராமப்புற முஸ்லிம்களிடத்தில் ஆங்காங்கே இன்னமும் காணப்படுகிறது. இது **ஒரு கூட்டு கலை வடிவமாக இருக்கிறது.** தலைமை நிலையிலுள்ள ஒருவர் ஒரு சம்பவத்தை பாடலாகப் பாட, அதற்கேற்ப குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆண்கள் தமது கைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்தியுள்ள கழிகம்புகளை ஒருவரோடு ஒருவர் தட்டி ஓசை ஒலிப்பியவாறு, முறையான தாளலயத்தோடு, வலம் வருகின்ற கலைவடிவமாக இது இருக்கிறது. இங்கு கவிதை வடிவம், இசை மற்றும் உடல் அசைவுகள் (அதாவது நடனம்) என்பன ஒன்று கலந்து, பார்வையாளர்களுக்கு அற்புதமான அழகியல் உணர்வை ஏற்படுத்துகின்றன.

இதேபோன்று 'பக்கீர்கள்' அல்லது 'பாவாமார்கள்' எனப்படும் ஒரு பிரிவினர், கைகளில் மேளங்களை ஏந்தி, முறையான தாளலயத்தோடு ஒலி எழுப்பியவண்ணம், வரலாற்றுச் சம்பவங்களையும், முன்னோர்களின் செயற்பாடுகளையும் பாடல்களாகப் பாடி வந்திருக்கிறார்கள். இவை 'பக்கீர் பைத்துகள்' என்று அழைக்கப்படுகின்றன. சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர், இவர்களின் சமூக ஊடாட்டங்கள் சிறப்புப் பெற்றிருந்தன. பண்பாட்டு நிகழ்வுகளின்போதும், நிலாக்கால இரவுகளில் தெருச்சந்திகளிலும் இவர்களின் மேள ஒலியுடன் கூடிய பாடல்கள் பெரும் வெகுஜன ஈர்ப்பைப் பெற்றிருந்தன. மிக முக்கியமாக, நோன்பு காலங்களின் பின்னிரவு வேளைகளில், இவர்கள் வீதி வீதியாக மேளங்களைக் கொட்டியவாறு, தூங்கிக் கொண்டிருக்கின்ற மக்களை நோன்பு நோற்பதற்காக எழச் செய்கின்ற பணியை மேற்கொள்பவர்களாக இருந்தார்கள்.

இவற்றை விட, திருமண வைபவங்கள் போன்ற விசேட நிகழ்வுகளின்போது, பெண்களினால் மேளம் கொட்டுதல் என்பதும் ஒரு மரபாக நிலவி வந்திருக்கிறது. ஒரு பெரிய மேளத்தைச் சுற்றி அமர்ந்திருக்கின்ற பெண்கள், மெதுவாகவும் வேகமாகவும் வெவ்வேறு தாளலயங்களிலும், உரத்த ஒலியிலும் மேளத்தைக் கொட்டி, ஒரு மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்தினார்கள். இவற்றோடு 'சிலம்படி' அல்லது 'சிலம்பு வீச்சு' எனப்படுகின்ற தற்காப்பு கலைவடிவமும் இவர்கள் மத்தியில் காணப்பட்டது.

இத்தகைய கலை வடிவங்களை பாரம்பரியமாக நிகழ்த்தி வந்திருப்பவர்கள் சமூக ரீதியில் விளிம்புநிலை மாந்தர்களாக இருந்து வந்திருப்பவர்கள். சமூகத்தின் அல்லது சமூகத்திலுள்ள செல்வந்தர்களின் ஆதரவு இல்லாதபோது, இவற்றை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத நிலையில் இருப்பவர்கள். இந்த கலை வடிவங்கள் அனைத்தும் இப்போது ஏறத்தாழ மறைந்து விட்டநிலையில் அல்லது மறைந்து கொண்டிருக்கின்ற நிலையில் காணப்படுகிறன. இவற்றை மீட்டெடுக்கின்ற அல்லது ஆவணப்படுத்துகின்ற முயற்சிகள் சமூக அளவிலும் புலமைத்துவ அளவிலும் இன்னமும் முறையாக முன்னெடுக்கப்படவில்லை.

அரை நூற்றாண்டுக்கு முன்னர் முஸ்லிம் கிராமங்களில் மிக அடிக்கடி நிகழ்த்தப்பட்ட இத்தகைய கலை வடிவங்கள், இப்போது அரிதான நிகழ்வுகளாக மாறிவிட்டன. தனிநபர்கள் அளவிலும் சில முஸ்லிம் பாடசாலைகளிலும் இவை நிகழ்த்தப்படுகின்றபோதிலும் சமூக அளவில், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இவை தமது கலை வடிவங்கள் என அடையாளம் காணப்படவோ, இவை வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற உணர்வோ காணப்படவில்லை. பிற சமூகங்களைச் சேர்ந்த கல்விசார் புலமையாளர்கள், தமது சமூகங்களின் பாரம்பரிய கலைவடிவங்களை வளர்ப்பதிலும், அவற்றை நவீனமயப்படுத்துவதிலும் பல்கலைக்கழகங்களில் அவற்றை கற்கை நெறிகளாக உள்ளடக்குவதிலும் தாமே முன்னின்று செயற்படுகையில், இலங்கை முஸ்லிம்களிலுள்ள இத்தகைய கல்விசார் புலமையாளர்கள் தமது கலைவடிவங்கள் குறித்து பிரக்ஞைபூர்வமாக செயற்படாதவர்களாகவே இருந்து வருகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இலங்கை முஸ்லிம்கள் தமக்குரிய கலைவடிவங்கள் குறித்து சமூக அளவில் பிரக்ஞையும் செயல்முனைப்பும் அற்றவர்களாக இருந்து வந்திருப்பதால், நவீன கலை வடிவங்களான சினிமா, தொலைக்காட்சி போன்றவற்றில் தமது தடங்களை அறவே பதிக்காதவர்களாக இருந்து வருகிறார்கள். அடிப்படையில் ஒரு சமூகத்தின் கலை, (இலக்கிய) வடிவங்கள் அந்த சமூகத்தைச் சித்தரிப்பதாகவும், அந்த சமூகத்தின் வரலாற்றையும், வாழ்வையும், அது எதிர்கொள்கின்ற சவால்களையும், அதன் மகிழ்ச்சியையும், துயரங்களையும், வீரத்தையும், மாண்பையும் வெளிப்படுத்துவனவாகவும் அமைகின்றன. உயிரோட்டமுள்ள கலை, (இலக்கிய) வடிவங்களைக் கொண்டிருக்கின்ற ஒரு சமூகம் அவற்றினூடாக **தன்னைத்தானே சுயமதிப்பீட்டிற்குட்படுத்திக்** கொள்கிறது; தன்னைத்தானே அடையாளம் காண்கின்றது; தன்னுடைய பலம், பலவீனங்களை உணர்ந்து கொள்கிறது. அதேபோன்று, **அந்த சமூகம், தனது கலை, (இலக்கிய) வடிவங்களின் ஊடாக, பிற சமூகங்களுக்கு தன்னைப் பற்றித் தெரியப்படுத்துகிறது.** பிற சமூகங்கள், இலங்கை முஸ்லிம்களை ஒரு 'மூடுண்ட சமூகம்' என்று கருதுவதற்கு, அவர்கள் தமக்கென தனியான கலை, (இலக்கிய) வடிவங்களை உருவாக்கி, அவற்றின் மூலமாக தம்மைப் பற்றி பிறருக்கு சொல்ல முடியாதிருப்பதும் ஒரு பிரதான காரணமாக இருந்து வந்திருக்கிறது.

இந்நாட்டிலுள்ள பிற சமூகங்கள் தமக்கென உருவாக்கி, நவீனப்படுத்தி வந்திருக்கின்ற கலை வடிவங்களில், இலங்கை முஸ்லிம்களை எதிர்நிலையான முறையில் சித்தரித்து வந்திருக்கிறார்கள். திரைப்படங்களிலும், தொலைக்காட்சி நாடகங்களிலும் முஸ்லிம்களை கேலிக்குரிய முறையிலோ அல்லது அப்பாவியான பிற சமூகங்களைச் சேர்ந்த ஏழைகளை வியாபாரத்தில் ஏமாற்றி, பணம் சம்பாதிப்பவர்களாகவோ சித்தரித்து வந்திருக்கிறார்கள். இத்தகைய சித்தரிப்பு தொடர்ச்சியாக இடம்பெறுகையில், இது இந்த சமூகங்கள் மத்தியில் **இலங்கை முஸ்லிம்கள் பற்றிய எதிர்நிலை மனோபாவங்களை நிலையாகப் பதிப்பதாக** அமைந்து விடுகிறது. இத்தகைய நிலை தொடர்வதைத் தவிர்க்க வேண்டுமாயின், இலங்கை முஸ்லிம்கள் பிற சமூகங்களுக்கு தம்மை உண்மையாக வெளிப்படுத்தக் கூடிய கலை வடிவங்களையும், வழிமுறைகளையும் மீள உயிர்ப்பிக்க வேண்டும், அல்லது தமக்கு பொருத்தமான முறையில் புதிய வடிவங்களை உருவாக்க வேண்டும்.

பெரும்பாலும், கலை வடிவங்கள் மகிழ்ச்சியையும் பரவச உணர்வுகளையும் வெளிப்படுத்துபவைகளாக இருக்கின்றன. விசேட தினங்களில் நிகழ்த்தப்படுகின்ற கலைநிகழ்வுகள், அவை முடிவடைந்த பின்னரும் பிற தினங்களில் நினைவுபடுத்தப்பட்டு, சிலாகிக்கப்படுகின்றன. இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், இத்தகைய கலை வடிவங்களும் நிகழ்த்துகைகளும் கைவிடப்பட்டிருப்பதால், அவர்களுக்குரிய சிறப்பான தினங்களும், ஏனைய நாட்களும் மகிழ்வூட்டுகின்ற நிகழ்வுகளின்றி கடந்து செல்கின்றன.

ஒரு சமூகத்தின் வெவ்வேறு பிரிவினர்களை ஓரிடத்தில் ஒன்றிணைத்தல் என்பது, கலை நிகழ்வுகளில் உள்ளடங்கியுள்ள மிகச் சிறப்பான அம்சமாக இருக்கிறது. ஒரு கலை நிகழ்ச்சியின்போது, நிகழ்த்துபவர்கள், ஒழுங்கமைப்பாளர்கள், உதவியாளர்கள், பார்வையாளர்கள் என ஒரு சமூகத்தைச் சேர்ந்த அனைத்துப் பிரிவினரும் அதில் பங்கேற்கிறார்கள். இது ஒரு சமூகத்தின் மத்தியில் உறுதியான பிணைப்புகள் ஏற்படுவதற்கும் அதேநேரத்தில் புதிய பிரிவினர்கள் நிகழ்த்துகையில் பங்கேற்பதைத் தூண்டுவதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியமைக்கிறது. இதனூடாக, ஒரு சமூகம் தனது கலை வெளிப்பாடுகளை நிரந்தரமாகப் பேணுவதற்கும், அவற்றை புதிய தளங்களை நோக்கிக் கொண்டு செல்வதற்குமான சாத்தியங்கள் உருவாகின்றன. தமது கலை வடிவங்களில் அக்கறையற்றிருக்கின்ற இலங்கை முஸ்லிம்கள் இத்தகைய சாத்தியங்களையும் வாய்ப்புகளையும் இழந்தவர்களாக இருக்கிறார்கள். **முஸ்லிம்களின் இளைய பரம்பரையினர் சமூகப் பங்கேற்பிற்கான வழிகளும் வாய்ப்புகளுமின்றி சிறுசிறு குழுக்களாக பிரிந்தலைகின்ற மரபைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.** இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மத்தியில் உறுதியான தொடர்புகளும் இணைப்புகளும் ஏற்பட முடியாமல் இருப்பதற்கு, இத்தகைய பிரிந்தலைகின்ற மரபும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றதா என்ற வினா எழுப்பப்பட வேண்டியுள்ளது.

## முஸ்லிம்களின் கலைப் பிரக்ஞையின்மை: ஒரு பரிசீலனை

இலங்கை முஸ்லிம்கள், தமது பண்பாட்டு அம்சங்கள் தொடர்பாக, குறிப்பாக கலைகள் தொடர்பாக அக்கறையற்றவர்களாக இருந்து வந்திருப்பதற்கு வரலாற்று ரீதியான சில காரணிகள் பின்புலமாக அமைந்திருக்கின்றன.

1. இந்நாட்டில் ஐரோப்பிய காலனித்துவம் சுமார் நான்கு நூற்றாண்டுகள் நீடித்தது. இந்த ஐரோப்பிய காலனித்துவ அடக்குமுறைகளின் கீழ், இந்நாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டார்கள். மதமாற்றம், பண்பாட்டுத் திணிப்பு என்பன அவற்றுள் முக்கியமானவை. அவற்றில் இருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்கான வழிமுறையாக, இலங்கை முஸ்லிம்கள் தமது மதத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களாக மாறியும் மாற்றப்பட்டும் வந்திருக்கிறார்கள். ஐரோப்பியர்கள் அறிமுகப்படுத்தியிருந்த கல்வி, தொழில், பண்பாடு போன்ற அனைத்துமே கணிசமான அளவில் மதமாற்றத்துடன் இணைந்திருந்ததால் அவற்றிற்கான எதிர்வினையாக, **இஸ்லாத்திற்கு வெளியே பண்பாடு இல்லை** என்ற கருத்து இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் வலுவாக நிலைநாட்டப்பட்டது. மதத்தின் மீது இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட ஆழ்ந்த பற்றுதல் ஒரு விதத்தில், **காலனியத்திற்கு எதிரான வெகுஜன எதிர்ப்பாக அமைந்திருந்தது** எனக் கொள்ள முடியும்.
2. காலனிய காலகட்டத்திலும் அதற்குப் பின்னரும் தென்னிந்தியாவில் இருந்து பல மதபோதகர்கள் இங்கு வந்து இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் மதப்பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் பிற நாட்டினராகவும் பண்பாடு பற்றிய பன்முகப் பார்வைகள் இல்லாதவர்களாகவும் இருந்ததால், இவர்கள் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் மதத்தைப் பற்றியும் மதம் சார்ந்த வழிபாடுகளையுமே போதிப்பவர்களாக இருந்தார்கள். இந்நிலை, இலங்கை முஸ்லிம்களிடையே மத நம்பிக்கை மேலும் வலுவடைவதையும், தமது பண்பாட்டு அம்சங்களை மதத்துடன் மட்டும் இணைத்துப் பார்க்கின்ற போக்கையும் வலுப்படுத்தியது.
3. கடந்த நூற்றாண்டின் முன்னரைப் பகுதிவரை, தென்னிந்திய மதக் கல்விக் கூடங்களுக்கு (மத்ரசாக்கள்) சென்று அங்கு பயில்கின்ற போக்கு இந்நாட்டு முஸ்லிம்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது. இவ்வாறு அங்கு பயின்றவர்கள் இந்நாட்டு முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சங்கள் பற்றி அறிவூட்டப்படாதவர்களாக இருந்தார்கள். இப்பிரிவினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கற்ற மதபோதகர்களுடன் ஒப்பிடுகையில் கூடுதல் அறிவும் வாதத் திறமைகளும் பெற்றிருந்ததால், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இவர்களின் செல்வாக்கு வலுவாக இருந்தது. இதனால் இலங்கை முஸ்லிம்கள், தமது பண்பாட்டு அம்சங்கள் குறித்து தொடர்ந்தும் விளக்கப்படாதவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள்.

4. கடந்த நூற்றாண்டின் மத்திய பகுதியில் இருந்து, இந்நாட்டு முஸ்லிம்கள் மத்தியில் செயற்பட்டு வந்திருக்கின்ற இஸ்லாமிய இயக்கங்கள், இலங்கை முஸ்லிம்களுக்கென தனியான பண்பாட்டு அம்சங்கள் இருக்கின்றன என்பதை புரிந்து கொள்ளாததோடு அத்தகைய கருத்துக்கு எதிராகவும் செயற்பட்டு வந்திருக்கின்றன. இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் எஞ்சியிருந்த சில சடங்குகளும் சில நம்பிக்கைகளும் இஸ்லாத்திற்கு விரோதமானவை என இந்த இஸ்லாமிய இயக்கங்கள் பிரச்சாரப்படுத்தி வந்திருக்கின்றன, இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இருந்து அவற்றை பெருமளவில் அகற்றியுமிருக்கின்றன.

இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக, கலைகள் என்பவை தமக்கு விலக்கப்பட்டவை என்ற எண்ணத்தினால் பீடிக்கப்பட்டவர்களாக இலங்கை முஸ்லிம்கள் வாழ்கின்ற நிலை உருவாகி, நீடித்து வருகின்றது.

## (உ) தொடர்பூடகங்களும் இலங்கை முஸ்லிம்களும்

மனித உணர்வுகள், சிந்தனைகள், கருத்தியல்கள் என்பவற்றைத் தூண்டுவதிலும் வடிவமைப்பதிலும் தொடர்பூடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை சமூகம், மதம், பண்பாடு, அரசியல், விளையாட்டு, பொருளாதாரம் சார்ந்த பரந்த தகவல்களை வெகுஜனத்தளத்தில் வெளிப்படுத்துகின்றன. கருத்தியல் தளத்தில் சக்திமிக்கவைகளாகவும், வெகுஜன உணர்வுகளையும் முடிவுகளையும் வடிவமைக்கும் ஆற்றல் கொண்டவைகளாகவும் தொடர்பூடகங்கள் விளங்குகின்றன. தாம் நடுநிலையாகச் செயற்படுபவை என தெரிவிக்கின்றபோதிலும், தாம் சார்ந்துள்ள தேச, இன, மத, அரசியல் பின்புலங்கள் சார்ந்து தமது கருத்துகளை முன்வைப்பவைகளாகவே இவை செயற்படுகின்றன. இன்றைய சூழலில் தொடர்பூடகங்கள் என்பவை பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற அச்சு ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள், முகநூல், டுவிட்டர், யூ டியூப் போன்ற சமூக வலைத்தளங்கள்... என பன்முகத் தன்மை கொண்டு விளங்குகின்றன. இந்நாட்டிலுள்ள பிற சமூகங்கள் குறிப்பாக சிங்கள, தமிழ் சமூகங்கள் தமக்கென பல செய்திப் பத்திரிகைகளை பல்வேறு வடிவங்களில் கொண்டிருக்கின்றன. தினசரிப் பத்திரிகைகள், மாலைப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், 'கார்டூன்களைக்' (சித்திரக்கதை) கொண்ட சிறுவர் பத்திரிகைகள்... என இவை பன்முகப்பட்டிருக்கின்றன. இவற்றோடு, கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம், உடல்நலம், விளையாட்டு, கல்வி, பெண்கள், சிறுவர்கள் எனச் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும், ஒவ்வொரு துறைக்கும் என தனித்தனியான பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டு வருகின்றன. இவற்றின் மூலமாக அந்த சமூகங்களில் உள்ள ஒவ்வொரு பிரிவினரும், அறிவு ரீதியாகவும், உளரீதியாகவும் தம்மை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனால் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அவர்களுக்கென இன்றுவரை **ஒரு தினசரிப் பத்திரிகை கூட இல்லாத நிலையே** காணப்பட்டு வருகிறது. வெகுஜனப் பத்திரிகை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில், அண்மைய வருடங்களில் அவர்கள் மத்தியில் வெளியிடப்பட்ட ஒரேயொரு வாராந்த செய்திப் பத்திரிகையும் இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. இதைத் தவிர, சில இஸ்லாமிய அமைப்புகள் சஞ்சிகைகளையும், வாராந்த அல்லது மாதாந்த பத்திரிகைகளையும் வெளியிடுகின்றன. இவை பெருமளவில் மதம் சார்ந்த கருத்துக்களைக் கொண்டவையாகவும் தொடர்ச்சியின்றியும் வெளிவருகின்றன. இவ்வாறு பலவீனமான நிலையில் அச்சுத் தொடர்பூடகங்களைக் கொண்டிருப்பதால் தமக்கு மத்தியில் தொடர்ச்சியாகவும், உயிரோட்டமான முறையிலும் பல்வேறு விடயங்கள் குறித்து கருத்துப் பரிமாற்றங்களை செய்ய முடியாதவர்களாக இலங்கை முஸ்லிம்கள் இருந்து வருகிறார்கள். தமக்கென ஒரு தனியான செய்திப் பத்திரிகை வெளியிடப்பட வேண்டும் என்ற உணர்வும் அக்கறையும் இல்லாத நிலையே இவர்கள் மத்தியில் காணப்பட்டு வந்திருக்கிறது.

*(1884ஆம் ஆண்டில் அறிஞர் சித்திலெவ்வை அவர்கள் இலங்கை முஸ்லிம்களுக்கென "முஸ்லிம் நேசன்" என்ற தனியான வாரப் பத்திரிகையை தொடங்கி, தனது இறப்பு வரை அதை வெற்றிகரமாக நடத்தினார். இந்த மகத்தான தொடக்கமும் பணியும் அவரின் பின்னர் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தலைமுறையாக்கம் செய்யப்படவில்லை. இது, இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பண்பாட்டு அம்சங்கள் தொடர்பாக நிலவி வந்திருக்கின்ற அக்கறையின்மையை அறிந்து கொள்வதற்கான இன்னுமொரு துல்லியமான சான்றாக அமைகிறது.)* இன்று வானொலி, தொலைக்காட்சி என்பன சக்திமிக்க இலத்திரனியல் தொடர்பூடகங்களாக விளங்குகின்றன. பிற சமூகங்கள், அரச தொடர்பூடகங்களுக்கு சமாந்தரமாகவும் அவற்றுக்கு மாற்றாகவும் பல வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளை நடத்தி வருகின்றன. ஆனால் இலங்கை முஸ்லிம்கள் தமது சமூகத்திற்கென தனியானதும், சுயாதீனமானதுமான இலத்திரனியல் தொடர்பூடகங்கள் எதனையும் கொண்டிராதவர்களாக இருக்கிறார்கள். தம்மைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கும், தமது மத, பண்பாட்டு நிகழ்வுகளை ஒலி மற்றும் ஒளிபரப்புச் செய்வதற்கும் அரச அல்லது பிற சமூகங்களின் இலத்திரனியல் ஊடகங்களில் இவர்கள் முழுவதுமாக தங்கியிருக்கின்றார்கள். தம்மைப் பற்றிய நாளாந்த விடயங்களை மட்டுமன்றி, தமக்கு ஏற்படுத்தப்படுகின்ற அநீதிகள், தம்மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் போன்ற சமூகப் பாதிப்புமிக்க விடயங்களையும்கூட, உரிய நேரத்திலும், சரியாகவும் வெளிப்படுத்த முடியாதவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில், ஊடகங்கள் பாரபட்சமாக நடந்து கொள்கின்றன என்றும், அவை உண்மைநிலையை வெளிப்படுத்துவதில்லை என்றும் தமது கண்டனத்தையும், விரக்தியையும் வெளிப்படுத்துகின்ற பரிதாப நிலையிலேயே இவர்கள் இருந்து வருகிறார்கள்.

இவற்றை விட, சமூக வலைத்தளங்கள் என்பவை இன்று பெரும் சக்திமிக்க தொடர்பூடகங்களாக மாறியிருக்கின்றன. யாரும், எதையும் பதிவிடலாம், பகிரலாம் என்ற சுதந்திரத் தன்மையை சமூக வலைத்தளங்கள் வழங்கியிருக்கின்றன. தம்மை அடையாளப்படுத்தாமலும், வெளிப்படையாகவும் கருத்துக்களை முன்வைப்பதற்கான சாத்தியங்கள் இப்போது இந்த சமூக வலைத்தளங்களின் ஊடாக உருவாகியுள்ளன. பெரும்பாலும் தனிநபர்களினால் இவை அதிகமாக பயன்படுத்தப்படுகின்றபோதிலும், இன, மத, தேசிய அக்கறை கொண்ட நபர்கள் கூட்டாக இணைந்து கருத்துக்களைப் பகிர்வதற்கும், நிகழ்வுகளை வெளிப்படுத்துவதற்கும் என தளங்களை உருவாக்கி செயற்பட்டு வருகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சமூக வலைத்தளங்களை ஏனைய சமூகத்தவர்களைப் போன்று இலங்கை முஸ்லிம்களும் பயன்படுத்தி வருகிறார்கள். எனினும், சமூகத்தன்மை கொண்ட முன்னெடுப்புகளை விட தனிநபர்களின் சுயவெளிப்பாட்டு பதிவுகளே இவர்களினால் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சமூக வலைத்தளங்கள், தகவல் பரிமாற்றம் என்பதோடு, **கலை, இலக்கிய வடிவங்கள் நிகழ்தப்படுவதற்கான ஆற்றல்மிக்க அரங்குகளாகவும்** செயற்பட்டு வருகின்றன. பொதுவாக சினிமா, நாடகம், இசை, ஓவியம் போன்ற கலை வடிவங்களை உருவாக்குவதற்கும் அவற்றைக் காட்சிப்படுத்துவதற்கும் ஏராளமான உழைப்பும், பொருட்செலவும் அவசியமாகின்ற நிலையில், இவற்றை மிகக் குறைந்த செலவில் சமூக வலைத்தளங்களின் ஊடாக காட்சிப்படுத்தக் கூடிய சாத்தியம் உருவாகியுள்ளது. எனவே இலங்கை முஸ்லிம்கள் தமக்குப் பொருத்தமான கலை வடிவங்களையும், தகவல் தொடர்பு வடிவங்களையும் உருவாக்கி அவற்றை சமூக வலைத்தளங்களின் ஊடாக பரிமாற்றம் செய்வது குறித்து அக்கறை கொள்வது அவசியமாகிறது.

பிற சமூகங்களினால், செல்வந்த சமூகம் என்று கருதப்படுகின்ற இலங்கை முஸ்லிம்களின் எதார்த்த நிலை இவ்வாறுதான் இருக்கிறது. பிற சமூகங்களைப் போன்று இலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் செல்வந்தர்கள் இருக்கிறார்கள். **குறைந்தது ஒரு தினசரிப் பத்திரிகையையோ, ஒரு வானொலி அலைவரிசையையோ அல்லது ஒரு தொலைக்காட்சி அலைவரிசையையோ சொந்தமாக நடத்தக் கூடியளவுக்கு வசதி படைத்தவர்கள் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இருக்கிறார்கள்.** எனினும் இவ்வாறு செயற்பட வேண்டும் எண்ணம் கொண்டவர்கள் இன்னமும் அவர்கள் மத்தியில் உருவாகவில்லை. இந்த விடயத்தில் இலங்கை முஸ்லிம்களிலுள்ள புத்திஜீவிகள், புலமையாளர்கள், நிபுணர்கள் போன்றோர் முன்கையெடுத்து செயற்படுகின்ற முயற்சிகளையும் இன்றுவரை வலுவாக முன்னெடுக்கவில்லை.

தொகுத்துக் கூறின்:

1. இலங்கை முஸ்லிம்கள் தமக்கென தனித்துவமான பண்பாட்டு அம்சங்களைக் கொண்டவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இவர்களின் பண்பாடானது, மிகப் பெருமளவில் அவர்களுடைய மதநம்பிக்கையினால் வழிகாட்டப்படுவதாக அமைந்திருக்கிறது.
2. இஸ்லாத்தில் கூறப்படாத அல்லது இஸ்லாத்திற்கு வெளியே உள்ள பண்பாட்டு அம்சங்களைப் படிப்படியே கைவிட்டு வருகின்ற போக்கு இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் நிலவி வருகிறது.
3. முஸ்லிம்களினால் பயன்படுத்தப்படுகின்ற ‘ஹலால்’ என்ற அரபுப் பதமானது, ‘அனுமதிக்கப்பட்டது’ என்ற அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இப்பதம் உணவு விடயத்தில் மட்டுமன்றி, வாழ்வின் சகல அம்சங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. உணவு விடயத்தில், முஸ்லிம்களுக்கு மதரீதியாக அனுமதிக்கப்பட்டுள்ள உணவு வகைகளைக் குறிப்பிடுவதற்கு ‘ஹலால்’ என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது.
4. இந்நாட்டில் உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படுகின்ற ‘ஹலால்’ சான்றிதழ், அந்த உணவுகளில் முஸ்லிம்களுக்கு தடைசெய்யப்பட்டுள்ள உணவுக் கூறுகள் அடங்கியிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது முஸ்லிம்களுக்காக மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. எனினும் இந்நாட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹலால்' சான்றிதழ் வழங்குவது தொடர்பாக பிற சமூகங்கள் மத்தியில் எதிர்ப்புகளும், கண்டனங்களும் வெளிப்பட்டிருக்கின்றன. இதனால் சந்தையில் விற்பனைக்கிடப்படுகின்ற பொருட்களில் முஸ்லிம்களுக்கு அனுமதிக்கப்பட்ட உணவுகள் பற்றிய தகவல்களை அவர்களுக்கு அறிவிப்பதற்குரிய பொருத்தமான மாற்று வழிகளை முஸ்லிம்கள் கண்டுகொள்வது அவசியமாகிறது.

5. முஸ்லிம் பெண்கள் அணிகின்ற ஆடைகள், இஸ்லாத்தின் வழிகாட்டலுக்குட்பட்டவையாக அமைந்திருக்கின்றன. வரலாற்று காலம் தொட்டு, 'உடலை மறைத்தல்' என்ற வழிகாட்டலின்படி ஆடை அணிந்து வந்துள்ள முஸ்லிம் பெண்கள், இன்று அத்தகைய ஆடையின் நீட்சியாக, 'சல்வார் – கமீஸ்', 'அபாயா', 'ஹிஜாப்', 'நிகாப்' போன்ற ஆடைவகைகளை அணிகிறார்கள். இந்த ஆடைகள் அரபிய பெண்களினால் மட்டும் அணியப்படுபவை அல்ல. கூடவே, யூத, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிமல்லாத வேறு சமூகங்களைச் சேர்ந்த சில பிரிவினராலும் அணியப்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய ஆடைகளை அணிவதன் மூலம், இலங்கை முஸ்லிம் பெண்கள் தம்மை 'அரபியமயப்படுத்துகிறார்கள்' என்று கருதுவது தவறானது. இத்தகைய ஆடைகளை அணிகின்ற இலங்கை முஸ்லிம் பெண்களிடம் அத்தகைய எண்ணம் அறவே இருந்ததில்லை.

6. இலங்கையில், பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகின்றவர்களின் எண்ணிக்கை முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் அதிகமானதாக இருக்கிறது. மேலும், பல்கலைக்கழக கல்வியிலும், அரசாங்க உத்தியோகங்களிலும் அவர்கள் பெற்றிருக்கின்ற விகிதாசாரமானது, அவர்களின் தேசிய சனத்தொகை விகிதத்திலும் பார்க்க குறைவானதாக இருந்து வந்திருக்கிறது. இவற்றின் காரணமாக இலங்கை முஸ்லிம்கள், கருத்தியல் தளத்தில் பலவீனமானவர்களாகவும் சேவைகளைப் பெறுவதில் இடர்பாடுகளை எதிர்கொள்பவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

7. கலைகள் தொடர்பாக இலங்கை முஸ்லிம்கள் பிரக்ஞையற்றவர்களாக இருந்து வருகிறார்கள். தமக்குரிய தனித்துவமான கலை வடிவங்களை அடையாளம் காண்பதிலும் அவற்றை வளர்ப்பதிலும் நவீனப்படுத்துவதிலும் அவர்கள் அக்கறையற்று இருக்கிறார்கள். இலங்கை முஸ்லிம்களிலுள்ள மிகப் பெரும்பாலான புத்திஜீவிகள், புலமைசார் பிரிவினர், நிபுணத்துவப் பிரிவினர் போன்றோர் தமது சமூகத்தின் கலைகள் தொடர்பாக உணர்வுபூர்வமான அக்கறையை வெளிப்படுத்தாமல் இருந்து வந்திருக்கிறார்கள்.

8. வெகுஜன தொடர்பூடகங்கள் விடயத்தில் இலங்கை முஸ்லிம்கள் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் தமக்கென தனியான தினசரிப் பத்திரிகையையோ, தனியான வானொலி அலைவரிசையையோ அல்லது தொலைக்காட்சி அலைவரிசையையோ கொண்டிருக்கவில்லை. இதனால் தம்மைப் பற்றி தமக்கிடையிலும், பிற சமூகங்கள் மத்தியிலும் சரியான செய்திகளையும், விளக்கங்களையும் முன்வைக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடத்தைப் பாங்குகள்:

ஒரு சமூகத்தின் நடத்தைப் பாங்குகள் என்பவை அதன் பண்பாட்டு அம்சங்களில் ஒரு கூறாகவும் அதேநேரத்தில் அவை ஒரு **சமூகத்தின் கூட்டு உளவியலின் வெளிப்பாடாகவும்** அமைகின்றன. ஒரு சமூகத்தின் வாழிடம், அந்த வாழிடத்தில் தன்னை நிலைப்படுத்துவதற்காக அந்த சமூகம் முன்னெடுத்து வந்த செயற்பாடுகள், அது எதிர்கொண்ட சவால்கள், அதன் நம்பிக்கைகள், மதம் போன்ற பன்முகக் காரணிகளினால் கட்டமைக்கப்படுகின்ற கூட்டு உளவியலானது, அந்த சமூகத்தின் நடத்தைப் பாங்குகளைத் தீர்மானிக்கிறது. ஒரு குறித்த சூழமைவில், ஒரு சமூகத்தின் உறுப்பினர்கள், ஒரேவிதமான நடத்தைப் பாங்குகளைக் கொண்டிருப்பதற்கு இத்தகைய கூட்டு உளவியல் காரணமாக அமைகின்றது. இலங்கை முஸ்லிம்களின் நடத்தைப் பாங்குகளை கீழ்வரும் இரு தலைப்புகளின் பரிசீலிப்பது பொருத்தமாக இருக்கும்.

*(அ) பிற சமூகங்களை இணங்கி வாழுதல்.*

*(ஆ) நாட்டுப் பற்று*

## (அ) பிற சமூகங்களுடன் இணங்கி வாழ்தல்.

இலங்கை முஸ்லிம்களின் நடத்தைப் பாங்குகள் குறித்து, பிற சமூகத்தைச் சேர்ந்தவர்களினால் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், பொது நிகழ்வுகள் போன்ற இடங்களில் இலங்கை முஸ்லிம்களின் நடத்தைகள் ஏனைய சமூகங்களில் இருந்து வேறுபட்டவையாகவும், **தனித்தொதுங்கும் தன்மை கொண்டவையாகவும்** அமைந்திருப்பதாக கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. பொதுவெளியில், அதாவது வெவ்வேறு நோக்கங்களுக்காக ஒழுங்கு செய்யப்படுகின்ற பொதுவான நிகழ்வுகளில் முஸ்லிம்கள் கலந்து கொள்வதில் தயக்கம் காட்டுவதாகவும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் தம்மை 'தனிமைப்படுத்திக்' கொள்வதாகவும், பிற சமூகங்களுடன் இணங்கி வாழ்கின்ற தன்மைகள் குறைந்தவர்களாக இருப்பதாகவும் இவர்கள் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

பிற சமூகங்களுடன் இணங்கி வாழ்தல் என்பது வெவ்வேறு அம்சங்களைக் கொண்டிருக்கிறது. பிற சமூகங்களை மதித்தல், தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு உதவுதல், மற்றவர்களுக்கு இடைஞ்சல்களும் தொந்தரவுகளும் ஏற்படுத்தாத விதத்தில் வாழ்தல், பிற சமூகங்களின் உரிமைகளை மதித்தல், அந்த சமூகங்களின் மத, பண்பாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல், அந்த சமூகங்களுடன் திருமண உறவுகளை ஏற்படுத்தல்... என்பன இணங்கி வாழ்தலில் உள்ளடங்குகின்றன.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், பிற சமூகங்களுடன் இணக்கமான முறையில் அவர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. அறியப்பட்டுள்ள வரலாற்று ஆவணங்களின்படி, பண்டுகாபய மன்னனின் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து 'சோனகர்கள்' பிற சமூகங்களுடன் இணக்கத்துடன் வாழ்ந்து வந்திருப்பதை அறிய முடிகிறது. தனிநபர்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தவிர, இவர்கள் சமூக அளவில் பிற சமூகங்களுடன் முரண்பாடுகளிலும், மோதல்களிலும் ஈடுபட்டதாக வரலாற்று ஆவணங்கள் எவையும் குறிப்பிடவில்லை. அவர்கள் தமது நடத்தைப் பாங்குகளில் வெளிப்படுத்திய உயரிய பண்புகளுக்காக பண்டைய காலங்களில் அவர்களுக்கு கௌரவமான பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. பண்டைய மன்னர்களின் அரச சபைகளில் முஸ்லிம்களுக்கு உயர்ந்த பதவிகள் வழங்கப்பட்டிருந்ததோடு, சிறப்புக்குரிய தலதா மாளிகை, அஸ்கிரிய உட்பட பல விகாரைகளில் நிதி தொடர்பான பொறுப்பாளர்களாகவும் பிற கௌரவமான பணிகளிலும் இலங்கை முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

மேலும், இலங்கை முஸ்லிம்கள் தேசிய அளவில் முக்கியத்துவம் கொண்ட பங்களிப்புகளையும் செய்திருக்கிறார்கள். கண்டி போஹம்பரைச் சிறைச்சாலை, இந்நாட்டின் வரலாற்றுச் சான்றுகளை பேணுவதற்கும், காட்சிப்படுத்துவதற்குமான சுவடிக்கூடம் போன்றவற்றை அமைப்பதற்காக முஸ்லிம் தனவந்தர்கள் தமது காணிகளை வழங்கியுள்ளனர். இலங்கையின் தேசிய கொடியை வடிவமைப்பதிலும் ஒரு முஸ்லிம் அறிஞரின் பங்களிப்பு வழங்கப்பட்டது.

இவை அனைத்தும், இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டில், பிற சமூகங்களுடன் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வந்திருப்பதற்கான அழியாத சாட்சிகளாக இருக்கின்றன. இவ்வாறிருந்தும், இலங்கை முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் இணக்கத்துடன் வாழ்வதற்கு தயாரில்லாதவர்களாக இருக்கிறார்கள் என விமர்சிக்கப்படுவதற்கு சில காரணங்கள் இருக்கின்றன.

1. முஸ்லிம்கள் பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களுடன் மதமாற்றம் இன்றி திருமண பந்தத்தில் இணைவதற்கு தயாரில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்ற விமர்சனம் எபபோதும் இருந்து வருகிறது. மதரீதியில், முஸ்லிம் அல்லாதவர்களுடன் திருமணங்கள் செய்வது அவர்களுக்கு தடை செய்யப்பட்டிருப்பதால், அத்தகைய உறவை அவர்கள் முழுமையாகத் தவிர்க்கிறார்கள். ஆனால் இது தமது மதக்கட்டளையை முஸ்லிம்கள் பின்பற்றுகிறார்கள் என்பதைக் குறிக்கின்றதே தவிர, பிற சமூகங்களுடன் இணங்கி வாழ்வதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதைக் குறிக்கவில்லை.

2. சமூகங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வந்திருக்கின்றன. இவற்றில் பங்கேற்பதற்கு முஸ்லிம்கள் தயக்கம் காட்டுகிறார்கள் என்பது இன்னுமொரு விமர்சனமாக இருந்து வருகிறது. 'சுனாமி' அழிவின் பின்னரும், உள்நாட்டு யுத்தத்தின் பின்னரும், இன வன்முறைகளின் பின்னரும் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற இத்தகைய செயற்பாடுகள் மிகப் பெரும்பாலும் மாணவர்களையும், இளைஞர், யுவதிகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தன; தொடர்ந்தும் அமைந்திருக்கின்றன. இத்தகைய நிகழ்வுகளில் கருத்துப் பரிமாறல்கள், தெளிவூட்டல்கள் என்பவற்றோடு, களச்செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. பெரும்பாலும் இக்களச் செயற்பாடுகள் ஆண்களும், பெண்களும் இணைந்ததாகவும், அவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடல் அங்கங்கள் ஒருவரோடு ஒருவர் தொடுகையுறக் கூடியவகையிலும் ஒழுங்கமைக்கப்படுகின்றன.** முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், அந்நிய ஆண், பெண்களின் உடல்களை தொடுதல் என்பது அவசியமான நிலைமைகளில் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய களநிகழ்வுகள் தவிர்க்க முடியாத அவசிய நிகழ்வுகள் அல்ல. இவ்வாறான செயற்பாடுகளில் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் கலந்து கொள்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். இத்தகைய தயக்கமானது, பிற சமூகங்களுடன் இணக்கமாக வாழ்வதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதைக் குறிக்கவில்லை. பதிலாக அவர்கள் தமது மதத்தின் வழிகாட்டலை பின்பற்ற விரும்புகிறார்கள் என்பதைக் குறிக்கிறது. உண்மையில், **உடல் தொடுகையில்லாமலேயே இத்தகைய செயற்பாடுகளை வடிவமைக்கவும், அதனூடாக நல்லிணக்கத்தை முன்கொண்டு செல்லவும் முடியும்.** இவ்வகையிலான செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றபோது, ஏனைய சமூகங்களைப் போன்று முஸ்லிம்களும் இவற்றில் ஆர்வத்துடன் பங்கேற்கின்ற நிலை உருவாகும்.

சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தின் அடிப்படை அம்சங்களாக, பிற சமூகங்களின் மத, பண்பாட்டு அம்சங்களை புரிந்தேற்றுக் கொள்வதும், அந்த அம்சங்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் செயற்படுவதும் அமைந்திருக்கின்றன. எனவே இத்தகைய நல்லிணக்கச் செயற்பாடுகளில், ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் தமக்கு ஏற்ற விதத்தில் பங்குபற்றவும், பங்களிப்புச் செய்யவுமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்போது, உண்மையான நல்லிணக்கத்திற்கான அடித்தளம் உறுதியாக இடப்படுகின்ற நிலை உருவாகும். முஸ்லிம்கள் தினமும் ஐந்து முறை தொழுகையில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேலும் தமக்கு வழங்கப்படுகின்ற உணவு 'ஹலால்' தன்மையானதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இவற்றில் திருப்தியில்லாத உணர்வை அவர்கள் பெறுகின்றபோது இத்தகைய நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். எனவே வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கியதான இத்தகைய நிகழ்வுகளின்போது, **முஸ்லிம்களின் தொழுகை நேரங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, தொழுவதற்கான சூழல் உருவாக்கப்படும்போதும் அவர்களுக்கு பொருத்தமான உணவுகள் வழங்கப்படும்போதும்** நல்லிணக்கச் செயற்பாடுகளில் முஸ்லிம்களின் பங்களிப்பானது, பிற சமூகங்களின் பங்களிப்புக்கு இணையானதாக அமையும்.

3. இவற்றை விட, அலுவலகங்களில் தொழில் புரிகின்றபோதும் உயர்கல்வி நிறுவனங்களில் கற்கின்றபோதும் சக ஊழியர்களின் அல்லது சக மாணவர்களின் நெருங்கிய உறவினர்களின் மரணநிகழ்வுகளில் அந்த அலுவலகங்களிலும் கல்வி நிறுவனங்களிலுமுள்ள அனேகமாக அனைவரும் கலந்து கொள்வது நமது நாட்டில் ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. இத்தகைய நிகழ்வுகளில் முஸ்லிம்கள் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் கலந்து கொள்வதில் தயக்கம் காட்டுகிறார்கள் என்ற விமர்சனமும் முன்வைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்ளக் கூடாது என்ற கட்டுப்பாடு எதுவும் முஸ்லிம்களுக்கு இல்லை. பதிலாக இத்தகைய நிகழ்வுகளில் உரிய கண்ணியத்துடன் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான் முஸ்லிம்களுக்குச் சொல்லப்பட்டுள்ள முறைமையாக இருக்கிறது. மரணச் சடங்கானது தொலைதூர இடத்தில் நிகழும்போது, அதற்காக மேற்கொள்கின்ற பயணம், ஒரு மரணச் சடங்கிற்கான கண்ணியத்துடன் கூடிய பயணமாக அமையாமல் பெரும்பாலும் ஒரு உல்லாசப்பயணம் போல் அமைகிறது. இத்தகைய பயணங்களின்போது பொதுவாக ஆண்கள் மது அருந்துகின்ற வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான நிலைமையில் மரணச் சடங்கில் கலந்து கொள்வதில்தான் பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் தயக்கம் காட்டுகிறார்கள். அதேபோன்று பிற சமூகத்தவர்களின் வீடுகளில் வழங்கப்படுகின்ற உணவுகளைச் சாப்பிடுவதில் முஸ்லிம்கள் தயக்கம் காட்டுவதற்கு, அந்த உணவுகளின் 'ஹலால்' தன்மை குறித்த சந்தேகம்தான் காரணமே தவிர, பிற சமூகத்தவர்களின் உணவுகளை சாப்பிடக் கூடாது என்ற தடையோ அல்லது எண்ணமோ முஸ்லிம்களிடத்தில் காணப்படுவதில்லை.

உண்மையில், சமூக நல்லிணக்கம் குறித்தும், பிற சமூகங்களுடன் ஒற்றுமையாக வாழ்வது குறித்தும் இந்நாட்டிலுள்ள பிற சமூகங்களை விட **முஸ்லிம்கள்தான் கூடிய அக்கறை கொண்டவர்களாகவும், அதற்கான அவசியத்தைக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.** இந்நாட்டின் பொதுவான நீரோட்டத்திற்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாமல் இவர்கள் வாழ்ந்து வருகின்றபோதிலும், பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களினால் இவர்கள் அடிக்கடி வன்முறைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள், கடுமையான இழப்புகளைச் சந்திக்கிறார்கள். இதனால் இத்தகைய நிலைமைகள் தவிர்க்கப்பட்டு இந்நாட்டில் ஐக்கியமும், ஒற்றுமையும் நிலவ வேண்டும் என்ற அவசியத்தை மிகவும் கொண்டவர்களாகவும், அதற்காக தினமும் பிரார்த்திப்பவர்களாகவும் இலங்கை முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இத்தகைய ஒற்றுமையும், ஐக்கியமும் உருவாக்கப்படுவதற்காக தமது உச்சபட்ச பங்களிப்பை வழங்குவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

## (ஆ) இலங்கை முஸ்லிம்களின் நாட்டுப் பற்று

இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டை தமது தாய்நாடாகக் கருதுவதில்லை என்றும் அவர்களுக்கு இந்நாட்டின் மீது பற்று இல்லை என்றும் அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. எனவே இது பற்றி ஒரு ஆழ்ந்த பரிசீலிப்பு அவசியமாகின்றது.

இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டை தங்களுடைய தாய்நாடாகக் கருதியிருக்காதிருந்தால், ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கு எதிராக அவர்கள் போராடி, ஆயிரக்கணக்கில் தமது உயிர்களை இழந்திருக்க மாட்டார்கள்; இந்நாட்டின் சுதந்திரத்திற்காக ஏனைய சமூகங்களுடன் இணைந்து போராடியிருக்க மாட்டார்கள்; இந்நாடு பிளவுபடுவதற்கு எதிராக உறுதியான முறையில் செயற்பட்டு, தமது உயிர்கள், உடமைகள் என்பவற்றை இழந்ததோடு, தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கவும் மாட்டார்கள்; இவை அனைத்தையும் இலங்கை முஸ்லிம்கள் மேற்கொண்டமைக்கும், இத்தனை இழப்புகளையும், துயரங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தாங்கி வந்திருப்பதற்கும், அவர்கள் இந்நாட்டை தமது தாய்நாடாக கருதியதுதான் அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது.

எனினும் தாய்நாடு பற்றி இலங்கை முஸ்லிம்கள் கொண்டிருக்கின்ற உணர்வுகள், இந்நாட்டின் ஏனைய இரு பிரதான சமூகங்களில் இருந்தும் வேறுபட்டவையாக இருக்கின்றன. இந்நாடு தமது தாய்நாடு என்று கருதுவதன் மூலமாக, இலங்கை முஸ்லிம்கள் **இந்நாட்டின் மீதோ அல்லது அதன் குறிப்பிட்ட பகுதிகளின் மீதோ ஒருபோதும் உரிமை கொண்டாடுவதை** நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. எனவே அவர்களின் தாய்நாடு என்ற உணர்வானது, இயற்கையானதாகவும், இயல்பானதாகவும், அரசியல் தன்மையற்றதாகவும் இருந்து வந்திருக்கிறது. இந்நாடு இங்கு வாழ்கின்ற அனைத்து சமூகங்களுக்கும் உரியது என்ற நிலைப்பாடு அவர்கள் மத்தியில் வேரூன்றியிருக்கிறது.

## கிரிக்கட்டும் இலங்கை முஸ்லிம்களும்

இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டை தமது தாய்நாடாகக் கருதுவதில்லை என்பதற்கு, அவர்களில் ஒரு பகுதியினர் பாகிஸ்தான் கிரிக்கட் அணிக்கு ஆதரவு வழங்குகிறார்கள் என்பதை ஒரு நடைமுறை ஆதாரமாக முன்வைக்கிறார்கள். இலங்கை முஸ்லிம்களில் ஒரு பகுதியினர், பாகிஸ்தான் கிரிக்கட் ஆணியின் தீவிர ஆதரவாளர்களாக இருப்பதோடு, இலங்கைக்கு அணிக்கும், பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான போட்டிகளின்போதும் பாகிஸ்தான் அணியை ஆதரவளிப்பவர்களாக இருக்கிறார்கள். இது உண்மை. ஆனால், **ஒரேயொரு** விளையாட்டில், **ஒரேயொரு** வெளிநாட்டு அணிக்கு ஒரு சமூகத்தின் **ஒரு பிரிவினர்** மட்டும் ஆதரவளிப்பதை ஆதாரமாகக் கொண்டு, அந்த முழு சமூகமும், தனது தாய்நாட்டின் மீது பற்றற்றவர்களாக இருக்கிறார்கள் என்று முடிவு செய்வது தவறானது. ***இலங்கை முஸ்லிம்களில் பெரும்பகுதியினர் இலங்கை அணியின் ஆதரவாளர்களாவே இருந்து வந்திருக்கிறார்கள்.*** இலங்கை அணி வெற்றி பெறுகின்றபோது, முஸ்லிம்கள் செறிந்து வாழுகின்ற பகுதிகளில் இடம்பெறுகின்ற மகிழ்ச்சி ஆரவாரங்களும், பட்டாசு வெடிகளும் இதனை தெளிவாக உறுதிப்படுத்தும். எனினும், இலங்கை முஸ்லிம்களில் ஒரு சாரார் பாகிஸ்தான் அணியின் ஆதரவாளர்களாக இருந்து வருவதற்கு சில காரணங்கள் இருக்கின்றன.

1. ***மதரீதியாகக் காணப்படுகின்ற ஒற்றுமை:*** பாகிஸ்தான் அணியிலுள்ள மிகக் கூடுதலான விளையாட்டு வீரர்கள் முஸ்லிம்களாக இருக்கிறார்கள். இதனால் இலங்கை முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் மத அடையாளத்தின் கீழ் பாகிஸ்தான் அணிக்கு ஆதரவளிப்பவர்களாக இருக்கிறார்கள்

2. ***தனிநபர் பாதிப்புகள்:*** சர்வதேச அளவில் புகழ் பெற்றவர்களாகவும், ஜனரஞ்சகத்தன்மை கொண்டவர்களாகவும் உள்ள வீரர்கள், பாகிஸ்தான் அணியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறார்கள். உதைப்பந்தாட்டம், இசை, சினிமா போன்ற துறைகளில் பிரபல்யம் பெற்றவர்களை, வெவ்வேறு நாடுகளையும் சமூகங்களையும் சேர்ந்தவர்கள் விரும்புவது போன்று, பாகிஸ்தானில் தொடர்ச்சியாக உருவாகின்ற பிரபலமான வீரர்களின் தாக்கங்களுக்கு உள்ளாகி, அந்த அணியின் தொடர்ச்சியான ஆதரவாளர்களாக இவர்கள் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இலங்கையின் தொலைக்காட்சி அலைவரிசையில் கிரிக்கட் விளையாட்டு நேரடியாக ஒளிபரப்பப்படத் தொடங்கிய 1980 காலப் பகுதியில், கிரிக்கட் விளையாடுகின்ற நாடுகளில், பாகிஸ்தான் மட்டுமே ஒரேயொரு முஸ்லிம் நாடாக இருந்தது. அன்றைய காலகட்டத்தில் இலங்கை அணி ஒரு பலவீனமான அணியாகவும், பாகிஸ்தான் அணி பலம்பொருந்திய அணியாகவும் விளங்கியது. இவற்றின் காரணமாக பாகிஸ்தான் அணி வேறு அணிகளுடன் விளையாடுகின்றபோது, இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தான் அணியை ஆதரித்தார்கள். இவ்வாறு பாகிஸ்தானை ஆதரித்த இலங்கை முஸ்லிம்களில் ஒரு பிரிவினர், பின்னர் பாகிஸ்தான் அணியின் நிரந்தரமான ஆதரவாளர்களாக மாறினார்கள்.

3. ***அரசியல்சார்பு நிலை:*** பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே தொடர்ச்சியாக நீடித்து வருகின்ற பகைமையும், முரண்பாடுகளும், மோதல்களும் நிறைந்த அரசியல் உறவின் காரணமாக இலங்கை முஸ்லிம்களில் ஏறத்தாழ அனைவரும் அரசியல் ரீதியில் பாகிஸ்தானை ஆதரிப்பவர்களாக இருக்கிறார்கள். இந்த ஆதரவானது, இந்திய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்கும் இடையேயான கிரிக்கட் போட்டியில் இலங்கை முஸ்லிம்களில் அனேகமாக அனைவருமே பாகிஸ்தானை ஆதரிக்கின்ற நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. இவ்வாறு பாகிஸ்தானை ஆதரித்து வந்திருக்கின்ற இந்த இலங்கை முஸ்லிம்களில் ஒரு பிரிவினர், பின்னர் பாகிஸ்தான் அணியின் நிரந்தரமான ஆதரவாளர்களாக மாறியிருக்கிறார்கள்.

4. **இலங்கை கிரிக்கட் அணியின் இனக்கட்டமைப்பு:** ஒரு மிகச் சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களைத் தவிர, இலங்கை அணியிலுள்ள வீரர்களில் அனைவரும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். நாட்டின் தேசியக் கட்டமைப்பானது பல்லினத்தன்மை கொண்டதாக அமைந்திருக்கின்ற நிலையில், ஒவ்வொரு சமூகத்தையும் சேர்ந்தவர்கள், தமது சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களுடன் தம்மை அடையாளப்படுத்துவது என்பது, அனைத்துத் தளங்களிலும் இடம்பெறுகின்ற இயல்பான போக்காக இருக்கிறது. வீரர்கள் உள்வாங்கப்படுவதும், அவர்களின் தேர்வும் முற்றிலும் திறமையின் அடிப்படையில் இடம்பெற்று, அதனால் பிற சமூகங்களைச் சேர்ந்த வீரர்கள் இடம்பெறாத நிலை உருவாகின்றதாயின், அது குறித்து எந்த விமர்சனங்களும் எழ முடியாது. ஆனால், இன முரண்பாடுகளும், பகைமையும் எங்கும் நிலவுகின்ற இந்நாட்டில், கிரிக்கட் துறை மட்டும் அதில் இருந்து விதிவிலக்காக செயற்படுகிறது என்று கூறப்படுமாயின், அத்தகைய கூற்றின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகவே இருக்கும்.

இத்தகைய சூழலில் இலங்கை முஸ்லிம்களில் ஒரு பகுதியினர், பாகிஸ்தான் கிரிக்கட் அணிக்கு ஆதரவு வழங்குகிறார்கள் என்பது, தம்மை அடையாளப்படுத்துவதற்கான ஒரு உணர்வு நிலையே தவிர, இந்நாடு தமது தாய்நாடு இல்லை என்ற உணர்விலோ அல்லது இந்நாட்டுக்கு எதிராக செயற்பட வேண்டும் என்ற எண்ணத்தினாலோ அல்ல. இப்பொழுது மூன்று முஸ்லிம் நாடுகளின் அணிகள் கிரிக்கட் விளையாட்டில் பங்கேற்கின்றபோதிலும், பாகிஸ்தானைத் தவிர்ந்த ஏனைய இரு நாடுகளின் ஆதரவாளர்களாக, இலங்கை முஸ்லிம்களில் அனேகமாக யாருமில்லை என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற முடியும். மேலும் இலங்கை அணி, பாகிஸ்தான் தவிர்ந்த வேறு நாடுகளுடன் விளையாடுகின்றபோது, இலங்கை முஸ்லிம்களில் அனைவரும் இலங்கை அணியையே ஆதரிக்கிறார்கள். எனவே இலங்கை முஸ்லிம்களில் ஒரு பகுதியினர், பாகிஸ்தான் கிரிக்கட் அணிக்கு ஆதரவளிப்பது என்பது, கால, சூழல் நிலைமைகளினால் தீர்மானிக்கப்பட்டு வந்திருக்கின்ற ஆதரவாக மட்டுமே இருக்கிறது. பாகிஸ்தான் அணியின் ஆதரவாளர்களாக இருக்கின்ற இலங்கை முஸ்லிம்களில் யாரும் **பாகிஸ்தானைத் தமது தாய்நாடாக ஒருபோதும் கருதியதில்லை.** இந்த ஆதரவு விளையாட்டுடன் மட்டும் எல்லைப்பட்டிருக்கிறது. எவ்வாறு உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின்போது, பிரேஸில் அணியை, ஆர்ஜன்டீனா அணியை அல்லது வேறு ஒரு நாட்டு அணியை ஆதரிக்கின்ற இலங்கை ரசிகர்கள், அந்த நாடுகளை தமது தாய்நாடாக ஒருபோதும் கருதுவதில்லையோ, அதேபோன்றுதான் பாகிஸ்தான் கிரிக்கட் அணியை ஆதரிக்கின்ற இலங்கை முஸ்லிம் பிரிவினரும், பாகிஸ்தானை தமது தாய்நாடாகக் கருதியதில்லை.

## பொது இடங்களைக் கையாளும் முறை

இலங்கை முஸ்லிம்களின் மத்தியில் நாட்டுப்பற்று காணப்படவில்லை அல்லது அது குறைவாகக் காணப்படுகிறது என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதற்கு ஏதுவாக வேறு சில விடயங்களும் அமைந்திருக்கின்றன. **பொது இடங்கள், பொதுச் சொத்துக்கள், வரலாற்று ரீதியான இடங்கள், பிற மதத்தலங்கள், இயற்கைச் சூழல்கள் போன்றவற்றை பேணுவதிலும், அவற்றுக்குரிய கண்ணியத்தை வழங்குவதிலும் இலங்கை முஸ்லிம்களில் கணிசமானோர் அக்கறையற்று இருக்கிறார்கள்.** இன்னும் ஒரு பகுதியினர் அவற்றைச் சேதப்படுத்துபவர்களாக இருக்கிறார்கள்.

எந்த சமூகத்தினராக இருந்தபோதிலும், அவர்களுடைய மதத்தலங்கள் புனிதமானவை. குறிப்பிட்ட அந்த சமூகம் மட்டுமன்றி, ஏனைய சமூகங்களும் மதத்தலங்களின் புனிதத்தன்மையை மதிக்க வேண்டியது அவசியமானது. அத்தகைய மதத்தலங்களுக்குள்ளும், அதன் எல்லைக்குள்ளும் நுழைகின்றபோதும், அல்லது அத்தகைய இடங்களில் இடம்பெறக் கூடிய நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றபோதும், அவற்றின் புனிதத்தன்மை பேணப்பட வேண்டும். பாதணிகள், தொப்பிகள் மற்றும் தலைக்கவசங்கள் என்பவற்றை அகற்றுதல், கைபேசியில் பேசுவதைத் தவிர்த்தல், புகைப்படங்கள், 'செல்பிகள்', 'வீடியோக்கள்' போன்றவற்றை எடுப்பதைத் தவிர்த்தல், உரக்கப் பேசாதிருத்தல், சுவர்கள் போன்ற இடங்களில் எழுதுவதைத் தவிர்த்தல்... என்பன மதத்தலங்களுக்குள் பின்பற்றப்பட வேண்டிய பொதுவான அம்சங்களாக இருக்கின்றன. இவற்றை விட, ஒவ்வொரு மதத்தலமும், தனக்கென தவிர்க்கப்பட வேண்டிய குறிப்பான விடயங்களையும் கொண்டிருக்கிறது. எனவே இவற்றை முழுமையாகப் பின்பற்றுவது ஒவ்வொரு சமூகத்தினதும் கடமையாக இருக்கிறது.

அதேபோன்று, சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களில், அவற்றைப் பார்வையிடச் செல்பவர்கள் தவிர்க்க வேண்டிய விடயங்கள் பற்றி தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. இத்தகைய இடங்கள் புனிதமானவை என்ற நிலைக்கப்பால், ஒரு சமூகத்தினதும், நாட்டினதும் வரலாற்றையும், பாரம்பரியத்தையும் வெளிப்படுத்தி நிற்பவை. அத்துடன், இவை **மீள**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உருவாக்கப்பட முடியாதவை*** என்ற உண்மையும் இத்தகைய இடங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

எனினும் இலங்கை முஸ்லிம்களிடம் குறிப்பாக இளந்தலைமுறையினரிடம், இவ்வாறான இடங்களில் வலியுறுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதிலும் அந்த இடங்களின் புனிதத் தன்மையை புரிந்து, பேணுவதிலும் கணிசமான அளவில் அக்கறையின்மை காணப்படுகிறது. இத்தகைய இடங்களின் சுவர்களிலும், இவற்றின் சுற்றாடலிலுள்ள சிற்றுண்டிச்சாலைகள், மல-சல கூடங்கள், மரங்கள்... போன்றவற்றிலும் தமது பெயர்களையும், தம்மைப் பற்றிய தகவல்களையும் குறிப்பதில் ஆர்வமுள்ளவர்களாகவும், இத்தகைய இடங்களில் 'செல்பி' எடுப்பதில் தீவிரம் காட்டுபவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக கல்விச் சுற்றுலா செல்கின்ற மாணவர்கள் இத்தகைய வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களிலும் பொது இடங்களிலும் தமது பெயர்கள், தமது பாடசாலைகள் மற்றும் வேறு தகவல்களையும் குறிப்பதை அதிகளவில் மேற்கொள்கிறார்கள்.

முஸ்லிம் மாணவர்களையும் முஸ்லிம் தனிநபர்களையும் தவிர, ஏனைய சமூகங்களைச் சேர்ந்த நபர்களும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுகிறார்கள். எனினும், முஸ்லிம் நபர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகளவில் இருக்கிறது என்பதை இத்தகைய இடங்களில் குறிக்கப்பட்டுள்ள பெயர்களில் இருந்து அறிந்து கொள்ள முடியும். இதேபோன்று, பொது இடங்களான ரயில்வே நிலையங்கள், பஸ்நிலையங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், தியேட்டர்கள்,... போன்ற இடங்களிலும் பொதுப் போக்குவரத்து சாதனங்களிலும் இவ்வாறு தமது பெயர்களையும் பிற தகவல்களையும் குறிக்கின்ற பழக்கம் முஸ்லிம் தனிநபர்களிடம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இது ஒருவகை உளத்தூண்டலின் விளைவு, ***தன்னை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வநிலையின் ஒருவகை வெளிப்பாடு.*** தனது திறமையின் மூலமாகவும், தன்னிடமுள்ள ஆற்றல்கள் மூலமாகவும் மற்றவர்கள் தன்னை அறிந்து கொள்கின்ற நிலையை உருவாக்க முடியாதிருக்கின்ற நிலையில், பொது இடங்களில் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்ள விழைகின்ற தூண்டலின் வெளிப்பாடு இது. பாடசாலை மட்டத்தில் இருந்து வழங்கப்படக் கூடிய அறிவுரைகளின் மூலமாகவும் நேர்நிலை ஆளுமைக் கட்டமைப்பை வளர்ப்பதன் மூலமாகவும் வெளிப்படையாக செயற்படுவதற்கு மாணவர்களுக்கு உற்சாகமளிப்பதன் மூலமாகவும் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதில் இருந்து அவர்களைத் தவிர்ந்து கொள்ளச் செய்ய முடியும். இந்நாடு தமக்கும் உரிய நாடு, இந்நாட்டிலுள்ள அனைத்தையும் பேணி, பாதுகாப்பதன் மூலமாக தாமும் தமது சந்ததிகளும் இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களுடன் இணைந்து வாழ முடியும் என்ற உண்மை, முஸ்லிம்கள் மத்தியில் முறையாக வலியுறுத்தப்பட வேண்டும். இதன் மூலம், இந்நாட்டின் பொதுச் சொத்துகள், பொது இடங்கள், இயற்கை சூழல்கள், வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்கள் மற்றும் மதத்தலங்கள் போன்றவற்றின் மீது, இலங்கை முஸ்லிம்கள் உணர்வுபூர்வமான அக்கறையுடன் செயற்படுகின்ற நிலையை உருவாக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதரீதியான கருத்துகள்

இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டை தமது தாய்நாடாக உணர்வுபூர்வமாகக் கருதுவதில், மதத்தளத்தில் முன்வைக்கப்படுகின்ற கருத்துகளும் வரலாறு சார்ந்த கருத்துகளும் இந்நாட்டில் நிலவி வந்திருக்கின்ற இனங்களுக்கிடையிலான பகைமை உறவுகளும் கடுமையான தாக்கங்களைச் செலுத்தி வந்திருக்கின்றன. உலகிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் 'ஒரே சமூகம்' என்றும் அவர்கள் 'சகோதரர்கள்' என்றும் இஸ்லாம் வலியுறுத்துகிறது. இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தாம் உலக முஸ்லிம்களில் ஒரு அங்கம் என்றும், அதனால், ஒரு குறிப்பிட்ட நாடு சார்ந்து தம்மை தனியாக அடையாளப்படுத்துவது **இஸ்லாத்திற்கு முரணானதாக அமைந்து விடும்** என்றும் சில முஸ்லிம் பிரிவினர்களால் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்தக் கருத்தின் வலிமை காரணமாக, இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமைகள் கூட, **இந்நாடு இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களினதும் தாய்நாடு** என்ற உண்மையை உறுதியாக வலியுறுத்த முடியாத சங்கட நிலையில் இருந்து வந்திருக்கிறார்கள்.

அதேநேரத்தில், இலங்கை முஸ்லிம்கள் அரபிகளின் வழித்தோன்றல்கள் என்ற கருத்தை, இலங்கை முஸ்லிம்களின் வரலாறு குறித்து எழுதி வந்திருக்கின்ற அனேகமாக சகல முஸ்லிம் எழுத்தாளர்களும் தொடர்ச்சியாக முன்வைத்து வந்திருக்கிறார்கள். இவர்களைப் பின்பற்றி, இலங்கை முஸ்லிம்கள் பற்றி எழுதுகின்ற பிற சமூகங்களைச் சேர்ந்த பெரும்பாலான எழுத்தாளர்களும், இலங்கை முஸ்லிம்கள் அரபிகளின் வழித் தோன்றல்கள் என்ற கருத்தை முன்வைப்பவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு மதத் தளத்திலும், அரசியல் தளத்திலும், இலக்கியத் தளத்திலும் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்ற கருத்துகளின் விளைவாக இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டை தமது தாய்நாடாகக் கருதுகின்ற மனநிலையில் இருந்து தூரமாகின்ற நிலை உருவாகியிருக்கிறது.

மேலும், இலங்கையில் வாழ்ந்து வருகின்ற சமூகங்களுக்கிடையிலான உறவுகள், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து கடுமையான பாதிப்புகளுக்குள்ளாகி வந்திருக்கின்றது. 1915இல் இலங்கை முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனரீதியான வன்முறைத் தாக்குதல்கள்; அதன் பின்னர் இலங்கை முஸ்லிம்கள் மீதும், இந்நாட்டில் வாழ்ந்து வருகின்ற சிங்கள-பௌத்தர்கள் அல்லாத பிற சமூகங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற வன்முறைத் தாக்குதல்கள்; முப்பது வருட கால உள்நாட்டு யுத்தம்; இந்நாட்டில் வாழ்கின்ற சிங்கள சமூகங்களை, குறிப்பாக சிங்கள- பௌத்த மக்களைத் தவிர **வேறு எந்த சமூகத்திற்கும் இந்நாட்டின் மீது உரிமை இல்லை** என்ற கருத்து தீவிரமாக வலியுறுத்தப்பட்டு வந்திருப்பது... போன்ற விடயங்கள் இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டை தமது தாய்நாடாக உணர்வதில் பாதிப்புகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. தாம் வரலாறு நெடுகிலும் வாழ்ந்து வந்திருக்கின்ற நாட்டின் மீது ஒரு சமூகத்தினருக்கு உரிமை இல்லை என்று சொல்லப்படுவதும்; அந்த சமூகத்தினர் மீது தொடர்ச்சியாக வன்முறை தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதும்; அந்த சமூகத்தினரின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் உத்தரவாதம் இல்லாத சூழல் நிலவுவதும் அந்த சமூகத்தினர் தாம் வாழும் நாட்டை தாய்நாடாக உணர்வதில் எதிர்நிலைத் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவை. இத்தகைய ஒரு சூழலுக்குள் இலங்கை முஸ்லிம்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதன் காரணமாக, இந்நாட்டை உணர்வுபூர்வமாக தமது தாய்நாடாக கருதுவதில் அவர்கள் மத்தியில் பலவீனமான நிலை காணப்பட்டு வந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை முஸ்லிம்களின் அரபிய பூர்வீகம்

இலங்கை முஸ்லிம்கள் அரபிகளின் வழித்தோன்றல் என்பது ஒரு கருத்தாக வலியுறுத்தப்பட்டு வந்திருக்கின்ற அளவுக்கு, ***இலங்கை முஸ்லிம்கள் தம்மை அரபியர்கள் என உணர்வுபூர்வமாக கருதியதில்லை.*** தமது பூர்வீகம் குறித்து முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்ற இக்கருத்தானது அவர்களின் உணர்வுகளுடன் கலந்து, உறைந்து போயிருக்கவில்லை. இக்கருத்தாக்கம், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஒரு பெருமித உணர்வையும், பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்துவதாக அமைந்து வந்திருக்கிறது என்பது உண்மையே. செல்வச் செழிப்புமிக்க சமூகமாக கருதப்பட்டும், அகன்று, பரந்த சனத்தொகையைக் கொண்டும் இருக்கின்ற அரபிய சமூகத்தின் ஒரு அங்கமாக தாம் இருக்கிறோம் என்ற எண்ணம் இத்தகைய பெருமித உணர்வுகளை அவர்களிடையே ஏற்படுத்தியிருக்கிறது.

எனினும், 1980களில் இருந்து, இலங்கை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் பல்லாயிரக்கணக்கில் அரபு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றதன் பின்னர், அங்கு அவர்களில் பெரும்பாலானோர் எதிர்நிலையான அனுபவங்களைப் பெற்றார்கள். இலங்கை முஸ்லிம்களை தமது வழித்தோன்றல்களாக அரபிகள் கருதவில்லை என்ற உண்மையை உணர்ந்தார்கள். தாங்கள் வீட்டு வேலைக்காகவும், பிற தொழில்களுக்காகவும் செல்கின்ற மிகப் பெரும்பாலான அரபிகளின் ஊதாரித்தனமும், செருக்கான வாழ்க்கை முறையும், தமக்கு ஊதியம் வழங்குவதில் காட்டுகின்ற ஒழுங்கற்ற நிலையும், தொழில் செய்யும் இடங்களின் வசதிகள் குறைந்த நிலையும், கடினமான வேலைநிலையும் அரபிகள் பற்றிய எண்ணத்தில் எதிர்நிலைத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. மேலும் வீட்டு வேலைகளுக்காகச் செல்கின்ற பெண்கள் அனுபவிக்கின்ற கடினமான வேலை, ஒழுங்கற்ற ஊதியம் வழங்கல், உடல் ரீதியான வன்முறைகள் மற்றும் பாலியல் ரீதியான வன்முறைகள் போன்ற நிலைமைகளின் காரணமாக அரபிகள் பற்றிக் கொண்டிருந்த உயர்ந்த எண்ணங்கள் அவர்களிடம் இருந்து அகன்று விட்டன.

உண்மையில், ***தற்போதைய சூழலில், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தாம் அரபிகளின் வழித்தோன்றல் என்ற எண்ணம் ஏறக்குறைய முற்றாக அகன்று விட்டது.*** இலக்கியத் தளத்தில் ஒரு சில முஸ்லிம் எழுத்தாளர்கள் மட்டுமே அரபிகளின் வழித்தோன்றல் என்ற கருத்தாக்கத்தை முன்வைப்பவர்களாக இருக்கிறார்கள். பொதுவாக வழித்தோன்றல் என்பதில் இருக்க வேண்டிய இரத்த உறவுடன் கூடிய பூர்வீகத் தொடர்ச்சி என்பது இலங்கை முஸ்லிம்களுக்கும் அரபிகளுக்கும் இடையில் வலுவாக இல்லாத நிலையில், 'அரபிகளின் வழித்தோன்றல்' என்பது இலங்கை முஸ்லிம்கள் மீது என்றோ பூசப்பட்ட ஒரு அடையாளமாக மங்கி மறைந்து கொண்டிருக்கிறது. இந்த உண்மையை முஸ்லிம் கருத்தியலாளர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

## தொல்லியல் ஆய்வுகள்

இந்நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற தொல்லியல் ஆய்வுகளும், அர்த்தப்படுத்தல்களும் இலங்கை முஸ்லிம்களின் தாய்நாட்டு உணர்வில் தாக்கங்களை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. பொதுவாக பிற துறைகளைப் போன்று தொல்லியலிலும் சார்புநிலைமைகள் இடம்பெற்று வந்திருக்கின்றன. 19ஆம் நூற்றாண்டில் இருந்து, ஐரோப்பிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்கள், ஆய்வாளர்கள்... போன்றோரால் ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க, அவுஸ்திரேலிய கண்டங்களில் முன்னெடுக்கப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும், கள அவதானங்களும் ஒரு குறிப்பிட்ட வகையிலான அர்த்தப்படுத்தல்களுக்கு உள்ளாகி வந்திருக்கின்றன. தமது சமூகப் பண்புகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டிருந்த இந்தக் கண்டங்களின் மனித வரலாறு, நம்பிக்கைகள், பண்பாட்டு அம்சங்கள் போன்ற அனைத்தும் ஐரோப்பிய வகைப்பட்ட கருத்தியலின் அடிப்படையில் விளக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில், பிற நாட்டு அறிஞர்களினால் முன்னெடுக்கப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் குறைவாக உள்ளன, அதேவேளை இந்நாட்டின் சிங்கள, தமிழ் சமூக அறிஞர்களினால் இவை பெருமளவில் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவ்விரு சமூகத்தினரும் தமது பூர்வீகம், வரலாறு என்பவை தொடர்பாக தாம் கொண்டிருக்கின்ற கருத்துகள், மற்றும் எடுகோள்களின் அடிப்படையிலேயே தமது தொல்லியல் ஆய்வுகளையும், அர்த்தப்படுத்தல்களையும் மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். **இந்நாட்டின் வரலாற்றை, இனத் தன்மைகள் கடந்து புரிந்தேற்றுக் கொள்வதற்கும் விளக்குவதற்கும் பதிலாக, தத்தமது இனங்களின் சார்பில் அர்த்தப்படுத்துகின்ற அரசியல் பண்பே, இந்நாட்டின் தொல்லியல் ஆய்வின் வரலாறாக இருந்து வந்திருக்கிறது.** இங்கு தொல்லியல் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு இந்நாட்டின் பழமையையும், வரலாற்று முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துவது முதன்மை பெறவில்லை. பதிலாக, தமது சமூகத்தின் தொன்மையையும் உரிமையையும் நிலைநாட்டுகின்ற போக்கும் பிற சமூகங்களின் தொன்மையையும் உரிமையையும் மறுக்கின்ற போக்குமே முதன்மை பெற்றிருக்கின்றன. சுருக்கமாகக் கூறினால், **இங்கு தொல்லியல் ஆய்வுகள் அரசியல்மயப்பட்டுள்ளன.**

மேலும், புராதன சான்றுகளுக் கூடாக, வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பதிலாக, புதிதாக உருவாக்குகின்ற கட்டுமாணங்களை வரலாற்றுச் சான்றுகளாக நிறுவுகின்ற முனைப்பும் இங்கு முதன்மை பெற்றிருக்கின்றது. காடுகள், மலைகள், கடல் மற்றும் நதியோரங்கள் போன்ற பொது இடங்களிலும், வீதியோரங்களிலும், தெருமுனைகளிலும் இன, மத அடையாளங்களைக் கொண்ட கட்டுமாணங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை அனைத்தும் இறுதியில், இந்நாட்டின் தொல்லியல் செயற்பாடுகள் மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குவதாக அமைந்திருக்கின்றன.

சிங்கள, தமிழ் பிரிவினர்களின் இத்தகைய தொல்லியல்சார் செயற்பாடுகள், இந்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்களை தீவிரமாகப் பாதிப்பதாக அமைந்துள்ளன. **இலங்கை முஸ்லிம்கள் தொல்லியல் துறையில் அறவே ஈடுபடாதவர்களாக இருந்து வருகிறார்கள்.** தமது பூர்வீகம், வரலாறு என்பவை பற்றியும் அவற்றுக்கான சான்றாதாரங்களை வெவ்வேறு மூலங்களில் இருந்து கண்டுகொள்வது தொடர்பாகவும் - மிகச் சில விதிவிலக்குகளைத் தவிர - ஏறக்குறைய முழுமையாகவே அக்கறையற்றவர்களாக இவர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். சில இஸ்லாமிய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், இந்நாட்டு முஸ்லிம்களின் தொன்மையை சான்றுபடுத்துவதாக அமைந்திருந்த அடக்கஸ்தலங்கள், மதரீதியாக சிறப்புப் பெற்றிருந்த இடங்கள்... போன்றவற்றை அழித்துச் சிதைப்பவர்களாகவோ அல்லது அவற்றைக் கைவிடுகின்ற போக்கைக் கொண்டவர்களாகவோ இருந்து வந்திருக்கிறார்கள். அதேபோன்று, வருடத்திற்கொரு முறை ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த அனைவருக்கும் உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதாக அமைந்திருந்த, 'கந்தூரி' என அழைக்கப்படுகின்ற பொது ஒன்றிணைவு முறையும், மரணித்தவர்களை நினைவுபடுத்துகின்ற விதத்தில் குடும்ப உறுப்பினர்களும், நெருங்கியவர்களும் ஒன்றுகூடுகின்ற நிகழ்வுகளும் இவை போன்ற முஸ்லிம்களை ஒன்றிணைக்கின்ற பிற நிகழ்வுகளும் 'ஹராமானவை' (தடைசெய்யப்பட்டவை) என்ற பெயரில் பெருமளவில் கைவிடப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகளின் பின்னே அடங்கியிருக்கின்ற வரலாற்று அம்சங்களும், தம்மிருப்பை நிலைப்படுத்துவதற்காக இலங்கை முஸ்லிம்கள் பின்பற்றி வந்திருக்கின்ற சமூக உபாயங்களும் எந்தவித பரிசீலனைகளுக்கும் உட்படாமல் முற்றாகவே அழிந்துவிடக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது.

பெரும்பாலான இலங்கை முஸ்லிம்களின் குடியிருப்புகள் பற்றி நூறு அல்லது இருநூறு வருடங்களுக்குட்பட்டதான வரலாறு மட்டுமே அங்கு வாழ்கின்ற முஸ்லிம்களினால் சொல்லப்படக் கூடியதாக இருக்கிறது. அதற்கு முன்னர் அங்குள்ள முஸ்லிம்கள் எங்கே வாழ்ந்தார்கள் என்பதற்கு அவர்களிடம் எந்த பதிலும் இல்லை. இது, தமது வரலாறு பற்றியும், அதன் தொடர்ச்சி பற்றியும் இலங்கை முஸ்லிம்கள் கொண்டிருக்கின்ற அக்கறையின்மையையும் உதாசீன நிலையையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. வரலாற்றுத் தொடர்ச்சி பேணப்பட்டு வந்தமைக்கான முறைமைகள், ஆதாரங்கள் போன்ற எந்த ஒன்றிலும் சமூக அளவிலான அக்கறையையும் கரிசனத்தையும் கொள்ளாதவர்களாக இவர்கள் இருந்து வருகிறார்கள்.

முஸ்லிம் குடியிருப்புகளின் தொன்மைநிலை, அங்குள்ள பள்ளிவாசல்களின் பழமையின் மூலமாக கணக்கிடப்படுகின்ற பண்பே பெரிதும் காணப்படுகின்றது. எனினும் இந்த பள்ளிவாசல்கள் காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் வந்திருப்பதால் இத்தகைய கணக்கீடுகள் குறைபாடுகளை கொண்டவைகளாக இருக்கின்றன. மிகப் பழமை வாய்ந்த பள்ளிவாசல்கள் கட்டப்படுவதற்கு பயன்படுத்தப்பட்ட கற்பாலங்களும், மரக்குற்றிகளும், அங்கு அமைக்கப்படிருந்த **பெருந்தூண்களும் பெருங்கற்கால அம்சங்களுக்குரியனவாக** இருந்திருக்கின்றன. இந்தப் பள்ளிவாசல்கள் முழுவதுமாக உடைக்கப்பட்டு, புதிதாகக் கட்டப்படுகின்றபோது இந்த தொன்மையான அம்சங்கள் பற்றிய எந்த கரிசனையும் மேற்கொள்ளப்படாமல், எந்த ஒரு ஆதார மூலங்களும் எஞ்சாமல் அவை அழிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் கற்பாளங்கள், மரத்தூண்கள் போன்றவற்றில் செதுக்கப்பட்டிருந்த விபரங்களையும் குறியீடுகளையும் வாசித்து, அர்த்தப்படுத்துவதற்கு யாருமில்லாத நிலையில், அவை பிற சமூகங்களினால் உரிமை கோரப்படலாம் என்ற அச்சத்தில் உடனடியாக அழிக்கப்பட்டும் உள்ளன.

இதனால் இலங்கை முஸ்லிம்கள், ஒருபுறம் இந்நாட்டின் மீதான தமது இருப்பின் தொன்மையை வெளிக்காட்ட முடியாதவர்களாகவும் அதற்கான முயற்சிகளை புலமைத்துவ ரீதியிலும் ஆய்வடிப்படையிலும் முன்னெடுக்காதவர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள். மறுபுறம் தாம் வாழ்ந்து வருகின்ற பிரதேசங்கள், தமது அடையாளத்தைக் கொண்டிருக்கின்ற புராதன இடங்கள் போன்றவை, பிற சமூகத்தைச் சேர்ந்தவர்களினால் முற்றிலும் புதிய அர்த்தப்படுத்தல்களுக்கும் உரிமை கோரல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றபோது இவர்கள் திகைத்துச் செயலற்று நிற்கின்ற நிலைக்கு ஆளாகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டின் மேற்கொள்ளப்படுகின்ற தொல்லியல் ஆய்வுகளின் ஒரு பக்க விளைவாக, தொல்லியல் ஆய்வுக்குரிய பகுதியில் வாழ்ந்து வருகின்ற மக்களை அங்கிருந்து வெளியேற்றுவது அமைந்து வந்திருக்கிறது. இந்நிலைமை, இந்நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மட்டுமன்றி, சிங்கள மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது. இதனால் தமது பகுதிகளில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதை விரும்பாமல், அவற்றை எதிர்க்கின்ற மனநிலை சிங்கள மக்கள் மத்தியிலும் உருவாகியிருக்கிறது. இந்நிலைமைகளை கவனத்தில் கொண்டு, சமூக இருப்புக்கும் உரிமைக்கும் பாதிப்பில்லாத விதத்தில் தொல்லியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவை அனைத்தும் இலங்கை முஸ்லிம்கள், இந்நாட்டை உணர்வுபூர்வமாக தமது தாய்நாடாகக் கொள்வதிலும் தமது பூர்வீகத்தையும் வரலாற்றுத் தொடர்ச்சியையும் ஆதாரபூர்வமாக நிரூபணம் செய்வதிலும் தாக்கங்களை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. இலங்கை முஸ்லிம்கள் தமது வரலாற்றை மறந்த அல்லது மறக்கச் செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களின் இருப்பின் மீது கருத்தியல் ரீதியாகவும், வன்முறையாகவும் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் தம் வாழ்வின் மீதான அச்சத்தையும் நிச்சயமின்மையையும் அவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன. இந்நிலை, இலங்கை முஸ்லிம்களின் தாய்நாட்டுணர்வை மேலும் பலவீனப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் அரசியல் போக்குகள்:

இந்நாட்டின் அரசியல் தளத்தில் இலங்கை முஸ்லிம்கள் ஆற்றியிருக்கின்ற பங்களிப்புகள் பிற சமூகத்தவர்களினால் மட்டுமன்றி, இலங்கை முஸ்லிம்களினாலும் முறையாகச் சொல்லப்படவும் புரிந்து கொள்ளப்படவும் இல்லை:

இலங்கை முஸ்லிம்களின் முன்னோர்கள் பண்டைய இலங்கை மன்னர்களின் தூதுவர்களாக செயற்பட்டு, இந்நாட்டுக்கும் பிற நாடுகளுக்கும் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்; பின்னர் 1505இல் ஐரோப்பியர்கள் இந்நாட்டை ஆக்கிரமித்தபோது, அவர்களை எதிர்த்து முதன்முதலாக **சமூகமாகப்** போரிட்டவர்களாக இலங்கை முஸ்லிம்கள் இருந்தார்கள். போர்த்துக்கேயருடனும், ஒல்லாந்தருடனும் இடம்பெற்ற தொடரான யுத்தங்களினால் **பத்தாயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டதோடு,** அவர்களின் உடமைகள் பெரும் அழிவுக்குட்பட்டன. அத்துடன் தாம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடங்களில் இருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அதன் பின்னரான மூன்று நூற்றாண்டுகள் வரை அவர்களின் பொருளாதாரச் செயற்பாடுகளும், உரிமைகளும் அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தன. அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவும் ஒதுங்கியவர்களாகவும் வாழ்கின்ற நிலைக்கு ஆளானார்கள். **இந்நாட்டின் மீதான ஐரோப்பிய ஆக்கிரமிப்பினால், இலங்கை முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டது போன்று, இந்நாட்டிலுள்ள வேறு எந்த சமூகமும், சமூக அளவில் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டிருக்கவில்லை.**

இதன் பின்னர், இந்நாட்டின் சுதந்திரத்திற்காக, ஏனைய சமூகங்களின் அரசியல் தலைவர்களுடன் இணைந்து, இலங்கை முஸ்லிம்களின் தலைவர்களும் செயற்பாட்டார்கள். சுதந்திர போராட்ட காலகட்டத்திலும், சுதந்திரத்தின் பின்னரும், இந்நாடு பிளவுபடக் கூடிய எந்தவிதமான செயற்பாடுகளிலும், இலங்கை முஸ்லிம்களும், அவர்களின் தலைவர்களும் ஈடுபட்டதில்லை. சமஷ்டி ஆட்சிக்கான கோரிக்கை, ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை, பின்னர் தனிநாட்டுக் கோரிக்கை போன்ற எந்தவொரு அரசியல் முன்னெடுப்புகளுக்கும் சமூக அளவில் ஆதரவு வழங்காதவர்களாக இலங்கை முஸ்லிம்கள் செயற்பட்டு வந்திருக்கிறார்கள். இவ்வாறு **இந்நாட்டின் ஐக்கியத்திற்காகவும், பிளவுபடாத நாட்டிற்காகவும்** இலங்கை முஸ்லிம்கள் உறுதியாக செயற்பட்டு வந்திருக்கிறார்கள். தனிநாட்டை உருவாக்குவதற்காக தமிழ் ஆயுத அமைப்புகளினால் முப்பது வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டக் காலகட்டத்தில், வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் எடுத்த நிலைப்பாடுகள், இந்நாடு பிளவுபடாமல் தவிர்ப்பதற்கு மிக அடிப்படையாக விளங்கிய காரணிகளில் ஒன்றாக அமைந்திருந்தது. இதற்காக இலங்கை முஸ்லிம்கள் மிகக் கூடுதலான விலையைச் செலுத்தியவர்களாக இருந்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான முஸ்லிம்களின் உயிர்களும், அவர்களின் கோடிக்கணக்கான சொத்துகளும், முப்பது வருடங்களாக நீடிக்கின்ற அகதி வாழ்க்கையும் இதற்கான விலையாக இலங்கை முஸ்லிம்களினால் செலுத்தப்பட்டிருக்கிறது.

"வடக்கு – கிழக்கு முஸ்லிம்களுக்குச் சொந்தமான சுமார் 100,000 ஏக்கர் விவசாய நிலங்கள், வீடுகள், வியாபார நிலையங்கள், பண்பாட்டு இடங்கள் போன்றவற்றை தமிழ் போராளிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவந்தமாக எடுத்தார்கள். முஸ்லிம்களின் இழப்புகள் 110 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமானவை என கணக்கிடப்பட்டன" ('இலங்கை வட-கிழக்கில் உள்நாட்டில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீளகுடியேற்றம்' – 2003. 'முஸ்லிம் நியூஸ்')

இந்த மதிப்பீட்டிற்குப் பின்னரும் கிழக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதும் கொல்லப்பட்டதும் சொத்துக்கள் இழக்கப்பட்டதும் நிகழ்ந்தன. அவற்றையும் கணக்கில் கொள்ளும்போது, இழப்புகள் மேலும் அதிகமாக இருக்கின்றன. இந்த இழப்புகளுக்கான இழப்பீடுகள் இன்றுவரை முஸ்லிம்களுக்கு முறையாக வழங்கப்படவில்லை. **வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் தனிநாட்டுப் போராட்டத்திற்கு ஆதரவளித்திருப்பார்களாயின், இந்நாடு பிளவுபடுவதை தவிர்க்க முடியாது போயிருக்கும்** என்று பல்வேறு ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இத்தகைய நிலைமை இடம்பெறாமல் தவிர்ப்பதற்காகவும் இந்நாட்டின் ஐக்கியத்திற்காகவும் இழப்புகள் அனைத்தையும் தாங்கி, இம்முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு இந்நாட்டின் வரலாற்றில் என்றென்றும் நினைவு கூரத்தக்களவு முக்கியத்துவம் வாய்ந்தன.

இந்நாட்டின் சுதந்திரத்தில் இருந்து, ஏறத்தாழ நாற்பது வருடங்கள் வரை, இலங்கை முஸ்லிம்களின் அரசியலானது, இரு பிரதான கட்சிகளைச் சார்ந்ததாகவே முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்தக் காலகட்டத்திற்குரிய முஸ்லிம் அரசியல் தலைவர்கள், இந்நாட்டில் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைமைகளினால் முன்னெடுக்கப்பட்டு வந்த முற்றிலும் முரண்பட்ட, இரு வேறு அரசியல் கொள்கைகளுக்கிடையில், தமது அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்தார்கள். இவர்கள் இலங்கை முஸ்லிம்களுக்கும் இந்த நாட்டுக்கும் நலன் வாய்ந்ததாக அமையக் கூடிய கொள்கையின்பால் தமது ஆதவைத் தெரிவிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். இவ்வாறு சிக்கல் மிகுந்திருந்த நிலையில், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் நாட்டின் **ஐக்கியத்திற்கு முதன்மை வழங்கி,** இரு பெரும் கட்சிகளுக்கு தமது ஆதரவை வழங்கி வந்திருக்கிறார்கள்.

1980களின் பின்னரான இலங்கை முஸ்லிம்களின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக இருவேறு மதிப்பீடுகளை முன்வைக்க வேண்டிய அவசியம் உள்ளது:

(1) 1980களின் ஆரம்பத்தில் எழுச்சி பெற்று, 80களின் பிற்பகுதியில் கிழக்கு, வடக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஒரு உறுதியான அரசியல் கட்சியாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) நிலைபெற்றது. இதன் பின்னர் கிழக்கு, வடக்கிலுள்ள பெரும்பாலான முஸ்லிம்களும், தென்னிலங்கையைச் சேர்ந்த கணிசமான முஸ்லிம்களும் மரபுவழியாக இருபெரும் அரசியல் கட்சிகளுக்கு தாம் வழங்கி வந்த ஆதரவைக் கைவிட்டு, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பின்னால் அணிதிரண்டார்கள். இவ்வாறு உருவான இலங்கை முஸ்லிம்களின் தனியான அரசியல் இயக்கம், இந்நாட்டின் ஐக்கியத்திற்கு உறுதியான பங்களிப்பைச் செய்து வந்திருக்கிறது. நாடு பிளவுபடுவதை முற்றாக எதிர்த்து வந்திருக்கின்ற சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஒருபுறம் இந்நாட்டின் ஐக்கியத்தை வலியுறுத்தியதோடு, மறுபுறம் இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்திருக்கிறது.

உள்நாட்டு யுத்தம் தீவிரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த அன்றைய கட்டத்தில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னெடுப்புகள் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களினால் முறையாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளப்படவில்லை. ஆனால், உள்நாட்டு யுத்தம் முடிவடைந்துள்ள இன்றைய நிலையில், நாடு பிளவுபடுவது முற்றாக சாத்தியமற்றதாகி விட்டநிலையில், இந்நாட்டின் ஐக்கியத்திற்காகவும், **இந்நாட்டில் வாழ்கின்ற அனைத்து சமூகங்களின் உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்படுவதற்காகவும்,** சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்த செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்கின்ற சூழல் ஏற்பட்டுள்ளது. இந்நாடு பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கும், சர்வதேச ரீதியில் தனது முக்கியத்துவத்தையும், சிறப்பையும் உறுதியாகப் பேணுவதற்கும், இந்நாட்டில் வாழ்கின்ற சமூகங்கள் மத்தியில் நிலையான ஐக்கியமும், நீடித்த சமாதானமும் நிலவ வேண்டியது அவசியமாகின்றது. இத்தகைய நிலைமை உருவாவதற்காக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும், அதில் இருந்து பிரிந்து சென்று செயற்படுகின்ற ஏனைய முஸ்லிம் அரசியல் அமைப்புகளினதும் வகிபாகம் முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது.

(2) 1985க்குப் பின்னர் முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்திருக்கின்ற இலங்கை முஸ்லிம் அரசியல் தலைமைகளினதும், முஸ்லிம் அரசியல்வாதிகளினதும் அரசியல் முன்னெடுப்புகள் பிற சமூகங்கள் மத்தியில் எரிச்சலையும், வெறுப்பையும் கடும் கண்டனங்களையும் ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. காலஞ்சென்ற தலைவர் அஷ்ரப் அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட 'பேரம் பேசும் அரசியல்' முறைமையானது, அவருடைய மறைவுக்குப் பின்னர் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸினாலும் அதிலிருந்து பிரிந்து கட்சிகளாகவும் தனித்தும் இயங்குகின்ற அனைவராலும் எந்த மாற்றமுமின்றி அப்படியே இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகிறது.

## (அ) பேரம் பேசும் அரசியலின் விளைவுகள்

1989ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட பிரேமதாச அவர்களுக்கு, முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுத் தருவதற்குப் பகரமாக தேர்தல்களின் போதான வெட்டுப் புள்ளியை 5 வீதமாகக் குறைக்க வேண்டும் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை **பேரம்பேசி** அதை வென்று கொண்டது. அதேபோன்று 1994 நாடாளுமன்றத் தேர்தலில், ஐந்து நாடாளுமன்ற பிரதிநிதிகளை மட்டும் கொண்டிருந்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அன்று அரசாங்கத்தை அமைப்பதில் **வலுமிக்க பேரம் பேசும் சக்தியாக** அமைகின்ற குறிப்பான நிலைமை உருவாகியிருந்தது. இவை குறிப்பான நிலைமைகள் என்பதையும் இந்நிலைமைகளின்போது பின்பற்றிய அரசியல் உபாயங்களை, வேறுபட்ட அரசியல் சூழல்களில் பின்பற்றுவது பொருத்தமற்றது என்பதையும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையும் அக்கட்சியிலிருந்து பிரிந்தவர்களும் உணர்ந்து கொள்ளவில்லை. இதனால் இவர்கள் அதே 'பேரம் பேசும் அரசியல்' கொள்கையை தொடர்ச்சியாக பின்பற்றுபவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். 2020க்கு முன்னர் இடம்பெற்ற சகல நாடாளுமன்றத் தேர்தல்களின் முடிவுகளும் கூட்டு அரசாங்கம் என்பதை சாத்தியமாக்கியிருந்ததால், இந்த முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் தமது பேரம் பேசும் அரசியலை மீள்பரிசீலையின்றி தொடர்ந்தும் பின்பற்றுபவர்களாக செயற்பட்டார்கள்.

இவ்வாறு முஸ்லிம் கட்சிகள் பின்பற்றிய பேரம் பேசும் அரசியல் முறைமையானது சிங்கள, தமிழ் சமூகங்களின் மத்தியில் பெரும் எரிச்சலையும், வெறுப்பையும் கடும் கண்டனங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவதாக அமைந்து வந்திருக்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இந்நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருந்த உள்நாட்டு யுத்தத்தின் தாக்கங்களையும் அழிவுகளையும் இழப்புகளையும் தினந்தோறும் முகம் கொடுத்தவண்ணம் இருந்தார்கள். அவர்களின் பார்வையில், முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்துடன் இணைந்து தம்மீதான தாக்குதல்களுக்கு மறைமுகமாக உதவுகிறார்கள் என்ற கருத்து உருவாகியிருந்தது. அத்துடன், தமக்கென ஒதுக்கப்பட்ட அபிவிருத்திகள், வேலைவாய்ப்புகள் போன்றவற்றை முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது செல்வாக்கைப் பிரயோகித்து முஸ்லிம் சமூகத்திற்கு வழங்குகிறார்கள் என்ற எண்ணமும் தமிழ்மக்களிடம் காணப்பட்டது.

*(முஸ்லிம் அரசியல்வாதிகளை விட, அரசபடைகளிலும் ஊர்காவல் அமைப்புகளிலும் சில ஆயுதக் குழுக்களிலும் இணைந்து செயற்பட்ட முஸ்லிம் நபர்களின் செயற்பாடுகளும் தமிழ்மக்களின் உணர்வுகளில் பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தன. அன்றைய சூழலில், தமது சமூகத்தின் பாதுகாப்பு, இருப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் எண்ணத்துடன் இத்தகைய அமைப்புகளில் அந்த முஸ்லிம் நபர்கள் இணைந்து செயற்பட்டார்கள். இப்போது, அத்தகைய சூழல் முற்றாக அகன்று விட்ட நிலையில், முஸ்லிம் நபர்களின் செயற்பாடுகளும் முற்றாகவே அகன்று விட்டன. எனினும், தமிழ்மக்கள் மத்தியில், அந்த முஸ்லிம் தனிநபர்களின் செயற்பாடுகளினால் உருவான சமூகப் பகைமை உணர்வு இன்னமும் நீடிப்பதாகவே உள்ளது.)*

அதேவேளை, தமிழ் மக்களுடன் ஒப்பிடுகையில் சிங்கள மக்கள் மத்தியில், முஸ்லிம் கட்சிகள் பின்பற்றிய பேரம் பேசும் அரசியல் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துவனவாக அமைந்திருந்தன. ஒவ்வொரு தேர்தல் முடிவின் பின்னரும் தோல்வியடைந்த பிரதான கட்சியின் சிங்கள ஆதரவாளர்கள் மட்டுமின்றி, வெற்றியடைந்த கட்சியின் சிங்கள ஆதரவாளர்களும் முஸ்லிம் கட்சிகளின் பேரம் பேசும் அரசியல் உபாயத்தினால் கொதிப்படைந்தனர். தோல்வியடைந்த கட்சியின் ஆதரவாளர்களைப் பொறுத்தவரை, தமது கட்சி ஆட்சி அமைக்க முடியாமல் போனமைக்கு முஸ்லிம் அரசியல் கட்சிகள்தான் பிரதான காரணம் என்ற எண்ணத்தினால் அவர்கள் கொதிப்புற்றார்கள். ஒவ்வொரு தேர்தல் முடிவும் இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையே சிறிய அளவிலான வித்தியாசத்தையே வழங்கியிருந்தது. இவற்றில் எந்த பிரதான கட்சிக்கு முஸ்லிம் கட்சிகள் ஆதரவளித்தனவோ அந்தக் கட்சியே ஆட்சியமைக்கும் நிலையில இருந்தது. எனவே ஆட்சியமைக்க முடியாமல் போன கட்சியின் ஆதரவாளர்கள் இந்த முஸ்லிம் கட்சிகள் மீது வெறுப்பும் பகைமையும் கொண்டார்கள்.

மறுபுறத்தில் ஆட்சியமைத்த பிரதான கட்சியின் ஆதரவாளர்கள், தமது கட்சியின் அரசாங்கத்தில் முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் சக்திமிக்கதும், கூடுதல் எண்ணிக்கையிலுமான அமைச்சு, பிரதி அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகளைப் பெற்றுக் கொள்கின்ற நிலையை பார்த்துக் கொதிப்படைந்தார்கள். தாம் பெருமளவில் ஆதரவளித்து தெரிவு செய்த அரசாங்கத்தை, முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது சிறு எண்ணிக்கையிலான பிரதிநிதித்துவத்தைக் கொண்டு கட்டுப்படுத்துகிறார்கள் என்ற நிலைமையினால் அவர்கள் ஆத்திரப்பட்டார்கள். தாம் ஆதரவளித்த பிரதான கட்சியினால் தனது விருப்பப்படி சுயாதீனமாக அரசாங்கத்தை நிர்வகிக்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது என இவர்கள் கருதினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு **தமிழ் சமூகத்திலும் சிங்கள சமூகத்தின் சகல பிரிவினர் மத்தியிலும்** முஸ்லிம் அரசியல் கட்சிகள் மீது ஏற்பட்ட வெறுப்புணர்வுகள், பின்னர் படிப்படியே முஸ்லிம் சமூகத்தின் மீதான இனவெறுப்பாகவும் வன்மமாகவும் மாற்றமடைந்தன.

பிற சமூகங்கள் மத்தியில் - குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் - உருவாகியிருந்த இத்தகைய உணர்வுநிலையை இலங்கை முஸ்லிம் அரசியல் தலைமைகளும், புத்திஜீவிகளும், முஸ்லிம் வெகுஜனங்களும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. முஸ்லிம் அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரை அவர்கள் தமது பேரம் பேசும் சக்தியை மேலும் வலுப்படுத்தி, அதனூடாக தமக்கும் தம்மைச் சார்ந்த உயர்நிலை பிரிவினர்களுக்கும் எவ்வளவு தூரம் நலன்களையும் வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுக்க முடியும் என்பதிலேயே முதன்மையான கவனம் கொண்டிருந்தனர். இவர்களின் தேர்தல் பிரச்சாரங்களும் ஏனைய அரசியல் செயற்பாடுகளும் முஸ்லிம்களின் வாக்குகளை அதிகமாகப் பெற்றுக் கொள்வது என்பதையே இலக்காகக் கொண்டிருந்ததால், பிற சமூகங்களுடன் இணைந்ததான அரசியல் முறைமை பற்றி இவர்கள் நேர்மையான முறையில் கவனம் கொள்ளவில்லை.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தளத்தில், முஸ்லிம் புத்திஜீவிகளின் பங்களிப்பு இன்றுவரை காத்திரமாக இடம்பெறவில்லை. இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தொடர்பாக புலமைத்துவ மட்டங்களிலும், ஆய்வுத் தளத்திலும் இந்த முஸ்லிம் பிரிவினர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் குறைவாகவே உள்ளன. முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கருத்தியலில் செல்வாக்குச் செலுத்தக் கூடியதான கருத்துகளையும் வழிகாட்டல்களையும் முன்வைக்காத நிலையிலேயே இவர்கள் இருந்து வருகிறார்கள். முஸ்லிம் வெகுஜனங்களோ தாம் ஆதரவளிக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எத்தகைய அமைச்சுப் பொறுப்புகள் கிடைத்திருக்கின்றன என்பதில் மகிழ்ச்சி கொண்டார்கள்.

உண்மையில், முஸ்லிம் அரசியல் கட்சிகள் நீண்ட காலமாக கூட்டு அரசாங்கங்களில் அங்கம் வகித்து வந்திருக்கின்ற போதிலும், தொழில் வாய்ப்புகளிலும், ஏனைய சமூகநல, அபிவிருத்தித் திட்டங்களிலும், இலங்கை முஸ்லிம்கள் தமது தேசிய சனத்தொகை வீதத்திலும் பார்க்க மிகக் குறைந்த அளவிலான வாய்ப்புகளையே பெற்றுள்ளார்கள். முஸ்லிம் கட்சிகளின் தீவிர ஆதரவாளர்களில் ஒரு பிரிவினர், அரசாங்க நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் உயர் மட்ட பதவிகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொண்டார்கள். எனினும், வெகுஜன அளவில் முஸ்லிம்களின் சமூக நிலையில் பாரிய மாற்றங்கள் இடம்பெறவில்லை. வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் மிகப் பெரும்பாலானோர் தமது வாழ்விடங்களில் முறையாக மீளக் குடியமர்த்தப்படவில்லை, சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கென கட்டப்பட்ட வீடுகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இவற்றோடு, கடந்த பத்து வருடங்களாக முஸ்லிம்கள் மீது அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற வன்முறைத் தாக்குதல்களை இந்த அரசியல் தலைமைகளினால் அறவே தடுக்க முடியவில்லை.

இவ்வகையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கங்களுடன் இணைந்திருந்து, தமது சமூகத்திற்கு அளவுக்கு அதிகமான வாய்ப்புகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொடுக்கிறார்கள் என்று முன்வைக்கப்பட்டு வருகின்ற பிரச்சாரங்கள் தவறானவை என்பதோடு, இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் சகல துறைகளிலும் பின்தங்கிய நிலையிலும் பாதுகாப்பற்ற நிலையிலும் இருக்கிறார்கள் என்பதே எதார்த்த நிலைமையாக இருக்கிறது.

## (ஆ) நடுநிலை அரசியலின் தேவை

இலங்கை முஸ்லிம்கள் தமது சமூக, அரசியல் எதிர்கால நிலைமைகள் பற்றி பிரக்ஞைபூர்வமாகவும் தெளிவான முறையிலும் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய கட்டாய நிலையில் இப்போது இருக்கின்றார்கள். தாம் ஆதரவளிக்கின்ற அரசியல் கட்சிகளினதும் தலைமைகளினதும் **பேரம் பேசும் அரசியல் உபாயமானது தமக்கு இன்றுவரை சமூக அளவில் பெரியளவில் நன்மைகளைப் பெற்றுத் தரவில்லை என்பதையும்; இந்த பேரம் பேசும் அரசியல் முன்னெடுப்புகள் பிற சமூகங்கள் மத்தியில் தமக்கு எதிரான உணர்வு நிலைகளைத் தோற்றுவித்திருக்கின்றன என்பதையும்; தம்மீதான வன்முறைத் தாக்குதல்களுக்கு இந்த அரசியல் முறைமை ஒருவகையில் காரணமாக அமைந்திருக்கிறது என்ற உண்மையையும்** முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டிய கட்டத்தை அவர்கள் அடைந்து விட்டார்கள். தனிநபர்களுக்கிடையிலான சிறிய சம்பவங்கள் கூட, தம்மீது சமூக அளவில் வன்முறைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்படக் கூடிய அளவுக்கு உருப்பெருப்பிக்கப்படுவதன் பின்னணியில், தமது அரசியல் தலைமைகள் பின்பற்றி வந்திருக்கின்ற பேரம் பேசும் அரசியலுக்கு பிரதான பங்கு இருக்கிறது என்ற உண்மையை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே பேரம் பேசும் அரசியல் *(Bargaining politics)* உபாயத்திற்குப் பதிலாக, **நடுநிலை அரசியலை** *(Neutral politics)* நோக்கி முன்செல்ல வேண்டிய அவசியத்தை இலங்கை முஸ்லிம்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்நாடு பல்லின சமூகங்களைக் கொண்ட நாடு. இனம், மதம், மொழி என ஒன்றுக்கு மேற்பட்ட அடையாளங்களின் கீழ் மக்கள் வாழ்கின்ற சூழலில், பிற சமூகங்களுடன் இணக்கமாகவும், அவர்கள் மத்தியில் வெறுப்புணர்வுகளும் பகைமையும் தூண்டப்படாத முறையிலும் வாழ வேண்டிய கடப்பாடு இந்நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் இருக்கிறது. இந்நாட்டின் சகல பிரதேசங்களிலும் பரந்து வாழ்பவர்கள் என்றவகையிலும் சிங்கள, தமிழ் சமூகங்களைச் சேர்ந்த பிரிவினர்களின் வன்முறை நடவடிக்கைகளினால் பெரும் பாதிப்புகளுக்குட்பட்டுள்ளவர்கள் என்றவகையிலும் பிற சமூகங்களுடன் ஒற்றுமையாகவும் இணக்கமாகவும் வாழ வேண்டிய அவசியத்தைக் கொண்டவர்களாக இலங்கை முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இந்த உண்மை இன்றைக்கோ அல்லது இன்னும் சில வருடங்கள் பிந்தியதான கிட்டிய எதிர்காலத்திற்கோ மட்டும் உரியதல்ல. மாறாக இந்த உலகம் உள்ளவரை, இந்நாட்டில் வாழவிருக்கின்ற அத்தனை தலைமுறைகளுக்குமான எதார்த்தமாக இது இருக்கின்றது.

நடுநிலை அரசியல் என்பது, அடிப்படையில் சார்புத்தன்மை அற்றது. இந்நாட்டிலுள்ள இருபெரும் (அல்லது மூன்று, நான்கு...) கட்சிகளில் எந்த ஒன்றையும் சாராமல், இந்நாட்டின் முன்னேற்றத்தையும், சமூக அமைதியையும் இலக்காகக் கொண்ட அரசியல் முறைமையாக இது அமைய வேண்டியுள்ளது. பேரம் பேசுவதற்கூடாக எந்த கட்சியுடன் அரசாங்கத்தில் இணைந்தாலும், அது முழு சிங்கள மக்களினதும் (தமிழ் மக்களினதும்) எதிர்ப்பிற்குள்ளாகி வந்திருப்பதை கடந்த முப்பது வருடகால அரசியல் அனுபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்தியிருக்கிறது. இந்நிலையில் இத்தகைய பேரம்பேசும் நிலையை கைவிட்டு, ஒரு தேர்தலில் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் அரசியல் நிலைப்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய கட்சிகளும் அரசியல் தலைமைகளும் இப்போது இலங்கை முஸ்லிம்களுக்கு அவசியமாகின்றன. ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்ற முனைப்பைக் கைவிட்டு, இந்நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களின் நலன்களையும் உணர்வுகளையும் மதித்து அவற்றுக்காக செயற்படுபவைகளாக முஸ்லிம் கட்சிகளும் அவற்றின் தலைமைகளும் தம்மை வடிவமைக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள்.

எனினும் இத்தகைய கட்சிகளாகவும் தலைமைகளாகவும் அமையக் கூடிய தகைமையை நடைமுறையிலுள்ள முஸ்லிம் கட்சிகளும் தலைமைகளும் இன்றுவரை வெளிப்படுத்தவில்லை. இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள முஸ்லிம் அரசியல் கட்சிகளும் தலைமைகளும் தம்மை முற்றாக மாற்றிக் கொள்வார்கள் என்பது மிகக் குறைந்த சாத்தியப்பாட்டைக் கொண்டதாகவே இருக்கிறது. அதேநேரத்தில், இக்கட்சிகளுக்கு மாற்றாக தம்மை நிலைநிறுத்த முயற்சிக்கின்ற கட்சிகளும், தலைமைகளும் **பகுதி நேரமாக அரசியலை** முன்னெடுக்கின்றார்களே தவிர ஒரு முழுநேர அரசியல் செயற்பாட்டை தமது நிகழ்ச்சிநிரலில் கொண்டவர்களாக இன்னமும் மாற்றம் பெறவில்லை. இத்தகைய ஒரு துர்பாக்கியமான நிலையில், தமது சமூகத்தின் எதிர்காலம் குறித்து நேர்மையான அக்கறை கொண்டுள்ள இலங்கை முஸ்லிம் புலமைத்துவப் பிரிவினரும் புத்திஜீவிகளும் பரந்ததும் ஆழமானதுமான உரையாடல்களையும், வெகுஜன செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டிய கடப்பாடுகளைக் கொண்டுள்ளார்கள்.

## (இ) இனப் பெயர் கொண்ட அரசியல் கட்சிகள்

இனங்களுக்காகவும், இனங்களின் பெயர்களைக் கொண்டும் செயற்படுகின்ற அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் அவ்வப்போது இந்நாட்டில் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறு இயங்குகின்ற கட்சிகளினால் நாட்டின் ஐக்கியத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் சீர்குலைவுகள் ஏற்படுவதாக இத்தகையோர் வாதிடுகிறார்கள்.

இந்த வாதம் தர்க்க நியாயமற்றது. ஒரு கட்சியின் பெயரை மாற்றுவதால் மட்டும் அக்கட்சியின் சமூக உள்ளடக்கத்தை மாற்றி விட முடியாது. அதேநேரத்தில் **சமூக அடிப்படையில் கட்சிகள் செயற்பட முடியாது என்று வாதிடுவது, சமூகங்களின் உரிமைகளை மறுப்பதாக அமைகிறது.** நடைமுறையிலுள்ள அரசியல் கட்சிகளினால், தங்களுடைய நலன்களை உத்தரவாதப்படுத்த முடியாதுள்ளதாக ஒரு சமூகமோ, சமூகப்பிரிவுகளோ கருதும்போது, அவை தமக்கென புதிய கட்சியை, அல்லது கட்சிகளை உருவாக்குகின்றன. இனங்களை மட்டுமன்றி, பிரதேசங்களை மையப்படுத்தியதாகவும், வர்க்கங்கள், பெண்கள சுற்றாடல் போன்றவற்றை மையப்படுத்தியதாகவும் அல்லது இன்னும் பல நோக்கங்களின் அடிப்படையிலும் உலகெங்கும் கட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒரு நாட்டில் பல **கட்சிகள் செயற்படுவதில்தான் ஜனநாயகத்தின் அடிப்படையே தங்கியிருக்கின்றது.** ஒரு நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களினதும், சமூகப் பிரிவுகளினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்களை உத்தரவாதப்படுத்தும் வகையிலான அரசியல் சாசனத்தை உருவாக்குதல், பக்கச் சார்பற்ற முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் போன்ற நடைமுறைகளின் மூலமாக, நாட்டின் ஐக்கியத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் கட்சிகளினால் ஏற்படக் கூடிய அபாய நிலைமைகளைத் தவிர்க்க முடியும். இந்நாட்டில் சிங்கள மற்றும் தமிழ் சமூகத்திற்கென பல அரசியல் கட்சிகளும் அரசியல் அமைப்புகளும் செயற்பட்டு வருகின்றன. இத்தகைய அமைப்புகள் சிலவற்றின் பெயர்களில் அந்தந்த சமூகங்களை அடையாளப்படுத்துகின்ற பெயர்கள் உள்ளடக்கப்படாதபோதிலும், அவற்றின் சமூக உள்ளடக்கமும், அவற்றின் நிர்வாக மையங்களும், அங்கத்துவமும் முழுமையாக சிங்கள நபர்களையும் தமிழ் நபர்களையும் கொண்டவைகளாக இருக்கின்றன.

இவ்வாறு சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கென பல அரசியல் நிறுவனங்கள் செயற்படுகின்றன என்பது **ஏற்கனவே செயற்படுகின்ற அரசியல் நிறுவனங்களினால் தமது நலன்கள் பேணப்படவில்லை என அந்த சமூகங்களின் வெவ்வேறு பிரிவினர்கள் உணர்கிறார்கள்** என்ற உண்மையைக் குறிக்கிறது. சமூகங்களுக்கு இடையிலான அரசியல் ஐக்கியம் என்பது, அவர்கள் ஒன்று அல்லது இரண்டு அரசியல் கட்சிகளுக்கு மட்டும் தமது ஆதரவுகளை வழங்குகிறார்கள் என்பதால் தீர்மானிக்கப்படுவதில்லை. உண்மையில், வெவ்வேறு சமூகங்களினதும் சமூகப் பிரிவுகளினதும் அரசியல் கட்சிகளுக்கு இடையே உறுதியாகவும் நேர்மையாகவும் ஏற்படக் கூடிய இணைவுகள்தான் சமூக ஐக்கியத்தை நிரந்தரமாக உறுதிப்படுத்துவதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவாக

இந்த நாடு பல்லின மக்கள் வாழ்கின்ற ஒரு நாடு. பண்டைய மன்னர்களுக்கிடையில் இடம்பெற்ற முரண்பாடுகளையும் யுத்தங்களையும் தவிர, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை சமூகங்களிடையே நல்லிணக்கமும், ஒற்றுமையும் சமாதானமும் நிலவி வந்திருக்கின்ற ஒரு சிறப்பான நாடாக நமது நாடு விளங்கியிருக்கிறது. இந்நாட்டில் இயற்கையாகவே விளைந்த பெறுமதிமிக்க கற்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் ஏனைய அரிதான பொருட்கள் என்பவற்றை வாங்குவதற்காகவும் இந்நாட்டின் புனிதத் தன்மைக்காகவும் பண்டைய காலங்களில் பிறநாடுகளைச் சேர்ந்தவர்கள் வருகை தந்த சிறப்பான வரலாற்றை இந்நாடு கொண்டிருக்கிறது.

இந்நாட்டின் மனித வரலாறானது, மனிதத் தொடக்கத்தின் ஆரம்ப கட்டம் வரை பின்னோக்கிச் செல்வதாக தொல்லியல் ஆய்வுகள் சான்று பகர்கின்றன. 'பலாங்கொடை மனிதன்' இதற்கு ஒரு சிறந்த சான்றாக அமைந்திருக்கிறது. சிதைவுறாமலும், சிதைவடைந்தும் காணப்படுகின்ற பண்டைய கட்டிடங்களும், அரண்மனைகளும், பாரிய குளங்களும், வடிகாலமைப்புகளும், குகைகளும், ஓவியங்களும், பிரமாண்டமான சிற்பங்களும் இந்நாட்டில் வாழ்ந்த பண்டைய மக்களின் அறிவையும், தொழில்நுட்பத்தையும், கலைத்திறனையும் வெளிப்படுத்துகின்ற சான்றுகளாக விளங்குகின்றன. ஒவ்வொரு வருடமும் வரட்சியையும், வெள்ளத்தையும் அனுபவித்து வந்திருக்கின்றபோதிலும், குளங்களையும் தொடரான வடிகாலமைப்புகளையும் உருவாக்கி அத்தகைய இயற்கை அனர்த்தங்களை எதிர்கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்ற அன்றைய மக்களின் அறிவும் ஓர்மமும், திடநம்பிக்கையும், தைரியமும் என்றும் போற்றுதலுக்குரியனவாக அமைந்திருக்கின்றன. இத்தகைய ஒரு மிகச் சிறந்த நாட்டில் வாழ்கிறோம் என்பதே பெருமிதத்திற்குரிய இருப்பாக எமக்கு அமைந்திருக்கிறது. ஏடறிந்த இலங்கையின் வரலாறானது, இந்நாட்டில் வாழ்ந்த சகல சமூகங்களும், தமக்குரிய வாழிடப் பரப்பிலும், பிற சமூகங்களுடன் பரஸ்பரம் இணைந்தும் தங்கியும் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்ற உண்மையை தெளிவாக எடுத்தியம்புகிறது. அந்நிய ஆக்கிரமிப்புகளின்போது, இந்நாட்டில் வாழ்ந்த சகல சமூகத்தினரும் அத்தகைய ஆக்கிரமிப்புகளை எதிர்த்துப் போராடியிருக்கின்றனர். அதேபோன்று, இந்நாட்டின் சுதந்திரத்திற்காக அத்தனை சமூகங்களும் ஒன்றிணைந்து போராடின.

சமாதானமும், ஐக்கியமும், நல்லிணக்கமும் நிறைந்திருந்த ஒரு சூழலில் வாழ்ந்து வந்திருக்கின்ற இந்நாட்டு மக்கள், ஏறத்தாழ கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக இனம், மதம், மொழி என்ற அடிப்படைகளில் முரண்பட்டு, மோதி வந்திருக்கின்ற கசப்பானதும், துயர்மிக்கதுமான அனுபவங்களையும் எதிர்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்நாட்டில் சமூகங்களுக்கிடையே முரண்பாடுகள் உருவாகி, அவை வன்முறை மோதல்கள்வரை தீவிரமடைந்தமைக்கு, பிற சமூகங்கள் பற்றிய தப்பெண்ணங்களும், தவறான புரிதல்களும் பிரதான காரணங்களாக அமைந்து வந்திருக்கின்றன. இந்நிலைமைகள் அகன்று, முன்னைய சமாதானமும், ஐக்கியமும், நல்லிணக்கமும் மீண்டும் இந்நாட்டில் மலர்வதற்கு, பிற சமூகங்கள் குறித்த தப்பெண்ணங்களும், தவறான புரிதல்களும் களையப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டில் பல்வேறு தரப்பினரும் சமூகங்களிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்காக கடுமையாகவும், நேர்மையாகவும் முயற்சித்து வந்திருக்கின்றபோதிலும், தொட்டுணரத்தக்க சிறந்த விளைவுகள் எவையும் இதுவரைக்கும் சாத்தியமாகவில்லை. ஏதாவது இரு சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கிடையே ஏற்படக் கூடிய ஒரு முறுகல் நிலையே, அதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து சமாதான முயற்சிகளையும் சிதைத்து விடுகின்றன. அந்த அளவுக்கு இந்த நல்லிணக்கச் செயற்பாடுகள் பலவீனமானவைகளாக அமைந்திருக்கின்றன. பெரும்பாலும் இளையோர்களையும் மாணவர்களையும் முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற இத்தகைய நல்லிணக்க முயற்சிகள், எதிர்பார்த்த விளைவுகள் எதனையும் தராமலேயே முடிந்திருக்கின்றன. அதேபோன்று, மதத்தலைவர்கள், மதநிறுவனங்களின் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றோரை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகளும் கூட, சமூகங்களின் அடிநிலைவரை கொண்டு செல்லப்படாமலும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்த முடியாதவைகளாகவும் பலவீனமுற்ற நிலையில் காணப்படுகின்றன.

இவ்வித எதார்த்த நிலைமகளைக் கவனத்தில் கொண்டு, **சகல சமூகங்களையும் சேர்ந்த பெரும்பாலான மக்களை உள்வாங்கக் கூடியதான** செயற்திட்டங்களை அடையாளம் கண்டு முன்னெடுப்பது அவசியமாகிறது. ‘பிற சமூகங்களின் மொழிகளைக் கற்பதன் மூலமாக, மற்ற சமூகங்களைப் புரிந்து கொள்ள முடியும்’ என்றும் ‘இன, மத வேறுபாடுகளைக் கடந்து திருமண உறவுகளை ஏற்படுத்துவதன் மூலமாக, சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்’ என்றும் ‘பன்மொழிப் பாடசாலைகளை உருவாக்குதன் மூலமாக இளமையில் இருந்தே மாணவர்கள் மத்தியில் நல்லிணக்க உணர்வுகளை ஏற்படுத்த முடியும்’ என்பன போன்ற கருத்துக்களும், செயற்திட்டங்களும் முன்மொழியப்பட்டு வந்திருக்கின்றன. எனினும் இத்தகைய முன்மொழிவுகள், நிலவுகின்ற இனச் சிக்கல்களின் ஆழத்தையும் அவற்றின் பல்கூற்று அம்சங்களையும் சரியாகப் புரிந்து கொண்டனவாகத் தெரியவில்லை.

இந்நாட்டில் வாழ்கின்ற தமிழர்களும், முஸ்லிம்களும் **ஒரே மொழியைப் பேசுகின்றபோதிலும்** அவர்கள் மத்தியில், குறிப்பாக (வடக்கு) கிழக்கில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையே நிலவுகின்ற முரண்பாடுகள் சிறிதளவும் குறையவில்லை. அதேபோன்று தென்னிலங்கையில் வாழ்கின்ற **முஸ்லிம்கள், மிகச் சரளமாக சிங்களத்தில் பேசக் கூடியவர்களாக இருந்தும்,** அங்கு சிங்கள – முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகள் சிறிதளவும் குறையவில்லை. இதையொத்த நிலைமைகளை, சிங்கள மக்கள் மத்தியிலுள்ள பௌத்த – கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளிலும் அவதானிக்க முடியும். இந்த உண்மைகள் அனைத்தும், **பிற சமூகங்களின் மொழியைக் கற்பதனாலோ அல்லது ஒரே மொழியைப் பேசுவதனாலோ சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்படக் கூடிய சாத்தியம் குறைவானது** என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. இன, மத வேறுபாடுகள் கடந்த திருமண உறவுகள், அதில் சம்மந்தப்பட்ட குடும்பங்களிடையே ஒற்றுமையை உருவாக்குவதற்கு உதவக் கூடுமே தவிர, சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்படுவதில் அதிகமாக பங்களிப்புச் செய்யக் கூடியவை அல்ல. பன்மொழிப் பாடசாலைகளில் கற்கக் கூடிய மாணவர்கள் நீண்டகாலத்தில் நல்லிணக்கத்திற்கும், சமூகங்களுக்கிடையிலான ஐக்கியத்திற்கும் பங்காற்றுபவர்களாக மாறக் கூடிய சாத்தியம் உருவாக முடியும். எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பாடசாலைகளை நாடெங்கும் உருவாக்குவது என்பது நடைமுறைச் சாத்தியம் குறைந்ததொன்றாகவே இப்போது இருக்கிறது.

இந்நாட்டில் வாழ்ந்து வந்திருக்கின்ற சமூகங்கள் அனைத்தும், அரசியல் தளத்தில் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக தனித்தும், ஒன்றிணைந்தும் செயற்பட்டு வந்திருக்கின்றன. வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் இந்நாட்டின் மீது, அந்நிய நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புகளை எதிர்த்து, மன்னர்களும், தனிநபர் குழுக்களும் போராடியிருக்கின்றனர். ஐரோப்பிய நாடுகள் இந்நாட்டை ஆக்கிரமித்தபோதும், இதேபோன்ற எதிர்ப்பை எமது நாட்டு மக்கள் முன்னெடுத்தார்கள். இந்நாட்டில் வாழ்ந்த ஏனைய சமூகங்களைப் போன்று இலங்கை முஸ்லிம்களும், ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடி, ஆயிரக்கணக்கில் உயிரிழந்தார்கள். தமது உடமைகளையும் உரிமைகளையும் இழந்து, தமது வாழிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

இவ்வாறு அந்நிய ஆக்கிரமிப்புகளை எதிர்த்து இந்நாட்டிலுள்ள சகல சமூகங்களும் செயற்பட்டது போன்று, பொருளாதார தளத்திலும், இந்நாட்டின் அபிவிருத்திக்காக இந்த சமூகங்கள் அனைத்தும் தங்களுடைய பங்களிப்பை முழுமையாக வழங்கி வந்திருக்கின்றன. ஒரு நாட்டின் பொருளாதாரமானது, அந்நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களினதும் **கூட்டுப் பங்களிப்பின்** மூலமாகவே விருத்தியடைகிறது. பொருளாதாரச் செயற்பாடுகள், ஒரு வலைப்பின்னல் போன்று ஒரு நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கின்றன. எங்கோ ஒரு குக்கிராமத்தில் ஒரு விவசாயி உற்பத்தி செய்கின்ற மரவள்ளிக்கிழங்கானது, அந்த விவசாயி அறவே அறிந்திராத இன்னொரு பிரதேசத்தில், இன்னொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களினால் உண்ணப்படுகிறது. ஒருவரை ஒருவர் அறியாமலும், நேரடித் தொடர்புகள் அற்றவர்களாக இருந்தும், உற்பத்தியாளர், சந்தைப்படுத்துவோர், விற்பனை செய்வோர், நுகர்வோர் என ஒரு உறுதியான வலைப்பின்னல்களின் ஊடாகவே ஒவ்வொரு பொருளாதாரச் செயற்பாடும் நிகழ்கிறது. இந்த வலைப்பின்னலானது, அதில் இணைக்கப்படுபவர்களின் இன, மொழி, மத, பண்பாட்டு வேறுபாடுகளைக் கருத்தில் கொள்வதில்லை. இந்த வலைப்பின்னல் உறுதியாக இருக்கும்போது, ஒரு நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகள் தடையின்றி, சீராக இயங்குகின்றன. மாறாக இந்த வலைப்பின்னலில் ஏற்படக் கூடிய பலவீனங்களும், தொடர்பறுந்த நிலைகளும், பொருளாதாரச் செயற்பாடுகளில் ஒழுங்கின்மையையும், நிச்சயமற்ற நிலையையும் உருவாக்கி, பொருளாதாரச் செயற்பாட்டில் பங்கு கொள்கின்ற சகல பிரிவினர்களிலும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இந்த நிலை தொடர்கின்றபோது, முழுநாடும் பொருளாதார ரீதியாக தேக்க நிலைக்கும், வளர்ச்சியற்ற நிலைக்கும் ஆளாகிறது.

இத்தகைய நிலைமைகள் உருவாவதில், சமூகங்களுக்கிடையே நல்லிணக்கமும், ஐக்கியமும் அகன்று, அவற்றிற்கிடையே முரண்பாடுகளும் மோதல்களும் நீடிப்பது பிரதான காரணிகளாக அமைகின்றன. இவ்வாறான துரதிஷ்டவசமானதும், துயர்மிக்கதுமான அனுபவங்களை இந்நாடு நீண்டகாலமாகவும் மீண்டும் மீண்டும் அனுபவித்து வந்திருக்கிறது. குறிப்பாக **சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் வரலாறு என்பது, இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் வரலாறாகவே அமைந்திருக்கிறது.** இத்தகைய முரண்பாடுகளின் விளைவாக, வரலாற்றின் மிக அண்மைக் காலம்வரை செழிப்புடனும், பிறநாடுகளினால் போற்றப்படுகின்ற அளவுக்கு பெருமிதத்துடனும் திகழ்ந்த இந்நாடு, இப்பொழுது பொருளாதார ரீதியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கீழ்நோக்கிச் செல்கின்ற நிலையை அடைந்திருக்கிறது. இத்தகைய நிலையில் இருந்து இந்நாட்டை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் இங்கு வாழ்கின்ற அனைத்து சமூகங்களுக்கும் இருக்கின்றன.

ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைகிறபோது, அதன் தாக்கங்கள் அந்நாட்டிலுள்ள ஒரு சிறு பிரிவினரைத் தவிர, ஏனைய அனைவரையும், சமூக, இன, மத வேறுபாடுகளற்ற முறையில் பாதிக்கிறது. உற்பத்தித் துறையில் வீழ்ச்சி, பணவீக்கம், விலையேற்றம், பொருளாதாரத் தேக்கநிலை, அதிகரிக்கின்ற வெளிநாட்டுக் கடன், குறைவடைகின்ற நுகர்வு, வறுமை, போசாக்கின்மை, நோய்கள்.... என்பவை ஒரு நாட்டிலுள்ள சகல சமூகங்களையும் தாக்குகின்றன. இவ்வாறான சூழலில், நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களும் தமது நாட்டை மீட்டெடுப்பதற்காகவும், மீளக்கட்டமைப்பதற்காகவும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகிறது. ஒரு இயற்கை அனர்த்தத்தின்போது, எவ்வாறு வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து, அந்த அனர்த்தத்தில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுகிறார்களோ, அதேபோன்று ஒரு நாடு பொருளாதார நெருக்கடிக்குள்ளாகின்றபோதும், அந்நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகிறது.

நமது நாட்டில், நமது மக்கள் மத்தியில் இத்தகைய புரிதல்கள் சரியான முறையில் உருவாக்கப்படவில்லை. இதற்கு மாறாக, பொருளாதார வீழ்ச்சியினால் மக்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளுக்கு **பிற சமூகங்களைக் காரணமாக்குகின்ற நிலை** இங்கு தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கிறது. வறுமையும், பற்றாக்குறையும், நோய்களும், சமூகச் சீர்குலைவுகளும் மக்களைப் பாதித்து, அவர்களை உளநெருக்குதல்களுக்கு உள்ளாக்குகின்ற நிலையில், ஏனைய சமூகங்களின் செயற்பாடுகள்தான் இவற்றிற்குக் காரணம் என்று மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றபோது, படிப்படியே அதை ஏற்றுக் கொள்கின்ற மனநிலைக்கு அந்த சமூகம் ஆளாகிறது.

இவ்வாறு ஒரு சமூகம், பிற சமூகங்கள் குறித்து தவறான கண்ணோட்டங்களுக்கு ஆளாகின்ற நிலையில் அந்த சமூகங்கள் மீதான வெறுப்பும், பகைமையும் குறித்த சமூகத்திற்குள் திரளத் தொடங்குகின்றன. இதன் பின்னர் பிற சமூகங்கள் குறித்து சொல்லப்படுகின்ற எத்தகைய கருத்துக்களையும் ஏற்றுக் கொள்கின்ற மனநிலை அந்த சமூகத்திற்குள் உருவாகிறது. தீக்கங்குகள் போன்று ஒரு சமூகத்தின் அகத்தே கனன்று கொண்டிருக்கின்ற இத்தகைய உணர்வுகளை பற்றியெழச் செய்வதற்கு ஒரு சிறு பொறி போதுமானது. வெறுப்புக்கும், பகைமைக்கும் உள்ளாகியுள்ள சமூகத்தின் தனிநபர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு தவறான செயல், அல்லது தவறாக அர்த்தப்படுத்தப்பட்ட ஒரு செயல், அந்த முழு சமூகத்தின் மீதும் வன்முறைத் தாக்குதல்களை மேற்கொள்கின்ற நிலைக்கு இட்டுச் செல்கிறது. இதன் விளைவுகள், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரக் கட்டமைப்பின் மீதும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இத்தகைய பாதிப்புகளை முழு நாடும் அனுபவிக்கும் நிலை உருவாகிறது. இது நாட்டில் புரையோடிப் போயுள்ள பொருளாதார சீர்குலைவுகளை மீண்டும் மோசமான நிலைக்கு மாற்றுகிறது. இவ்வாறு, **இந்த நிலை ஒரு விஷச் சுழல் போன்று மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றது.**

இந்நிலை மாறுவதற்கு, இங்கு வாழ்கின்ற ஒவ்வொரு சமூகத்தினதும் தனித்துவம் முழுமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இத்தகைய அங்கீகாரத்தை, மிகச் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீகத்தை 2000 ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறைப்படுத்திய உன்னத நாடாக நமது நாடு விளங்கியிருந்தது. இப்போதும், இந்நாட்டில் வாழ்ந்து வருகின்ற ஆதிச் சமூகமான வேடுவர் சமூகத்தின் விடயத்தில் இந்நாட்டில் வாழ்கின்ற அத்தனை சமூகங்களும் இந்த உன்னத பண்பாட்டை பின்பற்றி வருகிறோம். மகத்தான அந்த **வேடுவர் சமூகத்தின் மத நம்பிக்கைகள், வழிபாடுகள், சடங்குகள், பண்பாடுகள், உணவு மற்றும் உடை போன்றவற்றில் எத்தகைய விமர்சனங்களையும், கண்டனங்களையும் முன்வைக்காமல், அவர்களின் தனித்துவத்தை இந்நாட்டு மக்கள் அனைவரும் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளோம்.** இதே நடைமுறையை, இதே மனநிலையை, இதே புரிதலை இந்நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு சமூகமும் பிற சமூகங்கள் விடயத்தில் மேற்கொள்ளும்போது, அந்த பண்டைய நாகரீகத்தின் நவீன வடிவமாக இந்நாட்டின் பண்பாடு மிளிர்ந்தெழுவது சாத்தியமாகும்.

தனிநபர்களுக்கிடையிலான முரண்பாடுகள், சமூகமயப்படுத்தப்படாதிருக்கின்ற பொறிமுறைகள் கண்டு கொள்ளப்பட வேண்டும். சமூகங்களிடையே உறுதியான நல்லிணக்கமும், ஐக்கியமும், சமாதானமும் உருவாவதற்கும் இவை நீடித்து நிலைப்பதற்கும் இத்தகைய பொறிமுறைகள் அவசியமாகின்றன. சட்டமும் ஒழுங்கும் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படுத்தப்படுவதும் காவல்துறை, மற்றும் நீதித் துறைகளின் மீது மக்கள் முழுமையாக நம்பிக்கை வைக்கின்ற நிலை உருவாவதும் இந்த விடயத்தில் அடிப்படை அம்சங்களாக இருக்கின்றன.

இந்நாட்டில் வாழ்கின்ற அனைவரும், 'இலங்கையர்' என்ற பொது அடையாளத்தின் கீழ் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கையும், எதிர்பார்ப்பும் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஒரு நாட்டில் வாழ்கின்ற சமூகங்கள் அனைத்தும், அந்த நாட்டின் பெயரால் ஒன்றிணைவது என்பது ஒரு பொதுவான நிகழ்வாக பெரும்பாலான நாடுகளில் காணப்படுகிறது. இந்த நிலைமை நமது நாட்டிலும் உருவாவது என்பது ஒரு சாத்தியமற்ற நிகழ்வு அல்ல. எனினும் இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒரு கேள்விக்கு விடை காண்பது அவசியமாகின்றது. அதாவது, 'இலங்கையர்' என்ற அடையாளம், இங்கு வாழ்கின்ற சமூகங்களின் இன, மத, மொழி... போன்ற தனித்துவமான அடையாளங்கள் அனைத்தையும் கைவிட வேண்டும் என்பதை நிபந்தனையாகக் கொண்டிருக்கின்றதா? அல்லது, ஒவ்வொரு சமூகமும் தன்னுடைய தனித்துவங்களை முழுமையாக பின்பற்றியவாறு, 'இலங்கையர்' என்ற பொது அடையாளத்திற்குள் ஒன்றிணைவது என்பதைக் குறிக்கின்றதா?

நமக்கு மிக அண்மையிலுள்ள ஒரு உதாரணம் என்ற வகையில், மிகப் பிரமாண்டமான மக்கள் தொகையையும் நூற்றுக்கணக்கான சமூகங்களையும் கொண்ட இந்தியாவில், 'இந்தியர்' என்ற பொது அடையாளம் எவ்வாறு சாத்தியமாகியது என்ற பரிசீலனை நமக்கு வழிகாட்டுவதாக அமையக் கூடியது. அங்குள்ள எந்தவொரு சமூகமும் தன்னுடைய இன, மத, மொழி மற்றும் பண்பாட்டு ரீதியிலான தனித்துவங்கள் எதனையும் கைவிடவில்லை. மாறாக, அவற்றை முழுமையாக பின்பற்றியவாறுதான் அங்குள்ள அத்தனை சமூகங்களும், 'இந்தியர்' என்ற பொது அடையாளத்திற்குள் இணைந்திருக்கிறார்கள். இதேபோன்று, பல்லின சமூகங்கள் ஒரு பொது அடையாளத்தின் கீழ் ஐக்கியமாக வாழ்கின்ற அனைத்து நாடுகளிலும், அங்குள்ள சமூகங்களின் தனித்துவங்கள் முழுமையாக பின்பற்றப்படுவதற்கான சமூக, பொருளாதார, அரசியல் சூழல்கள் நடைமுறையிலுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டில் நிலைமைகள் எவ்வாறு உள்ளன? மிக எளிமையான உதாரணமாக பினவரும் ஒரு விடயத்தை மட்டும் பரிசீலிப்போம்: நமது நாட்டில், பொதுப் போக்குவரத்து சாதனங்களிலும், அரசாங்க அலுவலகங்களிலும் உள்ள பெயர்ப்பலகைகளில் மும்மொழிகளிலும் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இவற்றில், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ள பெயர்கள் சரியான முறையில் அமைந்திருக்கின்றன. அதேநேரத்தில் இத்தகைய பெயர்ப்பலகைகள் பலவற்றில் **தமிழில் எழுதப்பட்டுள்ள பெயர்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன.** இதனால் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள சமூகங்களுக்கு சமூக அளவில் எத்தகைய பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஆனால், இரண்டே இரண்டு மொழிகள் பேசப்படுகின்ற எமது நாட்டில், ஒரு மொழியில் எழுதப்படுபவை தவறாக அமைகின்றன என்பதன் பின்னணியில் உள்ள மனப்போக்கு கேள்விக்குரியதாகிறது. இத்தகைய பெயர்ப்பலகைகள் அரச நிர்வாகத்தின் கீழ் உருவாக்கப்படுகின்றன. இவற்றை எழுதி, காட்சிப்படுத்துவதற்காக ஏராளமான நிதி செலவிடப்படுகிறது. **இந்த நிதி இந்நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களின் வரிப்பணத்தில் இருந்து பெறப்படுகின்றது.** இத்தகைய பெயர்ப்பலகைகளில், இந்த நாட்டின் தேசிய மொழி அல்லாத ஆங்கிலத்தில் பிழைகள் இன்றி எழுதப்படும்போது, ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினர் பேசுகின்ற தமிழ் மொழியில் எழுதப்படுபவற்றில் பெரும்பாலானவை தவறான முறையில் எழுதப்படுவதற்கான காரணங்கள் யாவை?!

இது வெறுமனே பெயர்ப்பலகை சார்ந்த விடயமல்ல. இது ஒரு மனப்பாங்கை வெளிப்படுத்துகிறது. பிற சமூகங்களின் உரிமைகள், அவர்களின் பண்பாடு போன்றவை தொடர்பாக நிலவுகின்ற அக்கறையின்மையையும் அலட்சியப் போக்கையும் இது வெளிப்படுத்துகிறது. பொதுவாக **தனியார் போக்குவரத்து சாதனங்களிலும், தனியார் அலுவலகங்களிலும் தமிழ் மொழியில் சரியான முறையில் பெயர்கள் எழுதப்படுகின்றன.** அரசு சார்ந்த இடங்களில்தான் இந்தப் பிழைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை திருத்தப்பட முடியாதவை அல்ல. தமிழ் மொழி சார்ந்த இரண்டு அல்லது மூன்று அலுவலகர்களை இவற்றை எழுதுவதற்கு நியமித்தாலே போதுமானது. கணிணி மூலமான வடிவமைப்புகளும் பாவனைகளும் சாதாரணமாக நடைமுறைக்கு வந்துள்ள சூழலில், எந்தத் தவறுகளுமின்றி இவற்றை குறுகிய காலத்திற்குள் செய்து முடிக்க முடியும். இந்தத் தவறுகள் இதுவரை திருத்தப்படாமல் இருப்பதும், புதிதாக எழுதப்படுபவற்றிலும் இத்தகைய தவறுகள் இடம்பெறுவதும், இந்நாட்டின் அரச நிர்வாகமானது, ஏனைய சமூகங்கள் தொடர்பாக எந்தளவுக்கு அக்கறையின்றியும், அலட்சியத்துடனும் நடந்து கொள்கிறது என்பதை துல்லியமாக வெளிப்படுத்துகின்றன. ஒரு மொழி தொடர்பாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற தவறுகளும், பிழைகளும் அடிப்படையில் அந்த மொழியை தாய்மொழியாகக் கொண்டிருக்கின்ற சமூகங்களின் உரிமைகளை மீறுகின்ற செயல்கள் என்ற புரிதல் நம்மத்தியில் இன்னமும் ஏற்படவில்லை என்பதை இவை சுட்டிக் காட்டுகின்றன.

பெயர்ப்பலகைகளில் காணப்படுகின்ற இத்தகைய பிழைகள் மிகச் சாதாரண விடயம். இதை விட மிக ஆழமாகவும், கடுமையாகவும் சமூகங்களைப் பாதிக்கின்ற விடயங்கள் இந்நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. வீதிகளில் தொடங்கி, நீதிமன்றங்கள் வரை வெவ்வேறு சமூகங்களை பாரபட்சமாகவும், பகைமையுடன் நடத்துகின்ற சம்பவங்கள் தினமும் நிகழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உயிர்த்த ஞாயிறு' தாக்குதல்களின் பின்னர், இந்நாட்டு முஸ்லிம்களுக்காக நீதிமன்றங்களில் ஆஜராகப் போவதில்லை என்று சிங்கள சட்டத்தரணிகள் எடுத்த முடிவு, சமூகப் பாரபட்சத்திற்கும், சமூகப் பகைமைக்குமான **ஒரு உயர்நிலை எடுத்துக்காட்டாக** அமைந்திருக்கிறது. எந்த சட்டத்தின் மூலமாக தமக்கு நீதி கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்களோ, அந்த சட்டத்தை பயன்படுத்தி செயற்படுகின்றவர்கள் அந்த நீதியை, குறித்த ஒரு சமூகத்திற்கு மறுக்கின்ற ஒரு முரண்நிலையை இங்கு காண்கிறோம். **குண்டுத் தாக்குதலில் சம்மந்தப்பட்டவர்களின் சார்பில் ஆஜராகப் போவதில்லை** என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருக்குமாயின் அது நியாயப்படுத்தக் கூடிய ஒரு முடிவாக அமைந்திருக்கும். ஆனால் இங்கு, சிலருடைய செயல்களுக்காக முழு முஸ்லிம்களும் கூட்டாகத் தண்டிக்கப்படுகின்ற ஒரு நிலையைக் காண்கிறோம்.

தமிழ் ஆயுத இயக்கங்களினால் முப்பது வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட தனிநாட்டுக்கான போராட்டத்தில், உயர் சிங்கள அரசியல் தலைவர்கள், புத்த பிக்குகள், சமூகத் தலைவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் கொல்லப்பட்ட சந்தர்ப்பங்களில் கூட, **தமிழ் மக்கள் சார்பாக நீதிமன்றங்களில் ஆஜராகப் போவதில்லை என்று சிங்கள சட்டத்தரணிகள் முடிவெடுத்திருக்கவில்லை.** ஆனால், முஸ்லிம்கள் தொடர்பாக அவர்கள் எடுத்திருந்த இத்தகைய முடிவின் பின்னே உள்ள மனப்பாங்கின் கடின நிலையானது, அவர்கள் மத்தியில் முஸ்லிம்கள் பற்றி நிலவுகின்ற தீவிர வெறுப்பையும், பகைமையையும் வெளிப்படுத்தி நிற்கிறது. **சட்டத்தின் சமத்துவம்** குறித்து ஆழக் கற்று, அதை பிரயோகிக்கின்ற அறிவுசார் பிரிவினர் மத்தியில் வெளிப்படுகின்ற இத்தகைய மனப்பாங்கு, இந்நாட்டில் சமூகங்களுக்கு இடையிலான ஐக்கியத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவது எத்தகைய சவால்களுக்கு உரியதாக அமைந்திருக்கிறது என்பதை மிகத் துல்லியமாக வெளிப்படுத்துகிறது.

'கூட்டுத் தண்டனை' என்பது சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையிலும், நல்லிணக்கத்திலும் சமாதான வாழ்விலும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது. தனிநபர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தவறான செயல்களை, அவர் சார்ந்த சமூகத்துடன் இணைத்துப் பார்க்கின்ற மனப்பாங்கை நாம் அனைவரும் கொண்டிருக்கிறோம். ஒரு தனிநபரினால் செய்யப்படுகின்ற நல்ல செயல்கள் அவர் சார்ந்த சமூகத்துடன் இணைக்கப்பட்டு, அந்த செயலுக்காக அந்த சமூகத்தை போற்றுகின்ற மனப்பாங்கு எம்மிடம் காணப்படுவதில்லை. அத்தகைய நல்ல செயல்கள் வெறும் சிலாகிப்புடன் விரைவில் மறக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் இதற்கு மாறாக, ஒரு தனிநபரினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு தவறான செயல், மிக எளிதாக அந்த நபரின் சமூகத்துடன் இணைக்கப்பட்டு, தீவிர விமர்சனங்களுக்குட்படுத்தப்படு கின்றன. அந்த செயலுக்காக முழு சமூகமும் காரணமாக்கப்பட்டு, குற்றவாளியாக்கப்படுகிறது. இதன் இறுதிநிலையில், எங்கோ ஒரு தனிநபரினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தவறான செயலுக்காக, அந்த நபருடன் எவ்விதத்திலும் தொடர்பில்லாத வேறு எங்கோ வாழ்கின்ற அந்த நபர் சார்ந்த சமூகம் வன்முறைத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்ற நிலை உருவாகிறது.

தனிநபர்களின் தவறான செயல்களுக்காக அவர்கள் சார்ந்த சமூகத்தை கூட்டுப் பொறுப்பாக்குவதும், அந்த சமூகத்தை கூட்டுத் தண்டனைக்குட்படுத்துவதும் அந்த சமூகத்தில் மத்தியில் மாறாத வடுவை ஏற்படுத்துகின்றன. இது வெறுமனே உதறித் தள்ளிவிட்டுச் செல்கின்ற விடயமல்ல. இதனால் ஏற்படுகின்ற விளைவுகள் - சமூக ரீதியான கண்டனங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிவுபடுத்தல்கள் மற்றும் வன்முறைத் தாக்குதல்கள் போன்றவை – அந்த சமூகத்தின் ஆழ்மனங்களின் ஆழப்பதிந்து விடுகின்றன. தமது உயிர்களுக்கும், உடமைகளுக்கும் உத்தரவாதமற்றதாகவும் அச்சம் நிறைந்ததாகவும் உள்ள சூழல் எந்நேரமும் தம்மை எதிர்கொள்ளக் கூடும் என்ற எண்ணம் அந்த சமூகத்தை நிரந்தமாக ஓங்கித் தாக்குகிறது. இவ்வாறான சூழலில், சமூகங்களுக்கிடையே ஐக்கியத்தையும், ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் பேணுவது என்பது, மிகவும் கடினமான நிகழ்வாக மாறி விடுகிறது, "இலங்கையர்" என்ற ஒரே அடையாளத்தின் கீழ் அனைவரும் ஒன்றிணைவது என்பது மேலும் தூரமாகி விடுகிறது.

நமது நாட்டில் இடம்பெற்று வந்திருக்கின்ற இன முறுகல்நிலையுடனும் இனரீதியான வன்முறைத் தாக்குதல்களுடனும் ஒப்பிடுகையில், இவற்றை விட மிகத் தீவிரமாகவும் பாரிய அளவிலுமான வன்முறை நிகழ்வுகள் பல நாடுகளில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய நிகழ்வுகளில் இருந்து வெளிவந்து, தம்மத்தியில் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் உருவாக்கி, புதிய வரலாற்றை ஆரம்பித்த அண்மைய உதாரணமாக தென்னாபிரிக்கா விளங்குகிறது. நீண்ட கால அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்தும், இனக்குழுக்களுக்கிடையிலான வன்முறை மோதல்களில் இருந்தும் வெற்றிகரமான முறையில் தம்மை விடுவித்து, புதிய சமூக, அரசியல் முறைமையை உருவாக்கி வாழ்கின்ற மகத்தான முன்னுதாரணமாக தென்னாபிரிக்கா அமைந்திருக்கிறது.

இத்தகைய சிறந்த முன்னுதாரணமாக இலங்கையும் மீண்டும் திகழ்வதற்கான சாத்தியப்பாடுளை நாம் கண்டு கொள்ள வேண்டும். இன வெறுப்பு, இனப்பகைமை, இன மோதல்கள் என்பவை அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான கருவிகளாக செயற்படக் கூடிய நிலை முற்றாக அகற்றப்பட வேண்டும்; அனைத்து மக்களினதும் ஒற்றுமையின் அடிப்படையிலும் மக்களின் நிஜமான ஆதரவினாலும் அரசியல் அதிகாரம் கட்டமைக்கப்படுகின்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும்; இவை நமக்கு முன்னுள்ள முதன்மையானதும் அவசியமானதுமான கடமைகளாக இருக்கின்றன. மகத்தான மாமனிதரான சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித தேரர் அவர்கள் இத்தகைய அரசியல் அதிகாரம் கட்டமைக்கப்படுவதற்கான ஒரு பாதையை உருவாக்கித் தந்திருந்தார். அவரின் மறைவு, அந்தப் பாதையை மூடி விடவில்லை. அந்தப் பாதை இன்னமும் நமக்காக, நமக்கு முன்னே திறந்திருக்கிறது; அந்தப் பாதையில் உறுதியாகவும் ஒற்றுமையாகவும் பயணிக்கக் கூடிய மக்களுக்காக அது காத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்துல் வாகிது. முஹ்சீன்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில், மூதூரில் பிறந்தவர். அரசாங்க ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றிருக்கிறார். 1990களிலிருந்து எழுதி வருகிறார். எழுதுவதோடு பல்வேறு தளங்களிலான ஆய்வு முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறார். ஏற்கனவே "சோனக தேசம்", "இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம்", "ஜனநாயகம்", "பாடசாலை உளவியல்", "அசன்பேயுடைய கதை – ஓர் மீள்வாசிப்பு" போன்ற ஆய்வு நூல்களையும் "இங்ஙினயும் ஒரு மஹ்சர்" என்ற சிறுகதைத் தொகுதியையும் எழுதியுள்ளார். இப்பொழுது மொழிபெயர்ப்புத் துறையிலும் ஈடுபட்டிருக்கிறார். "அடையாளம்" பதிப்பாக வெளிவந்துள்ள "வரலாற்றில் இஸ்லாம்" என்ற நூல் இவருடைய முதலாவது மொழிபெயர்ப்பு நூலாக அமைகிறது.

**தவறான புரிதலானது இரு பக்கங்களைக் கொண்டுள்ளது. ஒன்று முஸ்லிம்களைப் பற்றி, ஏனைய சமூகங்கள் மத்தியில் நிலவுகின்ற தவறான அபிப்பிராயங்கள், இரண்டு முஸ்லிம்கள் தம்மைப் பற்றிக் கொண்டிருக்கின்ற தவறான அபிப்பிராயங்கள். இந்நூல் இந்த இரண்டையும் பற்றி பேசுகிறது. இலங்கைச் சூழலில், முஸ்லிம் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளின் பின்னணியில் எழுதப்பட்டுள்ள இந்நூல், இலங்கையைத் தாண்டி, உலக அளவில் முஸ்லிம் சமூகங்கள் அக்கறை கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றியும் பேசுகிறது.**

**கலந்துரையாடப்படவும் விவாதிக்கப்படவும் கூடிய பல விடயங்களை இந்நூல் கொண்டிருக்கிறது. தேசிய அளவிலும் உலகளாவிய ரீதியிலும் சமூகங்களின் ஐக்கியம் மிகப் பெருமளவில் அவசியமாகியுள்ள இன்றைய நிலையில், இந்நூல் அத்தகைய ஐக்கியம் பற்றி மேலும் அக்கறை கொள்வதைத் தூண்டுகிறது."**

ghazal.press

இலங்கை ரூ. 900

இந்தியா ரூ. 220

ISBN 978-0-99-702549-1

9 780997 025491

ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org